
# பதிலுக்கு பதில்



கோட்டையம் புஸ்பநாத் தமிழில் சிவன்

# பதிலுக்கு பதில்!

கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் :
சிவன்


**கலா நிலையம்**

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர் சென்னை—600 014.

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு – டிசம்பர், 2003

© ஆசிரியருக்கு

மேலும் மின்நூல்களுக்கு
www.tamilnesan1981.blogspot.in

Original Title      Choraikku Chora
By      Kottayam Pushpanadh
Translated by :      Sivan

Laser Typeset By : MS Graphics, Chennai-4.
Printed at : Kay em Packaging & Industries, Chennai - 14.

# உங்களுடன்

**த**மிழில் தொடராக வெளிவராமல் நேரடியாகப் புத்தகமாகும் மற்றொரு நாவல் 'பதிலுக்கு பதில்.'

பொதுவாகப் பொழுதுபோக்குக்காகப் படைக்கப்படுபவற்றில் வியாபார அம்சங்களாகக் கருதப்படும் விஷயங்களில் ஒன்றான பாலுணர்வுச் சம்பவங்கள் கண்டிப்பாக இடம்பெறும். ஆனால், ஜனரஞ்சக எழுத்தாளரான கோட்டயம் புஷ்பநாத்தின் பாணி இதிலிருந்து மாறுபட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மலையாள மொழியின் வெகுஜனப் பத்திரிகைகளில் நூறு தொடர்களுக்கு மேல் எழுதியுள்ள இவரது நாவல்களில் செக்ஸ் துளியும் இருக்காது என்று உறுதியாகக் கூற முடியும். இந்தப் பாணியில் இவர் பெற்றிருக்கும் வெற்றி மகத்தானது என்று கூறலாம்.

இவரது கற்பனையில் சம்பவங்கள், ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று வரிசையாக இடம் பெறுவதால், கதை இயல்பாகவும் சுவாரஸ்யமாகவும் நகர்கிறது. அதனாலேயே இவரது கதாபாத்திரங்களைப் போலவே, இவரும் செக்ஸ் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை என்று கருதுகிறேன்.

பொதுவாக மலையாள இலக்கியம் மற்றும் திரைப்படங்கள் குறித்துப் பெரும்பாலோரிடம் சரியான கணிப்பு இருப்பதாகச் சொல்ல முடியாது. உலகத்தின் பிற மொழிகள் போலவே மலையாள மொழியிலும் எல்லா வகையான பாணிகளும் உள்ளன.

உங்களுக்கு யார், எதை, எப்படிக் கொண்டுவருகிறார்கள் என்பதை ஊன்றிக் கவனித்தால் இதை விளங்கிக் கொள்ள முடியும். உதாரணத்துக்கு மலையாளம் மற்றும் தெலுங்கு மொழிகளில் வருடம் ஒன்றுக்கு சுமார் 70 முதல் 120 படங்கள் வரை வெளியாகின்றன.

ஆனால், அவற்றிலிருந்து எந்த மாதிரியான படங்கள் தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்படுகின்றன? மேற்படிப் படங்களை மட்டுமே பார்க்கும் ரசிகர்கள் வேறு எத்தகைய முடிவுக்கு வர முடியும்? அதே நிலைமைதான் நாவல்களுக்கும். நீலக்குயில், செம்மீன், பிறவி, சங்கராபரணம், சாகர சங்கமம் போன்ற படங்களைவிட தமிழ் சினிமா ரசிகர்களுக்கு அறிமுகமாகியிருப்பது ஷகிலாவும், கப்பல் தீவு காதல்ராணிகளும்தான். கலையம்சத்துடன் வாழ்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் உயரிய விஷயங்கள் அவ்வளவு சுலபத்தில் நமது வாசகர்களையோ, ரசிகர்களையோ எட்டுவதில்லை!

இதுவரை நான் மொழிபெயர்த்த நாவல்களிலோ, அவற்றின் ஆசிரியர்கள் மீதோ எவரும் மேற்படிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதில்லை. திட்டமிட்டோ, ஒரு கொள்கையாகவோ நான் இதைப் பின்பற்றவில்லை. இயல்பாகவே அப்படி நிகழ்ந்திருக்கிறது. மொழிபெயர்ப்புத் துறையில் என்னுடைய இன்றைய நிலைக்கு மேற்படி நூல்கள் எந்த வகையிலும் ஒரு காரணமில்லை என்பது என் மனதுக்கு ஆறுதலளிக்கும் விஷயம்.

விரசமும் ஆபாசமும் துளிக்கூட இல்லாத ஒரு துப்பறியும் நாவல் இது. இதில் இடம்பெற்றிருக்கும் துப்பறிவாளரும், அவரின் பாணியும் மாறுபாடானது. கவர்ச்சி என்ற நோக்கத்துக்காகக்கூட அவர் கவர்ச்சியை நாடவில்லை. கெட்ட வார்த்தைகளை நாகரிகமாகவோ, அரைகுறையாகவோ போட்டு வாசகர்களை உணர்ச்சி வசப்படுத்த கோட்டயம் புஷ்பநாத் முற்படுவதில்லை. இதுவே அவரை நல்ல கதாசிரியர் என்று அடையாளம் காட்டுகிறது.

இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்கவும், வெளியிடவும் அனுமதி அளித்த மதிப்புக்குரிய கோட்டயம் புஷ்பநாத், நல்ல முறையில் வெளியிடும் கலா நிலையம் திரு. சீனிவாசன், வாங்கி ஆதரிக்கும் வாசகர்கள் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி.

சென்னை – 600 078
தொலைபேசி : 24837681

தோழமையுடன்
**சிவன்**

# பதிலுக்கு பதில்

## 1

அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளை கோட்டயம் நகரில் மிகவும் பிரபலமானவர். பல்வேறு வகையான சமூக சேவை அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் அவர் பெயர் முதல் வரிசையில் உள்ளது.

பப்ளிக் பிராசிக்யூட்டராகவும் இருந்த பிள்ளை கிரிமினல் வழக்குகளைக் கையாள்வதில் கெட்டிக்காரர். பிரைவேட்டாக பிராக்டீஸ் செய்து கொண்டிருந்த காலத்தில் பரபரப்பாகப் பேசப் பட்ட பல்வேறு கொலைவழக்குகளில் எத்தனையோ குற்றவாளிகளைக் காப்பாற்றியிருக்கிறார். ஐம்பதாயிரம் ரூபாயும் பாலகிருஷ்ண பிள்ளையும் இருந்தால் எத்தனை ஆட்களை வேண்டுமானாலும் கொலை செய்யலாம் என்கிற நம்பிக்கைகூட ஏற்பட்டிருந்தது.

கொலைதான் என்பதற்குத் தெளிவான ஆதாரங்களும், நேரடி சாட்சிகளும் இருந்த எத்தனையோ வழக்குகள் பாலகிருஷ்ண பிள்ளையிடம் வந்த பிறகு, தான் பார்த்தது அந்தக் கொலையைத்தானா என்று சந்தேகம் கொண்டு குழம்ப வைத்து விடுவார் பிள்ளை. அவரது குறுக்குக் கேள்விகள் அவ்வளவு நுட்பமாகவும், சாதுரியமாகவும் இருக்கும்.

எவ்வளவு கெட்டிக்காரரான சாட்சியாக இருந்தாலும் மடக்கி விடுவார் பிள்ளை. ஆறடி உயரம். சுருள் சுருளான தலைமுடி. நெற்றியின் பரப்பு குறைந்த முகம். தடித்த புருவங்கள். காது மடல்களில் எழும்பி நிற்கும் ரோமங்கள். கறுத்த சீப்பை மூக்கின் கீழ் ஒட்ட வைத்தது போன்ற மீசை. பெரிய ஃபிரேம் உள்ள

மூக்குக் கண்ணாடி. அதற்குள் பளபளக்கும் பெரிய கண்கள், சற்று முன்புறமாக வளைந்த உடம்பு. இவ்வளவும் இணைந்தால் அவர்தான் பாலகிருஷ்ண பிள்ளை.

கறுப்பு பேண்ட், நீண்ட கறுப்பு கோட் போன்றவற்றை அணிந்து நிற்கும் பாலகிருஷ்ண பிள்ளையைப் பார்த்துவிட்டால் எமன்கூட பயந்து ஓடி விடுவான்!

அவரது கடுமையான குரலைக் கேட்டால் காட்டு விலங்குகள்கூட பயந்து நடுங்கும். கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருக்கும் பிள்ளை ஒரு சிங்கம் மாதிரித் தென்படுவார். அவர் உதாரணத்துக்காகச் சொல்லும் கதைகளும், உலகின் பிற கோர்ட்டுகளில் கூறப்பட்டுள்ள தீர்ப்புகளும், கம்பீரமான வாதமும் கேட்டு நீதிபீடமே சிலிர்த்துப் போவதுண்டு.

எதிர்த் தரப்பு வக்கீல்கள் கதை கேட்கும் குழந்தைகளைப் போல் மௌனமாக நின்று விடுவார்கள்.

பாலகிருஷ்ண பிள்ளையின் மனைவி ஜெயலட்சுமி. புகழ்பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்த அப்பாவிப்பெண். சூதுவாது தெரியாத வெகுளி. வீட்டுக்குள் தான் உண்டு தன் வேலையுண்டு என்று முடங்கிக் கிடப்பதைத் தவிர, மற்ற ஹைசொஸைட்டிப் பெண்களைப் போல் கையில்லாத ரவிக்கையும், மிகப்பெரிய மூக்குக் கண்ணாடியும் அணிந்துகொண்டு கிளப்புகளுக்குப் போகவோ கண்காட்சிகளில் பங்கெடுப்பதோ அவளுக்குத் தெரியாது. வாழ்க்கையிலேயே ஜெயலட்சுமி பார்த்திருக்கிற ஒரே படம் 'ஸ்ரீ கிருஷ்ணலீலாதான்'.

ஏராளமான சொத்துக்கு ஒரே வாரிசான அவளை, பணத்தாசையால் பிள்ளை கல்யாணம் செய்து கொண்டார் என்றும் பேசிக் கொள்கிறார்கள். பெரிய அளவுக்கு நெல் வயல்களும், தென்னந் தோப்பும் ஜெயலட்சுமியின் பெயரில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தொழுவத்திலுள்ள பசுக்களைப் பராமரித்தும் வேலைக்காரர்களிடம் வேலை வாங்கியும் அவள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

*பாலகிருஷ்ண பிள்ளைக்கு ஆணுக்கு ஆணாகவும், பெண்ணுக்குப் பெண்ணாகவும் இருந்தவள் ஒரே சந்தானம்.*

*அவள் பெயர் சுஜாதா.*

*கோட்டயம் நகரிலுள்ள கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தாள். தன் மகளின் படிப்பு எந்த விதத்திலும் பாதிப்பு அடையக் கூடாது என்பதற்காக அவளை ஹாஸ்டலில் சேர்த்து விட்டிருந்தார். இருப்பினும் அவள் விரும்பும் போதெல்லாம் வீட்டில் வந்து தங்கிக் கொள்ளவும் சுதந்திரம் கொடுத்திருந்தார்.*

*வெள்ளிகிழமையாகிவிட்டால் மாலை நேரத்தில் சுஜாதாவை அவளது வீட்டில் பார்க்கலாம். திங்கட்கிழமை காலையில் ஹாஸ்டலுக்குத் திரும்பி விடுவாள். பி.எஸ்.ஸி ஃபைனல் இயர் படிக்கும் சுஜாதாவுக்கு கார் ஓட்டவும் தெரியும்.*

*பெரும்பாலும் தினசரி மாலை வேளைகளில் பாலகிருஷ்ண பிள்ளையின் பங்களாவின் மேல்மாடியிலுள்ள வரவேற்பு அறை கலகலவென்று இருக்கும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த அறைக்குள் நுழையக் கூடியவன் ரகு என்கிற வேலைக்கார இளைஞன் மட்டும்தான். பிள்ளையின் மனைவியோ, மற்றவர்களோட அந்த நேரம் அங்கு செல்ல முடியாது. எட்டு மணியிலிருந்து நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை அந்த அறைக்குள்ளிருந்து உரத்த குரலிலான சிரிப்பும் கும்மாளமும் கேட்கும்.*

*மது பாட்டில்கள் திறக்கப்படுவது அங்கு மிகவும் சாதாரண விஷயமாக இருக்கும். பதார்த்த வகைகளைத் தவறாமல் ரகு எடுத்து வருவான். ஏர்கண்டிஷன் செய்த அறையாக இருந்ததால் அங்கிருந்து எந்தச் சத்தமும் வெளியே கேட்காது. இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் ஜெயலட்சுமி பூஜையறைக்குள் ஸ்ரீகிருஷ்ணனின் சிலைக்கு முன்னால் அமர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டிருப்பாள். மேற்புற அறையில் நடப்பது எதுவுமே அவளுக்குத் தெரியாது!*

பாலகிருஷ்ண பிள்ளைக்கு நெருக்கமான நண்பர்கள் மூன்று பேர் இருந்தனர். நாள் தவறினாலும் இந்த நண்பர்களின் வருகை தவறாது.

ஒருவர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ குறூப்பு. நாற்பத்தைந்து வயதான மாதவ குறூப்பு திருமணம் ஆகாதவர். திடகாத்திரமான உடல் கொண்ட அவர், நேரடியாக இன்ஸ்பெக்டர் தேர்வு மூலம் நுழைந்தவர். ஆனால், என்ன காரணத்தாலோ சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பதவியுடன் அவரது முன்னேற்றம் தடைப்பட்டுப் போனது. அரசியல்தான் அதன் பின்னணியிலுள்ள மர்மம் என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. 'காக்காய்' பிடிக்கும் சமாசாரமெல்லாம் குறூப்புக்குப் பிடிக்காது.

ஆறடி இரண்டங்குல உயரம் இருந்தாலும், உடல் இரட்டை நாடி சரீரமானதால் பார்வைக்கு அவ்வளவு உயரமிருப்பதாகத் தெரியாது. தொப்பியைக் கழற்றினால் தலையில் முடி எதுவும் இருக்காது. ஆனால், தடித்த கிருதாவும் இருபுறமும் அணிலின் வால் போல் நீண்டு வளைந்திருக்கும் அடர்த்தியான மீசையும், அடித்துப்பார்க்கும் அவரது பார்வையை நேரிடும் எப்படிப்பட்ட குற்றவாளியும் தன்னையும் மீறிச் சிறுநீர் கழித்து விடுவான்.

மிரட்டல் பாணியில் அவரை மேதையென்று சொல்லலாம். குற்றவாளிகள் யாராவது அகப்பட்டால் இரண்டு கைகளாலும் கன்னத்தில் ஓங்கி அறையும் பழக்கம் உண்டு. இப்படி அடிவாங்கிய எத்தனையோ பேருக்கு அதன் பிறகு காது கேட்காமல் போயிருக்கிறது. இதெல்லாம் அவரது எதிரிகள் கூறும் குற்றச்சாட்டுகள்.

குற்றம் செய்யாதவர்கள்கூட மாதவ குறூப்பின் 'தட்டுதலுக்கு' ஆளானால், அவர் எப்படிப்பட்ட குற்றச்சாட்டு சொன்னாலும் அதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துக் கையெழுத்துப் போடுவார்களாம்.

அவருக்குக் கொடுத்த போலீஸ் குவார்ட்டர்ஸை வேண்டாம் என்று மறுத்துவிட்டுச் சொந்த வீட்டில் குடியிருக்கிறார். அவருக்கு உதவ ஒரு வேலைக்காரன் இருக்கிறான். குறூப்பின்

அம்மாவும் அப்பாவும் இறந்து போய்விட்டனர் என்பதும் செவிவழிச் செய்திதான்.

திருமணம் செய்துகொண்டால் சுதந்திரம் பாதிக்கப்படும் என்பதால் இன்னும் பிரம்மச்சாரியாக தவறு கல்யாணம் ஆகாதவராக இருக்கிறார். அவருக்குக் கீழே வேலை செய்பவர்களுக்குக்கூட குறுப்பு சிம்மசொப்பனம்தான்.

ஆபீஸிலிருந்து புறப்பட்டால் நேராக வீடு. அதன்பிறகு அவர் போகும் ஒரே இடம் பாலகிருஷ்ண பிள்ளையின் வீடு மட்டும்தான். பெரும்பாலும் இரவு எட்டு மணிக்குப் பிறகு பிள்ளையின் வீட்டில் ரம்மி விளையாட்டு மற்றும் பொழுது போக்குகளில் நேரத்தைக் கழிப்பார். குறுப்புதான் அந்த இடத்தின் முக்கிய விருந்தாளி.

அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளையின் மற்றொரு நண்பர் நீலகண்டன் நாயர். அவர் ஓர் அரசியல் கட்சியின் பிரதிநிதி. சமூக முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டவர். கிழக்குப் புற மலைத்தொடரில் தேயிலைத் தோட்டமும் நகருக்குள் ஒன்றிரண்டு பெரிய மாடிக் கட்டடங்களும் உள்ள நீலகண்டன் நாயர் ஐம்பதைக் கடந்தவர். மனைவியுடன் இரண்டு பெண்கள். பெண்கள் இருவரும் திருமணமாகிப் போய்விட்டார்கள்.

நீலகண்டன் நாயரின் மனைவி மீனாட்சியம்மாவும் சமூக சேவகிதான். பெரும்பாலும் கிளப்புகள், சமூக சேவை என்று அலையும் அவரை வீட்டில் அவ்வளவாகப் பார்க்க முடியாது.

தேர்தல் நேரங்களில் நீலகண்டன் நாயர் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பார். ஏராளமான போஸ்டர்களை அச்சடித்து, கூலிக்கு ஆட்களை அமர்த்தித் தீவிரமாகப் பிரசாரமும் செய்வார். ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ தன்னை அவர்களுடன் சேர்த்துக் கொள்வார்கள் அல்லது ஆதரவு கொடுப்பார்கள் என்பது அவரது நம்பிக்கை. பெரும்பாலும் அந்த நம்பிக்கை பொய்ப்பதுமில்லை.

ஆறு பஸ்ஸுகளும், அதே அளவுக்கு டாக்ஸிகளும், நேஷனல் பெர்மிட் கொண்ட லாரிகளும் அவருக்கு நிறந்தர வருமானம் தந்துகொண்டிருந்தன.

பிள்ளை எங்கிருந்தாலும் டயோட்டா கார் ஒன்றும் அங்கு இருக்கும். பாலகிருஷ்ணா பிள்ளை, நீலகண்டன் நாயரின் லீகல் அட்வைசரும் கூட.

மாதவ குறுப்புக்கு நீலகண்டன் நாயரிடம் மிகுந்த மதிப்பு உண்டு. என்றாவது ஒரு நாள் நீலகண்டன் நாயர் உள்துறை அமைச்சர் ஆவார் என்றும் அன்று தான் ஒரு ஐ.ஜி - யாக பதவி பெறுவோம் என்றும் உறுதியாக அவர் நம்பினார். இரவு நேரங்களில் பாலகிருஷ்ணா பிள்ளையின் வீட்டில் பொழுது போக்குவதற்காக மற்ற இருவரும் பெரும்பாலும் ஒன்றாகத்தான் வருவார்கள்.

இவர்களைத் தவிர பிள்ளைக்கு வேறு ஒரு நண்பரும் இருக்கிறார். அவர் போத்தன் வர்கீஸ்.

ஏராளமான வட்டி வாங்கிக்கொண்டு பணத்தைக் கடன் கொடுக்கும் ஃபைனான்ஸ் கம்பெனி ஒன்றின் உரிமையாளர் அவர். ரயில்வேயில் ஊழியராக இருந்த போத்தன் வர்கீஸ் திடுமென்று ஒருநாள் நகரில் 'தங்க நகைகளின் பேரில் இவ்விடம் கடன் கொடுக்கப்படும்' என்ற போர்டுடன் தனது வியாபாரத்தைத் தொடங்கினார்.

மிகவும் குறுகிய காலத்திலேயே அவரது வியாபாரம் சூடு பிடித்தது. விரைவிலேயே பல்வேறு வகையான நிறுவனங்களின் உரிமையாளராக மாறினார். இன்றைய நிலையில் போத்தன் வர்கீஸ் எல்லா அரசியல் கட்சிக்காரர்களுக்கும் ஓர் அட்சய பாத்திரமாக விளங்குகிறார்.

ரயில்வே ஊழியராக இருந்த போத்தன் வர்கீஸுக்கு ஒரு தடவை ரயில் பெட்டி ஒன்றிலிருந்து கிடைத்த இரும்புப் பெட்டி தான் அவரது முன்னேற்றங்களுக்குக் காரணம் என்று சொல்கிறார்கள். அதெல்லாமில்லை, திட்டமிட்டே அவர் அந்தப் பெட்டியை கையகப்படுத்திக் கொண்டதாகவும் அவருக்கு வேண்டாதவர்கள் சொல்லி வருகின்றனர்.

இதையெல்லாம் பொருட்படுத்தாமல் போத்தன் வர்கீஸ் தன்னுடைய காண்டெஸா காரில், பாதையோரங்களில் நிற்பவர்களை ஏளனமாகப் பார்த்தபடி பயணம் செய்வார்.

அன்றைய தினம் பாலகிருஷ்ண பிள்ளையின் மனத்தில் உற்சாகம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. கோட்டயம் நகரிலிருந்து அவர் வீடு வந்து சேர்ந்த பதினைந்து நிமிடத்துக்குள் மகள் சுஜாதாவும் வந்து சேர்ந்தாள்.

"டாடி கன்கிராட்ஸ்!" மகள், அப்பாவுக்கு வாழ்த்துச் சொன்னாள்.

"தாங்க்ஸ்மா!" அப்பாவும் மகளின் தலையை வருடியவாறு நன்றி தெரிவித்தார்.

ஊர் முழுவதும் பரபரப்பாகப் பேசிக்கொண்ட ஒரு வழக்கின் தீர்ப்பு வந்த நாள்.

அம்மிணி என்ற இளம்பெண் ஒருத்தியைக் கற்பழித்ததும் இல்லாமல் அவள் கழுத்தை நெரித்துக் கொன்று கோணி மூட்டையில் போட்டுக் கட்டி, பாழுங்கிணற்றில் போட்டு விட்டுப்போன குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாள்.

இந்த வழக்கில் அரசாங்கத் தரப்புக்காக வாதாடியவர் பாலகிருஷ்ண பிள்ளை.

ஏறத்தாழ ஒரு மாத காலம் தலைமறைவாக இருந்த குற்றவாளியை கன்னியாகுமரி சென்று கைது செய்தவர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ குறுப்தான்.

அந்த கேஸுக்கு மற்றொரு சிறப்பும் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டிருந்தவன் நீலகண்டன் நாயரின் கார் டிரைவர்.

தன் நெருங்கிய நண்பரின் கார் டிரைவராக இருந்தும், அவனைக் காப்பாற்ற முயலமல் பிடித்ததுடன். வழக்குக்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்டி, வழக்கை வெற்றிகரமாக

நடத்தித் தண்டனை வாங்கிக் கொடுத்ததால் மாதவ குறுப்புக்கு திடீரென்று ஒரு ஹீரோ அந்தஸ்து கிடைத்தது. மட்டுமின்றி பாலகிருஷ்ண பிள்ளையையும் பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்து எழுதின.

"டாடி நீங்க பப்ளிக் பிராசிக்யூட்டர் ஆன பிறகு உங்களுக்குக் கிடைச்ச நாலாவது வெற்றியில்லையா?"

"ஆமாம்மா!"

"இன்னிக்கு காலேஜில எல்லாரும் உங்களைப் பத்தித்தான் பேசிக்கிட்டாங்க. தீர்ப்பு வெளியானதுமே காலேஜ்பூராவும் நியூஸ் பரவிடுச்சு" சுஜாதா மகிழ்ச்சியில் திளைத்தவளாகப் பேசினாள்.

"அம்மாவுக்கு செய்தி தெரியுமாப்பா?"

"உன் அம்மாவுக்கு இதுல எல்லாம் என்ன இண்ட்ரஸ்ட் இருக்கப்போகுது?"

"நான் அம்மாகிட்டச் சொல்லிட்டு வர்றேம்பா!" சுஜாதா சமையல்கட்டை நோக்கி ஓடினாள்.

அன்று இரவு ஏழரை மணியானபோது பாலகிருஷ்ண பிள்ளையின் நண்பர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் மூவரும் ஆளுக்கு ஒரு ஜானிவாக்கர் பாட்டிலை எடுத்து வந்திருந்தனர்.

"நம்மளோட பார்ட்டி இன்னிக்கு ரொம்பவும் விசேஷமா இருக்கணும்!" சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கூறினார்.

"நாலு முழுக் கோழிகளை ரோஸ்ட் பண்ணச் சொல்லி இருக்கேன்!" பாலகிருஷ்ண பிள்ளை சொன்னார்.

"வாங்க மேலே போகலாம்!"

எல்லோரும் மாடியறைக்குள் நுழைந்த பிறகு கதவைத் தாழிட்டனர்.

கிளாஸ்கள் நிறைந்தன; காலியாகின.

ரம்மி தொடர்ந்தது.

சற்று நேரத்துக்குள் ரகு பீங்கான் தட்டுகளில் சரிவாகப் படுக்கவைத்த பொரித்த கோழிகளுடன் வந்தான்.

மகிழ்ச்சி அந்த அறைக்குள் அணை உடைந்து பிரவகித்துக் கொண்டிருந்தது.

குடித்தும் தின்றும் கும்மாளமிட்டும் நான்கு மணிநேரம் கழிந்து போனது. கடிகாரம் மணி பன்னிரண்டைக் காட்டியது.

பிள்ளை, நண்பர்கள் எல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்பினார்.

கதவுகளை எல்லாம் மூடிவிட்டுத் தனது படுக்கையறைக்கு வந்தவர் சில்லென்று ஒரு கிளாஸ் பச்சைத் தண்ணீரைக் குடித்தார். அப்போதுதான் தான் சாப்பிட்ட விஸ்கியின் அளவு சற்று அதிகமாகிவிட்டதோ என்று தோன்றியது.

அந்த வீட்டில் பிள்ளையைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் உறங்கிவிட்டிருந்தனர்.

படுத்துக்கொள்வதற்காக லைட்டின் சுவிட்சை ஆஃப் செய்தார் பிள்ளை.

"பிள்ளை சார்..... அந்த லைட்டைப் போடுங்க!"

அந்தக் குரலைக் கேட்டதும் பிள்ளையின் கை தானாகவே சுவிட்சை மறுபடியும் போட்டது. அறைக்குள் வெளிச்சம் பரவியது.

அன்று தூக்குதண்டனை வழங்கப்பட்ட ஜயன் என்கிற குற்றவாளி கையில் ஓர் அரிவாளுடன் பாலகிருஷ்ண பிள்ளையின் முன்பாக நின்றுகொண்டிருந்தான்!

## 2

அந்தக் காட்சியைப் பார்த்த பாலகிருஷ்ண பிள்ளை அதிர்ந்து போனார். தனக்கு முன்னால் நின்றுகொண்டிருக்கும் ஜயன் என்ற இளைஞனின் கண்களில் பழி உணர்வு கொழுந்து விட்டு எரிவதை பிள்ளை கவனித்தார்.

"இவன் எப்படிடா இந்த அறைக்குள்ள திடீர்னு முளைச்சான்னு ஆச்சரியமா இருக்கா?"

பார்வைக்கு சுமார் இருபத்தைந்து வயது இளைஞனாகத் தோற்றமளிக்கும் ஜயன், சிவப்பு நிறமான கையணியனும், காக்கி பேண்டும் அணிந்திருந்தான். அவன் உடம்பின் சதைப்பகுதிகள் இறுக்கமாக இருந்த பனியனையும் மீறித் தெரிந்தது. கலைந்த தலைமுடி சில அவன் நெற்றி மீது படிந்து கிடந்தன. முகத்தில் கோபம் தெரிந்தது.

"ஜெயிலை விட்டு... நீ எப்படி?" பிள்ளை தட்டுத் தடுமாறியபடி கேட்டார்.

"நீங்கதான் என்னை ஜெயிலுக்கு அனுப்பினவராச்சே! திருவனந்தபுரம் சென்ட்ரல் ஜெயில் வரைக்கும் நான் போக விரும்பலை, தப்பிச்சுட்டேன்!"

பிள்ளை, ஜயனின் கையிலிருந்த அரிவாளையே பார்த்துக் கொண்டிருந்தார். அதன் கூர்மையான விளிம்புகள் பளபளத்துக் கொண்டிருந்தன.

"போலீஸைக் கூப்பிடுவேன்!" பிள்ளை மிரட்டும் தொனியில் கூறினார். அதிகமாக இருந்த விஸ்கியின் போதை முற்றிலும் தெளிந்து விட்டது மாதிரி இருந்தது.

"அதுக்கெல்லாம் நான் விட்டாத்தானே?"

"உனக்கு என்ன வேணும்?"

"எதுவும் தேவையில்லை!"

"அப்புறம் எதுக்கு வந்திருக்கிறே?"

"எப்படியிருந்தாலும் நான் சாகப்போறேன். நீங்கதான் தூக்குத்தண்டனை வாங்கிக் கொடுத்துட்டீங்களே. நிஜமாவே உங்க ஒரு ஆளையாவது கொலை பண்ணிட்டுப் போயிடலாம்னு தான்!"

"நான் என்ன பண்ணினேன் உனக்கு?"

"நீங்க அப்பாவி.... ஒண்ணுமே செய்யலை!"

"ஒரு வக்கீல்ங்கிற முறையில் நான் என் கடமையைச் செஞ்சேன். உண்மையான எந்த ஒரு குற்றவாளியையும் தப்பிக்க விடக்கூடாதுங்கிறது தொழில் தர்மம்!"

"நியாயம்தான். நல்லவேலைதான்!"

பாலகிருஷ்ணா பிள்ளை அதற்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

"யோவ் வக்கீல், என்மேல சுமத்தப்பட்ட எந்தக் குற்றத்தையும் நான் செய்யலேங்குறது உங்களுக்கு நல்லாத் தெரியும். உண்மையில் நீங்க எல்லோரும்தான் அதுக்குப் பொறுப்பு. பாவம், அந்தச் சின்னப் பொண்ணை சர்க்கிள் இன்ஸ்பெக்டரோட வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததுதான் நான் செஞ்ச தப்பு. அதுக்கும் ஏற்பாடு பண்ணினவர் என் முதலாளி நீலகண்டன் நாயர். அவர்கிட்ட டிரைவர் வேலை பார்க்கிறதால தட்டமுடியாம செஞ்சேன். இதுதான் முதல் தடவையா என்ன? இதுக்கு முன்னாலயும் இந்தமாதிரி எவ்வளவு பொண்ணுங்களைக் கொண்டு வந்திருக்கேன். இவள்தான் பாவம் முதல் தடவையா உங்ககிட்ட மாட்டிக்கிட்டாள். நீங்க எல்லோரும் சேர்ந்து அவளை நாசப்படுத்தினதும் இல்லாம கொலையும் பண்ணிட்டு என்னை ஒரு வாரம் கன்னியாகுமரியில போய்த் தங்கச் சொன்னீங்க. எங்கள்ல யாரோ ஒருத்தர் வருவார். என்னைப் பத்திரமாக் கூட்டிட்டு வருவார்னு சொன்னீங்க. அங்க நான் தங்குறதுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சு கொடுத்ததும் நீங்கதான். கடைசியில் நீங்க செஞ்ச எல்லாத்தையும் என்மேல போட்டுக் கொலைகாரனாக்கி, தூக்குதண்டனையும் வாங்கிக் கொடுத்துட்டீங்க."

ஜயன் பேசப் பேச பாலகிருஷ்ணா பிள்ளை ஏகத்துக்கு மிரண்டு போனார். ஏ.ஸி. ரூமாக இருந்தபோதும் அவர் உடல் குப்பென்று வியர்த்தது. தங்களை வேறு யாராவது கவனிக்கிறார்களா என்கிற குற்ற உணர்வும் அவரை உறுத்தியது.

"திட்டம் போடுறதுல நீங்க ரொம்பவும் கெட்டிக் காரங்களாச்சே! உங்க நாடகத்துல கடைசிக்கட்டமா என்னை அரெஸ்ட் பண்ணி, ஒரு வழியா தொலைச்சும் கட்டிட்டீங்க. துரோகிங்களா, எனக்காக வாதாடின வக்கீலைக்கூட விலைகுடுத்து வாங்கிட்டீங்களேடா பாவிகளா! என்னைக் காப்பாத்துற மாதிரி அவர் எந்த சாட்சிகிட்டயும் ஒரு கேள்விகூடக் கேட்கலையே! நான்தான் அந்தப் பொண்ணைக் கடத்திட்டு வந்ததா, அவங்க அம்மாவையே சாட்சி சொல்ல வெச்சுட்டீங்களே!" ஜயனது குரலில் ஒரு நிரபராதியின் கோபம் தெரிந்தது.

"நடந்ததெல்லாம் நடந்துடுச்சு, வேணும்னா ஹைகோர்ட்டுல் உனக்கு விடுதலை வாங்கித் தர்றேன். தயவு செஞ்சு என்னை ஒண்ணும் பண்ணிடாதே!" பாலகிருஷ்ணபிள்ளை கெஞ்சத் தொடங்கினார்.

"உங்களோட அந்த வித்தையெல்லாம் உங்ககிட்டயே இருக்கட்டும். தூக்குதண்டனை கொடுத்து சென்டிரல் ஜெயிலுக்கு அனுப்பிட்டு, நான் தப்பிச்சு வந்த பிறகு எனக்காக நீங்க ஹைகோர்ட் போறீங்களா ஆகா என்ன கருணை....? நீதி தேவதை மெய்சிலிர்த்துட்டாங்கப்பா! அதெல்லாம் கிடக்கட்டும். நான் தப்பிக்கணும்னு நெனைக்கலையே!" ஜயன், பிள்ளையை நெருங்கியபடி பேசினான்.

"ஐயோ....என்னைக் கொல்லாதே!" பிள்ளை அலறினார்.

"பயப்படாதீங்க.... அப்படியெல்லாம் உங்களை ஒரேயடியா கொன்னுடமாட்டேன்! கொஞ்சம் கொஞ்சமாத்தான் கொல்வேன்! ஆமாம், இந்த வலது கையால தட்டித்தட்டித்தானே எனக்கு எதிரான பாயிண்டுகளை எடுத்தவெச்ச? அந்தப் பொண்ணை இந்தக் கையாலதானே பாய்ஞ்சு பிடிச்சீங்க? ஒரு வேளை உங்களாலயேகூட அவள் செத்துப் போயிருக்கலாம். அதுக்கு உனக்கு ஒரு தண்டனை வேண்டாமா? நீங்கதானே இப்ப சொன்னீங்க, குற்றவாளி தப்பிக்கக் கூடாதுன்னு! அதுதான் அப்பவே நானும் நியாயம்னு ஒப்புக்கிட்டேன்."

ஜயனது கையிலிருந்த அரிவாள் கண்மூடித் திறப்பதற்குள் உயர்ந்து தாழ்ந்தது. பாலகிருஷ்ணபிள்ளை ஓர் அலறலுடன் பின்னோக்கிச் சரிந்தார்.

ஜயன் அரிவாளுடன் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினான். கேட்டுக்கு வெளியே மறைவாக நிறுத்தி வைத்திருந்த பைக்கை ஸ்டார்ட் செய்துகொண்டு ஓடி மறைந்தான்.

பாலகிருஷ்ண பிள்ளை அலறியபடி அறையிலிருந்து வெளியே வந்தார். படிக்கட்டில் தடுமாறியவர் உருண்டவாறு கீழ்த்தளத்தில் பொத்தென்று விழுந்தார்.

அலறலையும் தொடர்ந்து பொத்தென்று விழும் சத்தத்தையும் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்த சுஜாதா லைட்டை எரியவிட்டுப் படிக்கட்டின் கீழ்ப்பகுதிக்கு வந்தாள். அப்பாவின் வலது கைப் பகுதியைப் பார்த்தவள் ஒரு கணம் திடுக்கிட்டாள்.

உடனேயே சூழ்நிலையின் தீவிரத்தை உணர்ந்தவள், பிள்ளையை ஒருவாறு தூக்கிக் கொண்டு காருக்கு வந்தாள். பின் ஸீட்டில் அவரைப் படுக்க வைத்த அதே விநாடியில் அவர் மயக்கமானார். ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தவள், அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தாள்.

அவசரச் சூழ்நிலை சற்று மாறியதும் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் தெரிவித்தாள். அப்பாவை யாரோ வெட்டிப் போட்டதாகவும், வெட்டிய நபரை அடையாளம் தெரியாது என்றும் குறிப்பிட்டாள்.

ஜயன் காவலிலிருந்து தப்பியோடிவிட்ட செய்தி ஏற்கெனவே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டிருந்தது. அவர்களும் உடனே குற்றவாளியைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து உடனடியாகச் செய்தி பத்திரிகை அலுவலகங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

மறுநாள் கோட்டயம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் பத்திரிகைச் செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

## காவலிலிருந்து கைதி தப்பி ஓட்டம்

கோட்டயம், செப்டம்பர்-14 அம்மிணி கொலை வழக்கின் குற்றவாளியான ஜயன் நேற்று இரவு சுமார் பதினொரு மணியளவில் சப்-ஜெயிலில் இருந்து தப்பியோடி விட்டதாகத் தெரிகிறது. இந்தக் குற்றவாளி இன்று திருவனந்தபுரம் மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பப் பட இருந்தவர். இது தொடர்பாக இரண்டு போலீஸ்காரர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர்

ஏறத்தாழ நள்ளிரவு நேரத்தில் தப்பித்த குற்றவாளிக்கு எதிராக - அதாவது பிராசிக்யூஷன் தரப்பில் வாதாடிய பிரபல வக்கீல் பாலகிருஷ்ண பிள்ளை அரிவாளால் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். இதை தப்பித்த குற்றவாளியே செய்திருக்க வேண்டும் என்றும் போலீஸார் சந்தேகப்படுகின்றனர். எனவே ஜயன் என்கிற கிரிமினல் குற்றவாளியைப் பிடிக்க போலீஸார் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

செய்தி மொத்த நகரையும் பீதியில் ஆழ்த்தியது.

சிறையிலிருந்த தப்பித்த குற்றவாளி எந்த நேரத்தில் எந்த வீட்டின் கதவைத் தட்டுவானோ என்று ஒவ்வொருவரும் பயந்தனர்.

மொத்தத்தில் சூழ்நிலை கலவரம் நிறைந்ததாக இருந்தது.

இரவு பன்னிரண்டு மணிக்கு சிறையிலிருந்த தப்பித்த ஜயன் போலீஸ்காரர் ஒருவரின் உடையையும் சிவப்பு பனியனையும் போட்டுக் கொண்டு வெளியேறினான். தெருப்பக்கம் நிறுத்தியிருந்த ஜெயில் சூபரின்டெண்டெண்டின் மோட்டார் பைக்கையும் கம்பி போட்டுத் திறந்து கிளப்பிக் கொண்டு போனான். அவன் நேராக வந்து சேர்ந்த இடம் பாலகிருஷ்ண பிள்ளையின் வீடுதான்.

நீலகண்டன் நாயரின் டிரைவராக இருந்ததால் பாலகிருஷ்ண பிள்ளையின் நடவடிக்கைகள் எல்லாம் அவனுக்கு நன்றாகத் தெரியும். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் பிள்ளை மற்ற நண்பர்களுக்கு விடை கொடுத்து வழியனுப்பி வைப்பார் என்று

தெரியும். சரியாக அந்த நேரம் பார்த்து பிள்ளையின் படுக்கையறைக்குள் நுழைந்து கட்டிலுக்கு அடியில் ஒளிந்திருந்தான்.

பிள்ளையின் கையை வெட்டிய பிறகு ஜயன் மோட்டார் சைக்கிளில் ஏறி கிழக்குத் திசையில் விரைந்தான். கே.கே.ரோடு வழியாக, போலீஸ் ஸ்டேஷனைக் கடந்து அங்கு போலீஸார் ஜீப்பை ஸ்டார்ட் செய்து எங்கோ கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தனர். ஜீப் மேற்குப் புறமாகப் பயணமாவது போல் தெரிந்தது. புதுப்பள்ளி ஜங்ஷனை அடைந்ததும் பைக்கை ரோட்டின் ஓரமாக மறைத்துவிட்டு, அருகிலிருந்த கடையின் நிழல் பகுதிக்குள் மறைந்து நின்று கொண்டான்.

இரவு நேரத்தில் நகரிலிருந்து வெளியேறும் எல்லா வண்டிகளையும் போலீஸார் சோதனையிடுவார்கள் என்று தெரியும். ஆதலால், விடிவது வரையில் எங்காவது தங்கியிருப்பதென்று தீர்மானித்தான்.

நீலகண்டன் நாயரின் மூத்த மகள் கோட்டயம் நகரின் வடபகுதியிலுள்ள குமார நல்லூரில் வசித்து வந்தாள். அவள் கணவனுக்கு சமீபத்தில் இடுக்கிக்கு டிரான்ஸ்ஃபர் ஆகியிருந்தது. இன்ஜினீயரான அவர் வாரம் ஒரு தடவை வீட்டுக்கு வருவார்.

நீலகண்டன் நாயரின் மூத்தமகளான நிர்மலா தனியாக இருப்பதால், துணையாக உடன் படித்த-தற்போது போலீஸில் பணியாற்றும் சிநேகிதியையும் உடன் தங்க வைத்திருந்தாள்.

ஜயன் நேராக அங்குதான் போனான்.

மணி இரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

காலிங் பெல்லை அழுத்தினான்.

பெண் போலீஸான தேவகி கதவைத் திறந்தார். அவருக்கு ஜயனைத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. தேவகி பணிபுரிந்து கொண்டிருப்பது பாலாயி என்ற இடத்தில்.

"என்னங்க வேணும்?" தேவகி கேட்டார்.

"நிர்மலாம்மாவை நான் உடனடியா பார்க்கணும்!"

"இருங்க கூப்பிடுறேன்!" என்ற தேவகி உட்புறம் திரும்பி நடக்கத் தொடங்கியதும் ஐயன் உள்ளே நுழைந்து கதவை மெதுவாகத் தாழிட்டான். பிறகு ஹாலுக்குள் வந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

தூக்கக் கலக்கத்துடன் வந்த நிர்மலா, ஐயனைப் பார்த்ததும் அதிர்ந்தாள்.

# 3

உடனடியா என்ன செய்வதென்று தெரியாமல் சற்று நேரம் அசைவற்று நின்றாள் நிர்மலா. அந்த வீட்டில் அப்போது நிர்மலாவுடன் தேவகி மட்டுமே இருந்தார்.

"ஒரு விஷயம்...உங்க யாரையும் தொல்லைப் படுத்தமாட்டேன். நான் சில விஷயங்களை வெளிப்படையாப் பேசலேன்னா நீங்க தேவையில்லாத நடவடிக்கைகள்ல ஈடுபடுவீங்க." ஐயன் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படுத்தும் குரலில் பேசினான்.

ஆனால், அந்தப் பெண்மணிகள் இருவரும் அதைக் காதில் வாங்கிக் கொண்டதாக தெரியவில்லை. இருவரின் உடம்பும் நடுங்கிக் கொண்டிருந்தது.

"மிஸ் தேவகி நீங்க ஒரு போலீஸ்காரர் இல்லையா? இருந்துமா பயப்படுறீங்க? நிர்மலாவோட அப்பாவுக்கு டிரைவரா இருந்தவன்கிறது உங்களுக்குத் தெரியாதா என்ன?"

தேவகி உண்மையில் பயந்தது இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான்.

"அது நீங்கதானா?" அவள் பரபரப்புடன் கேட்டாள்.

"ஆமாம், நானேதான். ஆனா, இப்ப நான் வந்திருக்கிறது என்னோட பாதுகாப்புக்காக. இந்த இடத்தைத் தவிர வேறு எந்த

இடமும் பாதுகாப்பானதா எனக்குத் தெரியலை. என்னை மன்னிச்சுடுங்க!"

பெண்கள் இருவரும் அதற்கு எந்தவிதமான பதிலும் கூறவில்லை.

"இப்ப நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா, அம்மிணியைக் கொன்னது நானில்லை. நிர்மலா உங்க அப்பாவும் அவரோட நண்பர்களும்தான்."

"என்ன சொல்றீங்க?" நிர்மலா சோபாவில் உட்கார்ந்தபடி கேட்டாள்.

"யார் கிட்டயாவது நான் இந்த உண்மையை மனந்திறந்து சொல்லணுமில்லையா? நான் சொல்றதை யாருமே காது குடுத்துக் கேட்கலை. நீங்களாவது கேளுங்க. நிர்மலா, உங்க அப்பா சொன்னபடிதான் நான் அந்தப் பொண்ணை கூட்டிட்டு வந்தேன். பொண்ணோட வந்தபோது அங்கே மொத்தம் நாலு பேர் இருந்தாங்க. சட்டத்தைக் கையில எடுத்து விளையாடுற போலீஸ் அதிகாரி ஒருத்தர், வக்கீல் எல்லாருமே அதில் அடக்கம். அவங்க ரொம்பவும் தந்திரமா என்னைச் சிக்க வைச்சுட்டாங்க. இனிமேல் அதையெல்லாம் பேசிப் பிரயோஜனமில்லை. அதே நேரம் நான் செய்யாத ஒரு குற்றத்துக்காக ஜெயிலுக்குப் போக விரும்பலை. போனாலும் சரிப்படாது. என்னைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? தெரியாது. என்னை ஒரு டிரைவரா மட்டும் பார்த்திருப்பீங்க. நான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அம்மாவும் அஞ்சு சகோதரிகளும் இருக்குறாங்க. காபிதூள் தயாரிக்கிற கம்பெனியில வேலை செஞ்சு அவங்க என்னை பி.எஸ்.ஸி. படிக்க வைச்சாங்க. வேற எந்த வேலையும் கிடைக்காததால நான் இந்த டிரைவர் வேலைக்கே வந்தேன்."

ஜயன் உண்மையைத்தான் சொல்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது.

"என்னை எப்படியும் பிடிச்சுடுவாங்க. அதுவும் எனக்கு நல்லாத் தெரியும். ஆனா. ஆண் துணையே இல்லாத என்

தங்கச்சி களுக்கு நான் ஏதாவது ஒரு ஏற்பாடு பண்ணணும். அதுக்கு நீங்க எனக்கு உதவணும். நீங்க உதவி செய்யலேன்னா, இதுவரைக்கும் எந்தக்குற்றத்தையும் செய்யாத நான் குற்றவாளியா மாறிடுவேன்."

"நாங்க என்ன பண்ணணும்னு சொல்ல வர்றீங்க?" தேவகி கேட்டாள்.

"வெறும் ரெண்டே ரெண்டு நாள் நான் இங்கே மறைவா தங்கியிருக்க அனுமதிக்கணும். என்னைப் பிடிச்சுக் கொடுக்காம இருக்கணும். நான் இங்கேருந்து வெளியேறுற வரைக்கும் நீங்க யாரும் வெளியே போகக்கூடாது. என்னோட நிபந்தனையை மீறினா, நான் என் தற்காப்புக்காக எதையாவது செய்ய வேண்டி இருக்கும்."

தேவகியும் நிர்மலாவும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"சம்மதிக்கிறோம்!" தேவகி சொன்னார்.

"நீங்க சொன்னதெல்லாம் உண்மையா?" நிர்மலா கேட்டாள்.

"முதலாளியோட கார்ல நான் அந்தப் பொண்ணைக் கொண்டு வர்றதை, ரெண்டு மூணு பேர் குறிப்பிட்டுக் கவனிச்சிருக்காங்க. அதுக்குப் பிறகு அந்தப் பொண்ணை அவங்களே சாக்குமூட்டையில் பிணமா, பாழுங்கிணத்துல பார்த்தாங்க. அவளை கொண்டு வந்த மறு நாள் முதலாளி என்னை கன்னியாகுமரிக்கு போகச் சொன்னார். அப்புறம் வந்தது போலீஸ், கொலைக் குற்றத்துக்காக நான் கைது செய்யப்பட்டேன்."

ஜயன் சொல்வதில் உண்மை இருப்பதாக தேவகிக்கும் தோன்றியது. அவன் சொன்னதைக் கேட்டபோது அவளுக்கு அவன் மீது பரிதாபம் ஏற்படவே செய்தது.

"சரி, நீங்க போய் அந்த அறைக்குள்ள படுத்துக்கங்க!" நிர்மலா கூறினாள்.

"இங்கே டெலிபோன் இருக்கா?" ஜயன் கேட்டான்.

"இருக்கு!"

"தயவு செஞ்சு என்னை ஏமாத்திடாதீங்க!" சொல்லிவிட்டு அவர்கள் கைகாட்டிய அறைப்பக்கமாக நடந்து போனான்.

"தேவகி உனக்கு என்ன தோணுது? அவர் சொல்றதுல உண்மை இருக்கிறதாத் தெரியுதா?"

"உண்மையாத்தான் இருக்கணும் நினைக்கிறேன். ஒரு பொண்ணை கற்பழிச்சு, கொலை பண்ணி கோணி மூட்டைக்குள்ள கட்டிக் கிணத்துக்குள்ள வீசியெறிஞ்ச மனுஷரா அவரை என்னால நினைக்க முடியலை. அஞ்சு சகோதரிங்க இருக்கிற ஒரு மனுஷனும்கூட."

தன் அப்பாவைப் பற்றி நிர்மலாவுக்கு ஓரளவு தெரியும். அவள் அம்மாகூட திடுமென்றுதான் இறந்துபோனாள். அதைப் பற்றியும் சில கதைகள் எழுந்தன. அவள் காதுபடவே அவை உலாவவும் செய்தன. அம்மாவும் அப்பாவும் அப்படி ஒன்றும் நெருக்கமான உறவுடன் இருந்ததாகச் சொல்லமுடியாது. பல விஷயங்களில் அம்மா, அப்பாவை எதிர்த்துக் கொண்டு இருந்தார். திடுமென்று அம்மா குளியறையில் இறந்து கிடந்தார். கால் வழுக்கிக் கீழே விழுந்து இறந்ததாக மற்றவர்களுக்குச் சொல்லப்பட்டது. அப்பாவின் கெட்டிக்காரத் தனத்தால் அதுதான் உண்மையென்றும் பதிவு செய்யப்பட்டது.

இதையெல்லாம் பார்க்கும் போது ஐயன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்க வேண்டுமென்று தோன்றியது.

ஐயனுடன் காரில் மூன்று நான்கு தடவைகளுக்கு மேல் அவள் பயணம் செய்திருக்கிறாள். ஒரு தடவை மாலை நேரத்துக்குப் பிறகு கோழிக்கோடு நகரிலிருந்து புறப்பட்டனர். இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு திருச்சூர் வந்து சேர்ந்தனர். பயணம் தொடர்ந்தனர். ஆள் அரவமற்ற காட்டுப்பகுதி ஒன்றுக்கு வந்த போது காரின் டயர் பஞ்சரானது.

தன்னை காருக்குள்ளேயே இருக்கும்படி சொல்லிவிட்டு ஜயன் ஸ்டெப்னி டயரை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த நேரம் மற்றொரு கார், தனது காரின் பின்புறம் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு பேர் இறங்கினர். ஜயனிடம் வந்தவர்கள் காருக்குள் லைட் அடித்துப் பார்த்தனர். தன்னைப் பார்த்ததும் அவர்களின் உணர்வுகள் மாறத் தொடங்கியது. மிகவும் மோசமான வார்த்தைகள் பேசியபடி, தன்னை காரிலிருந்து வெளியே இழுத்து விடவில்லை என்றால் ஜயனைக் கொன்றுவிடுவதாகக் கூட மிரட்டினர்.

ஆனால், ஜயன் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. ஜாக்கி லிவரின் உதவியால் இரண்டு பேருடனும் மோதினார். இரண்டு பேரையும் தாக்கிய பிறகு தான் மூன்றாவது நபர் ஒருவர் காரில் இருப்பதைக் கவனித்தார். மற்ற இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டுபோக வேண்டியிருந்ததால் அவனை அதிகமாகத் தாக்கவில்லை. அதையும் வாய்விட்டு அவர்களிடம் சொல்லவும் செய்தார். ஜயன் மோசமான ஒரு மனிதனாக இருந்தால் அப்போதேகூட தன்னைத் தொல்லைப் படுத்தியிருக்க முடியும். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஜயன் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது நிர்மலாவுக்கு.

எனவே, இவர் சொன்னது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், வழக்கு நடந்தபோது ஜயனைச் சந்தேகப்படும் படியான கதைகள்தான் வெளி வந்தன. இப்போது, நடந்தது என்னவென்று ஜயன் விவரித்தபோது, விவரித்தது உண்மைதான் என்று தோன்றியது.

“எல்லாம் உண்மையாக இருந்தாலும்கூட அவரை இங்கே தங்க வைக்கிறது நல்லதா தேவகி?” நிர்மலா கேட்டாள்.

“சந்தேகம் நியாயம்தான். நாம உயிரோட இருக்கணும்னா இப்படி நடந்துக்க வேண்டி இருக்கு!”

“இருந்தாலும் எனக்கென்னவோ பயமா இருக்கு!”

"அப்படியெல்லாம். பயப்பட வேண்டியதில்லை. நானும் கூட இருக்கிறேனே!" தேவகி ஆறுதலளித்தாள்.

அவர்கள் படுத்துக்கொண்டனர். இருப்பினும் அவர்களால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

எப்படியோ பொழுது விடிந்தது.

ஒரே கட்டிலில் படுத்திருந்த நிர்மலாவும், தேவகியும் விடியற்காலை சங்கு ஊதியபோது எழுந்தனர்.

"தேவகி நீ காபி எடுத்துட்டுப் போறியா?" நிர்மலா கேட்டாள்.

"அதுக்கென்ன கொடுத்துட்டா போகுது, எப்படிப்பட்ட குற்றவாளியா இருந்தாலும் எனக்கு பயமெல்லாம் கிடையாது." தேவகி காபியுடன் ஜயன் படுத்திருந்த அறையை நோக்கிப் போனாள்.

அவர்களுக்கு முன்பாகவே எழுந்து குளியலை முடித்துக் காத்திருந்தான் ஜயன்.

"சீக்கிரமா எழுந்துட்டீங்களா?" தேவகி கேட்டாள்

"தூங்கினாத்தானே விழிச்சு எழுந்திரிக்க?" ஜயன் சிரிக்க முயன்றவனாகப் பதிலளித்தான்.

போலீஸ் வலையின் விளிம்பில் இருநதபோதும் சிரிக்கும் ஜயனைப் பார்த்து தேவகி ஒரு கணம் வியப்பு அடையவே செய்தாள்.

தேவகியும் அழகிதான். இருபத்தொன்றைக் கடந்திருந்தாள். சிவந்து, மெலிந்த உடல். தேவகியின் அப்பாவும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவர்தான்.

அப்பா விபத்து ஒன்றில் மரணமடைந்ததைத் தொடர்ந்து தேவகிக்கு இப்படியொரு வாய்ப்புக் கிடைத்தது. அவள் வேலைக்குச் சேர்ந்து இன்னும் ஒரு வருடம் முடியவில்லை. முதன் முதலாகத் கிடைத்த போஸ்டிங்கே பாலஈயி நகரில்தான்.

அவ்வப்போது டெபுட்டேஷனுக்காக கோட்டயம் வந்தாள். சிறு வயது முதலே தோழிகளாக இருந்ததால், அவளுக்கு குவார்ட்டர்ஸ் கிடைத்த போதும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு நிர்மலாவுடன் தங்கியிருந்தாள்.

"காபி சாப்பிடலிங்களா?" தேவகி கேட்டாள்.

"குடிக்கலாம். சட்டுன்னு வீட்டு ஞாபகம் வந்துடுச்சு."

"பணம் மட்டும் இருந்திருந்தா நான் இன்னிக்கு ஒரு சப் இன்ஸ்பெக்டராவாவது இருந்திருப்பேன்." ஜயன் கூறினான்.

"நிஜமாவா?"

"இண்டர்வியூவுக்கு வந்தவங்கள்ல மார்க், ஸ்போட்ஸ் சர்ட்டிஃபிகேட் எல்லாத்துலயும் நான்தான் ஃபர்ஸ்ட். உடம்பும் இப்ப இருக்கிறது மாதிரி இருந்தது. பணம் ஒண்ணு மட்டும்தான் குறை. அது இருந்திருந்தா என் வாழ்க்கையே மாறிப் போயிருக்கும்."

அதுவரை பயமும் மிரட்சியும் ஏற்பட்டிருந்த ஜயனிடம் தேவகிக்கு அந்த விநாடி முதல் மதிப்பு தோன்றத் தொடங்கியது.

"அப்படீன்னா நீங்க நேத்து சொன்னதெல்லாம் உண்மை தானா?"

"இன்னுமா சந்தேகம்?"

"அப்படியெல்லாம் இல்லை. கேட்டேன்."

"இப்போ என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தோணுது!"

"குறிப்பிட்டுச் சொல்றபடி எதுவும் தோணலை."

"இருந்தாலும்."

"பயம் போயிடுச்சு."

"அது போதும் எனக்கு" ஒன்பது மணியான போது ஜயனை டிபன் சாப்பிட அழைத்தார்கள்.

முந்தைய இரவில் அந்தப் பெண்களுக்கு அவனிடம் ஏற்பட்டிருந்த பயமும், தயக்கமும் விலகி விட்டதாகத் தெரிந்தது. மாறாக நிர்மலாவுக்கு ஜயனிடம் ஒருவித அனுதாபமும் தோன்றியிருந்தது.

"நானா உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் ஜயன்." நிர்மலா சொன்னாள்.

"நான் எதுக்காக இந்த இடத்துக்கு வந்தேன்னா, நீங்க எனக்கு உதவி செய்வீங்கங்கிற நம்பிக்கையிலதான். ஏன்னா, என்னைப்பத்தி உங்களுக்கு ஓரளவு தெரியும். தற்சமயம் ரெண்டு அல்லது மூணுநாள் நான் தலைமறைவா இருக்க வேண்டியிருக்கு. அதுக்கப்புறம் நான் இந்த ஊரைவிட்டுப் போயிடுவேன். அதுவரையிலும் யாரும் என்னைத் தெரிஞ்சுக்கக் கூடாது. அதுக்குள்ள நான் சில விஷயங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கு."

டிபன் சாப்பிட்டு எழுந்தபோது காலைப் பத்திரிகை தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தான். அதில் ஜயனின் போட்டோவுடன் அறிவிப்பு ஒன்று வெளியாகியிருந்தது.

"இதை பார்த்தீங்களா? என்னை உயிரோட பிடிச்சுக் கொடுத்தா, பத்தாயிரம் ரூபா பரிசளிக்கப் போறதா அறிவிப்பு. இந்த அறிவிப்பை அரசாங்கம் குடுக்கலை. வக்கீல் பாலகிருஷ்ண பிள்ளை சொந்தப் பொறுப்பில் கொடுத்திருக்கிறார்."

பேப்பரை நிர்மலாவிடம் கொடுத்தான்.

"பாலகிருஷ்ண பிள்ளையை நீங்க வெட்டினீங்களா?" பேப்பரை ஒரு தடவை புரட்டியபடி அவள் கேட்டாள்.

"கொல்லலை, வலது கையை மட்டும் வெட்டினேன். தொழில்ல பொய் சொல்ல நாக்கு மட்டும் போதுமே அவருக்கு!"

"அது தப்பில்லையா?" நிர்மலா கேட்டாள்.

"தப்புதான். ஆனா, எந்தத் தப்புமே செய்யாத என் கழுத்துல நாக்குக்கயிறு விழுந்திருக்குதே. நான் அதுல கிடந்து துடிச்சுச் சாகணுமா? அது சின்ன விஷயமா?"

நிர்மலாவால் அதற்கு பதில் சொல்ல முடியவில்லை.

"வக்கீல்களையெல்லாம் இப்படிச் செய்யலாமா?" தேவகி கேட்டாள்.

"எல்லா வக்கீல்களையும் வெட்டிக் கொல்றது என் நோக்கம் இல்லையே. தங்களோட பக்கம் ஜெயிக்கணும்கிறதுக்காக பொய்ச் சாட்சிகளைச் சிலர் கொண்டு வரலாம். ஆனா, இந்த வழக்குல உண்மையான குற்றவாளியே வக்கீலா இருக்குறாரே?"

"பிள்ளையுமா இந்த வழக்குல இருக்கார்?" நிர்மலா கேட்டாள்.

"ஆமாம்"

"இன்னும் வேற யாரெல்லாம் இருக்காங்க?"

"ம்... அதையெல்லாம் சொல்லி என்ன பிரயோஜனம்! சரி, நான் கொஞ்ச நேரம் தூங்கிக் கட்டுமா?" ஜயன் கேட்டான்.

"அப்பா திடும்னு வந்துட்டா என்ன பண்றது? எனக்கு அதுதான் பயம்!" நிர்மலா சொன்னாள்.

"சில சமயம் போன் பண்ணுவார். இல்லேன்னா திடுதிப்புன்னு கிளம்பி வந்துடுவார். சரி ஒரு வேலை செய்யுங்க. என் கார் ரிப்பேரா ஷெட்டுல கிடக்குது. எப்படியும் நாலஞ்சு நாளாகும். அதானால காரோட பின்ஸீட்ல படுத்துக்கங்களேன்."

அது ஒரு நல்ல யோசனைதான். முந்தைய இரவிலிருந்து ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு மற்றும் ஜனநடமாட்டமுள்ள பகுதிகளில் ஜயனைத் தேடி மஃப்டியில் போலீஸார் சுற்றிக் கொண்டிருந்தனர்.

ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸுகளை நிறுத்தி போலீஸார் சோதனை போட்டனர்.

"அவன் மட்டும் என் கையில சிக்கினா கையையும் காலையும் பீஸ் பீஸா கழற்றி எடுத்திடுவேன்." சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ குறுப்பு பற்களை நெரித்தபடி கர்ஜித்தார்.

போத்தன் வர்கீஸ் அன்று தனது நிதி நிறுவனத்துக்குப் போகாமல் வீட்டில் முடங்கிக் கிடந்தார்.

நீலகண்டன் நாயர் இரண்டு போலீஸ்காரர்களை வீட்டுக்கு முன்பாக காவல் நிற்க ஏற்பாடு செய்திருந்தார். பாலகிருஷ்ண பிள்ளையின் கையை வெட்டியவனின் அடுத்த குறி தானாகத் தான் இருப்போம் என்று நாயர் நினைத்தார். எங்கே போவதாக இருந்தாலும் மறக்காமல் கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டார்.

ஜயன் ஷெட்டுக்குள் இருந்த காரின் பின் ஸீட்டில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். சட்டென்று ஏதோ கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டுக் கண்விழித்தான். சத்தம் எழுப்பாமல் ஷெட்டின் கேட்டை நெருங்கிய ஜயன் இடைவெளி வழியாக வெளியே பார்த்தான். நீலகண்டன் நாயர் காரிலிருந்து இறங்கினார். அவருடன் போலீஸ்காரர்கள் இருவர் இருந்தனர்.

# 4

அந்தக் காட்சியைப் பார்த்ததும் ஜயனின் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. ஒருவேளை தன்னைக் கைது செய்யத்தான் வந்திருக்கிறார்களோ என்றுகூடத் தோன்றியது.

நிர்மலா தன்னை ஏமாற்றிவிட்டாளா?

தன்னை காருக்குள் படுக்கச் சொன்ன பிறகு அப்பாவுக்கு போன் செய்து விட்டாளா?

காரிலிருந்து நீலகண்டன் நாயர் இறங்குவதற்குள்ளேயே நிர்மலா வீட்டுக் கதவைத் திறந்து விட்டிருந்தாள்.

"என்னப்பா திடீர்னு?" நிர்மலா கேட்டாள். அதற்குள் தேவகியும் அங்கு வந்துவிட்டிருந்தாள்.

உண்மையைச் சொன்னால் அந்த நேரம் அவர் வந்ததும், அவர்கள் இருவரும் திடுக்கிடவே செய்தனர். விவரத்தைத் தெரிந்து கொண்டு ஒருவேளை போலீஸ்காரர்களை அழைத்து வந்திருக்கிறாரோ?

நீலகண்டன் நாயர் பதில் எதுவும் சொல்லாமல் வீட்டுக்குள் நுழைந்தார். போலீஸ்காரர்கள் வாசல் வரை வந்த பிறகு கேட்டுக்குத் வெளியே போய் நின்றுகொண்டனர்.

"உனக்கு விஷயம் தெரியும்மாம்மா!" நாயர் கேட்டார்.

"எதைப் பத்திப்பா?"

"அவன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சுட்டான்!"

அந்த இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

நல்லவேளை நீலகண்டன் நாயருக்கு இங்கு நடந்திருப்பது தெரியவில்லை.

"பேப்பர்ல படிச்சேன்பா!"

"அதுகூட பரவாயில்லைனு விட்டுத் தொலைக்கலாம். நம்ம பாலகிருஷ்ண பிள்ளையோட கையை வேற வெட்டிட்டான்!"

"அதுவும் பேப்பர்ல இருக்கே."

"அவனை ரெண்டு தடவை தூக்குல போட்டாக் கூட என் ஆத்திரம் தீராதும்மா." நாயர் வியர்வையைத் துடைத்தபடி நாற்காலியில் அமர்ந்தார்.

"அதுக்கு நீங்க ஏம்பா என்னமோ போல இருக்குறீங்க?" நிர்மலா கேட்டாள்.

"நிர்மலா...முதல்ல குடிக்கிறதுக்கு ஏதாவது குடும்மா... சில்லுன்னு இருந்தா தேவலாம்."

வீட்டுக்குள் போன நிர்மலா, ஃபிரிட்ஜைத் திறந்து ஒரு பாட்டில் ஐஸ்வாட்டரையும் கிளாஸையும் எடுத்துவந்தாள்.

பாட்டிலை வாங்கியவர் கிளாஸை எடுக்காமல், மூடியைத் திறந்து அப்படியே வாயில் ஊற்றிக்கொண்டார். மொத்தத் தண்ணீரையும் குடித்த பிறகு அவர் பாட்டிலையே கீழே வைத்தார்.

"இன்னும் வேணும்மாப்பா?" நிர்மலா கேட்டாள்.

"எதுக்கும் இன்னும் ஒரு பாட்டிலை கொண்டுவா. தேவைப் பட்டா குடிச்சுக்கிறேன்."

நிர்மலா மற்றொரு பாட்டிலை எடுத்து வந்தாள்.

நீலகண்டன் நாயர் வெளிப்புறம் பார்த்தார்.

"போலீஸ்காரங்க எங்கே போயிட்டாங்க?" கேட்டார்.

"கேட்டுக்கு வெளியில இருக்குறாங்கப்பா!"

"நல்லவேளை, உன்கூட துணைக்கு தேவகி இருக்காங்க!"

"ஆமாம், உங்ககூட எதுக்கு போலீஸ்காரங்க வந்திருக்காங்க?"

"அதைப் பத்தியெல்லாம் பேசாம இருக்கிறதுதான் நல்லதும்மா!"

"உங்க உடம்பு ஏம்பா நடுங்குது?"

"நேத்து ராத்திரி ஆரம்பிச்ச நடுக்கம்மா இது. அதான் அவன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சபோது ஆரம்பிச்சது!"

"நீங்க எதுக்கு பயப்படணும்?...

"நல்ல கேள்வி கேட்ட போ. நானும் பாலகிருஷ்ண பிள்ளையும் நண்பர்களாச்சே!"

"அதுக்கு என்னப்பா?"

"பாலகிருஷ்ண பிள்ளையைத் தண்டிச்சவன், அவரோட மற்ற நண்பர்களையெல்லாம் விட்டு வைப்பானா?"

அதே நேரம் கேட்டுக்கு வெளியே போன போலீஸ்காரர்கள் பக்கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடைப் பக்கம் நடந்தனர். ஒருவர் வெற்றிலைபாக்கு போட்டுக் கொண்டார். மற்றவர் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"என்ன சார் இந்தப் பக்கம்?" கடைக்காரர் போலீஸாரிடம் கேட்டார்.

நேத்து ஜெயில்லேர்ந்து தப்பிச்ச ஒருத்தன் ஒரு வக்கீல் கையை வெட்டிட்டான் இல்லையா? அதிலேருந்து நீலகண்டன் நாயர் ஏக பயத்தோட இருக்கார்."

"யாரு நம்ம எம்.எல்.ஏ-வையா சொல்றீங்க?"

"ஆமாம்... அவரையேதான். நாலு தடவை எலெக்ஷன் முடியறதுக்குள்ள அவர் கோடீஸ்வரனாயிட்டார்."

"ஆயிரம் இருந்து என்ன, இப்ப நிம்மதி இல்லாம இருக்க வேண்டி இருக்கே."

"அவர் பொண்ணுதானே இங்கே இருக்குறாங்க!"

"ஓகோ மகளைப் பாத்துட்டுப் போக வந்திருக்கிறாரா?"

"இருக்கும். நாங்க இப்ப அவருக்கு காவல், கூடவே அலையணும்!"

"பயப்படாம இருங்கப்பா!" நிர்மலா அப்பாவுக்குத் தைரியம் சொன்னாள்.

"எப்படிம்மா முடியும்? எந்த நேரத்துல எங்கேருந்து எப்படி வருவானோ, யாருக்குத் தெரியும்.?"

"நான் தெரியாமத்தான் கேட்குறேன். அதுக்கு நீங்க ஏம்பா இவ்வளவு பயப்படணும்?"

"நீ என்ன இவ்வளவு அசடா இருக்குறே? அவன்தானே நம்ம கார்ல ஒரு பொண்ணைக் கடத்திட்டு வந்து கொன்னுருக்கான்."

"எனக்கென்னமோ அவர் அப்படி செஞ்சிருப்பார்னு தோணலை!"

"நீ ஏன் அவனுக்கு இந்த அளவு வக்காலத்து வாங்குற?"

"ஒரு தடவை நான் கோழிக்கோட்டிலேர்ந்து வரும்போது என்னைக் காப்பாடித்துறதுக்காக மூணுபேர்கிட்டச் சண்டை போட்டார். இல்லேன்னா என் கதி என்ன ஆகியிருக்கும்னு யோசிச்சுப் பாருங்க."

"அது என்னமோ நம்ம நல்ல காலத்துனாலன்னு வைச்சுக்க!"

"சரி, சாப்பாடு போடட்டுமாப்பா!" நிர்மலா கேட்டாள்.

"போடு அதுக்கு முன்னாடி காருக்குள்ள நான் வெச்சிருக்கிற பிரீஃப்கேஸைக் எடுத்துட்டு வந்துடேன்."

நிர்மலா வெளியே வந்து காருக்குள் இருந்த பிரீஃப் கேஸை எடுத்து வந்தாள். திரும்பியவள் திடுக்கிட்டாள். போலீஸ்காரர் இருவரும் கார் ஷெட்டின் முன்னால் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். திறந்து கிடக்கும் கார் ஷெட். அவள் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

'அதற்குள் ஜயன் இருக்கிறான். தப்பித்தவறி இருவரில் ஒருவர் பார்த்து விட்டாலும் என்ன ஆவது?' என்று யோசித்தாள். இருப்பினும் எதையும் காட்டிக் கொள்ளாமல் பிரீஃப்கேஸுடன் அப்பாவிடம் வந்தாள்.

சற்று நேரத்துக்குள் நீலகண்டன் நாயர் லுங்கி ஒன்றைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தார்.

அவளுக்கு எதுவும் புரியவில்லை.

"உங்க அப்பா திடீர்னு வந்திருக்கிறதுக்கு ஏதாவது விசேஷம் இருக்கா என்ன?" தேவகி கேட்டாள்.

"அப்பா ரொம்பவும் பயந்து போயிருக்கிறார். ஜயன் சொன்னதெல்லாம் உண்மையாத்தான் இருக்கும்னு தோணுது. அப்பா முகமே அவர் ஒரு குற்றவாளிதான்னு சொல்லுதே!"

"எதுக்கும் சீக்கிரம் சமையல் பண்ணிடுறேன். அப்பா சாப்பிட்டிருக்கமாட்டார்னு தோணுது." நிர்மலா சமையல்கட்டை நோக்கி நடந்தாள்.

நீலகண்டன் நாயர் வெளியே வந்ததும் போலீஸ்காரர்கள் இருவரும் எழுந்து கொண்டனர்.

நீலகண்டன் ஷெட்டின் கதவைத் திறந்தார்.

"என்ன இது காரெல்லாம் ஒரே தூசியும் தும்புமா?" - என்று கேட்டவர் காரின் அருகே வந்தார்.

"ரிப்பேர் செய்யுறாங்க போலிருக்கு!" ஒரு போலீஸ்காரர் சொன்னார்.

"வெளியதான் குடுத்து சீக்கிரமா பண்ணச் சொல்லலாமே. எதுக்கு இங்கேயே போட்டு வெச்சிருக்கிறாள்?" நாயர் யாரிடம் என்றில்லாமல் சொன்னார்.

ஷெட்டுக்குள் நுழைந்து காரின் அருகே வந்தாலும் மிகவும் நெருங்கவில்லை.

டயர்கள் மற்றும் பொருள்கள் கழற்றிப் போடப்பட்டிருந்ததால் மேற்கொண்டு நகராமல் சற்றுத் தொலைவிலேயே நின்று கொண்டார்.

"நிர்மலா!" நாயர் வீட்டை நோக்கிக் குரல் கொடுத்தார்.

"என்னப்பா?" நிர்மலா வீட்டுக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

"இங்கே வாம்மா!"

"அவசரமாப்பா, சமையல் பண்றேன்."

"சரி, ஒரு நிமிஷம் வந்துட்டுப் போம்மா!"

நீலகண்டன் நாயர் இயல்பிலேயே பிடிவாதக்காரர். அவர் எதையாவது நினைத்தால் உடனே அது நடக்கவேண்டும். மகளுக்காக வாங்கிக் கொடுத்த கார் ரிப்பேராகிக் கிடப்பதைப் பார்த்ததும் அவருக்குத் தாங்கவில்லை.

"ஏம்மா வண்டியை இப்படி போட்டு வெச்சிருக்கிற?" அருகில் வந்த நிர்மலாவிடம் கேட்டார்.

"ஸ்டார்ட்டிங் டிரபிள்தான்!"

"உடனேயே சரிபண்ண வேண்டியதுதானே?"

"இதுக்கெல்லாம் யாருப்பா இருக்காங்க. அவரைப் பத்தித்தான் உங்களுக்குத் தெரியுமே. நேரமே கிடையாது. மெக்கானிக்கிட்டச் சொன்னேன். என்னத்தையெல்லாமோ பிரிச்சுப் போட்டுப் போயிருக்காங்க."

"முன்னாடியே தகவல் சொல்லியிருந்தா நானே நல்ல ஆளா அனுப்பி வச்சிருப்பேனே."

"கிடக்கட்டும்பா. இப்ப நான் எங்கே வெளியில் போகப் போறேன்." என்றவள் அவசர அவசரமாகச் சமையல்கட்டை நோக்கி நடந்தாள்.

தான் மேற்கொண்டும் அங்கேயே நின்று பேசிக் கொண்டிருந்தால் ஒருவேளை காரைத் திறந்து பார்க்கவும் செய்யலாம் அவர். இல்லாவிட்டால் காரை வெளியே கொண்டு வருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.

"தேவகி... அப்பா எதையாவது செய்து வச்சிடப்போறாருன்னு பயமா இருக்கு. நல்லவேளையா டயரை கழற்றிப் போட்டிருந்ததும் நல்லதாகப் போய்விட்டது."

"உண்மைதான் சர்க்கரையில் ஈ மொய்க்கிறது மாதிரி எல்லோரும் அங்கேயே மொய்ச்சுக்கிட்டிருக்காங்களே!"

"அப்பா சமையல் ஆயிடுச்சு! வாங்கப்பா!" நிர்மலா அழைத்தாள்.

"இதோ வந்துட்டேன் நீ பரிமாறு!"

"அவங்களுக்கும் பரிமாறட்டாப்பா?"

"போடு...போடு!"

இவர் எதற்காக போலீஸ்காரர்களை உடன் அழைத்துக் கொண்டு திரிகிறார் என்று அவளுக்குப் புரியவில்லை.

தெரிந்தவர்களாக இருக்கலாம். சாப்பிடும் நேரத்தில் எப்படியும் இரண்டு மூன்று பேராவது அவருடன் இருப்பது வழக்கம்தான்.

நிர்மலா மூன்று பேருக்கும் உணவு பரிமாறினாள். அதே நேரம் மற்றொரு பாத்திரத்தில் சாப்பாடும் சொம்பில் தண்ணீரும் தேவகியிடம் கொடுத்து அனுப்பினாள். போலீஸ்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்த சமயம் பார்த்து, தேவகி சமையற் கட்டிலிருந்து கார்ஷெட்டை நோக்கி நடந்தாள்.

காரை நெருங்கி பின்புறக் கதவைத் திறந்தாள். ஜயன் ஸீட்டில் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

"சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்."

"அவங்கள்லாம் எங்கே?"

"சாப்பிட உட்கார்ந்துட்டாங்க. அதுக்கு முன்னாடி நீங்க சாப்பிட்டுடணும்" தேவகி பரபரப்புடன் கூறினாள்.

ஜயன் வெளியே வந்து கைகழுவினான். பிறகு காரின் முன்புறம் அமர்ந்து சாப்பிட்டான்.

"பாத்திரங்களை நாங்க கழுவிக்கிறோம். முதல்ல உங்க இடத்துக்குப் போங்க" தேவகி சொன்னாள்.

"என்னால பாவம் நீங்க ரொம்பக் கஷ்டப்பட வேண்டியிருக்கு" ஜயன் சொன்னான்.

"அதெல்லாம் சினிமாவுல வழக்கமா பேசுற டயலாக். அதையெல்லாம் இங்க சொல்லி என்ன பிரயோஜனம்?"

தேவகியின் வார்த்தைகளைக் கேட்ட ஜயன் அந்தச் சந்தர்ப்பத்திலும் சிரித்தான்.

"சிரிப்பெல்லாம் கிடக்கட்டும். இங்கே இப்ப எங்க ஆளுங்க வந்திருக்காங்க ஜாக்கிரதை."

"வந்தவர்ல ஒருத்தர் எனக்குப் பின்னாலயேதான் இருந்தார்."

"அவங்க உங்களைப் பார்த்திருந்தா என்ன பண்ணி இருப்பீங்க?"

"அதெல்லாம் அப்போ பார்த்திருக்க வேண்டிய சமாசாரம். வீணா இப்படியெல்லாம் யோசிச்சு எதுக்கு தலையைப் புண்ணாக்கிக்கணும்?"

"ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டு பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் தேவகி.

சாப்பாட்டை முடிந்துக்கொண்ட ஐயன் பழையபடி தன் இடத்துக்குப்போய் உட்கார்ந்து கொண்டான். தன்னிடமிருந்த கத்தியை வெளியே எடுத்து ஒரு தடவை பார்த்தான்.

"நல்ல சாப்பாடு!" நாயர் சொன்னார்.

"காலையில் எதுவும் சாப்பிடலையாப்பா?"

"இப்பத்தான் சாப்பாடு, தண்ணிங்கிறதை பல்லுல காமிச்சிருக்கேன்."

"நாங்களும் நாயர் சார் கிட்டச் சொன்னோம்... வெளியிலேயே சாப்பிட்டுக்கிறோம்னு. ஆனால், சாருக்கு ஓட்டல்ல நுழையிறதுன்னாலே பயமா இருந்தது. எதுக்காக வீணா அவரைத் தொந்தரவு படுத்தணும்னு தான் அந்த யோசனையையேக் கைவிட்டோம்!" ஒரு போலீஸ்காரர் சொன்னார்.

"நான் அநாவசியமா பயப்படுறேனா? உங்களுக்கு அவனைப் பத்தித் தெரியாது. எந்த நேரமும் துப்பாக்கியை ரெடியா வைச்சிருக்கிற பாலகிருஷ்ணனோட வீட்டுக்குள்ள நுழைஞ்சு அவர் கையை வெட்டியிருக்கிறான். அதுவும் எந்த நேரத்துல? நானும் சர்க்கிளும் அந்துப் போத்தன் வர்க்கீஸும் அங்கேருந்து வெளியேறின நேரத்துல. நாங்க கேட்டைத் தாண்டி வெளியேறுறதுக்காகவே காத்திட்டிருந்தான்னு தோணுது" நாயர் அந்தச் சம்பவத்தைக் கண்முன் பார்த்துக் கொண்டிருப்பது மாதிரி பேசினார்.

"அதுக்கு நீங்க ஏன் சார் பயப்படணும்?"

"அவர்மேல அவனுக்கு இருந்த கோபம் சில நேரம் எங்க மேலயும் திரும்பலாமே. நாங்க பிள்ளையோட ஃபிரண்டுங்களாச்சே!"

"வாதாடுற வக்கீலுங்களையெல்லாம் வெட்டுறதுன்னு வந்துட்டா அது ரொம்பச் சிக்கலாச்சே!" மற்றொரு போலீஸ்காரர் சொன்னார்.

"என்னோட பயம் அதில்லை!"

"வேற என்ன சார் பயம் உங்களுக்கு?"

"என் கார்தான் அந்த வழக்குல பயன்படுத்துப்பட்டது. வேலை வாங்கித் தர்றேன்னு சொல்லி என் கார்லதான் அந்த அப்பாவிப் பெண்ணை கடத்திட்டு வந்தான்."

"நீங்க சொல்லித் அவளைக் கூட்டிட்டு வந்ததாக்கூட அவன் சொல்லியிருக்கலாம் இல்லைங்களா?"

"அதையு சொல்லுவான், அதுக்கு மேலேயும் சொல்லி இருப்பான்."

"அதனாலதான் அந்தப் பொண்ணும் ஏமாந்துபோய் அவன் கூடப் புறப்பட்டிருக்காள்."

"அந்தப் பொண் அவ்வளவு சுத்தமானவ இல்லேன்னும் கேள்விப்பட்டேன்" நாயர் சொன்னார்.

"அதெல்லாம் வீண்பேச்சு!" நிர்மலா குறுக்கிட்டாள்.

"உனக்கு அந்தப் பொண்ணைத் தெரியுமா என்ன?" நாயர் கேட்டார்.

"வழக்கு நடக்கும்போது நான் அந்தப் பொண்ணைப் பத்தி விசாரிச்சேன். டைப்ரைட்டிங்-ஷார்ட்ஹேண்ட் படிச்சுட்டு வேலை தேடிக்கிட்டிருந்தாளாம். அதனால வேலை வாங்கித் தர்றேன்னு சொல்லி ஜயன் அவளைக் கூப்பிட்டு வந்திருக்கணும்."

அந்தப் பேச்சு பிடிக்காதவரைப் போல் நாயர் உட்கார்ந்து இருந்தார்.

"வேலை ஏதாவது போட்டுக் குடுக்கலாம்னு நீங்க விளையாட்டுக்காக ஜயன்கிட்டச் சொன்னீங்களா என்ன?"

"என்னம்மா நீ திடீர்னு வக்கீல் மாதிரி என்ன வெல்லாமோ கேட்குற?" நாயர் கேட்டார்.

"அவன் அப்படித்தான் நடந்துட்டிருக்கான்."

அப்பா தடுமாறுவதை உணர்ந்த நிர்மலா சட்டென்று விஷயத்தை மாற்றினாள்.

"என்ன இருந்தாலும் அவனுக்கு என்மேல கோபம் இருக்குங்கிறது உறுதி. பிள்ளையைத் தொட்டவன், என்னையும் விடமாட்டான். அதனால் ரெண்டு நாளைக்கு இங்கேயே தங்கிட்டா என்னன்னு நெனைக்கிறேன்மா!" நாயர் சொன்னார். நிர்மலாவும் தேவகியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

# 5

"இதுவரைக்கும் நீங்க இங்க தங்கினதே இல்லை தானப்பா?" நிர்மலா கேட்டாள்.

"எங்கம்மா நேரம் இருந்தது? இந்த வீட்டை வாங்கினபோது ஒரேயொரு நாள் ராத்திரி பன்னிரண்டு மணிவரைக்கும் தங்கியிருந்தேன். அன்னிக்கும் அவசரமான ஒரு வேலை இருந்ததால முழுசாத் தங்க முடியலை."

"இங்கே படுத்தா உங்களுக்குத் தூக்கம் வருமோ என்னவோ?"

"எப்படியிருந்தாலும் பரவாயில்லைம்மா!"

நிர்மலா, நீலகண்டன் நாயரை அங்கிருந்து கிளப்ப வேண்டும் என்பதில் குறியாக இருந்தாள். ஜயன் அந்த வீட்டின் கார்

ஷெட்டுக்குள் இருப்பது வரை அப்பா இந்த வீட்டில் இருப்பதை அவள் விரும்பாததுதான் காரணம். அப்பாவும், போலீஸ்காரர்களும் இங்கேயே தங்கிவிட்டால் ஏதாவது பிரச்சினைகள் கிளம்பலாம்.

ஆனால், நீலகண்டனின் நடவடிக்கைகள் அவர் அங்கேயே தங்கப் போகிறார் என்பதைத் தெரிவித்தன.

சாப்பாடு முடிந்ததும் போலீஸ்காரர்கள் பழையபடி வெளியே இருந்த வெற்றிலைபாக்குக் கடையை நோக்கி நடந்தார்கள்.

"வாங்க வாங்க... வெத்தலை போடுறீங்களா? அப்புறம் ஏதாவது தகவல் உண்டா சார்?"

"என்ன தகவல்... நாங்க இங்கேயேதான் இருக்கிறோம்."

"நீங்க இந்த இடத்தைவிட்டு நகராம இருக்குறதைப் பார்த்தா ஏதோ விசேஷம்னுதான் தெரியுது."

"எங்ககூட வந்தவரைத் தெரியுமில்லையா?"

"அவர்தான் நம்ம எம்.எல்.ஏ ஆச்சே சார்... அவரைத் தெரியாம இருக்குமா? ஆமா, சார் இப்ப அவர் எந்தக் கட்சியில இருக்கார்?"

"அதை அவரே இன்னும் பிரகடனப்படுத்தல. அடுத்த தேர்தல் வரும்போது தெரியும். என்ன இருந்தாலும் மனுஷன் இப்படிப்பட்ட பயந்தாங்குளியா இருப்பார்னு தெரியாமப் போச்சு!"

"இது உயிரைப் பத்தின பயமில்லையா? அப்படித்தான் இருப்பாங்க!" மற்றொரு போலீஸ்காரர் சொன்னார்.

அந்த இருவரும் கடையிலிருந்து கிளம்பி வந்து ஷெட்டுக்குள் இருந்த காரின் பின்புற பம்பரில் அமர்ந்தனர்.

"அவன் எப்படி இருந்தாலும் இந்த ஏரியாவை விட்டு வெளியேறியிருக்கமாட்டான்னு தோணுது" சற்று வயதான போலீஸ்காரர் மற்றவரிடம் சொன்னார்.

"அவனை அரெஸ்ட் பண்ணும்போது நீங்களும் கூடப் போயிருந்தீங்களே."

"நானும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் அவனைத் தேடி கன்னியாகுமரி போனபோது அவன் ஓட்டல்ல அறையெடுத்து சுகமா தங்கிக்கிட்டிருந்தான். விசாரிச்சா, அவன் முதலாளி அவனை அங்கே தங்கச் சொன்னதா சொல்றான்."

"முரட்டுப் பயலாத்தான் இருக்கான்" போலீஸ்காரர் ராகவன் குறிப்பிட்டார்.

"உண்மைதான். அவன் கையைத் தூக்கினான்னா ரெண்டு பேரை ஒரே நேரத்துல சமாளிச்சுடுவான்!" இது குட்டப்பன் என்ற வயதான போலீஸ்காரர்.

"அவன் கோட்டயம் எல்லையைத் தாண்டிப் போயிருக்க மாட்டான்கிறது என் கருத்து!" அணைந்து போன பீடியை மறுபடி பற்ற வைத்த ராகவன் கூறினார்.

அவர்கள் பேசிக் கொள்வது காருக்குள் இருந்த ஜயனுக்குத் தெளிவாகக் கேட்கவே செய்தது. அவன் மூச்சை அடக்கிப் பிடித்தவனாக சிரமத்துடன் உட்கார்ந்திருந்தான். ஏதாவது ஒரு காரணத்தால் கார் சற்று அசைந்தால்கூட தான் மாட்டிக் கொள்வோம் என்பது அவனுக்குத் தெரியும். காரின் பின்புற டயர்கள் இரண்டையும் கழற்றிய பிறகு வண்டி ஜாக்கியில் நின்று கொண்டிருந்தது. ஒரு சின்ன அசைவுகூட வண்டியை கீழிறக்கிச் சாய்த்து விடும்.

நல்ல வேளையாக எதுவும் நடக்கவில்லை.

நீலகண்டன் நாயர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தலையணையை இழுத்துப் போட்டு சாய்ந்தவாறு படுத்திருந்தார்.

தேவகியும், நிர்மலாவும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அவர் படுத்திருக்கும் அறைக்கு வந்தனர்.

"நீங்க சாப்பிட்டாச்சா?" நாயர் கேட்டார்.

"சாப்பிட்டாச்சுப்பா!"

"இன்னிக்கு யாராவது உனக்கு போன் பண்ணினாங்களாம்மா?"

“இல்லையேப்பா!”

“யாராவது போன் பண்ணி நான் இங்கே இருக்கேனான்னு கேட்டா, இல்லைன்னு சொல்லிடு!”

“யாராவது முக்கியமான விஷயத்துக்குக் கூப்பிடாக் கூடவா?”

“உனக்குத் தெரியாது. அவன் ரொம்பவும் தந்திரமானவன். ஒருவேளை அவனேகூட போன் செஞ்சு இங்கே வர்றதுக்கு முயற்சி செய்யலாம்.”

“நாங்கள்லாம் இருக்கிறோமே, எதுக்காக நீங்க பயப்படணும்?” தேவகி கேட்டாள்.

“அதையெல்லாம் சொல்லி விளக்க முடியாதும்மா!”

“ஆமாம்பா இந்த போலீஸ்காரங்க எதுக்கு இங்கே வந்திருக்காங்கப்பா?”

“எனக்குப் பாதுகாப்பா...!”

“அதான் எதுக்கு”

“நிலைமை மோசமா இருக்கே. எதுக்கும் இருக்கட்டும்னு தான்.”

“அப்பா, நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே? இந்த வீட்டுல போலீஸ்காரங்க காவலுக்கு நிக்குறது எனக்கு என்னமோ மூச்சுத்திணறுற மாதிரி இருக்கு. அவருக்கு இதெல்லாம் பிடிக்காது. தெரிஞ்சா சண்டை போடுவார். இந்த வீட்டில் போலீஸ்காரங்களைப் பார்த்தா மத்தவங்க என்னைப் பத்தி தப்பா நினைக்கமாட்டாங்களா?”

“சொல்றது சரிதான். எசகுபிசகா அந்தப் பாவி இங்கே வந்துட்டா?”

“அதுக்காக நீங்க பயப்படாதீங்க. தேவகியும் போலீஸ்காரி தான். இங்கேயும் பாதுகாப்புக்குத் தேவையானதெல்லாம் இருக்கே?”

"உனக்குப் பிடிக்கலேன்னா போலீஸ்காரர்களை அனுப்பிடுறேன். ஆனா, ராத்திரி அவங்களை மறுபடி வரச் சொல்வேன் சம்மதமா?"

தற்சமயத்துக்கு இதுவே போதும் என்று நிர்மலா ஆறுதலடைந்தாள்.

நீலகண்டன் நாயர் போலீஸ்காரர்கள் இருவரையும் வீட்டுக்குள் அழைத்தார்.

"ஒரு வேலை செய்யுங்க. காலையிலேர்ந்து என் கூடவே இருக்கீங்க. வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துட்டு ராத்திரி எட்டு மணி வாக்குல வாங்களேன்."

அந்த வார்த்தைகளுக்காகக் காத்திருந்தவர்கள் மாதிரி இருவரும் உடனே மகிழ்ச்சியுடன் கிளம்பினர்.

"சரி படுத்துக்கங்கப்பா. நேத்து ராத்திரியிலேர்ந்து தூக்கம் இல்லாம இருக்கீங்களே!" நிர்மலா சொன்னாள்.

"நிஜம்தாம்மா!"

"கதவை மூடிடட்டும்மாப்பா?" நிர்மலா வெளியே வந்தபின் கேட்டாள்.

"மூடிடும்மா!"

அவர்கள் வெளியே போனதும் நீலகண்டன் நாயர் எழுந்து கதவை உட்புறமாகத் தாழிட்டார்.

தேவகி சமையற்கட்டுக் கதவைத் திறந்துகொண்டு கார் ஷெட்டுக்கு வந்தாள்.

"போலீஸ்காரங்க ரெண்டு பேரும் போயிட்டாங்க. இப்ப போலீஸ்காரி நான் மட்டும்தான்."

"நீங்க ஒரு ஆளே போதாதா?"

"ஆமா... இவ்வளவு நடந்தும் பயம் எதுவும் இல்லையா?"

"எதுக்காக பயப்படணும்? தூக்குத் தண்டனை கிடைச்ச ஒருத்தனோட தீர்ப்பை மாத்தியா எழுத முடியும்? என் சாவுக்கு முன்னால உண்மையான குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கணும்!"

"அவர் ரொம்பவும் பயந்து போயிருக்கார்!"

"அவன் தானே என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினது! பாவம் அந்த ஏழைப்பொண்ணை நாலு நாய்களும் கடிச்சுக் குதறிட்டுக் கொலையும் பண்ணிட்டானுங்க!"

"என்னதான் கோபம் இருந்தாலும் இந்த வீட்டில் நீங்க அவரை ஒண்ணும் செய்யக்கூடாது. ஏன்னா, எனக்கும் அது கெட்ட பேரை ஏற்படுத்தும்!"

"யோசிச்சேன்!"

"ராத்திரிப் பொழுதை எங்கே கழிக்கப்போறீங்க?"

"எல்லா வகையிலயும் இதுதான் தங்கியிருக்கச் சரியான இடம். ரெண்டு போலீஸ்காரங்க. கூட ஒரு பெண் போலீஸ் இவ்வளவும் இருக்கும்போது யாராவது இங்கே வருவாங்களா?"

"ஜாக்கிரதையா இருந்துக்கங்க. எதிர்பாராம கூட யாராவது வந்தாலும் வரலாம்." தேவகி எச்சரிக்கை செய்தாள்.

ஜயன், காரின் பின்ஸீட்டில் படுத்திருந்தவன் அப்படியே கண்ணயர்ந்து விட்டான். அந்த இடம் மிகவும் பாதுகாப்பானது என்று அவன் உள்ளுணர்வு கூறியிருக்கவேண்டும். நன்றாக உறங்கினான்.

ஐந்து மணியானபோது தேவகி டீ எடுத்து வந்தாள்.

"ரொம்பவும் நன்றி!" ஜயன் சொன்னான்.

இரவு எட்டு மணியளவில் போலீஸ்காரர்கள் இருவரும் வந்தனர். நிர்மலா அவர்களுக்குச் சோறு பரிமாறினாள்.

"ஒரு டம்ளரும், ஐஸ் வாட்டர் ஒரு பாட்டிலும் கொடுத்துட்டா, ராத்திரியில் உங்களைத் தொல்லைப் படுத்தாம இருக்கலாம்."

நிர்மலா அதையெல்லாம் எடுத்துக் கொடுத்தாள்.

வீட்டிலிருப்பவர்கள் படுத்து விட்டனர் என்று தெரிந்த பிறகு ராகவன் டிரவுசர் பாக்கெட்டிலிருந்து அரை பாட்டில் ரம்மை வெளியே எடுத்தார். குட்டப்பன் கடலைப் பொட்டலத்தைப் பிரித்தார்.

அவர்கள் வரும்போதே ஓரளவுக்குக் குடித்திருந்தனர். பழைய வீரக் கதைகளை அசை போட்டபடி அந்த அரை பாட்டில் ரம்மை உள்ளுக்குள் இறக்கிக் கொண்டனர்.

இருவரும் இரவு நேரத்துக்கான மாற்று உடையைக் கொண்டு வந்திருந்தனர்.

காக்கி உடுப்பைக் கழற்றி வைத்துவிட்டு உடைமாற்றிக் கொண்டனர்.

"நாம ஏன் வீட்டுக்குள்ளே படுக்கணும், வெளிவராந்தாவுல படுத்துக்கிட்டா நல்ல காத்தோட்டமா இருக்குமே!" குட்டப்பன் சொன்னார்.

"நானும் அதையேதான் நினைச்சேன்."

அந்த நேரம் வீட்டின் வரவேற்பு அறையில் விளக்கு எரிந்தது. தேவகி நின்று கொண்டிருந்தாள்.

"இந்த ஹால்ல படுத்துகிறீங்களா?"

"வேண்டாம்மா, நாங்க இப்படி வெளியே படுத்துக்கிறோம். பாய், தலைகாணியைக் குடுத்திங்கன்னா போதும்" ராகவன் கூறினார்.

கொண்டுவந்து கொடுத்தாள் தேவகி.

வராந்தாவில் பெட்ஷீட் விரித்து இருவரும் படுத்துக் கொண்டனர். போதையில் பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்தவர்கள் படிப்படியாக குரலைக் குறைத்துக் குறைத்துக் கடைசியில் மௌனமாகத் தூங்கத் தொடங்கினர்.

தேவகி வெளிக்கதவைத் தாழிட்டிருந்தாள்.

காரில் எழுந்து உட்கார்ந்த ஐயன் வராந்தாவின் மங்கிய பல்பில் போலீஸார் இருவரும் நல்ல தூக்கத்திலிருப்பதைக் கவனித்தான். அவர்களுக்கு அருகில் இருவரின் யூனிஃபார்மும் மடக்கி வைக்கப் பட்டிருந்தன. ஐயனுக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியதுடி.

சத்தம் எழுப்பாமல் போலீஸ்காரர்களிடம் வந்த ஐயன் ஓரளவு பொருத்தமான யூனிஃபார்மை எடுத்துக்கொண்டு தனது இருப்பிடத்துக்குத் திரும்பினான். அதை அணிந்து கொண்டதும் இப்போது வெளியே கிளம்பலாம் என்ற தைரியம் பிறந்தது அவனுக்கு.

கேட்டைத் தாண்டி வெற்றிலைபாக்குக் கடையை நோக்கி நடந்தான். மணி பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்த போதிலும் கடையை இன்னும் மூடாமலிருந்தார் கடைக்காரர். இரவு சைக்கிள்களை வாடகைக்கு விடுவதையும் கடைக்காரர் செய்து வந்தார்.

"சார் நீங்க டூட்டிக்கு வந்திருக்கீங்களா?"

"ஆமாம்".

"அவனைப் பிடிச்சுட்டாங்களா சார்?"

"இங்கேயிருந்து, ஒருவேளை ஊரைவிட்டே வெளியேறிட்டானோ என்னவோ?"

"ஆள் சரியான வில்லனா இருப்பான் போல இருக்கே சார்."

"அப்படித்தான் தெரியுது."

"உங்களுக்கு சிகரெட் ஏதாவது வேணுமா?"

"ஒண்ணு குடுங்க... அப்புறம் எப்ப கடையை மூடுவீங்க?"

"கடையை மூடுறதுங்குறதெல்லாம் கிடையாது. பகல் சமயத்துல வேறொரு பையன் பார்த்துப்பான். நான் ரெஸ்ட் எடுத்துப்பேன். ஏன், என்ன விஷயம் சார்!"

"சைக்கிள் வேணும் அதுதான் கேட்டேன்."

"எது வேணுமோ எடுத்துக்கங்க சார்."

ஜயன் சைக்கிளில் ஏறிக்கொண்டு டவுன் பக்கமாக விரைந்தான். எதிரில் தென்பட்ட எவரும் சந்தேகத்துடன் பார்த்ததாகத் தெரியவில்லை.

பீட்வந்த போலீஸ்காரராக இருப்பார் என்று நினைத்திருக்க வேண்டும்.

ஜயனின் லட்சியம் போத்தன் வர்கீஸின் வீடுதான். மனப்பாடமாகியிருந்த பாதையில் சைக்கிள் வளைந்து வளைந்து முன்னேறியது.

வீட்டை நெருங்கும் சமயம் அங்கு ஒரு ஜீப் நின்று கொண்டிருந்தது ஜயன் ஜீப்பை நெருங்கினான்.

டிரைவர் பானெட்டைத் திறந்து வைத்துக் கொண்டு என்னமோ செய்து கொண்டிருந்தார்.

"என்னப்பா... ஏன் வண்டி நிக்குது?" ஜயன் அதிகாரத் தொனியில் கேட்டான்.

"ரெய்ஸ் ஆக மாட்டேங்குது சார்."

"தள்ளு... பார்க்கலாம்" - என்ற ஜயன் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுவிட்டு டிரைவரிடமிருந்த டார்ச்லைட்டை வாங்கி இன்ஜின் பக்கமாக அடித்துப் பார்த்தான். விஷயம் புரிந்தது. ஐந்து நிமிட நேரத்துக்குள் அதைச் சரி செய்து முடித்தான்.

"டிபன் சாப்பிடுங்க சார்!" டிரைவர் நாலாக மடக்கிய ரூபாய் நோட்டை ஜயனின் கையில் கொடுத்தான். ஜீப் நகர்ந்தது அந்த ஜீப் சரியாக போத்தன் வர்கீஸின் பங்களாவுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தது. அதை அங்கிருந்து கிளப்பு முகமாகந்தான் ஜயன் அதைச் சீர் செய்தான் அங்கேயே கிடந்தால் உள்ளே நுழைவது சிரமமாகலாம் என்று நினைத்தான்.

பங்களா வாசலில் இருந்த வாட்ச்மேன் ஜயனைப் பார்த்ததும் எழுந்து வந்தான்.

"யாருங்க?" காவல்காரர் கேட்டார்.

"ஸ்டேஷன்லேர்ந்து வர்றேன். இங்கேதான் இன்னிக்கு டூட்டி போட்டுருக்காங்க!" ஐயன் சைக்கிளை தள்ளியபடி பேசினான்.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது.

அறைக்குள் எதுவோ சத்தம் கேட்டது போல் தோன்றவே போத்தன் வர்கீஸ் திடுக்கிட்டுக் கண்விழித்தார். பக்கத்திலிருந்த லைட்டின் சுவிட்சைத் தட்டினார்.

அருகில் ஒரு போலீஸ்காரன் நின்று கொண்டிருந்தான்.

ஆனால், அந்த முகத்தைப் பார்த்த வர்கீஸின் நாக்கு உலர்ந்தது.

# 6

சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார்.

சந்தேகமில்லை ஐயனேதான்!

"நீங்கள்... நீ... ஐயன்தானே?" போத்தன் வர்கீஸ் நடுங்கும் குரலில் கேட்டார்.

"எப்படித் தோணுது?"

போத்தன் மெதுவாகப் பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். அந்த அறைக்குள் டெலிபோன் தலையணையை ஒட்டி டீபாய் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த அறைக்குள்தான் அடகு வாங்கும் நகைகளும், லட்சக் கணக்கான ரூபாயும் இருந்தன. மிகவும் பாதுகாப்பு நிறைந்த இடம் போத்தன் சாரின் படுக்கை அறை. அந்த அறைக்கு ஒரேயொரு கதவு மட்டும் தான் இருந்தது. கழிவறை, குளியலறை இரண்டும் அந்த அறையுடனேயே இணைக்கப் பட்டிருந்தது.

வரவேற்பு அறையிலுள்ள டெலிபோன் தவிர, படுக்கை அறையிலும் ஒரு தனி இணைப்பு இருந்தது. இந்த டெலிபோன் நம்பரை மிகவும் ரகசியமாக வைத்திருந்தார். மிகவும் நெருங்கிய நண்பர்கள் வட்டத்துக்கு மட்டுமே இது தெரியும்.

மெதுவாகப் பின்னோக்கி நகர்ந்தவர் கடைசியில் படுக்கையில் அமர்ந்தார்.

ஐயன் கதவைத் தாழிட்டான்.

திடுமென்று ரிசீவரைக் கையில் எடுத்த போத்தன் கண்ட்ரோல் ரூமின் நம்பரை டயல் செய்தார்.

சட்டென்று அவர் மீது பாய்ந்த ஐயன் அவரை அலாக்காகத் தூக்கி அப்படியே கீழே போட்டான். உடனடியாக ரிசீவரை கிராடிலில் வைக்கவும் செய்தான்.

"நான்தான் இங்கேயே நிக்குறேனே? அப்புறம் எதுக்கு போலீஸ்?" ஐயன் வலது காலால் அவரை ஓங்கி மிதித்தபடி கேட்டான்.

"என்னை ஒண்ணும் பண்ணிடாதே!" போத்தன் கைகுவித்துப் பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

"உங்களை நான் ஏதாவது பண்ணிடப் போறேன்னு எப்படித் தெரிஞ்சது?"

போத்தன் எழுந்து நிற்க முயற்சி செய்தார். ஆனால், ஐயனின் கால் அவரை அழுத்திக்கொண்டிருந்ததால் அசைய முடியவில்லை.

"யாருடா அவளைக் கொலை பண்ணினது?"

"ஐயோ... சத்தியமா நானில்லை!"

"அதில உனக்கும் பங்கிருக்கே!"

"இல்லவே இல்லை!"

"பரவாயில்லை, இந்த ரூம்ல ஏ.ஸி. பண்ணியே வெச்சிருக்கிற. இதுக்குள்ள என்ன நடந்தாலும் வெளியே கேக்காது இல்லையா?"

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் போத்தன் வர்கீஸ் வாயைத் திறந்து அலற முற்பட்டார்.

"உஷ்... சத்தம் போட்டாலும் வெளியே கேக்கப் போறதில்லேங்கிறது வேற விஷயம். எனக்கு அது தொல்லையா இருக்கும். அப்படியெல்லாம் உன்னை சுலபமா கொல்ல மாட்டேன்... பயப்படாதே!"

போத்தன் சற்று ஆறுதலடைந்தாற்போல் தோன்றியது.

"அதுக்காக சும்மா விட்டுடுவேன்னு நினைக்க வேண்டாம். துண்டு துண்டா நறுக்கிக் கொல்லுவேன்!"

போத்தன் திணறலில் நெளிந்தார்.

"யார் அவள் கொன்னது உண்மையைச்சொல்?" ஜயனது கால், போத்தனின் உடம்பை அழுத்தியது: "கொன்னது யாருன்னு தெரியாது."

"ஓகோ நாலு பேரும் சேர்ந்தே அவள் கதையை முடிச்சுடீங்களா?"

"என்னை நம்பு... நான் இல்லை!" போத்தன் வர்கீஸின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"அவள் செத்துப்போனது உண்மையா?"

"ஆமாம்!"

"எப்படிச் தெரிஞ்சது?"

"கண்ணால பார்த்தேன்."

"எந்த இடத்துல செத்துப் போனாள்?"

"இதே அறைக்குள்ளதான்!"

"நான் அவளைக் கூட்டீட்டுப் போனது நீலகண்டன் நாயரோட வீட்டுக்கு ஆச்சே?"

"இங்கே கொண்டு வந்துட்டோம்."

"அப்போ கார் ஓட்டினது யார்?"

"நீலகண்டன் நாயர்தான்!"

"அவன் கூட யாரெல்லாம் இருந்தாங்க?"

"சர்க்கிளும், பாலகிருஷ்ண பிள்ளையும்."

"அவளை கோணி மூட்டைக்குள் போட்டுக் கட்டினது யார்?" -அவரை அழுத்தி மிதித்தபடி கேட்டான்.

"ஐயோ கொல்லாதே!"

"எழுந்திருடா நாயே!" - ஜயன் சற்று விலகி நின்று கட்டளை இட்டான்.

ஒருவிதமாக எழுந்த போத்தன் வர்கீஸ் சுவரில் சாய்ந்து நின்றார்.

"நீ சொன்னதெல்லாம் உண்மையா?"

"உண்மை!"

"மாத்திச் சொல்லமாட்டியே?"

"மாட்டேன்!"

"அப்படின்னா எழுந்திரு! ஆமாம் அந்த இரும்பு பீரோவோட சாவி எங்கே இருக்குது?"

"தலையணைக்கு அடியில! நானே எடுத்து..."

"வேண்டாம்... நீ டெலிபோன்கிட்டப் போகக் கூடாது!"- போத்தன் வர்கீஸை ஒரு தடவை வெறித்துப் பார்த்துவிட்டு தலையணையின் கீழிருந்து சாவியை எடுத்து இரும்பு பீரோவை நெருங்கினான் ஜயன். சாவிக் கொத்தில் நிறையச் சாவிகள் இருந்தன. அந்த பீரோவை எப்படித் திறப்பது என்று ஜயனுக்குத் தெரியவில்லை.

"இந்தா பீரோவைத் திற!"

போத்தன் வர்கீஸ் இரும்பு பீரோவை நெருங்கினார். துவாரத்துக்குள் சாவியைச் செருகி வலது புறம் திருப்பி ஒரு சிறிய இடைவெளியுடன் இடது புறம் திருப்பினார். பிறகு ஸ்டீயரிங் போன்ற எதையோ திருப்பி இழுத்தார்.

பீரோ திறந்துகொண்டது. உள்ளே சிறுசிறு பொட்டலங்கள் ஏராளமாகத் தென்பட்டன அவையெல்லாம் அடகுக்கு வந்த பொருள்கள் என்பது ஜயனுக்கு விளங்கியது. அதன் கீழ் வரிசையில் நோட்டுக் கற்றைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"அதோ அதுல ரெண்டு கட்டை இப்பிடி எடுத்துட்டுவா!" ஜயன் கூறினான்.

போத்தன் வர்கீஸ் அப்படியே இரண்டு நோட்டுக்கற்றையை எடுத்துக் கொண்டு ஜயனை நெருங்கினார். சட்டென்று அவர் கையில் நோட்டுக்கற்றையின் அடிப்புறத்திலிருந்து துப்பாக்கி ஒன்று ஜயனை பார்த்து மிரட்டியது.

"ஒதுங்கி நில்லுடா பிச்சைக்கார நாயே!" போத்தனின் குரல் உயர்ந்து ஒலித்தது.

ஜயன் பின்வாங்கினான். ஒரு கணம் யோசித்தான்.

"வெளியில் போடா நாயே உன்னை மாதிரி எத்தனை கேடிகளை நான் பார்த்திருக்கேன்? என்கிட்டயா மோத வந்திருக்கே?"

இந்தச் சூழ்நிலையில் போத்தன் வர்கீஸ் தன்னைச் சுட்டுவிடவும் செய்யலாம். குற்றத்திலிருந்து சுலபமாகத் தப்பிக்கவும் செய்யலாம்.

"யோசிக்காதே கதவைத்திற!" போத்தனின் குரல் உரத்து ஒலித்தது.

எதிர்பாராத ஒரு கணத்தில் சட்டென்று தரையில் கவிழ்ந்து படுத்த ஜயன், தரையில் விரித்திருந்த கார்பெட்டைப் பிடித்துச் சுண்டினான்.

போத்தன் வர்கீஸ் பின்புறமாகச் சரிந்தார். அவர் கையிலிருந்த துப்பாக்கி ஒரு தடவை வெடித்தது. மேற்புற மச்சில் பாய்ந்த குண்டு மேற்கொண்டு பாயாமல் தரையில் விழுந்தது. விநாடி நேரத்துக்குள் சுதாரித்து எழுந்த ஜயன் போத்தனை அப்படியே கார்பெட்டில் போட்டுச் சுருட்டிக் கட்டினான். கையும் காலும் நீளாக்கில் உள்ளே அகப்பட்டுக் கொண்டதால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஜயன் நேராக பீரோவை நெருங்கி நூறு ரூபாய் கட்டு ஒன்றையும் பத்து ரூபாய் கட்டு ஒன்றையும் எடுத்துக் கொண்டு ஜன்னல் வழியாக வெளியேறினான்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு ஜயன் கேட்டை நெருங்கிய போது வாட்ச்மேன் பீடி புகைத்துக்கொண்டிருந்தார்.

"என்ன சார் கிளம்பிட்டிங்களா?"

"எல்லாம் சரியாத்தான் இருக்கு. தேவைன்னா அப்புறமா வர்றேன்" ஜயன் சைக்கிளை மிதித்துக் கொண்டு விரைந்தான்.

வாட்ச்மேன் கதவை மூடிக்கொண்டு கூண்டுக்குள் அமர்ந்து புகை பிடிப்பதைத் தொடர்ந்தார்.

போத்தன் வர்கீஸ் உருண்டும் புரண்டும் கை கால்களால் எப்படியெல்லாமோ முயன்று ஒருவிதமாக மேற்புற கட்டை நெகிழச் செய்தார். கார்பெட்டின் தூசியும் தும்பும் மூக்கு மற்றும் வாய்ப் பகுதியைத் திறக்கமுடியாதபடி செய்தன. சட்டென்று உருண்டு கார்பெட்டைச் சுழற்றி எழுந்து உட்கார்ந்தார். பீரோவைப் பார்த்தார் பதினோராயிரம் ரூபாய் கையைவிட்டுப் போயிருக்கிறது.

"கடவுளே கஷ்டப்பட்டு சம்பாதித்த வட்டிப்பணம் முழுசா போயிடுச்சே!" நெஞ்சில் அடித்தபடி புலம்பினார்.

தனக்கு அருகில் விழுந்து கிடந்த இரண்டு நோட்டுக் கற்றைகளை பீரோவுக்குள் வைத்துப் பூட்டி விட்டு, கதவைத் திறந்து வெளியேறினார்.

ஓட்டமாக ஓடி கேட்டை நெருங்கினார்.

"அந்தத் திருடன் இந்தப் பக்கமா வந்தானா?"

"இல்லிங்களே. ஒரு போலீஸ்காரர்தான் உங்களைப் பார்த்துட்டுப் போகணும்னு வந்தார். திரும்பிப் போயிட்டார்."

"போலீஸாவது மண்ணாங்கட்டியாவது! அந்தத் திருட்டு நாயைத்தான் கேட்டேன். எப்படிப் போனான்?"

"இப்படித்தான் போனார்?"

"அந்தக் கொலைகாரப் பாவியை உனக்குமா அடையாளம் தெரியலை. ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்தவன் அவன்தான்!"

"எனக்கு சந்தேகமே வரலை முதலாளி. இருந்தும் எப்படி என்னை ஒண்ணும் பண்ணாமல் போயிட்டான்?"

"இப்படியெல்லாம் யோசிக்கிற உன்னை கொன்னுட்டுப் போயிருக்கணும். நீயெல்லாம் இருந்து என்ன பிரயோஜனம், என் பணம் பதினோராயிரம் பறிபோயிருச்சே!"

"உடனே போலீசுக்குத் தகவல் சொல்லியிருந்தீங்கன்னா, அவனை அப்படியே அமுக்கியிருக்லாமே?"

"அதுவும் சரிதான். நடந்துட்ட குழப்பத்துல என்ன செய்யிறதுன்னு தெரியலை." என்றபடி வேகமாகத் திரும்பியவர் ரிசீவரைக் கையில் எடுத்து போலீஸின் நம்பரை டயல் செய்தார்.

போலீஸ் உடையைப் போட்டுக் கொண்ட ஜயன் சைக்கிளில் சுற்றுவதாகவும் போலீஸுக்கு விவரம் தெரிவித்தார்.

உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவருக்கு ஆறுதல் சொன்னதுடன் போலீஸ் ஜீப் ஒன்றும் ஜயனைத் தேடிப் புறப்பட்டது.

போலீஸ் வேஷம் என்று போத்தன் குறிப்பிட்டது ஒரு வேளை காக்கி உடுப்பைப் பார்த்ததால் கூட இருக்கலாம். எனவே, காக்கி உடை அணிந்த நபர் சைக்கிளில் சுற்றுவதைக் கண்டால் உடனடியாகப் பிடிக்கும்படி உத்தரவிட்டார் போலீஸ் அதிகாரி.

கோட்டயம் நகர் முழுவதும் சுற்றிய ஜீப், காக்கி உடை அணிந்த பதினேழு பேருடன் ஸ்டேஷனுக்குத் திரும்பி வந்தது. அகப்பட்டிருப்பவர்களில் யார் குற்றவாளி என்பதைத் தீர்மானித்த பிறகு மற்றவர்களை விட்டுவிடலாம். அதுவரை எல்லோரும் காவலில் வைக்கப்பட்டனர்.

போத்தன் வர்கீஸின் பங்களாவிலிருந்து வெளியேறிய ஜயன், சூழ்நிலையை உணர்ந்து கொண்டதால் துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

மூச்சிரைக்க சைக்கிளை மிதித்து வந்தவன், சைக்கிளை கடையில் விட்டுவிட்டு உரிய கட்டணத்தையும் கொடுத்தான். தனது பழைய உடைக்குத் திரும்பியவன் பழையபடியே போலீஸ் உடையை எடுத்தது போல் மடக்கி வைத்தான்.

ஏனெனில் அங்கு உறங்கிக் கொண்டிருக்கும் போலீஸாருக்குத் தன் மீது சந்தேகம் ஏற்பட்டால் அது பெரிய ஆபத்து. எனவே மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டான்.

பொழுது விடிந்தது.

காவலுக்கு வந்திருந்த போலீஸார் தங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

நீலகண்டன் நாயர் காலை காபி குடித்துக் கொண்டிருந்த போது அந்த வீட்டின் டெலிபோன் மணியடித்தது.

ரிசீவரை எடுத்த நாயர் வெகு நேரம் டெலிபோனில் பேசினார். ரிசீவரை வைத்துவிட்டு நிர்மலாவிடம் வந்தவரின் முகம் மகிழ்ச்சியுடன் தென்பட்டது.

"நிர்மலா, நேத்து நான் இங்கே வந்ததுகூட நல்லதாகப் போச்சு. இல்லேன்னா என்ன ஆகியிருக்குமோ? நேத்து ராத்திரி போத்தன் சார் வீட்டுக்குள்ள நுழைஞ்சு, அவரை மிரட்டி பதினோராயிரம் ருபாயைக் கொள்ளையடிச்சிருக்கானாம். ஆனா, போலீஸ்காரங்க கெட்டிக்காரத்தனமா சுத்திவளைச்சு பதினேழு பேரைப் பிடிச்சுவெச்சிருக்காங்க. அந்தக் கூட்டத்துல ஜயனும் இருக்கிறதா போலீஸ்காரங்க உறுதியாச் சொல்றாங்க!"

"நிஜமாவா சொல்றீங்க?" நிர்மலாவும், தேவகியும் ஒரே குரலில் ஏககாலத்தில் கேட்டார்கள்.

# 7

"ஆமாம்மா, பிடிபட்டவங்கள்ல நிச்சயம் அவனும் இருக்கிறான்னுதான் சொல்றாங்க!" நீலகண்டன் நாயரின் குரலில் நிம்மதியும் மகிழ்ச்சியும் தெரிந்தது.

"நீங்க ஆறுதலடைஞ்சா அதுவே எனக்கு போதும்." நிர்மலா சொன்னாள்.

அவள் அப்படிச் சொன்னாலும் மனசுக்குள் ஒரு வருத்தம் ஏற்படவே செய்தது. ஜயன் கொலைக் குற்றம் சாட்டித் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவனாக இருந்தாலும் அவளைப் பொறுத்தவரை நல்லவனாகத் தெரிந்தான்.

அவளது வாழ்க்கையில் நடந்த இரண்டு சம்பவங்கள் அவளுக்கு, அவன் மீது மிகுந்த மதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

அப்பா சொன்னது உண்மையாக இருந்தால், இந்நேரம் ஜயனை ஒருவழியாக்கி இருப்பார்கள். அதுவும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு ஜெயிலிலிருந்து தப்பித்த குற்றவாளியும் கூட.

நீலகண்டன் நாயர் ஒரு தடவை முற்றப் பகுதியில் உலாவிவிட்டுத் திரும்பி வந்தார்.

முனிசிபாலிட்டி சங்கு எட்டு மணியானதை கூவியறிவித்தது.

உடனேயே காருக்குப் போய் ஜயன் இருக்கிறானா இல்லையா என்று பார்க்கத் தோன்றியது தேவகிக்கு. ஆனால், நீலகண்டன் நாயர் எசகுபிசகாக திடுமென்று கார் ஷெட்டுக்கு வந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தாள்.

"அப்பா வெந்நீர் போட்டிருக்கேன்." நிர்மலா குரல் கொடுத்ததும் நீலகண்டன் நாயர் துண்டுடன் குளியலறையை நோக்கி நடந்தார்.

தேவகி அவசர அவசரமாக கார்ஷெட்டை நோக்கி நடந்தாள். உள்ளே ஜயன் எழுந்து உட்கார்ந்திருப்பதை பார்த்ததும் நிம்மதியடைந்தாள்.

சிலமணி நேரத்துக்கு முன்புதான் அறிமுகமாகியிருந்த போதிலும் ஜயன் ஒரு நிரபராதி என்பதில் அவளுக்கு எந்த விதமான சந்தேகமும் தோன்றவில்லை அவனையும் மீறி அவளுக்குள் இனம் புரியாத ஏதோ ஒரு பரிவும் அநுதாபமுமாகப் பிறந்தது.

"பெரியவர் குளிக்கப் போயிட்டாரா?"

"ஆமாம். ராத்திரி இங்கேருந்து வெளியேறினீங்களா?"

"போயிருந்தேன், போலீஸ்காரங்க பிடிச்சிருப்பாங்கன்னு நினைச்சுட்டீங்களா?"

"பாக்குறதுக்கு முன்னால நினைச்சேன்."

"போலீஸ்வரஸ் ஏது உங்களுக்கு?"

"இங்கே காவலுக்குப் படுத்திருந்தவங்களுதுதான். இரண்டு பேரும் நல்ல தண்ணி... என் வேலை சுலபமாயிடுச்சு."

"எப்படி இருந்தாலும் அவங்ககிட்ட நீங்க அகப்படாமல் போனது நல்லதாப் போச்சு."

அதே நேரம் நிர்மலாவும் அங்கு வந்து சேர்ந்தாள்.

"அப்பா சொன்னதும் நான் போலீஸ்ல மாட்டிக்கிட்டேன்னு நினைச்சு உண்மையான்னு பார்க்க வந்தீங்களா?"

"சரி, நான் கேள்விப்பட்டது உண்மையா?"

"உண்மைதான். ஒழுங்கா வேலை செய்யும்போது சம்பளம் கிடைச்சது. இப்போ என் செலவுக்கு என்ன பண்றது? அதுவும் இந்த மாதிரி சமயத்துல கொஞ்சம் பணம் எப்பவும் கையில இருக்கிறது நல்லதுன்னுதான்."

"நிர்மலா, சீக்கிரமா உள்ள போ. அப்பா குளிச்சுட்டு வந்துடப் போறார்."

நிர்மலா அங்கிருந்து புறப்பட்டாள்.

"உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன்."

"புரிஞ்சுக்கிட்டீங்களா?"

"அதெல்லாம் கஷ்டமில்லை. ஆனா, இது புத்திசாலித் தனமானதா தோணலை!"

"ஏன்?"

"நாம ரெண்டு பேரும் எதிரெதிர் திசையில பயணம் செய்யுறவங்க."

"இதுவே தப்பு. உங்க வார்த்தைப்படி நீங்க குற்றம் சுமத்துப் பட்ட நிரபராதி. நான் ஒரு போலீஸ்காரி."

"வாதத்துக்கு சரிதான். நான் ஒரு பெரிய போராட்டத்துல ஈடுபட்டிருக்கேன். இதில நான் ஜெயிப்பேனா, தோத்துப் போவேனாங்குறது எனக்கே தெரியாது. எந்தக் காரணத்தினாலேயும் நான் இதிலேர்ந்து பின்வாங்கவும் முடியாது."

"நான் அப்படிச் சொல்லவும் இல்லையே... முடிவு நம்ம கையிலயா இருக்கு? நடக்கிறது நடக்கிறபடியே நடக்கட்டும்!"

நீலகண்டன் நாயர் குளியலறையிலிருந்து வெளியேறி விட்டார் என்று தெரிந்தவுடன் தேவகி ஷெட்டிலிருந்து வெளியேறி சமையற்கட்டுக்குள் நுழைந்தாள்.

ரிசீவரை கிராடிலில் வைத்துவிட்டு நிமிர்ந்தவர் நிர்மலாவிடம் சொன்னார்.

"அந்தப் பதினேழு பேர்ல அவன் இல்லையாம். போலீஸ்காரங்க என்ன செய்யுறாங்கன்னு தெரியலை. ஒருத்தன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு ரெண்டு நாளாச்சு. இதுவரை அவனைப் பிடிக்க முடியலை. அவன் என்னடான்னா போலீஸுக்கு டிமிக்கி கொடுத்துட்டு அப்பாவி ஜனங்களை மிரட்டுறான். இப்படியே போனா நம்மளை மாதிரியானவங்க எப்படி நிம்மதியா இருக்க முடியும்?" நீலகண்டன் நாயர் தன் கழுத்தில் கிடந்த ஐந்து சவரன் ருத்திராட்சம் கட்டிய செயினை வருடியபடி கேட்டார்.

"தப்பு செஞ்சவங்க அவனுக்காக பயப்படணும்? நீங்களுமாப்பா பயப்படணும்?"

நிர்மலா சாதாரணமான குரலில் கேட்டாள்.

"உனக்குப் புரியாது. அந்த மாதிரியெல்லாம் யோசிக்கிற நிலைமையிலயா அவன் இருக்கிறான். பார்க்குறவனையெல்லாம் தீர்த்துக்கட்டிடுவான் போலத் தெரியுதே!"

"அப்படியே இருந்தாலும் நீங்க பயப்பட வேணாம். இங்க வந்து யாரும் எதுவும் செய்ய முடியாது."

"கேக்க நல்லாயிருக்கு. ஆனா, நடைமுறைக்குச் சரிப்படாது. நானும் எவ்வளவு நாள் தான் இந்த மாதிரி உன் வீட்டிலேயே அடைஞ்சுகிடக்க முடியும்? வெளியில எல்லாம் தேடுறவன் இங்கே வர்றதுக்கு எவ்வளவு நேரமாகும்? அப்படி ஏதாவது நடந்துட்டா உங்க ரெண்டு பேருக்கும் கெடுதலும் கூட."

"நீங்க எத்தனை நாள் இங்கே தங்கினாலும் எனக்குக் கவலையில்லை. எனக்கும் ஒரு பாதுகாப்புதான். வீணா பயப் படாதீங்க."

"அதுக்குதான் முயற்சி பண்றேன்."

நிர்மலா மனத்துள் சிரித்துக்கொண்டாள்.

"எப்படி இருந்தாலும் இன்னிக்கும் நான் இங்கேயே தங்கிக்கிறேன். ராத்திரிக்குள்ள எப்படியும் அவனைப் பிடிச்சுடுறதா போலீஸ்காரங்க உறுதி சொல்லியிருக்காங்க."

"அவன் கையில நிறையப் பணம் இருக்கிறதா வேற சொல்றாங்க!"

"பாவம், அந்த அப்பாவி போத்தன் வர்கீஸ் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச பணம் அது? மிரட்டி வாங்கிட்டுப் போயிருக்கான்."

அதைக் கேட்டதும் சிரிப்பை அடக்கமுடியாதவளாகத் தன் வாயைப் பொத்திக்கொண்டாள்.

ஐந்து வட்டி வீதம் வாங்கியே லட்சப் பிரபுவாகிவிட்ட போத்தனைப் பற்றி அப்பா சொன்ன செய்தியைக் கேட்ட நிர்மலாவுக்கு சிரிப்பு வந்தது. அவருடைய கம்பெனியில் ஏழைப் பெண்களை வேலைக்கு வைத்துக்கொள்வதன் ரகசியமும் ஊருக்கே தெரியும்.

மிகக் குறைந்த ஊதியத்துக்கு வேலைக்கு ஆட்களை எடுத்துக்கொண்டு, அவரும் அவர் நண்பர்களும் சொன்னபடி கேட்கவில்லையென்றால் அவமானப்படுத்தி வெளியேற்றுவது தான் அவரது வாழ்க்கை. இப்படிப்பட்ட போத்தனை அப்பா, 'பாவம் அப்பாவி!' என்று குறிப்பிடுகிறார். போத்தனின் செயல்களில் அப்பாவுக்குப் பங்கிருக்கிறது என்பது நிர்மலாவுக்கும் தெரியும்.

இவர்களை இதுவரை தட்டிக்கேட்க யாராலும் முடியவில்லை. காரணம் எல்லா மட்டங்களிலும் அவர்களுக்கு ஆட்கள் இருந்தனர்.

காலைப் பலகாரத்தை முடித்துவிட்டு நாயர் உடைமாற்றிக் கொண்டார்.

"நான் வெளியில போய் நிலைமை என்னாங்கிறதைப் பார்த்துட்டு வர்றேன்" நாயர் மகளிடம் கூறினார்.

"உடனே வந்துடுவீங்களாப்பா?"

"அதை எப்படிம்மா சொல்ல முடியும்?"

நீலகண்டன் நாயர் தனது காரை ஓட்டிக்கொண்டு புறப்பட்டார். அவரது கார் கேட்டைத் தாண்டியதும் கேட்டை மூடி கொக்கி போட்டுவிட்டுத் திரும்பினாள் நிர்மலா.

ஜயன் அப்போதுதான் காருக்குள் இருந்து வெளியே வந்தான், காருக்குள் அடைந்து கிடந்ததில் அவன் உடம்பு மரத்துப்போனது போல் இருந்தது.

கை கால்களை ஒரு தடவை நீட்டிக் குடைந்துவிட்டு ஜயன் வீட்டுக்குள் நுழைந்தான்.

"நான் குளிச்சுக்கலாமில்லையா?"- ஜயன் கேட்டான்.

"தாராளமா!"

அவன் குளித்துவிட்டு வருவதற்குள் சூடான இட்லியும் காபியும் டைனிங்டேபிளில் தயாராக இருந்தன. அருகிலேயே தேவகி நின்றுகொண்டிருந்தாள்.

"முதல்ல சாப்பிடுங்க. அவர் வீட்டுக்குள்ளேயே இருந்ததால எடுத்துட்டு வரமுடியலை."

"எனக்கும் புரிஞ்சது."

"சீக்கிரம் ஆகட்டும். அவர் எந்தநேரமும் திரும்பி வரலாம்."

"எதுக்கும் சமையற்கட்டு வாசலைத் திறந்து வெச்சுடுங்க!"

"அது எப்பவுமே திறந்துதான் கிடக்கும்."

"ஆமா, உங்க அடுத்த திட்டம் என்ன?" நிர்மலா கேட்டாள்.

"எங்க வீட்டு நிலைமை ரொம்பவும் மோசமானது. நான் ஜெயில்லேர்ந்து தப்பிச்ச செய்தியை அவங்களும் கேள்விப்பட்டிருப்பாங்க. ஒரு விதத்துல அவங்களுக்கு சந்தோஷமா இருந்தாலும் வருத்தம் இருக்கத்தான் செய்யும். போலீஸ்காரங்க மாறு வேஷத்துல என் வீட்டை சுத்திச் சுத்தி வந்துட்டிருப்பாங்க. நான் எப்படியும் வீட்டுக்கு வருவேன்னு அவங்களுக்குத் தெரியும்!"

"இந்த சமயத்துல நீங்க அங்கே போகக்கூடாது!" நிர்மலா சொன்னாள்.

"கடைசித் தங்கச்சி கண்ணுலயே நிக்குறா. ஏழு வயசு அவளுக்கு. என்னைப் பார்க்கலேன்னா தூங்கவே மாட்டாள். நான் ராத்திரி எவ்வளவு நேரம் கழிச்சு வந்தாலும் விழிச்சிட்டிருப்பா. பாவம், அவ இப்ப எப்படி இருக்காளோ!"

"நான் வேணும்னா ஒரு தடவை உங்க வீட்டுக்குப் போயிட்டு வரட்டுமா?" நிர்மலா கேட்டாள்.

"ரொம்ப நன்றி. அப்படி நீங்க போறதா இருந்தா, நான் என் பணத்தை அவங்ககிட்டக் குடுத்துடுங்க!"

"அந்தப் பணத்தை நான் தொடமாட்டேன். நீங்க தப்பா நினைக்கக்கூடாது. என்கிட்டப் பணமிருக்கு. தேவையானதை நானே கொடுத்துட்டு வர்றேன்" நிர்மலா கூறினாள்.

ஜயனுக்கு அந்த வார்த்தைகள் ஆறுதலாக இருந்தது.

"அப்படியானால் நான் உடனே கிளம்பறேன். அப்பா வந்தார்னா, ஸ்டோருக்குப் போயிருக்கிறதா சொல்லிவிடு தேவகி!"

தேவகி தலையாட்டினாள்.

ஜயன் தனது மறைவிடத்துக்குத் திரும்பினான்.

ஆட்டோ ஒன்றில் ஏறிய நிர்மலா ஜயனது வீட்டு விலாசத்தை டிரைவரிடம் கூறினாள்.

இருப்பினும் நேராக அந்த வீட்டு வாசலில் போய் இறங்குவது அவ்வளவு நல்லதல்ல என்பதால் வீட்டுக்குத் சற்று முன்பாக இறங்கிக் கொண்டாள். குறிப்பாக அது ஜயனின் வீடாக இருப்பதால் யாராவது தன்னைக் கவனிக்கலாம்.

அந்த வீட்டுக்கு எதிர்ப்புறம் சற்றுத் தள்ளியிருந்த வெற்றிலை பாக்குக் கடையோடு சேர்ந்த டீக்கடை ஒன்று இருந்தது. மப்டியில் இரண்டு போலீஸ்காரர்கள் அங்கேயே எதிர் வீட்டைக் கவனித்தபடி உட்கார்ந்திருந்தனர். ஜயனது வீட்டுக்கு யாரெல்லாம் வருகிறார்கள் என்று கவனிப்பது அவர்களுக்கு இடப்பட்டுள்ள வேலை.

"யாரு அந்தம்மா, வீட்டுக்குப் போறாங்க?" ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

"யாரோ பெரிய வீட்டுக்காரங்க மாதிரிதான் தெரியுது சார்!" டீக்கடைக்காரர் சொன்னார்.

"அவங்க சொந்தக்காரங்க யாராவது இப்பிடி இருக்காங்களா என்ன?" மற்றொரு போலீஸ்காரர் கேட்டார்.

"அப்படி இருந்திருந்தா ஒரு வக்கீலை ஏற்பாடு பண்ணி இருப்பாங்களே."

"அப்படின்னா அது யாரா இருக்கும்?"

"வெளியே வரும்போது விசாரிக்க வேண்டியதுதான்!"

நிர்மலா அந்த வீட்டுக்குள் நுழைந்ததும் ஜயனின் அம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பெண்கள் எல்லோரும் சட்டென்று எழுந்து அறைக்குள் புகுந்து கொண்டனர்.

நிர்மலாவை அந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவள் ஏற்கெனவே நாலைந்து தடவை அங்கு வந்திருக்கிறாள்.

ஜயனின் கடைசித் தங்கை மட்டும் நிர்மலாவைப் பார்த்ததும் அவளருகே ஓடி வந்தாள்.

நிர்மலா எடுத்து வந்திருந்த பிஸ்கெட்பாக்கெட்டை அவளிடம் கொடுத்தாள்.

குழந்தை அதை வாங்கிக் கொண்டாள்.

"அதை அவங்ககிட்டயே கொடுத்துடு சுதா!" ஜயனின் அம்மா சொன்னாள்.

"அம்மா... தயவு செஞ்சு என்னைத் தப்பா நினைக்காதீங்க! குழந்தை சாப்பிடட்டும்!"

"இனிமே என்ன நினைக்கிறது? என் பையன் வாழ்க்கையே முடிஞ்சு போச்சுது. ஜெயில்லேர்ந்து தப்பிச் சுட்டாலும் இந்த போலீஸ்காரங்க அவனை விட்டு வைக்கப் போறதில்லை." ஜயனின் அம்மா அழுகையுடன் புலம்பத் தொடங்கினாள்.

"பயப்படாதீங்க. அவர் பத்திரமா என் வீட்டுலதான் இருக்கிறார்!" நிர்மலா மிகவும் மெதுவான குரலில் கூறினாள்.

அப்படியும் அதைக் கேட்டுவிட்ட எல்லோரும் நிர்மலாவைச் சூழ்ந்து கொண்டனர்.

"ஜெயில்லேர்ந்து தப்பிச்சவர் நேரா வந்தது என் வீட்டுக்குத்தான்" என்று தொடங்கியவள் அதுவரை நடந்ததை விவரித்தாள்.

அந்த வீட்டிலிருந்த அத்தனை முகங்களும் மகிழ்ச்சியால் மலர்ந்தன.

ஏறத்தாழ முக்கால் மணி நேரத்தை அவர்களுடன் செலவிட்ட நிர்மலா, வந்த வேலையை முடித்துக் கொண்டு அவர்களிடமிருந்து விடைபெற்று வெளியே வந்தாள்.

மப்டியிலிருந்த போலீஸ்காரர்கள் இருவர் அவளை இருபுறமும் நெருங்கினர்.

# 8

இருவரும் அவளை மேலும் கீழும் பார்த்தனர். நிர்மலா சற்றும் பயப்படாமல் முன்னோக்கி நடந்தாள்.

"அம்மா கொஞ்சம் நில்லுங்க." ஒரு போலீஸ்காரர் பேசினார்.

நின்றாள்.

"நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அதையெல்லாம் அப்புறமா சொல்றோம். நீங்க எதுக்காக அந்த வீட்டுக்குப் போனீங்க?"

"என்னங்க இது? மனுஷங்க யாரும் இன்னொரு மனுஷாளுங்க வீட்டுக்குப் போகக் கூடாதா?"

"நான் ஒரு போலீஸ்காரன் ."

"உங்க வேஷம் அப்படி இல்லையே, அதனால தெரியலை."

"சரி, என் கேள்விக்கு பதில் சொல்லுங்க. எதுக்கு அங்கே போனீங்க?"

"போகணும்னு தோணிச்சு, போனேன்."

"இந்த மாதிரி பதில் சொன்னா நாங்க உங்களை கைது பண்ண வேண்டியிருக்கும்!"

"அப்படிங்களா, கொஞ்சம் இருங்க எங்க அப்பாவுக்கு ஒரு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிட்டு வர்றேன். அவரே காரோட்டிட்டு வருவார். அதையெல்லாம் அவர்கிட்டப் பேசிக்கிங்க!"

கார், போன் என்ற வார்த்தைகளைக் கேட்டதும் போலீஸார் சற்று எச்சரிக்கை அடைந்தனர்.

"அம்மா நாங்க இங்கே காவலுக்கு இருக்கிறவங்க. இப்படி எல்லாம் விசாரிக்க வேண்டியது எங்க கடமை. ஜெயில்லேர்ந்து தப்பிச்சவனோட வீடு அது."

"இருக்கலாம். அவர் எங்ககிட்ட டிரைவரா இருந்தவர்."

"அப்படின்னா நீங்க நீலகண்டன் நாயர் மகளா?" - போலீஸ் காரர்களின் மொத்த சக்தியும் வடிந்து விட்டது போலிருந்தது.

"தெரியாம உங்களைக் கேட்டுட்டோம்மா! அவனைப் பத்தி ஏதாவது தெரிஞ்சுதாம்மா?"

"யாருக்குத் தெரியும்? பாவம் சம்பாதிக்கிற ஒரே பையனைத் தொலைச்சுட்டு நிக்குற குடும்பத்தைப் பார்த்து ஆறுதலா ரெண்டு வார்த்தை சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன். பாவம், அவன் செஞ்ச தப்புக்கு சின்னக் குழந்தைங்க என்ன செய்யும்?"

"அதுதாம்மா உலக வழக்கு. பாவம் செய்யிறவன் ஒருத்தன்னா கஷ்டப்பட வேண்டியது வேறொருத்தன்."

"சரி, நான் கிளம்பலாமில்லிங்களா?"

"போங்கம்மா. ரொம்ப சந்தோஷம்."

சற்றுத் தொலைவு நடந்த நிர்மலா அங்கிருந்த ஆட்டோவில் ஏறினாள்.

வீட்டுக்கு வந்தவள் முதல் வேலையாக ஜயனிடம் நடந்ததை தெரிவித்தாள். ஜயன் முகம் சந்தோஷமடைந்தது.

"எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை."

"அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை. உங்க அடுத்த திட்டம் என்ன?" நிர்மலா கேட்டாள்.

"இன்னிக்கு ராத்திரியே ஒரு தீர்மானத்துக்கு வந்துடுவேன். மேற்கொண்டு இங்கேயே தங்கி உங்களுக்குத் தொல்லை குடுக்க நான் விரும்பவில்லை."

"நாங்க இதை ஒரு தொல்லையா நினைக்கலை. ஆனா, உங்களை இங்கேருந்து பிடிச்சுட்டுப் போறதை எங்களால எப்படி தாங்கிக்க முடியும்?"

"அப்படியெல்லாம் நடக்காம நான் பார்த்துக்கிறேன். அதுக்காக கவலைப்படாதீங்க. தற்சமயம் எனக்கு இந்த கார் போதும்."

மாலை நேரத்தில் நீலகண்டன் நாயர் திரும்பி வந்தார்.

"அவனைப் பத்தி எந்தத் தகவலும் கிடைக்கலை. போலீஸ்காரங்க ரொம்பவும் பரபரப்பா செயல்படுறாங்க. பத்திரிகை விளம்பரம், அது இதுன்னு முயற்சிகள் செய்யுறாங்க! ஒருவேளை மாறுவேஷத்துல எங்கேயாவது சுத்திட்டிருக்கானோ என்னவோ?"

நீலகண்டன் தனது காரிலிருந்து வெளியே வந்தபடி பேசினார். ஜயனுக்கு அதெல்லாம் தெளிவாகக் கேட்கவும் செய்தது.

அப்போதுதான் ஜயனுக்கு வேஷம் மாறி நடப்பதுகூட ஒருவகையில் பாதுகாப்பு என்று தோன்றியது. இதற்கான பொருள்களைச் சேகரிக்க பகல் நேரத்தில்தான் வெளியேற வேண்டும். அதுவும் கோட்டயத்தில் அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சங்கனாசேரியோ, திருவனந்தபுரமோ போக வேண்டாம். அது, தற்போது சாத்தியமில்லை.

"வர்ற வழியில நம்ம மெக்கானிக்கைப் பார்த்தேன். விஷயத்தைச் சொன்னேன். வர்றேன்னுருக்கார்."

"இன்னிக்கேவா?"

"நாளைக்கு வர்றானாம்."

"அவர்கிட்டக் கேட்காம எப்படிப்பா?"

"அதையெல்லாம் நான் பாத்துக்கிறேன். மாப்பிள்ளை கிட்ட நானே பேசிக்கிறேன்."

எந்த ஒரு சின்ன ரிப்பேர்னாலும் அவரே நேரா அவனைக் கூட்டிட்டு வந்து பார்ப்பார். எதுக்குப்பா இப்ப வீணான வேலை?"

"அதுக்கு நீயேன் பரபரக்குறே. மாப்பிளை ஒரு டைப்தான். மெக்கானிக்கிட்ட இன்னொரு நாளைக்கு வாப்பான்னு சொல்லி அனுப்பிடுறேன்" நீலகண்டன் நாயர் ஒப்புக்கொண்டார்.

ஒருவேளை ஜயனால் நாளைக்கு வெளியேற முடியாமல் போனால் நிலைமை சிக்கலாகிவிடுமே என்று பயந்தாள் நிர்மலா.

இருட்டும் நேரத்தில் தேவகி ஷெட்டுக்குள் நுழைந்து ஜயனிடம் வந்தாள்.

"ஒரு தடவை வீட்டுக்குப் போயிட்டு வரணும்னு தோணுது!"- ஜயன் கூறினான்.

"தேவையில்லாத ஆபத்தை விலைகொடுத்து வாங்கப் பாக்குறீங்க!" தேவகி எச்சரித்தாள்.

"எனக்குத் தூக்குத் தண்டனை வழங்கினதைக்கூட இவங்க யாரும் கேட்கலை. அந்த அளவுக்கு மனசில தைரியம் இல்லாதவங்க. அவங்களைப் பொறுத்தவரை நான் செத்துப் போனவன்தான். இருந்தாலும் எனக்கென்னமோ அவங்களைப் பார்த்தா தேவலாம்போல இருக்கு."

"ஒரு தடவை உங்க குடும்பத்தைப் பார்த்துட்டு வர்றது நல்லதுதான். ஆனா, நிலைமையை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. ஆசையாய் போய் ஆபத்துல மாட்டிக்கணுமா?"

"எனக்கு ஒரு யோசனை தோணுது. நான் பொண்ணா மாறிடுறேன். தேவகியும் என்கூட வந்தால் விஷயம் சுலபமாயிடும்.

யாரோ ரெண்டு பொண்ணுங்க அந்த வீட்டுக்குப் போய்ட்டு வந்தாங்கன்னு வெளியே தெரியும். அப்படியும் மீறி போலீஸ்ல மாட்டிக்கிறதா இருந்தா கண்டிப்பா உன்னை இதிலேர்ந்து கழற்றிடுவேன். கவலையே படவேண்டாம். ஒருத்தன் ரெண்டு பேர்னா சுலபமா சமாளிச்சுடலாம்."

"வேன் வெச்சுட்டு கூட்டமா காத்திருந்தா?"

"அதையெல்லாம் மீறி சாகசம் பண்ணணும்னு எனக்கு நோக்கமில்லை. போவோம்... நிலைமை சரியில்லேன்னா சத்தமில்லாம திரும்பிட்டு அப்புறமா போக வேண்டியதுதான்."

"ரொம்ப ஆபத்தான விஷயம்!"

"உனக்கு தைரியமிருந்தா கூட வரலாம்."

"தைரியத்துக்கெல்லாம் குறைச்சல் கிடையாது!"

இருள் கவியத்தொடங்கிய வேளையில் அறைக்குள் புகுந்து, கதவைத் தாழிட்டு டெலிபோனை அருகில் எடுத்து வைத்துக்கொண்டு கட்டிலில் அமர்ந்தார் நீலகண்டன் நாயர்.

தேவகி முக்கியமான சில பொருள்களை எடுத்து வந்து கொடுத்தாள். நிர்மலா அணிந்துபோன அதே புடவையை ஜயன் கட்டிக்கொண்டான். சலைத் தலைப்பினால் முக்காடு போட்டுக் கொண்டான். ஆட்டோ ரிக்ஷா ஒன்று அந்த வழியாக வந்தது. இருவரும் ஏறிக்கொண்டனர். தேவகி போக வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டாள். ஜயன் வாயைத் திறக்காமல் உட்கார்ந்திருந்தான்.

வீட்டுக்கு முன்னால் சற்றுத் தொலைவிலேயே ஆட்டோவை நிறுத்தி, காத்திருக்கும்படி டிரைவரிடம் கூறினர்.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தனர்.

"காலையில் வந்த அதே பொண்ணு திரும்பவும் வர்றாங்க போலிருக்கே" நிர்மலாவிடம் முதலில் பேசிய போலீஸ்காரர் மற்றவரிடம் சொன்னார்.

"வேண்டாம் விட்டுடுங்க. அவங்ககிட்ட எதுவும் பேச வேண்டாம். எம்.எல்.ஏ.வோட பொண்ணுகூட வர்றது யாரோ சிநேகிதி. சர்க்கிள் ஐயாவுக்கு வேண்டியவங்க. எதுக்கு வம்பு. பேசாம வேலையைப் பாருங்க" மற்றவர் பதிலளித்தார்.

ஐயனும் தேவகியும் வீட்டுக்குள் நுழைந்தனர்.

"அம்மா மத்தியானம் வந்த அக்கா வந்திருக்காங்க!" சின்னப் பெண் குரல் கொடுத்தாள்.

"யார் நிர்மலாவா வந்திருக்கிறது?" என்றபடி சமையற் கட்டிலிருந்து வெளியே வந்தாள் அம்மா.

உள்ளே நுழைந்ததும் ஐயன் முக்காட்டை விலக்கினான்.

"ஐயோ மகனே!" என்றபடி அவனைக் கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

தேவகியின் மனம் அந்தக் காட்சியைக் கண்டதும் நெகிழ்ந்தது. அதற்குள் மற்ற தங்கைகளும் விஷயம் தெரிந்து அவனைச் சூழ்ந்துகொண்டனர். கண்டபடி அழத்தொடங்கினர்.

"ஐயோ நீங்க எல்லாருமா சேர்ந்து ரகளை பண்ணி பிரச்சினையாக்கிடப் போறீங்க!" தேவகி ஒவ்வொருவரையும் விலக்கினாள்.

"உன்னை உயிரோட பார்ப்போம்னு நான் நினைக்கலை" அம்மா ஐயனின் உடலை கை கால் என்று வருடியபடி சொன்னாள்.

"அம்மா அழாதீங்க. எனக்கு ஒண்ணும் ஆகாது" ஐயன், அம்மாவை உட்கார வைத்துவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

அருகில் வந்த கடைக்குட்டி சிந்துவை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு அவளது தலையை வருடிவிட்டான்.

"பாவம் அந்த நிர்மலா பொண்ணு எவ்வளவு தங்கமான பொண்ணு தெரியுமா? அது வந்து விவரம் சொன்ன பிறகுதான் எனக்கு நிம்மதியே கிடைச்சது."

"தெரியலையே?"

"பேரு தேவகி, பெண் போலீஸ்."

"ஏதாவது பிரச்னையா?"

"பயப்படாதீங்க, எனக்குத் துணையா வந்திருக்காங்க!"

"கடவுள் உனக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கட்டும்னு வேண்டிக்கிறேன்."

"நாம அதிக நேரம் இங்க இருக்கிறது நல்லதில்லை?" தேவகி நினைவூட்டினாள்.

"நிர்மலா இங்க வந்துபோன பிறகு ரெண்டு போலீஸ்காரங்க வந்தாங்க. யாரு, என்ன, ஏது, எதுக்கு வந்தாங்கன்ன தூண்டி துருவிக் கேட்டாங்க. விஷயத்தைச் சொன்னதும் பேசாமப் போயிட்டாங்க. அவங்க இங்கதான் எங்கேயாவது இருப்பாங்க. ஜாக்கிரதை?"

"சரி, நான் கிளம்பறேம்மா!" ஜயன் எழுந்தான்.

அம்மாவும் ஜயனின் சகோதரிகளும் அடக்கமாட்டாத துயரத்துடன் மௌனமாக நின்றிருந்தனர்.

இருவரும் அங்கிருந்து வெளியேறினர்.

ஆட்டோ ரிக்ஷாவை நெருங்கிய போது, அதில் டிரைவரைக் காணவில்லை.

"டிரைவர் எங்கே போயிட்டார்?" தேவகி கேட்டபடி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"கொஞ்சம் நில்லுங்கம்மா!" என்றபடி போலீஸ்காரர்கள் இருவரும் அவர்களை நோக்கி வந்தனர்.

தேவகியை ஆட்டோ ரிக்ஷாவுக்குள் போய் உட்காரச் சொன்னான் ஜயன். உட்கார்ந்தாள்.

போலீஸ்காரர்கள் ஆட்டோவை நெருங்கிவிட்டனர்.

"யாராவது பாண்ட்டுக்கு மேல புடவை கட்டுவாங்களா? யாரை ஏமாத்துப் பார்த்தே?" - வந்த போலீஸ்காரரில் ஒருவர் பாய்ந்து ஜயனது கையைப் பிடித்தார். ஜயன் அவரை அப்படியே அலாக்காகத் தூக்கினான் அதற்குள் மற்றொருவரும் நெருங்கவே ஜயன் வலது காலால் அவர் வயிற்றில் உதைத்தான். வயிற்றைப் பிடித்துக்கொண்டு தரையில் விழுந்தவரின் மீது மேற்புறமாகப் பிடித்துக்கொண்டிருந்தவரை வீசி எறிந்தான்.

உடனே டிரைவர் இருக்கையில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தான் ஜயன். ஆனால், ஆட்டோ முரண்டு பிடித்தது அதற்குள் ஒரு போலீஸ்காரர் எழுந்து வந்தார்.

உயிர் தப்பிக்கும் வேட்கையிலிருந்த ஜயன் உருக்கு மனிதனாக மாறிவிட்டிருந்தான்.

இம்முறையும் அந்த போலீஸ்காரரைத் தூக்கி எறிந்தான்.

"மன்னிச்சுடுங்க, வேற வழியில்லை." சொல்லிவிட்டு ஜயன் ஆட்டோவைக் கிளப்பியபோது உறுமியபடி அது ஸ்டார்ட் ஆனது. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அரை வட்டமடித்து அந்த ஆட்டோ அங்கிருந்து மறைந்தது.

நிர்மலா வீட்டிலிருந்து சுமார் ஒரு ஃபர்லாங் இருக்கும் போதே ஆட்டோவை ரோட்டில் நிறுத்திவிட்ட இருவரும் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

கேட்டைக் கடந்த இருவரும் காம்பௌண்டுக்குள் நுழைந்தனர். தேவகி நேராக வீட்டுக்குள் போனாள்.

கார்ஷெட்டை அடைந்த ஜயன் அங்கிருந்த காரை காணாமல் திகைத்தான். மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் தவித்தான்.

# 9

அங்கிருந்து கண்டிப்பாக எங்காவது போய்த்தான் ஆக வேண்டும்.

நீலகண்டனின் கார் அந்த வீட்டிலேயே இருக்கிறது. அவரும் வீட்டுக்குள் இருக்கிறார். எந்த நேரமும் யாரும் வரலாம்.

சட்டென்று ஜயனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நீலகண்டன் நாயரின் கார் போலீஸார் எல்லோருக்குமே நன்றாகத் தெரிந்த ஒன்று. ரோட்டில் அது பயணம்செய்தால் யாரும் சந்தேகப் படமாட்டார்கள். முடிந்தால் சங்கனாசேரி வரை சென்று பொய்த் தாடி மீசை, விக் போன்றவற்றை வாங்கி வரலாம்.

மணி எட்டு ஆகியிருந்தது.

காலையிலும் இதே நேரம் நல்ல போக்குவரத்து நெரிசல் இருக்கும். தனியார் வண்டியாக இருப்பதால் யாரும் அவ்வளவாகக் கவனிக்க மாட்டார்கள்.

ஜயன் சமையல்கட்டு வாசலை அடைந்தான். நிர்மலா உள்ளே சமையலில் ஈடுபட்டிருந்தாள்.

ஜயனைப் பார்த்ததும் வாசலுக்கு வந்தாள்: "என்ன பசிக்கிறதா?" என்றாள்.

"கார் சாவியை எப்படியாவது எடுத்துக் குடுத்தீங்கன்னா நல்லது!"

"காரா... எதுக்கு?"

"தற்சமயம் நான் இங்கேருந்து தப்பிக்கணும்னா இது அவசியம். இல்லேன்னா பிரச்சினை ரொம்ப மோசமாயிடும்."

அப்போது தேவகியும் வந்து சேர்ந்தாள்.

"என்ன விஷயம்?" தேவகி கேட்டாள்.

விஷயத்தை விளக்கினான் ஜயன்.

"கார் ஸ்டார்ட் ஆனா அப்பாவுக்குக் கேட்குமே."

"தெரியாம நான் பார்த்துக்கிறேன்."

"கார் எங்கேன்னு கேட்டா?"

"எதையாவது சொல்லி சமாளியுங்க."

"சரி முயற்சி பண்றேன்." நிர்மலா வீட்டுக்குள் போனாள்.

"உங்க திட்டத்தைச் சொல்லுங்க!"

"எதையும் திட்டம் போட்டுச் செய்யிற நிலைமையில இல்லை நான். எந்த நேரம் என்ன தோணுதோ அப்படியெல்லாம் நடக்க வேண்டியதுதான்."

நிர்மலா மெதுவாக அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள். அவர் டெலிபோனையே பார்த்துக் கொண்டிருந்தார். மேஜை மீது கார்ச்சாவி கிடந்தது. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும் சாக்கில் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

அறைக்கு வெளியே வந்தவள் டேப்ரிக்கார்டரை ஆன் செய்தாள். காரை வெளியே கொண்டு போகும் சத்தம் கேட்காமல் இருப்பதற்காக டேப்ரிக்கார்டரின் வால்யூமை அதிகமாக்கினாள்.

நிர்மலா ஜயனிடம் சாவியைக் கொடுத்தாள்.

காரின் கதவைத் திறந்து நியூட்ரலில் மெதுவாக உருட்டிக் கொண்டு வந்தவன்கேட் கதவைத் தாண்டிய பிறகும் ஸ்டார்ட் செய்யாமல் சாலைக்கு வந்த பிறகு வண்டியைக் கிளப்பிக் கொண்டு போனான்.

டிரைவிங்கில் ஜயன் ஒரு மாந்திரீகனாக இருந்தான். கார் விரைந்தது.

கோடிமட சந்திப்பை அடைந்தபோது பிரைவேட் பஸ் ஒன்றையும் இரண்டு பிரைவேட் டாக்ஸிகளையும் போலீஸ்காரர்கள்

தடுத்து நிறுத்தியிருந்தனர். அருகில் போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவிலேயே இதைக் கவனித்த ஜயன், காரின் வேகத்தைக் குறைக்கவில்லை.

ஜயன் ஓட்டிவந்த காரை தொலைவிலிருந்து பார்த்த போலீஸார் கையை நீட்டி நிறுத்துமாறு கூறினர். ஆனால், அருகில் வந்ததும் 'நிறுத்த வேண்டாம் போகலாம்' என்பது மாதிரி சைகை காட்டினர்.

கார் விரைந்தது.

ஜயனின் வீட்டுக்கு அருகில் இரண்டு போலீஸார் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து காவல்துறை சோதனையைத் தீவிரமாக்கியிருந்தது. ஜயன் இன்னும் நகரத்துக்குள்தான் இருக்கிறான் என்று போலீஸார் கருதினர்.

எனவே, நகரிலிருந்து வெளியேறும் கார்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன. அருகில் வந்ததும்தான் அது நீலகண்டன் நாயரின் கார் என்பது புரிந்தது. எனவே போலீஸார், சோதனை இடாமல் போவதற்கு அனுமதியளித்தனர்.

அரைமணி நேரத்துக்குள் ஜயன் சங்கனாசேரி நகரை அடைந்தான்.

நல்லவேளையாக 'விக்' தயாரிக்கும் கடை திறந்து இருந்தது. காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு ஜயன் கடைக்குள் நுழைந்தான்.

"என்ன வேணுங்க?" கடையிலிருந்தவர் கேட்டார்.

"நல்லதா ஒரு விக் குடுங்க!"

மனிதத்தலை பொம்மைகளின் மீது விதம் விதமான விக்குகள் கச்சிதமாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன.

"உங்களுக்கு சுருண்ட முடியிருக்கும் விக் அழகாக இருக்கும்" என்று கூறியபடி ஒரு விக்கை ஜயனின் தலையில் வைத்துப் பார்த்தார்.

ஜயன் எதிரே இருந்த கண்ணாடியைப் பார்த்தான். பொருத்தமாக இருந்தது. சற்றுத் தடித்த மீசையும், சற்றுப் பருமனான ஃபிரேமுமுள்ள மூக்குக் கண்ணாடியும் அணிந்தால் தன்னை யாருக்கும் அடையாளம் தெரியாது என்று தோன்றியது.

"எவ்வளவுங்க?"

"ஐந்நூறு ரூபா!"

ஜயன் பணத்தைக் கொடுத்துவிட்டு மாறிய நபராக அங்கிருந்து வெளியேறினான்.

கார் மீண்டும் அங்கிருந்து கிளம்பியது.

சங்கனாசேரியிலிருந்து கோட்டயம் போகும் வழியில் ஆப்டிகல் கடையைப் பார்த்தது ஞாபகம் வந்தது.

பொருத்தமான - விரும்பிய கண்ணாடியும் கிடைத்தது. அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு முக்கியமான ஓரிடத்துக்குச் செல்லவேண்டுமென்று நினைத்தான். மணி பத்து தான் ஆகியிருந்தது. எனவே, போக்குவரத்து மிகவும் குறைவாக இருந்த சாலையின் ஓரம் வண்டியை நிறுத்தி அதை சரிசெய்யும் பாவனையில் பானெட்டை உயர்த்தி என்னமோ செய்து கொண்டிருந்தான்.

போத்தன் வர்கீஸை எதுவும் செய்யமுடியாமல் போனது. நிலைமை இந்த அளவுக்கு வந்துவிட்டதால் தற்போது அவரும் காவலுக்கு போலீஸின் உதவியை நாடியிருக்கலாம். எனவே, உடனடியாக அங்கு போவது நல்லதல்ல என்று தோன்றியது. அதனால் இன்றைய பயணம் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமே இருக்கட்டும் என்று நினைத்தான்.

மாதவ குறுப்பு எந்தக் காலத்திலும் தன் வீட்டுமுன்னால் காவலுக்கு போலீஸ்காரரை நிற்க வைத்தது கிடையாது. மட்டுமின்றி, தான் ஒரு போலீஸ் அதிகாரியாக இருப்பதால் ஜயன் அவ்வளவு சீக்கிரம் தன்னை நெருங்க முடியாது என்றும் நினைத்தார். அதனால் ஜயனைப் பற்றி அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

நீலகண்டன் நாயருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் தனது சொந்த வீட்டில் இல்லையென்ற தகவல் கிடைத்தவுடன் மாதவ குறுப்பு, போத்தன் வர்கீஸின் வீட்டுக்குச் சென்றார். அவர் ஏகத்துக்கு மிரண்டிருந்தார். சர்க்கிளைப் பார்த்ததும் அவர் முகத்தில் ஒரு வித நிம்மதி பரவியது.

சுமார் ஒன்பது மணிக்கு அங்கு வந்த குறுப்பு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குதான் வெளியேறினார்.

போத்தன் வர்கீஸின் வீட்டுக்குள் நுழைந்த கணத்திலேயே குறுப்பு ஜயனிடம் தான் ஏமாந்த கதையை கண் காது, மூக்கு ஒட்டவைத்து விவரித்தார்.

"உங்களை மாதிரி ஒரு முட்டாளை நான் இதுவரைக்கும் பார்த்ததில்லை" குறுப்பு சொன்னார்.

"ஏன்...என்ன ஆச்சு?"

"இரும்புப் பீரோவைத் திறந்து நோட்டுக் கத்தைகளை எடுத்துட்டு எதுக்காக அவன்கிட்டப் போனீங்க? பீரோவுக்கு முன்னால இருந்தே சட்டுன்னு சுட்டுத் தொலைச்சிருக்க வேண்டியதுதானே? நீங்கள்லாம் துப்பாக்கி வெச்சிருக்கிறது சும்மா ஸ்டைலுக்காகவா?"

"நீங்க சொல்றது சரிதான். அந்தத் தடியன்கிட்ட ஒத்தையில சிக்கியிருந்தா விஷயம் தெரிஞ்சிருக்கும்."

"யார் என்னையா? இந்த உலகத்துலேயே என்னை மாதிரி அவனை அடிச்சு நொறுக்கின மனுஷன் வேறயாரும் இருக்க மாட்டான். என்னைப் பார்த்தாலே அந்த இடத்துல ஒண்ணுக்குப் போயிடுவான். அவ்வளவு பயம் அவனுக்கு இருக்கு என்கிட்ட!"

"நீங்க போலீஸ்காரர் இல்லையா? யாரும் உங்களை திருப்பித் தாக்கமாட்டாங்க அப்பிடிங்கிற தைரியம். இதை வெச்சுக்கிட்டு யாரையும் துவைச்சு எடுக்கலாம்தான்."

"இவனை விட்டுத்தள்ளுங்க. எந்த ஒரு கேடியும் என்கிட்ட விளையாட மாட்டானுங்க. எனக்கு அவங்ககிட்ட எந்தவிதமான

வித்தியாசமும் தெரியாது. எந்த மாதிரி சந்தர்ப்பத்துல யார், என் கைக்குக் கிடைச்சாலும் நொறுக்கித் தள்ளிடுவேன். அந்த நாய் மட்டும் சிக்கினான்னா மிச்சம் மீதியில்லாமப் பண்ணிடுவேன்!"

"உங்க உடம்புல கவர்மெண்ட்போட்ட சோறு தைரியமாவும், பலமாவும் மாறியிருக்குது."

பேசியபடி இருவரும் ஒரு முழு விஸ்கி பாட்டிலை காலி செய்தனர். முடிவில் குறூப் ஜீப்பில் தன் வீட்டுக்குத் திரும்பினர்.

வீட்டுக்கு வந்தவர், ஜீப்பிலிருந்து இறங்கி ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு கதவைத் தட்டினார். வேலைக்காரர் கதவைத் திறந்தார்.

"யாராவது என்னைத் தேடி வந்திருந்தார்களா?" குறூப்பு கேட்டார்.

"இல்லை சார். சாப்பாடு போடட்டுமுங்களா?"

"எதுவும் வேண்டாம். நான் போய்ப் படுத்துக்கிறேன். கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுப் படுத்துக்க" என்றவர் நேராகப் படுக்கையறைக்குள் நுழைந்து கட்டிலில் படுத்துக்கொண்டார்

"மாதவ குறூப், கொஞ்சம் எழுந்திருக்கிறீங்களா?"

தெளிவற்ற குரலாக குறூப்புக்குக் கேட்டது. எழுந்து அறை விளக்கைப் போட முற்படுவதற்குள் அறையில் விளக்கு எரிந்தது.

"நிஜமாவே சாப்பாடு வேண்டாமா?"

"வேண்டாம்னு சொல்லிட்டேனே!"

சட்டென்று சந்தேகம் வந்தவராக ஒரு தடவை கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். முன்னால் நின்று கொண்டிருப்பது தன் வேலைக்காரனல்ல; யாரோ ஒரு புது முகம்.

"யாருடா நீ?"- குறூப்பு படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தார்.

"நான்தான் சார் ரகு, வேலைக்காரன். என்னைப் படுத்துக்கச் சொன்னீங்களே!"

மாதவ குறுப்பு குழப்பத்துக்காளானார். மது, அவர் மூளையை அடிமைப்படுத்தியிருந்தது. தனக்கு முன்னால் நின்று கொண்டிருப்பது உண்மையில் யாரென்று அவரால் நிதானிக்க முடியவில்லை.

"நான் உங்களைச் சந்திக்கணும்னு பதினொன்றரை மணிக்கே வந்துட்டேன். கதவைத் திறந்தவர் உங்க வேலைக்காரர்தான். உள்ளே உட்கார்ந்துக்கிறேன்னு சொன்னதும் தயங்கினாரு. ஒழுங்காக கேட்டா மதிக்கலையேன்னு ஒரு தட்டு தட்ட வேண்டியதாப் போச்சு. உங்க வீட்டில இருக்கிறதால அவனும் போலீஸ் மிடுக்கைக் காட்டினான். நிஜமா இன்னும் உங்களுக்கு என்னைப் புரியலையா? நல்லா பாருங்க!"

ஜயன் சற்றுத் திரும்பி தன் பொய் முடிகளைக் களைந்து முகம் காட்டினான்.

"புரிஞ்சிடுச்சா?"

ஜயன்!

மாதவ குறுப்பின் வலது கை தலையணைக்கு அடியிலிருந்த பிஸ்டலைத் தேடி அலைந்தது.

"துப்பாக்கியைத் தேடுறீங்களா? அது எதுக்கு அங்கேன்னு நான்தான் எடுத்து வெச்சிருக்கேன். உள்ளே நுழையும்போது ரொம்பவும் தடுமாறி வந்தீங்களே இடுப்பிலிருந்து விழுந்துடப் போகுதுன்னு எடுத்து வெச்சேன்... .ம்... நானும் செலக்‌ஷன்ல தேறியிருந்தா இதே மாதிரி எனக்கு ஒண்ணை கவர்ன்மெண்டே கொடுத்திருக்கும்."

"........."

"சரி இதுக்காவது பதில் சொல்லுங்க. அந்தப் பொண்ணைக் கொன்னது யார்?"

மாதவக் குறுப்பு ஜயனின் கையில் இருந்த ரிவால்வரைப் பார்த்தார். எந்த நேரமும் அது வெடிக்கத் தயாராக இருந்தது.

# 10

நிலைமை சரியில்லை என்பதை மூளை உணர்த்தியதும் குறூப்பு நடுங்கத் தொடங்கினார். வீரனான அவர் அந்தக் கணத்தில் தயங்கித் தடுமாறவே செய்தார்.

"என் கேள்விக்கு இன்னும் பதில் வரலையே?"

"நான் இல்லை!" குறூப்பு பின்வாங்கி நகர்ந்தபடி கூறினார்.

"வேற யாரு?"

"தெரியலையே?"

"நானேதானா?" ஜயன் கேட்டான்.

குறூப்பு அதற்கு பதிலளிக்கவில்லை.

"சரியான பதில் சொல்லாவிட்டால் நீங்க அனாவசியமா என்கிட்ட நடந்துகிட்டது மாதிரி நான் உங்ககிட்டயும் நடந்துக்க வேண்டி இருக்கும்."

"அவள் செத்துக்கிடக்கிறதைத்தான் நான் பார்த்தேன்!"

"அப்ப, அவள் மரணத்துல உங்க நாலு பேருக்கும் பங்கு இருக்கு இல்லையா?"

குறூப்பு மௌனமாக இருந்தார்.

ஜயன் வலது கையிலிருந்த துப்பாக்கியை நீட்டியபடி இடது கையால் அவர் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

அவர் மூக்கிலிருந்து ரத்தம் வடிந்தது.

ஒரு கட்டத்துக்கு மேல் தாங்க முடியாது என்ற முடிவுக்கு வந்தவர் ஜயன் மீது பாய்ந்தார். ஜயனும் மிகுந்த எச்சரிக்கையுடன் துப்பாக்கியை விடாமல் அவருடன் போராடினான்.

குறூப்பைச் சுட்டுச் கொல்ல ஐயனுக்கு வாய்ப்புக் கிடைத்தும் அவன் செய்யவில்லை. அவன் ஒரு போதும் கொலைகாரனாக விரும்பியதில்லை; இப்போதும் அப்படித்தான். ஆனால், மிக விரைவிலேயே வயிற்றுப் பகுதியில் இடி போன்ற ஒரு தாக்குதலை ஏற்றுக் கட்டிலில் மல்லாந்தார் குறூப்பு அதே நேரம் ஐயன் அந்த அறையிலிருந்த தொலைபேசி இணைப்பைத் துண்டித்தான்.

"தற்சமயம் நான் உன்னைக் கொல்லமாட்டேன். ஆனா, துப்பாக்கி என் கையிலேயே இருக்கட்டும், தேவைப்படும்!"

ஐயன் அந்த அறையிலிருந்து வெளியேறினான். போதையும் வலியும் சேர்ந்து அவரைக் கட்டிலிலிருந்து எழுந்திருக்க விடவில்லை.

அங்கிருந்து கிளம்பிய ஐயன் நேராக நிர்மலாவின் வீட்டையடைந்தான். தற்சமயம் அந்த ஓர் இடம்தான் அபயம் அளிக்கக் கூடியதாக இருந்தது.

கார், வீட்டை நெருங்கியதும் இன்ஜினை ஆஃப்செய்துவிட்டு, கேட்டைத் திறந்த பிறகு தள்ளியபடியே பழைய இடத்தில் நிற்க வைத்தான். பிறகு ஷெட்டுக்குள் நுழைந்த, ஷெட்டின் கதவை உட்புறமிருந்து தாழிட்டுக் கொண்டான்.

"வெளியில ஏதோ கார் வந்து நின்னது மாதிரி தோணுதே!" உட்புற வராந்தாவில் படுத்திருந்த போலீஸ்காரர் ஒருவர் கேட்டார்.

வெளியே கார் நின்று கொண்டிருந்தது.

"நாம வரும்போது இங்கே கார் இருந்ததா?"

"ஒரே குழப்பமா இருக்கு!"

"அப்போ இல்லாம இப்போ மட்டும் எப்படி வந்து மொளைச்சிருக்கும்?"

"நாம கவனிக்காம இருந்திருப்போம்."

விடியற்காலையில் தேவகி காபியுடன் கார்ஷெட்டுக்கு வந்தாள்.

"சாவி எங்கே?" காபி கொடுத்தவுடன் கேட்டாள்.

"இதோ..."

"கார் எடுத்துட்டு எங்கேயெல்லாம் சுத்துனீங்க?"

"ஒரு சில இடங்களுக்குப் போனேன்."

"உங்களை யாரும் அடையாளம் தெரிஞ்சுக்கலையா?"

"தெரியாம இருக்க, சில ஏற்பாடு பண்ண போயிருந்தேன்," பொய்முடி, மீசைதாடி போன்றவற்றை எடுத்துக் காட்டினான்.

'மேற்கொண்டு என்ன செய்யறதா உத்தேசம்?" தேவகி கேட்டாள்.

"இன்னிக்கு பகல் பொழுதை மட்டும் இங்கே பல்லைக் கடிச்சுட்டுத் தங்க வேண்டியதுதான். மேற்கொண்டு இங்கே தங்குறது நல்லதில்லை!"

"எங்கே போகப் போறீங்க?"

"கைவசம் எந்த ஐடியாவும் இல்லை. தோணுறபடி நடந்துக்க வேண்டியதுதான்."

"நீங்க சொல்றது எனக்கு வருத்தமா இருக்கு!"

"நீங்க ரெண்டு பேரும் எனக்கு செஞ்சிருக்கிற உதவிகளுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை. குறிப்பா இந்த சந்தர்ப்பத்துல என்னை நம்பி அபயம் கொடுத்துக் காப்பாத்தினதுக்கு நான் இந்த ஜென்மம் பூராவும் நன்றியுடையவனா இருப்பேன்."

"உண்மையைச் சொன்னா உங்களைப் பார்த்த முதல் நிமிஷத்துல என் மனசு நிறைய வெறுப்புதான். மனசைத் திறந்து காட்டின பாணியும் நடந்துகிட்ட முறையும் என் மனசை மாத்திடுச்சு. உண்மைக்கு உதவலாமேன்னு தோணுச்சு. நீங்க எப்படியும் இதிலேர்ந்து விடுதலை ஆவீங்கன்னு நெனைக்கிறேன். அது என் பிரார்த்தனையும் கூட!"

"உண்மையான குற்றவாளிகள் யாருங்கிறது எனக்குத் தெரியும். குறைஞ்சபட்சம் அவங்களை அடையாளம் காட்டின

பிறகு நானே சரணடையத் தயாரா இருக்கேன். ஆனா, அதே நேரம் செய்யாத ஒரு குற்றத்துக்கு நான் தண்டனை அனுபவிக்கிறதையும் என் மனசு ஒப்புக்கலை,"

தேவகி அதன் பிறகு எதுவும் பேசவில்லை. உண்மையில் ஜயன் அங்கிருந்து போவதில் அவள் மிகவும் கவலையடைந்தாள். சாதாரணமாக இப்படிப்பட்ட மனநிலையே அவளுக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை. சூழ்நிலையும் இரக்கமும் இயல்பையே மாற்றி விடக் கூடியதில்லையா?

பொழுது விடிந்தவுடன் வழக்கம்போல் காபி சாப்பிட்டுவிட்ட போலீஸார் விடைபெற்றனர்.

டிபன் சாப்பிட்ட பிறகு நீலகண்டன் நாயரும் காரில் ஏறிப் புறப்பட்டார். அவர் அங்கிருந்து கிளம்பிய பிறகுதான் நிர்மலாவும் தேவகியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

அன்று இரவு நீலகண்டன் நாயர் திரும்பி வரவில்லை. தனது சொந்த வீட்டுக்குத் திரும்பினார்.

"இன்னிக்கு இனிமேல் அப்பா வரமாட்டார்னு தோணுது!" நிர்மலா சொன்னாள்.

"ஒருவேளை அப்படியும் இருக்கலாம்." தேவகி பதிலளித்தாள்.

"எதுக்கும் போன் பண்ணிக் கேட்டுடலாமா?"

"அதுதான் நல்லது!"

நிர்மலா அப்பாவின் நம்பருக்கு டெலிபோனில் தொடர்பு கொண்டாள்.

நீலகண்டன் நாயர் மறுமுனையில் போனை எடுத்தார்.

"உங்களை இன்னும் காணோமேன்னு கூப்பிட்டேன் அப்பா!"

"இன்னிக்கு இங்கேயே தங்கிக்கிறேன்!"

"அங்கே உங்களுக்கு கஷ்டமா இருந்தா இங்கே வந்துடுங்களேன்!"

"இல்லம்மா... வெளியில ரெண்டு போலீஸ்காரங்க காவல் இருக்காங்க! ஆமா... உங்களுக்கு ஏதாவது பயமா இருக்கா என்ன?"

"எங்களுக்கு என்ன பயம்?"

"நீங்க அவனுக்கு பயப்படவேண்டியது இல்லைதான்!"

நிர்மலா மேலும் சற்று நேரம் பேசியபின் ரிசீவரை கிராடிலில் வைத்தாள்.

அந்தப் பேச்சு விவரங்களை தேவகி, ஜயனிடம் கூறினாள்.

ஜயன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான்.

பன்னிரண்டு மணியானபோது மாறுவேடம் பூண்டு நீலகண்டன் நாயரின் வீட்டை நோக்கி நடந்தான். வழியில் ஓரிடத்தில் ஒருவன் சுவரில் சினிமா போஸ்டர்களை ஒட்டிக் கொண்டிருந்தான்.

அவனிடம் நாலைந்து போஸ்டர்கள் மீதமிருந்தன.

ஜயன் அவனை நெருங்கினான்.

"வேலை முடிஞ்சிடுச்சா தம்பி?" ஜயன் கேட்டான்.

"இன்னும் நாலைஞ்சு மிச்சமிருக்கு!"

"இதையெல்லாம் ஒட்டினா உனக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்?"

"நாற்பது ரூபா!"

"சரி, நான் உனக்கு நூறு ரூபா தர்றேன். மிச்ச போஸ்டர், ஏணி, பசை பக்கெட் எல்லாத்தையும் என்கிட்டக்குடு. ரெண்டு மணி நேரம் கழிச்சுத் திருப்பித் தர்றேன்."

"அவ்வளவு நேரம் நான் இங்கே இருக்கமுடியாது. பசைபக்கெட்டையும், ஏணியையும் அந்த பெட்டிக்கடைக்குப் பின்னால் வெச்சுடுவிங்களா?"

"அதுக்கென்ன... வெச்சுட்டாப் போகுது!"

நூறு ரூபாய் தாள் ஒன்று கை மாறியது.

ஏணியைத் தோளில் போட்டுக்கொண்டு பசைபக்கெட்டையும், போஸ்ட்டரையும் எடுத்தவன் நீலகண்டன் நாயரின் வீட்டை நோக்கி நடந்தான். தனது நள்ளிரவு நடமாட்டத்தைக் குறித்து யாரும் இப்போது சந்தேகப்படமாட்டார்கள்.

நீலகண்டன் நாயரின் வீட்டுக்கு முன்பாக போஸ்டர் ஒன்றைத் தரையில் போட்டுப் பசை தடவினான்.

"யாருடா அது இந்த நேரத்தில்?" பின்புறமிருந்து மிடுக்கான குரல் கேட்டது.

ஜயன் திரும்பிப் பார்த்தான். போலீஸ்காரர்!

"போஸ்டர் ஒட்டுறேன் சார்!"

"என்ன படம்?"

ஞாபகம் வைத்திருந்து சொன்னான்.

"தீப்பெட்டி இருக்கா!" போலீஸ்காரர் கேட்டார்.

"இருக்கு சார்!" என்றபடி எடுத்துக் கொடுத்தான்.

பீடி பற்றவைத்த போலீஸ்காரர் தீப்பெட்டியை அவனுக்கு முன்னால் போட்டுவிட்டு சைக்கிளை மிதித்துக் கொண்டு போனார்.

அவர் போன பிறகுதான் ஜயனுக்கு உயிரே திரும்பி வந்தது போலிருந்தது. நல்லவேளை தன்மீது சந்தேகம் ஏற்படவில்லை. என்பது ஜயனுக்கு ஆறுதலாக இருந்தது.

நீலகண்டன் நாயரின் காம்பௌண்டுச் சுவரில் ஒரு பாதி போஸ்டரை ஒட்டிய ஜயன் காம்பௌண்டின் உட்புறம் பார்த்தான். புல் பரப்பு தெரிந்தது. உட்புறம் குதித்தான். வெளியே யாராவது சாத்தி வைத்திருக்கும் ஏணியைப்பார்த்தால் யாரோ போஸ்டர் ஒட்டுவதாக நினைப்பார்கள்.

குதித்த இடத்திலிருந்த மெதுவாகத் எழுந்தவன் சுற்றுமுற்றும் பார்த்தான். போர்ட்டிகோ பகுதியில் இரண்டு பேர் படுத்திருந்தனர்.

குதித்த சத்தம் அவர்களை எழுப்பியதாக தெரியவில்லை.

ஓசையெழுப்பாமல் நடந்தவன் பங்களாவின் பின்புறம் வந்தான். இடது புறம் கார்ஷெட் தெரிந்தது. அதற்குள் வேன் ஒன்று நின்றுகொண்டிருந்தது. 'அந்த ஷெட்டின் மேற்புறம் போனால், முதல் மாடியின் ஜன்னலை அடையலாம்' ஜயன் நினைத்தான்.

ஷெட்டின் மேற்புறம் தொத்தினான்.

ஜன்னல்கள் மூடியிருந்தன. லேசாகக் கையால் தள்ளிப் பார்த்தான். வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. மெதுவாகத் திறந்தான் வலுவான கம்பிகள். ம்... ஹூம் பயனில்லை.

அந்த நேரம் யாரோ பின்புறக் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. ஜயன் எச்சரிக்கையாக சுவரோடு ஒண்டினான். தரைப்பகுதியில் ஒரு தடவை டார்ச்லைட்டை அடித்துப் பார்த்து விட்டுத் திரும்பத் தொடங்கிய அதே கணத்தில் ஜயனின் வலது கை அவன் வாயைப் பொத்தியது. உடம்பை வெளிப்புறமாக இழுத்தான்.

"சத்தம் போட்டால் தொலைஞ்சே!"

அவன் திமிறியபடி 'மாட்டேன்' என்பதுபோல் தலை அசைத்தான். அவன் அந்த வீட்டின் வேலைக்காரனாக இருக்க வேண்டும்.

வேலைக்காரனின் முதுகில் வைத்திருந்த மற்றொரு கையை எடுக்காமலே ஜயன் கேட்டான்: "நான் உன்னை நம்பமுடியாதே! அதனால நீ என் கூடவே வா!" வெளியே கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துணியை எடுத்து அவன் வாய்க்குள் திருகி, கைகால்களைச் சேர்த்துக் கட்டி கார்ஷெட்டுக்குள் போட்டான்.

வீட்டுக்குள் நுழைந்த ஜயன் ஒவ்வோர் அறையாகத் தேடிக்கொண்டே போய் இறுதியில் நீலகண்டன் நாயரின் படுக்கையறையை அடைந்தான். அவரது அறையின் கதவைத் தட்டினான்.

எந்த ஒரு சின்னச் சத்தம் கேட்டாலும் விழித்துக் கொள்ளும் நீலகண்டன் நாயர், கட்டிலுக்கு அருகில் தொங்கவிட்டிருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு வாசலை நோக்கி நடந்தார்.

# 11

"யார் அது?" நீலகண்டன் நாயரின் குரல் மிடுக்குடன் ஒலித்தது.

"நான்தாங்க கிருஷ்ணன்குட்டி. கார்ஷெட்டில யாரோ இருக்கிறா மாதிரி தெரியுது!"

"அதுக்கு நான் என்ன பண்ணணும்? போய் பிடிக்க வேண்டியதுதானே?"

"ஐயோ... நான் எப்படிங்க? அவன்கிட்ட கத்திகித்தியெல்லாம் இருக்கும்!"

"உன்னையெல்லாம் சோறுபோட்டு வளர்க்குறதுக்கு பதில் ரெண்டு நாயை வளர்த்திருக்கலாம்."

ஜயன் அந்த வீட்டு வேலைக்காரன் கிருஷ்ணன் மாதிரியே குரல் மாற்றிப் பேசியதால் நீலகண்டன் நாயர் சந்தேகப் படவில்லை. இருப்பினும் துப்பாக்கியை நீட்டியபடி கதவைத் திறந்தார்.

துப்பாக்கியின் குழலைப் பிடித்துச் சட்டென்று முன்புறமாக இருந்த ஜயன் அவரின் பிடரியில் ஓங்கி ஓர் அறை கொடுத்தான். நீலகண்டன் நாயர் பாதி வெளியிலும் பாதி அறையிலுமாக குப்புற விழுந்தார். துப்பாக்கி ஜயனின் கைக்கு வந்துவிட்டிருந்தது.

ஜயன் லைட்டின் சுவிட்சைத் தட்டினான்.

நீலகண்டன் நாயர் சுதாரித்து எழ முற்படுவதற்குள் துப்பாக்கி முனை அவர் முதுகில் பதிந்தது.

"ரொம்பவும் சௌகரியமான போஸில படுத்திருக்கீங்க. குதிரையை இழுத்துட்டா சுகமா பரலோகம் போகலாம். சௌகரியம் எப்படி?" ஜயன் கேட்டான்.

" என்னைக் கொன்னுடாதே!"

"அப்படியெல்லாம் ஒரேயடியா உங்களைக் கொல்றது என் நோக்கமில்லை... எழுந்திரு" துப்பாக்கியை மேற்புறமாக உயர்த்திய ஜயன் அவரைக் காலால் புரட்டிப் போட்டான்.

"இப்ப நான் யாருன்னு தெரிஞ்சிருக்குமே?"

"ஐயோ...நீயா?"

"எதுக்காக வந்திருக்கிறே?"

"இங்கே வராம நான் வேற எங்கே போறது? உன்னாலதான் நான் இந்த நிலைமைக்கு ஆளானேன்? தலைமறைவா இருக்க எனக்கென்ன ஆசையா?"

"நடந்தது நடந்துபோச்சு!"

"சொல்லிவைச்ச மாதிரி எல்லாரும் இதையேதான் சொல்றீங்க. போகட்டும் நானா அம்மிணியைக் கொன்னேன்?"

"எனக்குத் தெரியலையே?"

ஜயன் இப்போது வெகு எச்சரிக்கையுடன் துப்பாக்கி முனையை அவர் மார்பில் பதித்தான்.

"நான் ஒரு ஹார்ட்பேஷன்ட்!" நாயரின் குரல் ஹீனமாக ஒலித்தது.

"இதயம் இருக்கிறவங்களுக்குத்தானே அதெல்லாம்? ஜாக்கிரதை. எதையாவது செஞ்சு வீணா காயப்பட்டுக்க வேண்டாம்!"

"தயவு செஞ்சு என்னை ஒண்ணும் பண்ணிடாதே... என்ன கேட்டாலும் செஞ்சு தர்றேன்!"

"ம்... முதல்ல எழுந்து நில்லு" ஜயன் சற்று விலகி நின்றபடி கூறினான்.

நீலகண்டன் நாயர் ஒருவாறாக எழுந்து நின்றார்.

"ம்... அறைக்குள்ள போ!"

அப்படியே செய்தார்.

ஜயனும் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டான்.

"முதல்ல ஒரு விஷயத்தைச் சொல்லிடுறேன். போலீஸ் என்னைத் தேடிட்டிருக்குது. ஒருவேளை இங்கேயும் தேடி வரவோ, போனோ செய்யலாம். இப்ப என் நிலைமை என்னன்னு உனக்கே தெரியும். தவறா ஒரு வார்த்தை சொன்னாலும் அடுத்த நிமிஷம் நான் சுட்டுத்தள்ளிடுவேன். இப்ப எனக்கு என் உயிர் முக்கியம். உன் உயிர் உனக்கு வேணுமா வேணாமாங்கிறது உன் தீர்மானத்தைப் பொறுத்தது. ஞாபகம் இருக்கட்டும்" ஜயன் எச்சரித்து முடித்த அதே விநாடியில் டெலிபோன் ஒலித்தது.

நீலகண்டன் நடுங்கும் கையுடன் ரிசீவரை எடுத்தார். காதில் வைத்தார்.

"ஆமாம்... நான்தான் பேசுறேன். யாரு... யாரும் வரலையே அவனை நான் பார்க்கவே இல்லையே! இங்க யாரும் கிடையாது.

அவர் பேசிக்கொண்டிருந்தபோது ஜயன் சரியாக அவர் நெஞ்சையே குறிவைத்து நின்றுகொண்டிருந்தான்.

தன் பேச்சில் ஏதாவது விபரீதமாக வெளிபட்டால் நிச்சயமாக ஜயன் சுட்டுவிடுவான் என்பதில் அவருக்குச் சந்தேகமே இல்லை. எனவே வெகு எச்சரிக்கையுடன், அதைவிடப் பயத்துடன் பேசி விட்டு ரிசீவரை வைத்தார். ஜயன் பக்கம் திரும்பினார்.

"புத்திசாலித்தனமா நடந்துக்கிட்டீங்க. நான்கூட ரெண்டு குண்டை வீணாக்க வேண்டி வருமோன்னு நினைச்சேன்!"

"சரி உனக்கு என்ன வேணும்?" நாயர் பதற்றமில்லாத குரலில் கேட்டார்.

"நல்ல கேள்வி! எனக்கு என்ன வேணும்? எனக்குத் தூக்குத் தண்டனை கொடுத்திருக்காங்க. தண்டனை நிறைவேறிட்டா என் அஞ்சு சகோதரிங்க நிலைமை என்ன ஆகும்? நீங்க செஞ்ச தப்புக்காக அவங்கள்லாம் வீணா கஷ்டப்படணுமா? சுலபமா என்னைக் கொன்னுட்டு, என் குடும்பத்தைச் சின்னாபின்னாமாக்க நான் அனுமதிக்க மாட்டேன். உன் உயிரை நான் காப்பாத்தணும்னா ஒரு கண்டிஷன். என் குடும்பம் நல்லா இருக்கணும்."

"புரியலை..."

"புரிய வைக்கிறேன். அவங்க அழியறதா இருந்தா நீயும் அழிஞ்சிட வேண்டியதுதான். பழிக்குப்பழி வாங்கிட்டு நானே ஜெயில்ல சரணடைஞ்சிடுவேன்."

"என்ன பண்ணணும்னு சொல்லு!"

"அம்மிணியை நான் கொல்லலையே?"

"..........."

"யார் கொன்னதுன்னு கேட்கமாட்டேன். உங்க நாலு பேருக்கும் அதில பங்கிருக்கு. அதைக் கண்டுபிடிக்கிறது என் நோக்கமில்லை. நாளைக்கே எங்க அம்மா பேர்ல பாங்ல ஒரு லட்சம் ரூபா போடணும். போடலேன்னா சீக்கிரத்திலேயே நான் திரும்பி வருவேன். மிச்சமெல்லாம் அப்புறம். விஸ்கி இருக்கா?"

"இருக்கு!"

"எடு!"

சீல் உடைக்காத ஒரு புது பாட்டிலை எடுத்து அவனிடம் நீட்டினார்.

ஜயன் அதை வாங்கி மூடியைத் திறந்தான். நாயரிடம் நீட்டியபடி, "ம்.. குடிங்க!" என்றான்.

"குடிச்சிட்டேன்!"

"பத்தாது இதையும் குடிக்கணும்."

"வேண்டாம்!"

"துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக்கிட்டே இருக்கணும்னா எப்படி?"

நீலகண்டன் நாயர் அவனிடமிருந்து பாட்டிலை வாங்கிக் கொண்டார்.

"எதுவுமில்லாம அப்படியே வாயில் ஊத்து."

வேறு வழியில்லாமல் நீலகண்டன்நாயர் விஸ்கியைக் குடிக்கத் தொடங்கினார். வெறும் விஸ்கி வாயின் சதைப் பகுதிகளை அரிப்பது மாதிரி உணர்ந்தார். இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு கால்பாகம் குடித்தார்.

"போதும்"- நாயர் சொன்னார்

"அதை நான் தீர்மானிக்கிறேன். ம் குடி!" ஜயனின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

மேலும் கால் பகுதியைக் குடித்தார்.

"ம்... இனிமேல் படுத்துக்க!" ஜயன் பாட்டிலை அவரிடமிருந்து வாங்கினான்.

நாயர் பித்துப் பிடித்தவரைப் போல் தள்ளாடினார். அப்படியே கட்டிலில் சரிந்தார். குறைந்தபட்சம் நாளைக்காலை பத்து மணிக்கு முன்னால் அவர் விழித்துச் சுயநினைவுக்கு திரும்பமாட்டார் என்று தோன்றியது.

அறையின் விளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்தான். மணி இரண்டு அடிக்கும் சத்தம் கேட்டது.

வந்த வழியாக வெளியேறியவன் சுவரின் மேல் பகுதிக்குத் தாவினான். ரோட்டின் இருபுறமும் பார்த்தான். அவன் போட்டு

விட்டுப் போனதெல்லாம் அப்படியப்படியே கிடந்தன. ஏணியின் முதல் படியில் கால் வைத்து இறங்க முற்பட்டபோது ஜீப்பின் ஹெட்லைட் வெளிச்சம் சரியாக அவன் உடம்பின் மீது பாய்ந்தது. ரோட்டுக்கு வந்தவன் ரோட்டைக் கடந்து ஓடினான். சரியாக இறங்கிய அந்தப் பகுதியில் ஜீப் போக முடியாததால் ஜீப் மேலேயே நின்று கொண்டிருந்தது. இரண்டு போலீஸ் மட்டும் அவனைத் தொடர்ந்து ஓடிவந்து கொண்டிருந்தனர். சற்றுத் தொலைவு வந்தவன் ஒரு பெரிய காம்பௌண்டுச் சுவரைச் சுற்றிக்கொண்டு ஜீப் நின்று கொண்டிருந்த இடத்தின் பின்புறமாக வந்தான். ஜீப்பில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது. பின்புறம் நிதானமாக ஏறியவன், "ம் நேராகப் போங்க... அவன் அந்தப் பக்கமாகத்தான் போயிருக்கான்!" என்றான்.

டிரைவர் ஸீட்டில் இருந்தவர் சந்தேகத்துடன் திரும்பிப் பார்க்க, துப்பாக்கி அவரை மிரட்டியது. ஜீப் முன்புறமாக நகரத் தொடங்கியது. மெதுவாக நகர்ந்து வந்த ஜயன் முன் ஸீட்டுக்கு வந்து, டிரைவரை எட்டி உதைத்தான். டிரைவர் வண்டியிலிருந்து விழுந்ததும் ஜீப் ஜயனின் கட்டுப்பாட்டுக்கு வந்தது.

சுமார் பத்து நிமிடம் ஓடிய ஜீப் ஒரு தென்னந்தோப்பின் அருகே நின்றது. தனது விக், தாடி மீசையைச் சரி செய்து கொண்ட ஜயன் ஜீப்பிலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கினான்.

இருள் அவனுக்கு உதவி செய்தது. நிழல் பகுதிகளாகப் பார்த்து எச்சரிகையுடன் நடந்து சென்றான்.

முதலில் மறைந்து கொள்ள ஓர் இடம் வேண்டும். என்ன செய்யலாம்? எங்கே போகலாம்?

ரோட்டு ஓரத்தில் பஸ் ஒன்று அனாதையாக நின்று கொண்டிருந்தது. சரி, விடிந்த பிறகு மற்றவற்றை பார்த்துக் கொள்ளலாம். அதுவரை இதற்குள் ஓய்வெடுக்கலாம் என்று நினைத்து அதற்குள் ஏறிப் படுத்துக் கொண்டான்.

ஜயன் மனம் ஒழுங்கு முறையற்ற தனது வாழ்க்கையையும் சூழ்நிலையும் பற்றித் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தது.

"எதுக்கும் இதுக்குள்ளேயும் பார்த்துடலாம்!"

பஸ்ஸின் வாசலருகில் ஒரு குரல் கேட்டது.

ஜயனின் காதுகள் கூர்மையடைந்தன.

ஆபத்து வருவதை உணர்ந்து சுதாரிப்பதற்குள் வாசல் வழியாக டார்ச்லைட் வெளிச்சம் பஸ்ஸின் உட்பகுதியில் பாய்ந்தது.

# 12

டார்ச்லைட்டின் ஒளி பஸ்ஸுக்குள் பாய்ந்ததும் ஜயன் உடலைக் குறுக்கியபடி சரிந்து ஸீட்டுக்குள் ஒண்டிக் கொண்டான். இரவு நேர பீட்டுக்கு வந்த போலீஸ்காரர் ஒருவர்தான் பஸ்ஸுக்குள் நுழைந்தவர். ஜயனைப் பிடித்துக் கொடுக்கும் போலீஸ்காரருக்குச் சில சிறப்பு சலுகைகள் அளிக்கப் போவதாக டிபார்ட்மெண்டுக்குள் பேசிக் கொண்டனர். எனவே தேடுதல் வேட்டை தீவிரமாகி இருந்தது. முன்புறம் நுழைந்த போலீஸ்காரர் லைட்டை அடித்துப் பார்த்தபடி பின்புறமாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

இன்னும் சற்று நெருங்கட்டும் என்று ஜயன் தயாராக இருந்தான். மிகவும் நெருங்குவதற்கு முன் பாய்ந்து அவர் கழுத்தைப் பிடித்தான்.

"பரிசைவிட உயிர் முக்கியமில்லையா? சத்தம் போட்டீங்கன்னா நான் பொறுப்பு இல்லை." ஜயன் மெதுவான குரலில் கிசுகிசுத்தான்.

எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்து போன போலீஸ்காரர் வாயைத் திறப்பதற்குள் அவர் கையிலிருந்து பிடுங்கிய டார்ச்லைட்டின் கனமான பகுதியால் அவர் பின் தலையில் ஒரு போடு போட்டான். அவர் குரல் எழுப்ப மறந்தவராக ஸீட்டில் சரிந்தார்.

"என்ன சத்தம் அங்கே?" - வெளியிலிருந்து மற்றொரு போலீஸ்காரர் குரல் கொடுத்தார்.

"ஒண்ணும் தட்டுப்படலை!" ஐயன் குரலை மாற்றிச் சமாளித்தான்.

"சரி நான் நடந்துட்டிருக்கேன் வாப்பா!" என்றபடி அவர் நடந்து மறைந்தார்.

மழைக்காலமாக இருந்ததால் விழுந்த போலீஸ்காரரின் உடைகளுடன் ரெயின் கோட்டையும் கழற்றி அணிந்து கொண்டு வெளியேறினான். அந்த வேடத்தில் அவனால் தைரியமாக வெளியே உலாவ முடிந்தது.

அங்கிருந்து நடந்து மெயின் ரோட்டை அடைந்தபோது எதிரே வந்த போலீஸ் ஜீப் பிரேக்கிட்டு நின்றது.

ஐயன் போலீஸ் பாணியில் சல்யூட் செய்தான். தொப்பி மற்றும் போலீஸ் உடை, ரெயின்கோட் எல்லாமாகச் சேர்ந்து அவனது தோற்றத்தை மொத்தமாக மாற்றிவிட்டிருந்தது. இருப்பினும் ஐயனின் மனம் படுவேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

"உங்க பீட் எங்கே?" டிரைவர் ஸீட்டில் இருந்த இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இதே இடம்தான்!"

"ரவுண்ட்ஸ் முடிஞ்சுதா?"

"இன்னும் கொஞ்சம் இருக்கு!"

"இப்ப எங்கே போறீங்க?"

"சூடா ஒரு டீ சாப்பிடலாம்னு!"

"சந்தேகப் படற மாதிரி யாராவது தென்பட்டா, விசாரிக்காம விடாதீங்க."

"சரி சார்!"

ஜீப் அங்கிருந்து நகர்ந்து மறைந்தது.

பின்னாலேயே டாக்ஸி ஒன்று வந்தது.

ஜயன் கைகாட்டினான்.

"எங்கே போகுது?" ஜயன் கேட்டான்.

"வடக்கே போறேன் சார்!" டிரைவர் பதிலளித்தார்.

"குமாரநல்லூர் வரைக்கும் போகணும்!"

"ஏறிக்குங்க!"

ஜயன் முன்ஸீட்டில் ஏறிக்கொண்டான்.

வண்டி புறப்பட்டது.

"இந்த ராத்திரியில் என்ன பயணம்?" ஜயன் கேட்டான்.

"கஞ்சிகுடிக்க ஒரு வழி வேணாமா சார்? கிழங்கு ஏத்திட்டுப் போறோம்."

"கஞ்சாதான் கஞ்சி ஊத்துதா? சரி, போகட்டும். நான் சொல்ற இடத்துல இறக்கிவிடுங்க!" நிர்மலாவின் வீடிருக்கும் பகுதியில் இறங்கிகொண்ட ஜயன் வீட்டை நோக்கி நடந்தான். வீட்டைநெருங்கிய போது முன்புறம் நீலகண்டன் நாயரின் கார் இல்லாமலிருந்ததே சற்று ஆறுதலாக இருந்தது. காலிங்பெல்லை அழுத்தியதும் தேவகி வாசலுக்கு அருகே இருந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

"யாரது?" தேவகியின் குரல்.

"நான்தான்!"

அவளுக்குப் புரிந்தது. கதவைத் திறந்தாள்.

"இந்த டிரஸ் எங்கேருந்து கிடைச்சது?"

" விவரமாக சொல்றேன்" என்றவன் டெலிபோனை நெருங்கினான். ஏற்றுமானூர் போலீஸ் ஸ்டேஷனை அழைத்து காரில் கஞ்சா வருவதையும் கார் நம்பரையும் குறிப்பிட்டான். ரிசீவரை வைத்தான்.

"ஓகோ இப்ப நிஜமாவே போலீஸ் வேலையெல்லாம் செய்ய ஆரம்பிச்சாச்சு?" தேவகி கேட்டாள்.

"இந்த வேஷம் போட்டபோது இப்படி நடந்துக்கணும்னு தோணுச்சு!" என்றவன் நடந்ததை விவரித்தான்.

"சாப்பிட்டீங்களா?" தேவகி கேட்டாள்.

"மறந்தே போயிட்டேன். கேட்டபோதுதான் பசியே ஞாபகம் வருது!"

நீர் விட்ட சாதத்தைப் பிழிந்து போட்டாள் தேவகி.

"நீங்க அறிமுகமானதே எனக்கு ஆச்சரியமா இருக்கு இப்போ."

"மிச்சத்தையையும் கேட்டால் இன்னும் ஆச்சரியப்படுவே!"

"சொல்லுங்க!"

"நிர்மலாவின் அப்பா நாளைக்கு எங்க அம்மா பேர்ல ஒரு லட்ச ரூபாய் டெபாசிட் பண்ணுவார்."

"செய்வாருன்னு நினைக்கிறீங்களா?"

"உயிர் மேல ஆசையில்லாத மனுஷன் யாராவது உலகத்துல இருக்காங்களா? செய்யலேன்னா அவர் உடம்புல ஏதாவது ஒரு அவயவம் காணாமல் போயிடும்."

"நிர்மலாவை நினைச்சாவது நீங்க இந்த மாதிரி எதையும் செய்யக்கூடாதுன்னு கேட்டுக்கிறேன்."

"தேவகி என் ஆசையும் அதுதான். எந்தத் தப்புமே செய்யாத நான் தூக்குத் தண்டனை வாங்கியிருக்கேன். அதே நேரம் இதையெல்லாம் செஞ்சவங்க சுகமா தூங்குறாங்க, நிம்மதியா. ஒரு வக்கீல், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஃபைனான்ஸ் கம்பெனி முதாலாளி ஒருத்தர், அரசியல்வாதி இப்படிப்பட்ட நாலு பேர். நான் அநாவசியமா தண்டனையடைஞ்சு அழிஞ்சுட்டா அந்த அயோக்கியர்களுக்கு இதுவே ஒரு நல்ல பாதையா மாறிடும்.

அவங்களோட உண்மையான வேஷத்தை வெளிக்காட்டுறதை விட, நான் நிரபராதின்னு நிரூபிக்க வேண்டியதும் அவசியம். சட்டம் சொல்றபடி ஒரு குற்றவாளி தப்பிச்சாலும் நிரபராதி ஒருத்தன் அநீதிக்கு பலியாகிடக் கூடாது இல்லையா?"

ஜயனின் வார்த்தைகள் தேவகியை மிகவும் கவர்ந்தன. அவன் சொல்வதும் நியாயமாகத் தெரிந்தது. அவனுக்காக அவனது நல்ல நோக்கத்துக்காக நாமும் எந்தவிதமான தியாகமும் செய்யலாம் என்று நினைத்தாள்.

"நான் என்ன செய்யணும்னு நினைக்கிறீங்க?" தேவகி கேட்டாள்.

"முதல்ல நான் தங்கியிருக்க - குறைஞ்சபட்சம் என் நோக்கங்கள் நிறைவேறுற வரைக்கும் நான் தலைமறைவா இருக்கணும்."

"அதுக்கு?"

"உனக்கு போலீஸ் குவார்ட்டர்ஸ் இருக்கு இல்லையா? அதில தங்கிக்கிட்டா உனக்குப் பாதுகாப்பா, சொந்தக்காரனா நான் இருக்கிறதா சொல்லிக்கலாம். என்னை வேற யாரும் அடையாளம் தெரிஞ்சுக்காம பார்த்துக்கிறேன். இந்த வீட்டுல நான் இருக்கிறது அவ்வளவு நல்லதா தோணலை. மட்டுமில்லாம போலீஸ் குவார்டர்ஸில் எந்தவிதமான சந்தேகமோ சோதனையோ இருக்காது."

ஜயனைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தேவகி சற்று நேர ஆலோசனைக்குப் பிறகு அதற்கு ஒப்புக்கொண்டாள். மறுநாளே அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டாள்.

ஜயனைப் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டி இருந்தது. யார் யாரோ எங்கெங்கோ பார்த்ததாகவும், மிரண்டதாகவும் பேட்டியளித்தனர்.

மூன்றாவது நாளன்று தேவகிக்கு குவார்ட்டர்ஸ் கிடைத்தது குவார்ட்டர்ஸின் கடைசி வீடு. மற்ற வீடுகளிலிருந்து சற்று ஒதுங்கி

இருந்தும்கூட. அதற்கு முன்பு அங்கு குடியிருந்தவர்கள் வீட்டைச் சுற்றி ஏராளமான வாழை மரங்களை நட்டு வைத்திருந்தனர். ஐயனுக்கு அது மிகவும் பாதுகாப்பான இடமாகத் தெரிந்தது.

ஐயனைப் பிடிக்கமுடியாமலிருப்பதில் போலீஸ் அதிகாரிகள் கவலைப்பட்டாலும் பரபரப்புடன் செயல்படுவதை நிறுத்தவில்லை. யார் யாரது கண்களுக்கோ தட்டுப்படும் ஐயன் எப்படி தங்கள் கண்ணில் படுவதில்லையென்று வியப்படைந்தனர்.

பஸ்ஸில் மயங்கி விழுந்த போலீஸ்காரர் ஐயனை நேருக்கு நேர் மிக அருகில் பார்த்ததாகவும், தன் உடைகள், அவனால் அபகரிக்கப்பட்டதையும் குறிப்பிட்டார். ஆனால், அவரால் மேற்கொண்டு பயனுள்ள தகவல் எதையும் சொல்ல முடியவில்லை.

போத்தன் வர்கீஸ் இரவு சுமார் பத்துமணிவாக்கில் எர்ணாகுளத்திலிருந்து காரில் கோட்டயம் வந்து கொண்டிருந்தார். அவரே காரோட்டினார். காரின் பின்ஸீட்டில் இளம்பெண் ஒருத்தி படுத்திருந்தாள். மது அருந்தியிருந்ததால் ஏறத்தாழ பாதி தூக்கத்தில் இருந்தாள்.

கடந்த சனிக்கிழமை மாலை நேரம் புறப்பட்டவர் இரண்டு நாட்களை உற்சாகமாகக் கழித்தபின்பும் விட்டுவிட மனமில்லாமல் அவளைத் தன்னுடன் அழைத்து வந்தார்.

கோட்டயம் நகருக்குள் நுழைவதற்கு முன்னால் நாகம்படம் என்ற இடத்திலுள்ள ரயில்வே பாலத்தைத் தாண்டும்போது பாலத்தின் சுவரில் சாய்ந்திருந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் கை காட்டினார்.

போத்தன் வர்கீஸ் காரை நிறுத்தினார்.

"நீங்கதானா சார்?" டிரைவிங் ஸீட்டின் பக்கமாகத் தலையைத் தாழ்த்திப் பார்த்தவர் கேட்டார்.

"நான்தான். என்ன வேணும் உங்களுக்கு?"

"நானும் சிட்டிக்குப் போகணும், உங்க வண்டியில வரலாமா?" என்றவர் அனுமதிக்குக் காத்திருக்காமல் முன்புறக் கதவைத் திறந்து அமர்ந்தார்.

"நீங்க புதுசா வந்திருக்கிறவரா?"

"ஆமாம் சார்!"

"என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சர்க்கிள் சார், அவர் நண்பர்கள் எல்லோரோட கார் நம்பரையும் சொல்லிக் குடுத்திருக்கார். உங்க படங்களைக் காட்டி அறிமுகம் செஞ்சும் வைச்சிருக்கார்!"

"குறூப்பு சார் ஊரில இருக்காரா?"

"காலையில்தான் திருவனந்தபுரம் போனார்."

"நீங்க எப்படி தனியா?"

"என்னத்தைச் சொல்ல சார்? வந்த அன்னியிலேர்ந்து ராத்திரி வேளைகள்ல ஒழுங்கா படுத்துத் தூங்கமுடியலை."

"ஜெயில்லேர்ந்து தப்பிச்சவன் விஷயமா?"

"அதேதான் . உங்களுக்கு அவனைத் தெரியுமா சார்?"

"அந்தத் திருட்டுப் பயலையா கேட்குறீங்க? நான் உங்க மேலதான் தப்பு சொல்வேன். எத்தனை நாளாச்சு அவன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு? எவ்வளவு பேர் வேலை செஞ்சு என்ன பிரயோஜனம்? அந்த சுண்டைக்கா பயலை உங்களால ஒண்ணும் பண்ண முடியவில்லையே?"

"ஏதாவது துப்பு கிடைச்சா பரவாயில்லை. யாருமே, எதுவும் சொல்றதில்லை."

"ஆமா, உங்க பேரு என்ன சொன்னீங்க?"

"ஜார்ஜ்!"

"அப்ப நம்ம ஆள்தான்!"

இன்ஸ்பெக்டர் எதுவும் பேசவில்லை.

கார், பஸ்ஸ்டாண்டுக்கு அருகிலுள்ள ரவுண்டானாவை அடைந்தது. காரில் பெட்ரோல் போட வேண்டியிருந்தது ஞாபகம் வந்ததால் போத்தன் காரைத் திருப்பி பெட்ரோல் பங்க்கை நோக்கிச் செலுத்தினார். பக்கத்தில் எங்கோ மாநில மாநாடு நடந்து கொண்டிருந்ததால் ஏராளமான கார் மற்றும் வேன்கள் டீசல் மற்றும் பெட்ரோலுக்குக் காத்திருந்தன.

"டேங்கை நிரப்பிடுப்பா!" பம்ப்புடன் வந்தவனிடம் போத்தன் கூறினார்.

கார், பெட்ரோல் பங்க்கிலிருந்து புறப்பட்டு திருக்காக்கரை மைதானத்தைச் சுற்றிக் கொண்டு கிழக்குப்புறமாக வந்தது.

"காரை நிறுத்துறீங்களா?" இன்ஸ்பெக்டர் வர்கீஸைப் பார்த்துக் கூறினார்: "இங்கே எங்கேயாவது கூட அவன் ஒளிஞ்சிருக்லாம். ஒரு ரவுண்டு பார்த்துட்டு வர்றேன்."

வர்க்கீஸ் காரை நிறுத்தினார்.

சட்டென்று இன்ஸ்பெக்டரின் கையில் இருந்த துணி வர்கீஸின் மூக்கருகே வந்து வாய் மற்றும் மூக்குப் பகுதிகளைப் பொத்தியது. வர்கீஸ் சுயநினைவற்ற நிலைக்குள் படிப்படியாக இறங்கத் தொடங்கினார்.

# 13

போத்தன் வர்கீஸ் நல்ல மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டார் என்று தெரிந்ததும் சப்இன்ஸ்பெக்டர் காரிலிருந்து இறங்கினார். ஏற்கெனவே போதையில் ஆழ்ந்திருந்த பெண்ணின் மூக்கிலும் அந்தத் துணியைப் போட்டார். அவள் தலையும் சரிந்தது.

குறைந்தபட்சம் எட்டுமணி நேரமாவது அந்த மருந்து வேலைசெய்யும். போதையும் சேர்ந்து கொண்டால் பத்து மணி நேரம் வரை அவர்களால் விழிக்க முடியாது.

காரின் கண்ணாடிகளை மேல் புறமாக ஏற்றிவிட்டு, உள்ளே காற்றுப் போக ஏற்பாடு செய்துவிட்டு, கதவுகளை உட்புறமாகச் சரிசெய்து வெளிப்புறமாகப் பூட்டினார். சாவியை பாக்கட்டில் போட்டுக் கொண்டு அவர் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினார்.

பொழுது விடிந்தது. முனிசிபாலிட்டி சங்கு எட்டுமணிக்குக் கூவியபோது கூட போத்தன் வர்கீஸும் காருக்குள் படுத்திருந்த பெண்ணும் கண்விழிக்கவில்லை. மயக்க மருந்து அந்த அளவுக்கு அவர்களைத் தளர்த்தியிருந்தது. அரசாங்கப் போக்குவரத்து பஸ்கள் நிறுத்தும் ஸ்டாப்பில் போத்தன் வர்கீஸின் கார் நின்று கொண்டிருந்தது.

போக்குவரத்து நெரிசல் குறைவாக இருந்தபோது வண்டிகள் ஒதுங்கிச் சென்றன. போக்குவரத்து அதிகரிக்க... ரோட்டில் நின்றிருந்த கார் ஒரு தடையாக நின்று கொண்டிருந்தது புலப் பட்டது.

டிராஃபிக் போலீஸ்காரர் ஒருவர் காரை நெருங்கி உட்புறம் பார்த்தார். முன்புற ஸீட்டில் ஓர் ஆணும், பின்புற ஸீட்டில் இளம்பெண் ஒருத்தியும் படுத்திருப்பது தெரிந்தது. கதவைத் திறக்க எவ்வளவோ முயன்றார். உட்புறம் தாழிடப்பட்டிருந்ததால் மேற்கொண்டு என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. காரின் கதவை பலமாகத் தட்டத் தொடங்கினார். போலீஸ்காரரின் நடவடிக்கையை பார்த்த நடைபயணிகள் ஒவ்வொருவராக காரைச் சூழத் தொடங்கினர். விரைவிலேயே காரைச் சுற்றி மனிதக்கூட்டம் கூடத்தொடங்கியது. இந்த மனிதக்கூட்டத்தை மீறி வாகனங்களை அனுப்ப போலீஸ்காரர் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

என்னதான் நடக்கிறது என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் நிமிடத்துக்கு நிமிடம் ஆட்கள் அதிகரித்துக் கொண்டிருந்தனர். கடைசியில் சப்-இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்த பிறகு காரின் கதவை வலுவாகத் தட்டினார்.

போத்தன் வர்கீஸ் வெளியே என்னவோ சத்தம் கேட்கிறதே என்று மெதுவாகக் கொட்டாவி விட்டவாறு கண்விழித்தார்.

"கதவைத் திறங்க!" சப்-இன்ஸ்பெக்டர் குரல் கொடுத்தார்.

போத்தன் வர்கீஸ் கதவைத் திறந்தார். அதேநேரம் பின்புறத்தில் படுத்திருந்த இளம்பெண்ணும் உறக்கத்திலிருந்து விழித்து எழுந்தாள். சில விநாடிகளுக்குள் சுற்றுப்புறச் சூழல் தெரிந்ததும் வர்கீஸ் குன்றிப்போனார். சப்-இன்ஸ்பெக்டருக்கு விஷயம் புரிந்தது. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களை விரட்டிவிட்டு முன்புறத்தில் வர்கீஸும் சப்-இன்ஸ்பெக்டரும் ஏறி உட்கார்ந்தனர். காரின் சாவியைக் காணோம். சப்-இன்ஸ்பெக்டர் தன்னிடமிருந்த சாவிகளில் ஒன்றைப் போட்டு காரை ஸ்டார்ட் செய்தார். வண்டி கிளம்பியது.

ஜீப்பை, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டிகொண்டு போனார் டிரைவர்.

போத்தன் வர்கீஸை வீட்டில் விட்டுவிட்ட பிறகு சப்-இன்ஸ்பெக்டர் திரும்பினார். அன்று இந்தச் சம்பவம் மாலைப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியாகிவிட்டது.

இரவு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் மாதவக்குறுப்பும், நீலகண்டன் நாயரும், போத்தன் வர்கீஸின் வீட்டுக்கு வந்தனர். வர்கீஸ் கூசிய உடம்புடன் தென்பட்டார்.

"நான் உங்களைப் பார்க்க வரணும்னு நினைச்சேன். ஆனா உடம்பு இடங் குடுக்கலை. அதனால வரமுடியாமப் போச்சு"· குறுப்பைப் பார்த்தவாறே வர்கீஸ் கூறினார்.

"என்னங்க போத்தன், இந்த அளவுக்கு யாராவது முட்டாள்தனமா நடந்துப்பாங்களா? உங்க நடத்தையை ஒரு பயலும் விட்டு வைக்கலை." குறுப்பு கேட்டார்.

"உங்க ஆள் ஒருத்தன்தான் என்னை ஏமாத்திட்டான்." போத்தன் விஸ்கி பாட்டில் ஒன்றைத் திறந்து முன்னால் வைத்தபடி பேசினார்.

"சப் இன்ஸ்பெக்டரா... யாரவன்?"

"நேத்து ராத்திரி நாகம்படம் பாலத்துகிட்ட கை காமிச்சு வண்டியில் ஏறினாரு. ஜார்ஜோ என்னமோன்னு பேர் சொன்னார். டிரான்ஸ் ஃபராயி வந்து ரெண்டு நாளோ மூணுநாளோ தான் ஆச்சுன்னுகூடச் சொன்னார்."

"என்னங்க என்னன்னவோ பேசுறீங்க. மூணுமாசமா இங்கேருந்து யாருக்கும் டிரான்ஸ்ஃபரோ, போஸ்டிங்கோ போடலை. உங்களை எவனோ நல்லா ஏமாத்தியிருக்கான்!"

"உண்மைதான். அவனுக்கு என்னை நல்லா தெரியுமாம். நீங்க என்னைப்பத்தி அவன்கிட்ட எல்லா விஷயங்களையும் சொன்னதாகக்கூட புளுகினான்."

"இதுல ஏதோ விஷயம் இருக்கு!" என்ற மாதவகுறுப்பு விஸ்கியை கிளாஸ்களில் ஊற்றத் தொடங்கினார்.

"வண்டியை நிறுத்துங்கன்னு சொன்னான். நிறுத்துறதுக்குள்ள என் மூக்குல ஏதோ ஒரு துணி விழுந்துச்சு. என்னமோ ஒரு வாசனை... அதுக்கு அப்புறம் உங்க ஆளுங்க வந்து எழுப்பின போதுதான் எழுந்தேன்."

"இந்தக் கில்லாடி யாராக இருப்பான்?" குறுப்பு யோசனையில் ஆழ்ந்தார்.

"எனக்குச் சந்தேகமே இல்லை. அந்தத் திருட்டுப் பயலேதான்!"

"யாரைச் சொல்றீங்க?"

"ஜெயில்லேர்ந்து தப்பிச்சவன்தான்... வேற யாரு?"

"உறுதியாத் தெரியுமா?"

"உறுதியாச் சொல்லமுடியும்! சே...ஊருக்குள்ள தலை நிமிர்ந்து நடக்க முடியாதபடி செஞ்சுட்டான். பட்டப் பகல்ல சின்னப்பொண்ணோட ஊருக்கே வெளிச்சம் போட்டுக்காட்டிட்டான்."

"அந்தப் பொண்ணு எங்கே?"

"வழக்கம் மாதிரி நம்ம தொழுவத்தில இருக்கு!"

"அது கிடக்கட்டும்! அந்தத் திருட்டுப் பயலை எப்படி மடக்குறது? திடும்னு ஒருநாள் ராத்திரி பெட்ரூமுக்குள்ள எப்படி முளைச்சான்னே தெரியலை!" நீலகண்டன் நாயர் சொன்னார்.

"எப்படியெல்லாம் தேடமுடியுமோ, அப்படியெல்லாம் தேடுறோம்? எங்கேயோ சௌகரியமான இடத்துல ஒளிஞ்சிருக்கான். என்ன ஏதுன்னு ஒண்ணும் புரியலை."

"என்னத்தைச் சொல்றது? உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறது வீண். ஜெயில்லேர்ந்து தப்பிச்ச ஒருத்தன் ராஜா மாதிரி ஊருக்குள்ள திரியிறான்..."

"ரொம்ப உணர்ச்சி வசப்படாதீங்க. முதல்ல கொஞ்சம் திரவத்தை உள்ள இறக்கி அமைதிப்படுத்திக்கங்க. அப்புறமா என்ன பண்றதுன்னு யோசிப்போம்."

"நொறுக்குத்தீனி எதையும் காணோமே!" நீலகண்டன் நாயர் கேட்டார்.

"அப்டீன்னா சிக்கன்ஃப்ரை சொல்லுங்க," குறுப்பு சொன்னார்.

"நாலு பார்சல் சொல்லுங்க!"

"எதுக்கு நாலு? மூணுபேர் தானே இருக்கோம்."

"உள்ளே ஒருத்தி இருக்காளே !"

"மறந்தே போயிட்டேன். ஆள் எப்பிடி?"

"நல்ல பார்ட்டிதான்."

"பார்த்தீங்களா என்ன?"

"காரை நிறுத்திட்டு வீட்டுக்குள்ள நுழையும்போது ஜன்னல்கிட்ட நின்னுட்டிருந்தாள்."

"பயங்கரமான பேர்வழிதான்!"

"சரி சரி... அவளை வரச் சொல்லுங்க. நேரிலேயே நல்லா பார்த்துடலாம்." குறுப்பு ஆவலுடன் சொன்னார்.

"அதுக்கென்ன..... வரவழைச்சுடலாம்."

போத்தன் வர்கீஸ் அங்கிருந்து எழுந்து போனார். வரும்போது அவருடன் இளம்பெண் ஒருத்தி இருந்தாள்.

இருபதிலிருந்து இருபத்திரண்டு வயதிருக்கலாம். நல்ல சதைப்பிடிப்பான உடம்பு. இடுப்புப் பகுதிகளில் சதை அழகாக மடிந்து கிடந்தது. ஸ்லீவ்லெஸ் பிளவுஸ், நீலநிறப் புடவை அணிந்திருந்தாள். லோஹிப் ஸ்டைலில் கட்டியிருந்தாள். செம்பட்டை முடியை பாப்ஸ்டைலில் வெட்டித் தோள்களில் புரள விட்டிருந்தாள். கழுத்தில் கனமான தங்க செயின் ஒன்றும், கைகளில் தங்க வளையல்களும் அணிந்திருந்தாள்.

"பேரு லிஸா. ஓட்டல் லூசியானாவில வேலைசெய்யிறாள்." போத்தன் வர்கீஸ் அவளைத் தன் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

"லிஸாவுக்கு என் முதல் பரிசு ஒரு லார்ஜ்!" மாதவ குறுப்பு கிளாஸை அவளிடம் நீட்டியபடி சொன்னார்.

எந்த விதமான தயக்கமும் இன்றி குளிர்பானம் குடிப்பது போல் விஸ்கியைக் குடித்துவிட்டு சோபாவில் அமர்ந்து கொண்டாள் அவள்.

"இப்படியெல்லாம் நடந்துக்கிட்டாலே போதுமா இருந்தது. தேவையில்லாம வேண்டாத வேலைக்கெல்லாம் போயிட்டு எவ்வளவு பணம் செலவு?" குறுப்பு சொன்னார்.

"நடந்தது நடந்து போச்சு. பக்குவமா சமாளிக்க வேண்டியதுதான்."

"நீங்க சொல்லிக்கலாம். எங்க டிபார்ட்மெண்ட்டில் என்மேல சந்தேகப்பட ஆரம்பிச்சிருக்காங்கன்னு நினைக்கிறேன். பதவி உயர்வெல்லாம் கிடைக்க வேண்டிய சந்தர்ப்பம். என்ன பண்ணப் போறாங்களோ?"

"பயப்படாதீங்க! ரிட்டயர்டு ஆகுறதுக்கு முன்னால நீங்களும் ஒரு டி.எஸ்.பி. ஆயிடுவீங்க!"

"அதெல்லாம் சுலபம். நான் போலீஸ் துறைக்கே அமைச்சராகப் போறேன். அப்புறம் எதுக்கு டி.எஸ்.பி. டபுள் பிரமோஷன்ஸ்? நேரடியா எஸ்.பி.யா ஆக்கிடுறேன்."

"ம்... இதெல்லாம் நடக்கக் கூடியதா?"

"வர்ற தேர்தலுக்கு அப்புறம் பாருங்க, நான் சொல்றது நடக்குதா இல்லையான்னு!"

"வேண்டிய வேலையெல்லாம் செஞ்சு வெச்சுட்டீங்க போல இருக்கே. அவ்வளவு நம்பிக்கையா பேசுறீங்களே!"

அதே நேரம் ஹோட்டலிலிருந்து வந்த பையன் காலிங் பெல்லை அழுத்தினான்.

வேலைக்காரன் கதவைத் திறந்துவிட்டான்.

ஓட்டல்பையன் ஒரு பெரிய காகிதப் பொட்டலத்தை டீபாயின் மீது வைத்தான்.

"ஒவ்வொண்ணையும் பிரிச்சு எடுத்து வைபுடா... மாக்கான் மாதிரி நிக்குறே!"- குறுப்பு, லிஸாவை பார்த்தபடி மிடுக்குடன் கூறினார்.

"சார், தேவையில்லாத வார்த்தையெல்லாம் பேசாதீங்க!" ஓட்டல் பாய் பதிலளித்தான்.

"ஓகோ நீ பெரிய வி.ஐ.பி-யா?"

"சார் நீங்க இப்ப யூனிஃபாரம் போடாம இருந்தாலும் நான் போட்டிருக்கேன்."- ஓட்டல் பாய் தன் தலையிலிருந்த தொப்பியை மேலும் சற்று அழுத்தி விட்டு யூனிஃபாரத்தின் பட்டன்களை சரி செய்தான்.

"அப்ப வி.ஐ.பி.தான்னு காமிக்குற?"

"நிச்சயமா! நீங்க மூணு பேரும் இப்படி ஒரு சின்னப் பொண்ணோட இங்க இருக்கிறதைவிட நான் மேன்மையானவன் தான்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மூவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'ஒரு ஓட்டல்பாய் இந்த அளவுக்குத் தைரியம் மற்றும் விஷயம் தெரிந்தவனா!' என்கிற வியப்பு மூவரின் முகத்திலும் தெரிந்தது.

"என்னடா என்ன நினைச்சிருக்கிறே!" என்றபடி குறுப்பு சட்டென்று இருக்கையிலிருந்து துள்ளியெழுந்தார்.

"சார் வீணா குதிக்காதீங்க. நான் சொல்றது உண்மையா பொய்யான்னு அந்த ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளியவே கேட்டுப் பாருங்க.',

"ஐயய்யோ...இந்த நாய் என்ன அளவு மீறிப் பேசுது?"

"கொண்டு வந்து கொடுக்கிறது மட்டும்தான் என்வேலை. பிரிச்சுப் பரிமாறுறது இல்லை."

"நாங்க சொன்னதைச் செய்யாம உன்னை இங்கேருந்து வெளியே விட்டுடுவமா?" இம்முறை குறுப்பு ரூம்பாயை நெருங்கினார்.

"உன்னை மாதிரி எத்தனை பேரை நான் பணியவச்சிருக்கேன் தெரியுமா?" மாதவக் குறுப்பு கையை ஓங்கினார்.

ஓட்டல்பாய் கொஞ்சம் கூட பதற்றப்படாமல் அவர் கையைத் தடுத்ததுடன் தன் வலது காலால் இடுப்பில் உதைக்கவும் செய்தான். குறுப்பு மட்டமல்லாக்க டீபாயின் மீது விழுந்தார். நல்லவேளையாக எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

விழுந்தவர் ஒரு புலியின் வேகத்தோடு மறுபடி எழுந்தார்.

ஒரு சின்னப் பெண்ணுக்கு முன்னால் சாதாரணமான ஓட்டல்பாய் ஒருத்தன் தன்னைத் தாக்கித் தள்ளுவதா? அவரால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மீண்டும் லாகவத்துடன் ஓட்டல்பாயின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது கை தேர்ந்த ஒரு சண்டைக்காரன் மாதிரி தன் இரண்டு கால்களையும் உயர்த்தி அவர் மார்பில் ஓங்கி மிதித்தான். பிறகு மற்ற இருவரையும் பார்த்து நிதானமான குரலில் கூறினான்: "உங்க ரெண்டு பேருக்கும் இப்படியெல்லாம் உபசாரம் வேண்டாம்னா அப்பிடியே உட்கார்ந்திருங்க!"

யாரும் எதுவும் பேசவில்லை.

"உங்க மூணு பேரையும் இப்படி ஒருசேர ஒரே சந்தர்ப்பத்துல பார்க்கணும்னுதான் காத்திருந்தேன். உங்களுக்கு ஞாபகம் இருக்கா? இதே மாதிரி ஒரு சந்தர்ப்பத்துல ஒரு பெண்ணுக்கு வேலை தர்றதாச் சொல்லி கொண்டுவந்து பெண்ணை மூணுபேருமா சேர்ந்து கொலை பண்ணினீங்க? அன்னிக்கும் நான் இதே மாதிரிதான் சிக்கன்ஃப்ரை வாங்கிட்டு வந்தேன். கடைசியில நான் கொலைக்காரனா மாறினேன். இதுக்கெல்லாம் பழிவாங்காம என் உயிர் போகவே போகாது!"

"ஜயன்!" மூவரின் வாயிலிருந்தும் ஏககாலத்தில் அந்த வார்த்தை வெளிப்பட்டது!

"ஆமாம்... நானேதான்! உங்களுக்காக கோழிஃப்ரை கொண்டுவந்த அப்பாவியைக் கீழே சுருட்டிப் போட்டு வெச்சிருக்கேன். போகும்போது நானே அவனை அவிழ்த்துவிடறேன்."

"உன்னை மறுபடி ஜெயில்ல தள்ளாம எனக்கு வேற வேலையில்லை!" குறூப்பு உறுமலுடன் கூறினார்.

ஜயன் அந்த வார்த்தைகளைப் பொருட்படுத்தாதவனைப் போல் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

யாருக்கும் எதுவும் செய்யத் தோன்றவில்லை.

"ஒரு முக்கியமான விஷயம். நான் இந்த கேட்டை தாண்டுற வரைக்கும் நீங்க யாரும் எந்தவிதான சாகசமும் செய்யாம இருக்கிறது நல்லது. ஏன்னா குறூப்பு சாரோட துப்பாக்கி இப்பவும் என்கிட்ட இருக்கு. உயிர் போனாப் பரவாயில்லேன்னு நினைக்கிறவங்க முன்னாடி வரலாம்!"

ஐயன் அந்த அறையிலிருந்து வெளியேறி மறைந்தான்.

"இவனைத் தொலைச்சுக்கட்ட நான் ஒரு வழி கண்டு பிடிச்சுட்டேன்!" நீலகண்டன் நாயர் கூறினார்.

"என்ன வழி?" குறாப்பு ஆவலுடன் கேட்டார்.

# 14

"எவ்வளவுதான் நடந்தாலும் அவன் வீட்டுக்குப் போகாமல் இருக்கமாட்டான். அங்கேயே ஒரு ஏற்பாடு பண்ணிடலாமே?" நீலகண்டன் நாயர் கூறினார்.

"நல்ல யோசனைதான். ஆனால், இதுவரை போலீஸ் அங்க ராப்பகலா காவலிருந்தும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ ரெண்டு பேர் வந்திருக்காங்க. அதிலிருந்த ஒருத்தனோட போலீஸ்காரங்க மோதி இருக்காங்க. அதுகூட ஐயன் இல்லைன்னுதான் அந்த போலீஸ்காரர் சொல்றார். அந்த முகத்தைத் தெளிவா, முழுசா பார்த்ததா சத்தியம் பண்றாரு. அவர் சொல்றது உண்மையாத் தான் இருக்கும்" குறாப்பு பதிலளித்தார்.

"ஆனால், பத்திரிகைகள்ல வந்த தகவல் வேறயாச்சே, பெண் வேஷம் போட்டு வந்த யாரோ அந்த வீட்டுக்குள் இன்னொரு பெண்ணோட நுழைஞ்சதாவும் திரும்பிவரும்போது சந்தேகப்பட்டு அந்த ஆளை நெருங்குறதுக்குள்ள ரெண்டு போலீஸ்காரங்களையும் துவைச்சு எடுத்துட்டு ஆட்டோவுல தப்பிச்சதாகவும்தானே சொல்றாங்க" பொந்தன் வர்கீஸ் சொன்னார்.

"அதெல்லாம் யூகங்களாவோ, பத்திரிகைக்காரங்க கிளப்பிவிட்ட கதையாகவோ இருக்கணும். எனக்கு வந்த ரிப்போர்ட்டைத்தான் நான் சொன்னேன்."

"யாராவது நாங்க செமத்தியா அடிவாங்கி ஆளைத் தவறவிட்டுட்டோம்னு ஒப்புக்குவாங்களா?"

"இங்கே வந்துட்டுப் போனாரே அவர் யாருங்க?" இதுவரை மௌனமாக அங்கு நடந்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த லிஸா கேட்டாள்.

"அவன் ஒரு கொலைகாரன். ஜெயில்லேர்ந்து தப்பிச்சவன். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவன்!"

"ஆனா, அந்த ஆள் பேசினதைப் பார்த்தா அப்படியெல்லாம் தெரியலையே?"

"உனக்கு அதெல்லாம் புரியாதும்மா. இந்தா தற்சமயம் இதை உள்ள ஊத்திக்க!" போத்தன் வர்கீஸ் விஸ்கியும் சோடாவும் கலந்த ஒரு கிளாஸை அவளிடம் நீட்டினார்.

"நீங்க சொல்றதெல்லாம் நடக்கக்கூடிய விஷயமா தெரியலை. அவனைப் பிடிக்கிறதுக்கு நல்ல ஒரு திட்டம் சொல்லுங்க!" நீலகண்டன் நாயர் கேட்டார்.

"யாரோ ஒரு பெரும்புள்ளி இவனை ரொம்பவும் பத்திரமா காப்பாத்துறதா தோணுது. இல்லேன்னா அவனால இப்படி எல்லாம் தலைமறைவா திரியமுடியாது!" குறுப்பு கேட்டார்.

"இவனைப் போய் யாரு ஆதரிச்சுக் காப்பாத்துவாங்க?" நாயர் வியப்புடன் கேட்டார்.

"அதை நாம கண்டுபிடிக்கணும்."

"எப்படி இருந்தாலும் அவன் வேஷம் போடுறதுல கெட்டிக்காரன்கிறதை நாம ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இப்ப இங்கே வந்துகூட நம்மளால அடையாளம் தெரிஞ்சுக்க முடியலையே" போத்தன் கூறினார்.

"நாம இதுக்கு முன்னாடி அவனை இந்த மாதிரியெல்லாம் பார்த்ததில்லை. அதுவும் இல்லாம நாம அவனை இங்கே எதிர்பார்க்கவும் இல்லை"- குறுப்பு நெஞ்சைத் தடவியபடி கூறினார்.

"நெஞ்சுல ரொம்ப வலுவா மிதிச்சிட்டானா?"

"அப்படியெல்லாம் பாதிப்பு அடையிற உடம்பு இல்லை இது."

"அவனும் வித்தை கத்துக்கிட்ட ஆள் மாதிரிதான் தெரியுது."

"எனக்கு ஒரு யோசனை!" நாயர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

"சொல்லுங்க!" போத்தன் கேட்டார்

"நாம அவனைப் பிடிக்கிற விஷயத்துக்கு இவளைப் பயன்படுத்திட்டா என்ன? அவன் இங்கே இருந்தநேரத்துல இவளை கவனிச்சதை நானே பார்த்தேன்."

"நீங்க சொல்ற ஐடியாபடி, இவளை அவன் சந்திக்க வேண்டாமா?"

"அதுக்கும் வழியிருக்கு!"

"அதைச் சொல்லுங்க முதல்ல?"

"லிஸா நீ ஒரு வேலை செய்யணும்மா. நீ ஜயனோட வீட்டுக்குப் போகணும். நாங்க அதுக்குத் தேவையான உதவிகளைச் செய்யிறோம். நாம லிஸாவைத் தொல்லை பண்ண முயற்சி செஞ்சதாவும் தப்பிச்சு ஓடி வந்திருக்கிறதாகவும், அவங்களோட உதவி தேவைன்னும் லிஸா நடிக்கட்டும்!"

"ரொம்பவும் முட்டாள்தனமான யோசனை! ஆனா, இதைக் கேட்டவுடனே எனக்கு வேற ஒரு யோசனை தோணுது."

"சொல்லலாமே."

"நாயரே, உங்க பொண்ணு வீட்டுல ஒரு பெண்போலீஸ் இருக்காங்களே."

"குவார்ட்டர்ஸ் வாங்கிக்கிட்டு தனியா போயிட்டாங்க!"

"அப்ப விஷயம் இன்னும் ரொம்பவும் சுலபமாச்சு." குறுப்பு சொன்னார்.

"என்ன ஐடியா, எப்பிடின்னு விளக்குங்க!"

"அந்த பெண் போலீஸை மஃப்டியில ஜயன் வீட்டுக்கு அனுப்பி ரகசியமா விசாரிக்கச் சொல்லணும். பழக்கப்பட்ட

ஆளை விசாரிக்கிற மாதிரி அன்பாகவே விசாரிக்கட்டும். ஐயனுக்கு விஷயம் தெரிஞ்சுடும். அவங்களோட தொடர்பு கொள்ள ஐயன் முயற்சி பண்ணுவான். ஒரு பொம்பளை நினைச்சா, இதெல்லாம் சுலபம். என்ன... கொஞ்சம் சாகசமா நடந்துக்கணும்."

"நல்ல ஐடியாதான்!" நாயர் கூறினார்.

"அப்படியானா மேற்கொண்டு நாம் எதைப்பத்தியும் யோசிக்க வேண்டியதில்லை. இதையே நடைமுறைப் படுத்த வேண்டியது தான்." போத்தன் வர்கீஸ் கிளாஸ்களில் வரிசையாக விஸ்கியை ஊற்றத் தொடங்கினார்.

அன்று நள்ளிரவு தாண்டி வெகு நேரமான பிறகுதான் மற்ற இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

'தற்சமயம் எங்காவது ஒரு மறைவிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். இரவுநேரத்தில் ஏதாவது ஒரு பாரில் வேலை கிடைத்தால் கூடப் போதும். இரவு நேரத்துக்கு அது பத்திரம். பகல் நேரத்தில் அதே ஓட்டலின் ஏதாவது ஒரு பகுதியில் முடங்கிக் கிடக்கலாம்!' ஐயன் நினைத்தான்.

அட்வகேட் பாலகிருஷ்ணபிள்ளை ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்குத் திரும்பினார். வெட்டுப்பட்ட கையின் காயங்கள் ஆறத்தொடங்கியிருந்தது. அவர் மகள் அவருக்கு ஆபத்து ஏற்பட்ட நாளிலிருந்து கூடவே இருந்தாள். அப்பா வீட்டுக்குத் திரும்பி வந்த அன்றே அவள் ஹாஸ்டலுக்குத் திரும்பிப் போனாள். அவள் ஹாஸ்டலுக்குப் போய்விட்டாலும் எந்த நேரமும் அப்பாவுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போதைய நிலையை விசாரித்துக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. ஹாஸ்டலிலுள்ள அவள் நெருங்கிய சினேகிதியின் பிறந்த நாளும்கூட, பெற்றோரை அரபு நாட்டில் விட்டுப் பிரிந்திருந்த அந்தப் பெண் தன் சினேகிதிகளுக்காக அன்று ஒரு பார்ட்டி ஏற்பாடு செய்திருந்தாள். வேடிக்கைப் பேச்சுகளுடன் டிஸ்கோ டான்ஸும் சேர்ந்து

கொண்டதால் நேரம் போனதே தெரியவில்லை. இரவு மணி பத்துக்கு மேலானபோதுத, தான் இன்னும் வீடுபோய் சேரவில்லை என்ற உண்மை அவளுக்கு உறைத்தது.

"நான் கிளம்பட்டுமா?" தன் நண்பர்களிடம் சுஜாதா விடை கேட்டாள்.

"என்ன சுஜாதா நீ போய்ட்டா எப்படி?

"என்ன இருந்தாலும் வெள்ளிகிழமை அன்று வீடு வந்து சேரா விட்டால் அப்பா கோபித்து கொள்வார்."

"உங்க அப்பாவுக்குச் சமீபத்துல நடந்ததெல்லாம்நான் தெரியுமே!"

"சரி சுஜாதா போகட்டும்!" பெருவாரியான சினேகிதிகள் கூறினார்கள்.

எல்லோரிடமும் விடைபெற்று சுஜாதா தனது 'பிரீமியர் பத்மினியை' டிரைவிங் செய்து கொண்டு போனாள்.

பேக்கர் சந்திப்பைக் கடந்து கார் தென்புறமாகத் திரும்பி சாஸ்திரி ரோடு பக்கமாகத் திரும்பிய போதுதான், விடியற்காலையில் ஒரு டூர் புரோகிராம் இருப்பதை நினைவு கூர்ந்தாள். ஃப்யூவலைப் பார்த்த போது பெட்ரோல் சுத்தமாகத் தீர்ந்து போனதை உணர்ந்தாள். உடனே காரை பெட்ரோல் பங்க்கை நோக்கித் திருப்பினாள். பெட்ரோல் நிரப்பிக்கொண்டு அதற்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பியவள் கிழக்குத்திசையில் பயணத்தைத் தொடர்ந்தாள். அங்கிருந்த வெயிட்டிங் ஷெட்டைத் தாண்டியபோது அங்கே நின்று கொண்டிருந்த கார் முன்புறமாக நகரத் தொடங்கியது. அந்த காரில் ஐந்து இளைஞர்கள் இருந்தனர். பார்வைக்குக் கல்லூரி மாணவர்கள் போல் தெரிந்தனர். இருபதிலிருந்து இருபத்து மூன்று வயதுக்கு மேற்படாதவர்கள். ஜீன்ஸ் மற்றும் பனியன் அணிந்திருந்தனர். ஏற்கெனவே ஏராளமாகத் தண்ணியடித்து இருந்தவர்கள் கஞ்சா புகைத்தபோதுதான் தனியாக ஒரு பெண் கார் ஓட்டிச் செல்வதைப் பார்த்தனர்.

ஓர் இரை கிடைத்த சந்தோஷத்தோடு அவர்கள் காரை முன்புறமாகச் செலுத்தினர்.

"அருமையான ஃபிகர்... விடாதே துரத்து!"

"அவசரப்படாதீங்கடா! நம்ம கண்ல பட்டுட்ட பிறகு அவள் தப்பிச்சுப் போயிடுவாளா?"

"வலது புறமா இருக்கிற வழியில புகுந்து ஓவர்டேக்பண்ணி அவளை மடக்குடா!" பின்புற ஸீட்டில் இருந்தவன் உபதேசித்தான்.

கார் வலது புறமாகத் திரும்பி வேகமாக விரையத் தொடங்கியது. பார்க்கின் முன்புறமாக அந்த ஃபியட் காரை ஓவர்டேக் செய்தனர்.

சட்டென்று முன்னால் வளைந்து அந்த காரின் முன்பாக காரை நிறுத்தி பின்னால்வரும் காரை பிளாக்செய்தனர். எனவே, காரை எந்தச் திசையிலும் திருப்ப முடியாமல் சுஜாதா தடுமாறினாள்.

அபாயத்தை உணர்ந்த அவள் காரை ரிவர்ஸில் எடுக்க முயன்றாள். பிறகு ஃபர்ஸ்ட் கியரில் முன்புறமாக நகர்த்த முயன்றபோது இன்ஜின் ஆஃப் ஆகிவிட்டது. அவள் என்ன முயன்றும் திகைப்பில் வண்டியைக் கிளப்ப முடியவில்லை. சட்டென்று முன்புறமிருந்த அம்பாஸடர் காரிலிருந்து இறங்கிய ஐந்து இளைஞர்களும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். ஒருவன் சற்றுத் துணிச்சலுடன் முன்னேறி அவள் கையைப்பிடிக்கவும் செய்தான். அவள் எவ்வளவோ திமிறித் தப்பிக்க முயன்ற போதிலும் ஒருவனின் சுண்டலில் அவள் காரிலிருந்து வெளியே வந்து விழுந்தாள்.

சூழ்ந்து நின்ற ஐந்து பேரும் உடற்பயிற்சி பெற்றவர்களைப் போல் இருந்தனர். சட்டென்று இரண்டுபேர் பாய்ந்து அவளை அலாக்காகத் தூக்கியெடுத்து காருக்குள் கொண்டு போனார்கள். அந்த நேரம் பார்த்து பார்க்கின் சுவரைத் தாண்டி ஒருவன் அந்த அம்பாஸடர் காரை நெருங்குவதையும், வந்தவன் மற்றவர்களை

வெகு சாதாரணமாக ஒதுக்கிவிட்டு அவளை இழுத்துக் கொண்டு மற்றவர்களிடமிருந்து பிரித்ததையும் உணர்ந்தனர்.

அதற்குள் விழுந்துவிட்ட இரண்டு பேரைத் தவிர்த்து மீதமுள்ள மூன்றுபேரும் வந்திருக்கிற புதிய நபரைச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கினர்.

"உங்க உயிர் மேல ஆசையிருந்தா ஓடிப்போயிடுங்கடா!" ஜீன்ஸ் பாண்ட் போட்ட ஒருவன் குரல் உரத்து ஒலித்தது.

"எனக்கு அந்த ஆசையே கிடையாதுடா!" என்றபடி ஒருவன் பாய்ந்து வந்தான். அப்படி வந்தவனை மிகவும் சுலபமாகத் தனது கட்கத்தில் போட்டு அமர்த்தி, அவனைத் தொடர்ந்து வந்தவனையும் எட்டி உதைத்தான்.

சுஜாதாவைத் தன் பிடியிலிருந்து விடுவித்தவன் திரும்பி வந்தான்.

வந்தவன் தனக்கு நேராக ஓடிவந்தவனைத் தூக்கி காரின் டாப்பில் எறிந்தான்.

"எங்கம்மா போறே?"- ஜீன்ஸ்பாண்ட் அணிந்தவன் கேட்டான்.

"வீட்டுக்குப் போறேன்."

"இந்த நேரத்திலயா?"

"எந்த நேரமானா என்ன? நான் வீட்டுக்குப் போகணும்கிறது அவசியமில்லையா?"

"நானும் கூட வரட்டுமா?"

"இப்போதைய சூழல்ல என்னால கார் ஓட்ட முடியாது. என் உடம்பே நடுங்கிட்டிருக்குது."

"பரவாயில்லை. எனக்கு டிரைவிங் தெரியும்... நீங்க உங்க வண்டியில ஏறிக்கங்க!"

"வண்டி ஸ்டார்ட்டாக மாட்டேங்குது!"

"அதை நான் பார்த்துக்கிறேன். நீங்க முதல்ல ஏறி உள்ளே உட்காருங்க!"

ஜீன்ஸ் இளைஞன் வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

"உங்க அப்பா பேரு என்னம்மா?" வண்டி நகரத் தொடங்கியதும் ஜீன்ஸ்கார இளைஞன் கேட்டான்.

"வக்கீல் பாலகிருஷ்ணபிள்ளை!" அந்த பதிலைக்கேட்டதும் இளைஞன் ஒருகணம் திடுக்கிட்டான். அவன் ஜயன்.

"அவருக்கு சமீபத்துல ஏதோ ஆபத்து நேர்ந்ததா கேள்விப் பட்டேனே!"

"அவர் வாதாடி ஜெயிச்ச கேஸோட குற்றவாளி ஒருத்தன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்து அவர் கையை வெட்டிட்டான்."

"அது ரொம்பவும் பரபரப்பான ஒரு கேஸ் ஆச்சே?"

"உண்மைதான். எங்க அப்பா வாதாடின முறையினால்தான் அந்தக் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனையே கிடைச்சது."

"அப்புறம் எப்படி உங்க அப்பா கை வெட்டுப்பட்டுச்சு?"

"அந்தக் கொலைகாரன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்து அப்பா கையை வெட்டிட்டான்!"

"அந்தக் கொலைகாரன்தான்-அதாவது குற்றம் சாட்டப்பட்டவன்தான் அந்தப் பொண்ணை உண்மையா கொன்னானா?"

"உங்களுக்கு இந்த கேஸைப்பத்தி ஏதாவது தெரியுமா?"

"நான் கேள்விப்பட்டிருக்கேன். அவன் எனக்கு ஒரு நண்பனும் கூட!"

"என்ன... அந்தக் கொலைகாரன் உங்க நண்பனா?"

"உண்மையில் அவன் கொலைக்காரன் கிடையாதே!"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அதுக்கு பதிலா நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேக்குறேன். நல்லா யோசிச்சு பதில் சொல்லுங்க."

"நீங்க என்ன சொன்னாலும் நான் அப்படியே நடந்துக்கிறேன். நீங்க என் மானம், உயிர் ரெண்டையும் காப்பாத்துனவர் இல்லையா!" சுஜாதா பேசினாள்.

# 15

"நாம இப்பிடியே காரை ஓட்டிக்கொண்டு போனா சீக்கிரமா வீடுவந்து சேர்ந்துடும். மிச்சத்தைப் பேசித்தீர்க்கிறது எப்படி?" ஜயன் கேட்டான்.

"அப்படீன்னா ஒண்ணு செய்யலாம். நாம பேசி முடிக்கிறது வரையில டவுனுக்குள்ளே சுத்திக்கிட்டே இருப்போம்" சுஜாதா சொன்னாள்.

ஜயனுக்கும் இந்த யோசனை மிகவும் பிடித்துப் போனது.

"இதுவரைக்கும் நீங்க பேசினதைப் பார்த்தா... அந்த ஆள் அம்மிணியைக் கொலை பண்ணலைன்னு சொல்றீங்களா?"

"நேரடியா பதில்சொல்லாம நான் வேற மாதிரி கேட்குறேன். உங்க அப்பா, உங்கம்மா கிட்டப் பேசி எவ்வளவு நாளாச்சு?"

அந்தக் கேள்வி சரியாக அவளைத் தாக்கியது. யோசித்துப் பார்த்தாள். அவளுக்கு நினைவு தெரிந்து அப்பாவும் அம்மாவும் சிரித்துப் பேசி பார்த்ததே இல்லை. எதனால் அவர்கள் இப்படி இருக்கிறார்கள் என்றுகூட இதுவரை யோசித்ததில்லை. அம்மா ஒரு துறவி மாதிரி வாழ்கிறார். அந்த வீட்டுக்குள் தங்கியிருக்க முடியாததால்தான் சுஜாதா ஹாஸ்டலுக்கு போனாள். இருப்பினும் அவளால் தன் பெற்றோரை வெறுக்க முடியவில்லை. முன்பின் தெரியாத ஒருவன் தன் முன்னால் நடப்பதையும் அதன் உட்பொருளையும் வெளிப்படுத்தியபோது சுஜாதா மேற்கொண்டு யோசிக்கத் தொடங்கினாள்.

அம்மா உடல்நலம் சரியில்லாமல் படுத்தபோது கூட அப்பா வந்து கவனித்துக்கொண்டதாகத் தெரிய வில்லை. மருத்துவரும், நர்ஸும் வந்து அவ்வப்போது பரிசோதித்து மருந்து கொடுப்பார்கள். இதெல்லாம் ஏன்? அவளுக்கு இதுவரை எதுவும் பிடிபட்டதில்லை.

"உங்க அப்பா குடிப்பாரா?" ஜயன் கேட்டான்.

"எப்பவாவது!"

"ராத்திரி எப்பவும் ரொம்பவும் லேட்டாதானே வருவார்?"

"ஆமாம்."

"அப்பாவின் சினேகிதர்களைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"ஓரளவு தெரியும் ."

"யாரெல்லாம்னு சொல்லுங்க பார்க்கலாம்?"

"சர்க்கிள் சார், மிஸ்டர் போத்தன், தலைவர்...,"

"அவங்களைப்பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எதுவும் தெரியாது!"

"நீலகண்டன் நாயர் என்கிற தலைவரின் சம்சாரம் எப்படி செத்துப்போனாங்க தெரியுமா?"

"தெரியாது!"

"அவரே தான் கொலை செஞ்சார்."

"உண்மையாவா?"

"போத்தன் வர்கீஸ் என்கிற – நீங்கள் அங்கிள் என்பவர் இன்னும் கல்யாணம் செய்யவில்லை. அந்த சர்க்கிளும் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. உங்க அப்பா, உங்க அம்மாகிட்ட நடந்துக்கிறது உங்களுக்கே தெரியும். இந்த நிலைமையில... இந்த நாலுபேரோட நட்பு எப்படிப்பட்டதா இருக்கும்னு நினைக்கிறீங்க?"

ஜயன் சொல்லச் சொல்ல சுஜாதாவின் மனம் குழம்பித் தவித்தது.

"அம்மிணியை உண்மையில் கொலை பண்ணினது யாருன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எல்லாம் ஒரே புதிர் மாதிரி இருக்கு!"

"புதிரே இல்லை. இந்த நாலு பேரும் சேர்ந்துதான் அவளைக் கொலை செஞ்சாங்க!"

"இவ்வளவு பொய் சொல்ற நீங்க உண்மையில் யார்?"

"நான்தான் ஜயன்!"

அந்தப் பெயரைக் கேட்டதும் அவள் உடம்பு நடுங்கத் தொடங்கியது. சற்று நேரம் அவளுக்கு மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது.

தான் கேட்டது உண்மையா?

தன் அப்பாவின் கையை வெட்டிய, கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்ட ஜயனா அருகில் இருப்பவன்?

இந்த மனிதனா சற்று நேரத்துக்கு முன்னால் ஐந்து முரடர்களிடமிருந்து தன்னைக் காப்பற்றியவன்? எல்லாமே மோசமான ஒரு கனவுபோல் தெரிந்தது. அப்போதும் கார் ஓடிக்கொண்டிருந்தது.

"உங்க பேரு சுஜாதாதானே?"

"ஆ..மா..ம்" திக்கித் திணறி பதிலளித்தாள்.

"நீங்க எதுக்காக பயப்படணும்? நான் சொல்றதை முழுசா கேளுங்க."

கார் நகரின் மையப்பகுதியிலிருந்து ரவுண்டானாவை ஒரு தடவை சுற்றி வந்து இடது புறமாகத் திரும்பியது.

"உங்க அம்மா ஏன் சிரிச்சு, சந்தோஷமா இல்லைன்னு தெரியுமா?"

"தெரியாது. நான் கேட்டதில்லை."

"உங்க வீட்டுல பார்வதின்னு ஒரு வேலைக்காரி இருந்தது ஞாபகம் இருக்கா?"

"இருக்கு..."

"அவங்க எப்படி செத்தாங்க?"

"தோட்டத்துல இருக்குற உத்திரத்துல தூக்கு போட்டுத் தற்கொலை செஞ்சுக்கிட்டாங்க!"

"அது சொல்லப்பட்ட, ஜோடிக்கப்பட்ட கதை. உங்க அப்பாவுக்கும் அவங்களுக்கும் ரகசியமான உறவு இருந்தது. அப்ப உங்களுக்கு அஞ்சு வயசு இருக்கும். உங்க அம்மாவுக்கு ராத்திரி வேளையில குடுக்கிற பாலில தூக்க மாத்திரையைக் கலந்து குடுப்பாங்க. அந்தப் பொறுப்பை ஒப்படைச்சிருந்ததும் பார்வதிகிட்டதான். அம்மா தூங்கிட்டா அப்புறம் அவங்க ரெண்டு பேரும் சுதந்திரமா இருக்கலாமில்லையா? இப்படி கர்ப்பிணியானதும் கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டு தூக்குல தொங்க விட்டாச்சு. அதுக்குப் பிறகும் உங்க வீட்டுக்கு எவ்வளவோ வேலைக்காரிங்க வந்துட்டுப் போயிட்டாங்க. தொடர்ந்து வருஷக் கணக்கா தூக்க மாத்திரையைப் பயன்படுத்தறதால உங்கம்மா உடல்நலம் பாதிக்கப்பட்டாங்க. உயிரோட இருக்காங்கன்னு சந்தோஷப்படலாம் அவ்வளவுதான்."

ஜயனின் வார்த்தைகள் சுஜாதாவின் மனத்தில் கருங்கல்லில் செதுக்கியது போல் மறையாமல் கிடந்தன. யோசித்துப் பார்த்த போது ஜயன் சொன்னதெல்லாம் உண்மைதான் என்று தோன்றியது.

இவ்வளவு நாளாக தான் நேசித்தது போலியான அந்த மனிதரையா? தன் அம்மாவை இப்படிக் கொடுமைப் படுத்தியவரா தன் அப்பா என்கிற மனிதர்!

"முடியலை... இன்னும் இருக்கு. அன்னிக்கு ராத்திரி உங்க அப்பாவின் சினேகிதரான நீலகண்டன் நாயர் - அவரோட கார்

டிரைவர் நான். என்னை அனுப்பிவெச்சு அம்மிணியைக் கூட்டிட்டு வரச்சொன்னார். ஏதோ வேலை விஷயமா அவளை வரவழைக்கிறதா அப்போ என்கிட்ட சொன்னாங்க. சாயந்திரம் அஞ்சுமணி வாக்கில நான் அம்மிணி வீட்டிலேர்ந்து அவளைக் கூட்டிட்டு வந்தேன். நீலகண்டன் நாயர் வீட்டுல அவளை விட்டுட்டேன். ராத்திரி ஒன்பது மணிவாக்கில் என்கிட்ட 'கன்னியாகுமரியில் போய் ஓட்டல் அறையில தங்கிரு'ன்னு சொன்னாங்க. மறுநாள் காலையில் ஓட்டலுக்கு ஒருத்தர் வருவார். அவருடன் திருவனந்தபுரம் போய் மினிஸ்டரைப் பார்த்துட்டுத் திரும்பி வரணும்னு என்கிட்டச் சொன்னாங்க. ஒரு வாரம் நான் திரிவேணி ஓட்டல்ல தங்கியிருந்தும் யாரும் என்னை தேடி வரலை. எட்டாவது நாள் காலையில அம்மிணியைக் கொலை செய்த குற்றத்துக்காக நான் அந்த ஓட்டல் அறையிலேயே கைது செய்யப்பட்டேன்.

அம்மிணியை நீலகண்டன் நாயர் வீட்டுல விடும்போது உங்க அப்பாவையும் சேர்த்து நாலு பேர் அங்கே இருந்தாங்க. அம்மிணியின் பிணத்தை கார் டிக்கியிலயிருந்து கண்டெடுத்திருக்காங்க. அதாவது நான் அவளைக் கொலை பண்ணிட்டு காருக்குள் போட்டுப் பூட்டிட்டுத் தலைமறை வாயிட்டதா குற்றப்பத்திரிகை. சுஜாதா, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? எனக்கு அஞ்சு சகோதரிங்க இருக்குறாங்க. கல்யாண வயசு வந்தவங்க அதில மூணு பேர். எங்க அப்பா இறந்து போய் நாலஞ்சு வருஷம் ஆச்சு. அம்மா கூலிவேலை செஞ்சு எங்களை ஆளாக்கினாங்க. நான் சப்இன்ஸ்பெக்டர் செலக்ஷன் வரைக்கும் வந்துட்டேன். ஆனா, எனக்கு உதவி பண்றதுக்கு யாரும் இல்லாமப் போனதால, என்னால அந்த வேலைக்குப் போகமுடியலை. அம்மிணியின் மரணத்துல பங்கு பெற்ற உங்க அப்பாதான் எனக்கு தூக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தவர்."

கதை கேட்டுக் கொண்டிருப்பதுபோல் சுஜாதா எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாள். வண்டியின் இன்ஜின் சத்தம் அவள் காதுகளிலிருந்து ஒதுங்கி மறைந்து விட்டிருந்தது. அவன் குரல் மட்டும் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

ஜயன் சொன்னதெல்லாம் உண்மைதான் என்று அவளுக்குப் புரியத்தொடங்கியது. ஏற்கெனவே அரசல்புரசலாகக் கேள்விப் பட்டிருந்த தகவல்கள் இப்போது முழுமையான வடிவம் பெற்றது போலிருந்தது. ஏனோ அப்போதைய மனநிலையில் வீட்டுக்குப் போகவேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை.

"நான் நேரா ஹாஸ்டலுக்குப் போகப் போறேன்!"

"ஏங்க... திடீர்னு?"

"இன்னிக்கு அவரைப் பார்க்க வேண்டாம்னு நினைக்கிறேன்."

"அவர் செஞ்ச தப்புக்கு நான்தான் சின்னதா ஒரு தண்டனை குடுத்திருக்கேனே! இனிமேல் அதே கையை டேபிள்ல தட்டி வேற யாருக்கும் பொய் சொல்லி வாதாட முடியாதே! அவரைக் கொல்லாம விட்டது உங்களையெல்லாம் நினைச்சுதான்."

ஜயன் சொன்ன விஷயங்கள் அவள் மனத்தில் அவன் மீது இரக்கத்தை ஏற்படுத்தின.

"என்னை நீங்க ஏற்கெனவே பார்த்திருக்கீங்களா?"

"பேப்பர்ல வந்த போட்டோ பார்த்தேன்."

"அப்படியானா இப்ப நேராவே பாருங்க" காரின் உட்புற லைட்டை ஒருகணம் எரியவிட்டு ஆஃப் செய்தான்.

அவள் ஜயனைப் பார்த்தாள்.

அழகான, சுறுசுறுப்பான இளைஞன். அந்த முகத்தில் கொலைகாரனுக்கு உரிய கடுமையோ, முரட்டுதனமோ, வெறியோ தென்படவில்லை. இந்த இளைஞன் சொன்னதெல்லாம் உண்மைதான் என்று தோன்றியது.

"என்மேல இப்பவாவது உங்களுக்கு நம்பிக்கை வருதா?"

"நம்புறேன்! நீங்க அவளைக் கொலை பண்ணலேன்னு நம்புறேன்."

"உங்ககிட்ட இதுவரைக்கும் நான் எப்படி நடந்துக்கிட்டேன்னு உங்களுக்குத் தெரியும். உங்க அப்பாமேல இருக்குற கோபத்தை உங்கமேலகூட நான் காட்டியிருக்க முடியும். ஆனா, என் சகோதரிகள் ஞாபகத்துல வந்து அதெல்லாம் கூடாதுன்னு எச்சரிக்கை பண்ணினாங்க. அதனால தப்பு பண்ணியவரை மட்டுமே பழிவாங்குறதுங்கிற முடிவுக்கு வந்தேன்."

ஜயகன் மீது ஏற்பட்டிருந்த அருவருப்பும் கோபமும் மறைந்து பதிலாக அவன்மீது இரக்கமும் பச்சாதாபமும் தோன்றின.

"என்னை ஹாஸ்டல்ல விட்டுடுறீங்களா?" அவள் கேட்டாள்.

"உடனடியா ஹாஸ்டலுக்குப் போகாதீங்க. வெளியே போன பெண் இன்னும் வீடு திரும்பலையேன்னு உங்க அப்பா போலீஸுக்கு போன் பண்ணலாம். நீங்க ஹாஸ்டல்ல இல்லேன்னு வார்டரும் போன்ல சொல்லியிருக்கலாம். அதனால வீணான பிரச்சினைகள் ஏற்படலாம். அதனால நீங்க நேரா உங்க வீட்டுக்குப் போறதுதான் நல்லது. என்ன ஆச்சுன்னு அவர் கேட்டா வண்டியில ஒரு சின்ன ரிப்பேர்னு சொல்லுங்க!"

"நீங்க இவ்வளவு சொன்ன பிறகு அப்பாவை என்னால நேருக்கு நேர் பார்க்கமுடியாது."

"இந்த மாற்றமெல்லாம் திடீர்னு வந்ததாக் காமிச்சுக்கக் கூடாது. அதுக்குப் பதிலா உங்க அம்மாவை கவனிக்கிறதில அக்கறை காட்டுங்க."

கார் பாலகிருஷ்ண பிள்ளையின் வீட்டு வாசலருகே வந்தது.

"மறுபடி உங்களை எப்ப பார்க்கலாம்?" அவள் கேட்டாள்.

"நான் உங்க ஹாஸ்டலுக்கு தினமும் ராத்திரி எட்டு மணிக்கு போன் பண்றேன். வார்டன்கிட்ட உங்க அப்பான்னு சொல்வேன். உங்ககிட்ட ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெயர் சொல்லும்படியா இருக்கலாம்."

"எதுக்காக வேறவேற பெயர்கள்?"

"என் நிலைமை அப்படி!"

"நாளைக்கு போன் பண்ணுவீங்களா?"

"முயற்சி பண்றேன்."

காரிலிருந்து இறங்கிய ஜயன் இருட்டில் மறைந்தான். சுஜாதா காரை போர்ட்டிகோவில் நிறுத்தினாள்.

வேலைக்காரி கதவைத் திறந்தாள்.

"அப்பா உங்களை எதிர்பார்த்துட்டிருக்கார் மாடியில." வேலைக்காரி கூறினாள்.

எதுவும் பதில் பேசாமல் சுஜாதா தனது அறைக்குள் நுழைந்தாள்.

அவள் உடைமாற்றி நைட்கவுன் போட்டுக் கட்டிலில் சரிந்தபோது பாலகிருஷ்ணப் பிள்ளை கதவைத் தட்டினார். அவர் முகத்தைப் பார்க்க விரும்பாதவளாகத் கதவைத் திறந்தாள்.

"ஏம்மா இவ்வளவு லேட்?" - பிள்ளை கேட்டார்.

"வண்டியில ஒரு சின்ன ரிப்பேர்."

"அப்புறம்?"

"அந்தப் பக்கமா வந்தவங்க ரெண்டு பேர் தள்ளிவிட்டு உதவினாங்க!"

"என் பொண்ணுன்னு அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்!"

"அதையெல்லாம் நான் கேட்கலை!"

"நீயாவது சொல்லியிருக்கலாமில்லையா?"

"உங்களுக்கு தூக்கம் வரலையாப்பா?"

பிள்ளை அதற்குமேல் அங்கு நிற்கவில்லை.

கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடிப்பதை சுஜாதா கவனித்தாள். ஜயன் சொன்ன விஷயங்கள் அவள் மனத்தில் திரும்பத் திரும்ப வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

செய்யாத குற்றத்துக்காக ஒருவர் தண்டனை வாங்கி இருக்கிறார். குற்றம் செய்தவர்கள் கெட்டிக்காரர்களாக சமூகத்தில் உலவுகிறார்கள். ஜயனின் கோபம் நியாயமானதுதான்.

ஜயனின் உருவம் அவள் மனத்தில் ஒரு கற்சிலை மாதிரி பதிந்து கிடந்தது. அவளை நாசப்படுத்த வந்தவர்களை ஜயன் கையாண்ட விதம் சினிமாவில் இடம் பெறும் சண்டைக்காட்சி போல இருந்தது. இப்படிப்பட்ட ஒருவன் ஏழை வீட்டைச் சேர்ந்த ஓர் அப்பாவிப் பெண்ணைக் கொலை செய்திருக்க மாட்டான் என்பது உறுதி. நல்ல மனம் கொண்ட அழகான, படித்த இளைஞன்.

இந்த இளைஞனிடம் எப்படிப்பட்ட பெண்ணையும் நம்பி பாதுகாக்க ஒப்படைக்கலாமே! ஏன் தனக்குகூட அதில் எந்த விதமான தயக்கமும் இல்லை!

நேரம் செல்லச் செல்ல ஜயன் மீது அவளுக்கு அன்பு அதிகரிப்பதாகத் தோன்றியது. தினமும் இரவு எட்டுமணிக்கு மேல் ஹாஸ்டலுக்கு போன் செய்வானே என்ற ஆறுதலடன் கண்களை மூடிப் படுத்தாள்.

விடியற்காலையில் மிகவும் தாமதமாகக் கண் விழித்தாள். அன்று இரண்டாம் சனிக்கிழமையானதால் அப்பா வீட்டில் இருந்தார். தன் நண்பர்களுக்கெல்லாம் போன் செய்துவிட்டு நிம்மதியில்லாதவராகப் பரபரத்துக் கொண்டிருந்தார் பிள்ளை, இதுவரையிலும் ஜயனைப் பற்றி எந்தவிதமான தகவலும் தெரியவில்லை.

தினமும் காலையில் பேப்பரை எடுத்தவுடன் அவசர அவசரமாக ஒவ்வொரு பக்கமாகப் புரட்டி ஏதோ ஒரு செய்தியை ஆவலாகத் தேடுவார்.

'ஜயன் மறுபடி பிடிபட்டு விட்டான்!' என்கிற செய்தியை அவர் எதிர்பார்த்தார். ஆனால், ஏமாற்றம்தான் மிஞ்சியது. பத்திரிகைகாரர்கள்கூட அந்தச் செய்தியை மறந்துவிட்டதுபோல் தோன்றியது. இவ்வளவு இருந்தாலும் ஜயன் எதிராளிகளுக்கு

வேண்டிய அளவுக்கு தொல்லை கொடுப்பதில் எந்தவிதத் தடையும் இல்லை. அதுபாட்டுக்கு மறுபுறம் நடந்து கொண்டிருக்கிறது.

விழித்து எழுந்த சுஜாதா சற்று நேரத்துக்குப் பிறகு அம்மாவிடம் போனாள். அம்மா, அவளைப் பார்த்ததும் எழுந்திருக்க முயன்றாள். அம்மாவின் உடலில் நிறைய மாற்றங்கள் தென்பட்டன. உடல் மெலிந்து, வெளிறி, கண்கள் குழிவிழுந்திருந்தன.

"சுஜாதா!" அம்மா அழைத்தாள்.

"என்னம்மா?"

அதன்பிறகு பேசுவதற்கு எதுவுமே இல்லாததுபோல் மௌனம் சாதித்தாள் அம்மா.

'இந்த அம்மா ஒரு காலத்தில் எப்படிப்பட்ட அழகியாக இருந்தார்? இன்றைய கோலம் எப்படி இருக்கிறது?

ஒரு பொம்மை மாதிரி நடந்து கொள்ளும் அம்மாவைப் பார்த்தபோது ஐயன் சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது. இதற்கெல்லாம் காரணம் அப்பாதானே என்கிற ஆத்திரமும் தோன்றியது.

அம்மாவைப் பார்க்கப் பார்க்க மனம் ஆற்றாமையில் தத்தளித்தது. அவளால் அதிக நேரம் அங்கு தங்க முடியவில்லை.

# 16

டிபன் சாப்பிட்ட பிறகு தனது அறையை நோக்கி நடக்கத் தொடங்கிய சுஜாதாவை, பாலகிருஷ்ணப் பிள்ளையின் குரல் மாடியிலிருந்து அழைத்தது.

மாடிப்பக்கமாம் விரைந்தாள்.

"ஏம்மா என்னமோ போலிருக்கே?"

"ஒன்றுமில்லை. அம்மாவைப் பார்த்துட்டு வர்றேன்."

"அம்மா உடம்பு ரொம்பவும் மோசமா இருக்கு இல்லையா?"

"அளவுக்கு அதிகமான தூக்கமாத்திரை சாப்பிட்டது மாதிரி இருக்காங்க!"

"முட்டாள்தனமா பேசாதே. இப்படி உன்கிட்டச் சொன்னது யார்?"

"யாரும் சொல்லியிருக்கக் கூடாதா?"

"இல்லம்மா நீ ரொம்பவும் மாறியிருக்கே?"

"நான் சீரியஸாத்தான் பேசுறேன். தூக்க மாத்திரைங்கதான் அவங்களை நடைபிணமா மாத்தியிருக்கு!"

"எனக்கு புரியலை. யாரோ உன் மனசை கலைச்சிருக்காங்க!"

"அதெல்லாமில்லை. நான் சொன்னது உண்மையா இல்லையா, சொல்லுங்க!"

பாலகிருஷ்ண பிள்ளை நெற்றியைச் சுருக்கியபடி மகளைப் பார்த்தார். இதுவரை தன்னிடம் இப்படியெல்லாம் பேசாத சுஜாதாதானா இவள்? தான் வருடக்கணக்காகக் காப்பாற்றி வரும் ரகசியத்தை வெகுசாதாரணமாக முகத்தை நோக்கி வீசுகிறாளே? அவள் சொன்னதில் எந்தவிதமான தவறும் கிடையாது.

"சரி நீ போம்மா... அவசரமான ஒரு கேஸ் விஷயமா நான் கொஞ்சம் ரெஃபர் பண்ணணும்!"

"எதுக்காகப்பா இந்த மாதிரியெல்லாம் பொய்க் கேஸ்ங்களுக்கு ஆஜராகுறீங்க? தாத்தா சம்பாதிச்சுக் குடுத்திருக்கிற சொத்தே தலைமுறை தாண்டிக் காணுமே" என்றவள் கோபத்துடன் படிக்கட்டுகளை விசையுடன் மிதித்தபடி அங்கிருந்து நகர்ந்தாள்.

"நாக்கை அறுத்துடுவேன் ஜாக்கிரதை!" பிள்ளை மேலிருந்து அலறினார்.

அவள், அவரை கடுமையாக ஒருதடவை பார்த்துவிட்டு மீண்டும் விரைந்தாள்.

தனது அறைக்குள் வந்த பிள்ளை யோசனையில் ஆழ்ந்தார். மகள் எதையெல்லாமோ தெரிந்து வைத்திருக்கிறாள். இந்த நிலைமை தொடர்ந்தால் தன் எதிர்காலம் மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். அவள் எதிரிகளின் சூழ்ச்சிக்கு இரையாகிவிட்டாளா?

அவளுக்காக இதுவரை தான் எதுவும் செய்ததில்லை. தான் இப்போது அனுபவித்துக் கொண்டிருப்பதெல்லாம் மனைவியின் அப்பா வீட்டுச் சொத்து என்பதும் அவரை உறுத்தவே செய்தது. அவர் கண்கள் மறுபடியும் சுளிவடைந்தன.

இதெல்லாம் அவளுக்கு யார் மூலம் தெரிந்திருக்கும். புதிய அந்த எதிராளி யார்? இவள் இதை வேறு யாரிடமெல்லாம் சொல்லித் தொலைக்கப் போகிறாளோ? இது ஒரு குற்றச்சாட்டாக மட்டும் நின்றுவிடக்கூடிய விஷயமல்ல. தூக்கமாத்திரை கொடுத்ததைத் தெரிந்து கொண்டவள் அதன் பின்னணியையும் தெரிந்து கொள்ளாமல் இருப்பாளா?

இதுவரை தனக்கு எதிரான எல்லாவற்றையும் தகர்த்து முன்னேறியிருக்கிறோம். பிள்ளை ஒரு தீர்மானத்துக்கு வந்தவரைப் போல் சாவிக்கொத்தை எடுத்து பீரோவை நெருங்கினார்.

அப்போது டெலிபோன் ஒலித்தது.

திரும்பி வந்து ரிசீவரை எடுத்து காதில் பொருத்தினார். விநாடிக்கு விநாடி அவர் முகத்தில் வியர்வைத் துளிகள் பூத்துக் கொண்டிருந்தன. ரிசீவரைக் கீழே வைப்பதற்குள் ஏறத்தாழ உயிரற்ற மனிதர் போலாகி விட்டார்.

வெட்டுப்பட்ட தன் கைப்பகுதியைப் பார்த்தார். அவன் மறுபடியும் தன்னை வெட்டியதாக உணர்ந்தார். தன் ஒரே மகளுடன் ஜயன் தொடர்பு கொண்டிருக்கிறான். எப்படி இது சாத்தியம் என்று யோசித்தபோது அவருக்கு வியப்பும் தோன்றியது.

தன் கடந்தகால வரலாறு மொத்தத்தையும் அவளிடம் சொல்லிப் புரிய வைத்திருக்கிறான். நேற்றுவரை தான் பார்த்த சுஜாதா அல்ல இன்று இருப்பவள். நேற்றுவரை அவள் அப்பா மீது உயிரை வைத்திருந்தாள். ஆனால், இன்றைக்கு அவள் பேசியதெல்லாம் அம்மாவைப்பற்றி மட்டும்தான்.

அம்மா எப்படி ஊமையாகிப் போனாள் என்கிற ரகசியம் அவளுக்குத் தெரிந்து விட்டிருக்கிறது.

சுஜாதா மீது ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டால் அடுத்த கையின் மீதும் அரிவாள் வெட்டு விழுமென்று எச்சரிக்கிறான். அவன் அதற்கும் தயங்காதவன்தான். அனுபவ ரீதியாக அதைத் தெரிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

தன்னைத் தவிர சுற்றியுள்ள எல்லோரும் திடீரென்று எதிரியாகிவிட்டதாக அவருக்குத் தோன்றியது. தான் வெகு பாடுபட்டுப் பத்திரப்படுத்தி வைத்திருந்த ரகசியங்கள் மொத்தமும் வெளியாகியிருக்கின்றன.

பீரோவைத் திறந்தவர் விஸ்கி பாட்டிலை வெளியே எடுத்தார்.

கிளாஸில் ஊற்றி, தண்ணீர் கலந்து ஒரே மடக்கில் தொண்டைக்குள் இறக்கினார்.

ஃபேன் சுவிட்சைத் தட்டினான்.

ஃபேனின் வேகமான சுழற்சியில் உள்ளே போயிருந்த விஸ்கி இரத்தக் குழாய்களில் விரைவாகப் பரவுவதை உணர்ந்தார்.

சுயநினைவை இழந்த நிலை அவருக்குத் தேவையாக இருந்தது.

கதவை மூடித் தாழிட்ட பிறகு சந்தேக நிவர்த்திக்காக மீண்டும் ஒரு தடவை பரிசோதித்தார். படுக்கையில் வந்து விழுந்த போதும் லைட்டை ஆஃப் செய்யாமல் படுத்தார்.

சுஜாதா விடியற்காலையில் எழுந்தாள். அம்மாவை நெருங்கினாள். அம்மா இயந்திரம் மாதிரி வேலைசெய்து

கொண்டிருந்தாள். அம்மா மொத்தமாகத் தன் சிந்தனைச் சக்தியையே இழந்துவிட்டது மாதிரி தெரிந்தாள்.

டிபன் சாப்பிட்டுவிட்டு காரை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். ஹாஸ்டலுக்கு வந்தவள் தனது அறைக்குள் நுழைந்து தெருவை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்தாள்.

இரவு எட்டுமணி ஜயன் போன் செய்யப் போகிறான் என்பது அவளுக்குப் புத்துணர்வு ஊட்டியது. சீக்கிரம் மணி எட்டு ஆகாதா என்று ஏங்கத் தொடங்கினாள். அவன் மட்டும்தான் அவளுக்கு ஒரே ஆறுதலாக இருந்தான். முந்தைய நாள் அனுபவம் பேச்சு மற்றும் நடவடிக்கைகள் மூலம் ஜயன் நிரபராதிதான் என்பதை சந்தேகமற உணர்ந்தாள்.

ஓர் ஏழைப் பெண்ணைக் கொன்று காரின் டிக்கியில் ஒளித்து வைத்துவிட்டு அவன் ஓடிப்போனவன்தான் என்றால் சுமார் முப்பது பவுன் நகையை உடம்பில் போட்டிருக்கும் தன்னையும் அப்படிச் செய்ய எவ்வளவு நேரமாகியிருக்கும்? ஏற்கெனவே ஒரு தண்டனை பெற்ற குற்றவாளியும் கூட.

பாலகிருஷ்ண பிள்ளை பல தடவை ஹாஸ்டலுக்கு போன் செய்தார். ஆனால், சுஜாதா வீட்டுக்குப் போகவே இல்லை. தான் இனிமேல் வீட்டுக்கு வரப்போவதில்லை என்று கண்டிப்புடன் கூறிவிட்டாள்.

கடிகாரத்தில் மணி எட்டு அடித்த அதே நேரத்தில் பிரின்ஸ்பாலின் அறையிலிருந்த டெலிபோன் மணியடித்தது.

ரிசீவரை எடுத்த பிரின்ஸ்பால் சுஜாதாவை அழைத்தார்.

ஜயன் பேசினான்.

அன்று இரவு சற்று அவசரமான வேலைகள் இருப்பதால் மறுநாள் மதியம் இரண்டு மணிக்கு கோடிமதகருயில் சந்திப்பதாகக் கூறினான்.

பகல் நேரத்தில் எப்படி அவனால் வெளியே நடமாட முடிகிறது என்று யோசித்தாள்.

ரிசீவரை வைத்த பிறகு மீண்டும் தனது அறைக்குத் திரும்பினாள்.

முந்தைய நாள் காருக்குள் ஒரு சில விநாடிகள் தான் பார்த்தாள். அது அவ்வளவு தெளிவானதா என்று சொல்ல முடியாது. இருப்பினும் மறுமுறை அவனைப் பார்க்க நேரும் போது அடையாளம் தெரிந்து கொள்வதற்காக அந்த உருவத்தை மனத்தில் பத்திரப்படுத்தினாள்.

மறுநாள் காலையில் செய்தித் தாளைப் பார்த்த பாலகிருஷ்ண பிள்ளையும் அவர் நண்பர்களும் வியப்பு அடைந்தனர்.

ஜயனின் கேஸ் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப் பட்டிருக்கிறது. ஜயனுக்காக ஆஜராகிறவர் புகழ்பெற்ற அட்வகேட். குறிப்பாக கிரிமினல் வழக்குகளில் தேர்ந்தவர். உண்மையாக நடந்த கொலையில் பங்கு பெற்ற கொலையாளியையும், நேரில் பார்த்த சாட்சிகளையும் கூட பயனற்றுப் போகச் செய்துவிட்டார். அவரது ஃபீஸ் ஒரு லட்சம் ரூபாய்.

அன்று மதியம் இரண்டு மணிக்கு வழக்கத்தைவிட முன்னதாக பாலகிருஷ்ண பிள்ளையும் நண்பர்களும் நீலகண்டன் நாயரின் வீட்டில் கூடினார்கள்.

"இது எப்படி சாத்தியம்?" மாதவ குறுப்பு பாலகிருஷ்ண பிள்ளையிடம் கேட்டார்.

"எனக்கும் அதுதான் புரியலை. அட்வான்ஸ் பணம் வாங்காம பட்டாச்சார்யா கேஸை தொடமாட்டார். அவருக்குப் பணம் கொடுத்தது யார்?" பாலகிருஷ்ணபிள்ளை கேட்டார்.

"ஓகோ அப்படியா விஷயம்? இப்பத்தான் புரியுது." என்ற நீலகண்டன் நாயர் தனது பாக்கெட்டிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார்.

"இருங்க நான் ஒரு போன் பண்ணிப் பார்க்குறேன்."

பாங்கின் நம்பர் அது.

"எல்லாப் பணத்தையும் எடுத்துட்டாங்களா?" என்று ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பேசியவர் கடைசியாக "ஓகோ...அப்படியா?" என்ற கேள்வியுடன் ரிசீவரை அதன் இடத்தில் வைத்தார்.

"நான் கொடுத்த ஒரு லட்சம் ரூபாயையும் அவங்க அம்மா பாங்கிலேருந்து எடுத்துருக்காங்க."

"என்னங்க இந்த மாதிரி முட்டாள்தனத்தைப் பண்ணிட்டு இது வரைக்கும் ஒரு வார்த்தைகூட சொல்லாம இருந்துட்டீங்களே! உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இந்த ஒரு சம்பவமே போதுமே." பாலகிருஷ்ண பிள்ளை கோபத்துடன் கேட்டான்.

"நல்ல கேள்வி! நானும் உங்களை மாதிரி கையில்லாம நடக்கணுமா? அன்னிக்கு ராத்திரி நானா இருந்ததால உயிரோட தப்பிச்சேன். மறு நாள் காலையில் அவங்க அம்மா பேர்ல பாங்ல பணம் போடலேன்னா ஒரு காலையோ கையோ வெட்டிடுவேன்னு மிரட்டினான். இவ்வளவு பேசுறீங்களே, இத்தனை நாளா உங்களால அவனைப் பிடிக்க முடிஞ்சுதா?" நாயர், குறுப்பின் மீது திரும்பிப் பாய்ந்தார்.

குரூப்பு அமைதியா இருந்தார்.

"சரி, போனதெல்லாம் போகட்டும். மேற்கொண்டு என்ன செய்யலாம்?" போத்தன் வர்கீஸ் கேட்டார்.

"இதுக்கு முன்ன நாம என்னென்ன பாயிண்டுகளை எடுத்து வச்சமோ அதையே வச்சு வாதாட வேண்டியதுதான். ஆனா, பட்டாச்சார்யா ரொம்ப கெட்டிக்காரர். பழைய சாட்சிகளை மறுபடி ஒருக்கு விசாரணை பண்ணினா சில நேரம் நாம மாட்டிக்க வேண்டியிருக்கும்!"

"அது எப்படி?"

"என்ன பேச்சுப் பேசுறீங்க? செஷன்ஸில வாதாடின வக்கீல் நம்மளைக் குடையாம விட்டதனால தப்பிச்சோம். அவன்

அப்பவே ஒரு நல்ல வக்கீலை வெச்சிருந்தா நம்ம பாயின்டெல்லாம் எடுபடாமப் போயிருக்கும். அதுக்காக நாம எவ்வளவெல்லாம் மெனக்கிட்டோம்!" குறுப்பு கேட்டார்.

"ஏன் அதையெல்லாம் இங்கேயும் செஞ்சு பார்க்கலாமே? அதுக்கு என்ன வழின்னு பாருங்க!"

"சட்டம் கிடக்கட்டும். அவனைத் தீர்த்துக்கட்ட எவ்வளவு வேணும்னாலும் செலவு பண்ண நான் தயாரா இருக்கேன். அவன் உயிரோட இருந்தா என் சொத்து முழுசும் சீக்கிரமா கரைஞ்சு காணாமல் போயிடும்." போத்தன் வர்கீஸ் கூறினார்.

"அப்படின்னா ஒரே வழிதான் இருக்கு!"

"சொல்லுங்க!"

"நாம போலீஸ்காரங்களை நம்பி பிரயோஜனமில்லை. அவங்க அவனைப் பிடிக்கப் போறதில்லை!"

"இருந்தாலும் இவ்வளவு மட்டம் தட்டுறது நல்லா இல்லை!" குறுப்பு கூறினார்.

"நீங்க என்னதான் செஞ்சீங்க? திட்டம் முழுசும் என்னோடது. நான்தான் மிஸ்டர் நாயர்கிட்டச் சொல்லிஅவனை கன்னியாகுமரிக்கு அனுப்பி வைச்சேன். நீங்க பெரிசா துப்பறிஞ்சு கண்டுபிடிச்ச மாதிரி அங்கேபோய் அரஸ்ட் பண்ணிட்டீங்க. டிபார்ட்மென்ட்ல உங்களுக்கு பிரமோஷன் குடுக்காம இருக்கிறதுக்கு காரணம் இருக்கு!"

"இது நல்ல வேடிக்கை. நாமளே ஒருத்தருக்கு ஒருத்தர் அடிச்சுக்கிட்டா போதுமா? ஆபத்தைப் புரிஞ்சு அடுத்து நடக்கவேண்டியதுக்கு, உருப்படியா யாராவது யோசனை சொல்லுங்க!" நாயர் மற்றொரு பாட்டிலை எடுத்துத் திறந்தபடி கூறினார்.

"நான் ஒரு யோசனை சொல்லட்டா?" குறுப்பு சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தபடி கேட்டார்.

"நேத்து சொன்ன விஷயமா?"

"அதே போலீஸ்காரப் பொண்ணு விஷயம்தான். நான் அதில சில மாற்றங்கள் பண்ணியிருக்கேன். தேவிக்கு அவன் கூட அப்படியொரு நட்பு வளரட்டும். நாம ஏற்கெனவே பேசினபடி அவனை தந்திரமா மடக்கித் திரும்பவும் ஜெயிலுக்குக் கொண்டுபோறது. இப்ப கேஸ் அப்பீலுக்கு வந்திருக்கிறதால ஒருவேளை அவன் தப்பிச்சிடலாம். அவன் தப்பிக்கிறான்னு சொன்னா நாம மாட்டிக்கப் போறோம்னு அர்த்தம்."

"உண்மைதான், மாற்று வழி சொல்லுங்க!" பாலகிருஷ்ண பிள்ளையும், குறுப்பும் கேட்டனர்.

"அவனை மறுபடி அரஸ்ட் பண்ற வேலையெல்லாம் வேண்டாம். கதையை முடிச்சுட வேண்டியதுதான்! அவன் உயிரோட இருந்தா நமக்கு பிரச்சினை?"

"அருமையான திட்டம்!" எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொண்டனர்.

"ஆனா, அதிலயும் ஒரு சிக்கல் அவன் முதல்ல அகப்பட்டாதானே கொல்றதுக்கு? அவனை யார் பிடிக்கிறது?"

"இந்த விஷயம் எதுவும் இங்கே இருக்கிறவங்களைத் யாரையும் தவிர அடுத்த மனுஷனுக்கோ டிபார்ட்மெண்ட்டுக்கோ தெரியக்கூடாது. எல்லோரும் அவங்கவங்களுக்கு முடிஞ்ச வழியில இதுக்கு ஒத்துழைப்பு தரணும்!"

"இதுக்கு யார் பொறுப்பு ஏத்துக்கிறது?"

"எனக்கு தெரிஞ்சு இதுக்குப் பொருத்தமான நபர்...." - என்று சொன்ன குறுப்பு பாலகிருஷ்ண பிள்ளையைப் பார்த்தார்.

"நீங்க யாரைச் சொல்றீங்க?"

"மிஸ்டர் பிள்ளை காலையில் என்கிட்ட ஒரு விஷயம் சொன்னீங்களே?"

"யாரு, என் மகளை இந்த விஷயத்தல பயன்படுத்துறதா?" பிள்ளை சட்டென்று கேட்டார்.

"வேற யாரு? சுஜாதாவும் தேவகியும் நினைச்சா அவனை ரொம்பவும் சுலபமா இந்த உலகத்துலேர்ந்து வெளியேத்திடலாம்."

"அவளுக்கு அவனை ரொம்பவும் பிடிச்சிருக்கே, அவ எப்படி அதைச் செய்வாள்?"

"மிஸ்டர் பிள்ளை, நீங்க இவ்வளவு குழந்தையா இருக்குறீங்க? அவன் உங்களைக் குற்றவாளியாக்கி உங்க மகள்கிட்ட பேசியிருக்கான். அவன் பேச்சைக் கேட்டதும் உங்க கையை வெட்டினதையும் மீறி அவள் அவனை விரும்ப ஆரம்பிச்சிட்டா. அவன் செஞ்ச வேலையை நாம அவனுக்கு எதிரா செய்யவேண்டியதுதான். இதுமட்டும் சரியாயிட்டா அவளே, அவனைத் தொலைச்சுடுவாள்!"

"தெளிவா சொல்லுங்க! எதுக்காக நீங்க இப்படி பூடகமாய் பேசணும்?" பிள்ளை சொன்னார்.

ஜயனும் சுஜாதாவும் கொஞ்சம் நெருக்கமா நட்பு கொண்டிருக்கிறதாவே நம்பலாம். இதை வெச்சுட்டுத் திட்டம் போடவேண்டியதுதான்."

"ஜயன் கூப்பிடுறதா சொல்லி சுஜாதாவை கூப்பிடணும். ராத்திரி ஒன்பது மணிக்குமேல போன் பண்ணணும். எப்படியிருந்தாலும் இப்போ உங்க பொண்ணு உங்களுக்கு எதிரா திரும்பியாச்சு. அதனால அவள் ஒரு சின்னத் தண்டனையாவது அனுபவிக்கட்டும். இப்படி செஞ்சா மட்டும்தான் நம்மளால தப்பிக்க முடியும்."

"போன் பண்ணி ஒன்பது மணிக்கு அவளை சாஸ்திரி ரோட்டுக்கு வரச்சொல்லணும். அங்கதான் அவனை அவள் முதல் தடவையா பார்த்திருக்காள். உடனே நாம ஏற்பாடு பண்ற ஒரு நபர் அவள்கிட்ட ஜயன் ஆக்ஸிடெண்ட்ல மாட்டிக்கிட்டதால் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கிறதா சொல்லி நாம சொல்லியிருக்கிற இடத்துக்குக் கொண்டு வரட்டும். எல்லாம் ஜயன் சொல்லி நடக்கிறதாவே சுஜாதாவுக்கத் தோணணும். அங்கே ஜயனோட கேஸை நடத்தறதுக்காக சுஜாதாவோட நகைகளை எல்லாம்

கழற்றி வாங்கணும். அதுக்குள்ள நான் போய் அவங்களை விரட்டிவிட்டு சுஜாதாவைக் காப்பாத்துவேன். இந்த ஒரு விஷயத்தாலேயே ஜயன்மேல அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டுடும் அப்புறம் அவளை நம்ம பக்கம் திருப்பிக்க வேண்டியதுதான்!" குறூப்பு சொல்லி முடித்தார்.

எல்லோரும் அதை ஒப்புக்கொண்டனர்.

# 17

அங்கே அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஜயனும் சுஜாதாவும் காரில் ஏற்றுமானூர் நகரைத் தாண்டிப் பயணம் செய்துகொண்டிருந்தனர்.

ஜயன் காரை ஒட்டிக்கொண்டிருந்தான். அவனுக்கு இடது புறம் சுஜாதா உட்கார்ந்திருந்தாள்.

பட்டித்தானம் சந்திப்பைத் தாண்டியபோது ரோட்டின் ஓரத்தில் போலீஸ் ஜீப் ஒன்று நின்றுகொண்டிருந்தது.

ஜயனுக்குள் பயம் மெதுவாக மேலெழும்பத் தொடங்கியது. சுஜாதாவுக்கும் அதிகரித்தது.

"ஏதோ சிக்கல்போல இருக்கே?" அவள் முணுமுணுத்தாள்.

"சரி பார்த்துக்கலாம். தைரியமா இருந்தாப் போதும்."

"அவங்க ஏதாவது கேட்டா என்ன சொல்ல?"

"தைரியமிருந்தா புருஷன்னுகூடச் சொல்லு!"

கார் ஜீப்பின் அருகே நின்றது.

"நீங்க எங்கேருந்து வர்றீங்க?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"கோட்டயத்திலிருந்து!"

"இவங்க யாரு?

"அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளையோட மகள்!"

"இவர் யார்?" சுஜாதாவிடம் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"வீட்டுக்காரர்!"

இன்ஸ்பெக்டர் புன்னகைத்துக் கொண்டார்.

"சரி போங்க!"

கார் புறப்பட்டது.

"அவங்க ஏன் நம்மை விட்டுட்டாங்க தெரியுமா?"

"தெரியலை!"

"அவங்க ஏதோ கள்ளக்கடத்தல் பொருள் வர்ற வண்டியை மடக்கக் காத்திருக்காங்க. அதுதான் இப்படி விசாரிச்சுட்டு விட்டுட்டாங்க. சந்தேகம் இருந்தா செக் பண்ணியிருப்பாங்க. பப்ளிக் பிராக்ஸிக்யூட்டரோட மகள்னு சொன்னதும் மேற்கொண்டு பேசலை."

"அப்புறம் எதுக்கு சிரிச்சாரு?"

"அங்கேதான் இருக்கு சுவாரஸ்யமே. அங்கே நின்னுட்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு உங்க அப்பாவை ரொம்பவும் நல்லாத் தெரியும் அவரோட பொண்ணுக்கு கல்யாணம் ஆகலேன்னும் அவருக்குத் தெரியும். அதனால நான் உன் காதலன்னு நெனைச்சு சிரிச்சிருக்கார்."

"ஆமா உங்களை எப்படி அடையாளம் தெரிஞ்சுக்காம இருந்தாங்க?"

"முதல்ல என் வேஷம். இரண்டாவது உன் அப்பாவோட கையை வெட்டின ஒருத்தன் உன்கூடவே வண்டியில் வருவானா?"

"நிஜம்தான், நீங்க இந்த வண்டியில என்கூட பயணம் செஞ்சீங்கன்னு சொன்னா யாருமே நம்பமாட்டாங்க!"

"இருக்கட்டும். நல்லதுதான்."

"நாம இப்போ எங்க போறோம்?"

"என் வக்கீலைப் பார்க்க!"

"அட்வகேட்டா எதுக்கு?"

"என் கேஸ் அப்பீலுக்கு போயிருக்கே!"

மும்பையிலிருந்து புகழ்பெற்ற கிரிமினல் லாயர் பட்டாச்சார்யா எர்ணாகுளம் வந்திருக்கிறார். அவர் ஒரு மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவின் பெயரில் ஓட்டலில் தங்கியிருக்கிறார். பட்டாச்சார்யா என்பது வெளியில் தெரிந்தால் க்ரைம் பிராஞ்ச் போலீஸ் அவரை வட்டமிடும். ஜெயிலிலிருந்து தப்பித்த ஜயன் எப்படியும் தன்னைத் தேடி வருவான் என்பது அவருக்குத் தெரியும். பொதுவாக சிக்கலான வழக்குகள்தான் அவரிடம் வரும். எனவே கேஸில் வெற்றி பெறுவதற்காக அவர் பல தந்திரங்களையும் மாறுவேடங்களையும் பயன்படுத்த நேரும். தற்போது வில்லியம் ஜாக்சன் என்ற பெயரில் ஓட்டல் லூசியாவில் தங்கியிருக்கிறார். இந்தச் செய்தி ஜயனுக்கும், அவன் அம்மாவுக்கும் மட்டுமே தெரியும்.

சப்இன்ஸ்பெக்டர் போஸ்ட்டுக்கு முயற்சி செய்யும் போதுதான் ஜயன், பட்டாச்சார்யாவைப் பற்றி அறிந்து கொள்ள நேர்ந்தது. எர்ணாகுளத்துக்கு ஒரு கேஸ் விஷயமாக அவர் வருவதைத் தெரிந்து ஜயன் அம்மாவை அனுப்பி வைத்தான். அப்பீலுக்கும் விண்ணப்பித்தாகிவிட்டது.

ஓட்டலுக்கு வெளியே காரை நிறுத்திவிட்டு இறங்கியவர்கள் கௌண்டரிலுள்ள சீ. போர்டை கவனித்தனர். வில்லியம் ஜாக்சனின் ரூம் நம்பர் நூற்றியிரண்டு. அறை வாசலுக்கு வந்து கதவைத் தட்டினர். கதவு திறந்த விநாடியே அவர்களை உள்ளே நுழைய விட்டுக் கதவை சட்டென்று மூடித் தாழ்ப்பாளிட்டார்.

ஆறரை அடி உயரம். அதற்கேற்ற உடம்பு. அவர் கண்ணில் தெரிந்த கவர்ச்சி எப்படிப்பட்டவரையும் அடிமைப்படுத்த வல்லது என்பதைக் காட்டியது. முகத்தில் புருவப்பகுதிகளைத் தவிர காதின்

மேலிருந்து முகம் முழுவதிலுமுள்ள முடியை மொத்தமும் வழித்து விட்டிருந்தார்.

"உட்காருங்க!" இருவரையும் பார்த்தபடி சொன்னார்.

"மிஸ்டர் ஜயன் உங்ககூட வந்திருக்கிற இவங்க யாரு?"

"பப்ளிக் பிராசிக்யூட்டர் பாலகிருஷ்ண பிள்ளையின் மகள்."

"நிஜமாவா!"

"இவங்க எப்படி உங்ககூட வந்தாங்க?"

"சமீபத்துலதான் இவளுக்கு இவங்க அப்பாவைப் பத்தி தெரிஞ்சது."

"இவர் சொல்றதெல்லாம் உண்மையாம்மா!" பட்டாச்சார்யா கேட்டார்.

"உண்மைதான் சார்."

"தைரியசாலி பெண்தான்." அவர் அவளைப் பாராட்டினார்.

"இனி எல்லா விவரத்தையும் வெளிப்படையா விவரமா சொல்லுங்க. ஒரு டாக்டர்கிட்டப் பேசுற மாதிரி சொல்லுங்க!"

ஜயன் நடந்தது ஒன்றுவிடாமல் அவரிடம் விவரித்தான்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு பட்டாச்சார்யா கேட்டார். "அந்த அம்மிணிங்கிற பொண்ணை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?"

"தெரியும் சார். என் தங்கையோட ஃப்ரெண்டு அந்தப் பொண்ணு!"

"அவளுக்கு வேலை வாங்கிக் குடுக்க நீங்க முயற்சி பண்ணினீங்களா?"

"இல்லை சார்."

"அங்கே வேலை இருக்குன்னு அவளுக்குத் தகவல் சொன்னது யார்?"

"அந்த வீட்டு வேலைக்காரி சொல்லியிருக்கிறாள்."

"அப்புறம் அந்த வேலைக்காரியை விட்டு அம்மிணியைக் கூப்பிடாம உங்களை எதுக்கு அனுப்பிவெச்சாங்க?"

"தெரியலை சார்!"

"நீங்க அந்தப் பொண்ணை மிஸ்டர் நாயரோட வீட்டுல விட்டுட்டு எங்கே போனீங்க?"

"என் வீட்டுக்குப் போயிட்டேன் சார்!"

"அங்கேவந்து யார் உங்களைக் கூப்பிட்டது?"

"நாயர் வீட்டு வேலைக்காரன்."

"அவர் இப்பவும் இருக்காரா?"

"இருக்கார்."

"அவரை விசாரணை பண்ணினாங்களா?"

"பேருக்கு விசாரிச்சாங்க!"

"பாலகிருஷ்ண பிள்ளையைப் பத்தின ரகசியங்கள் உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?"

"தோட்டத்துல தூக்கு போட்டு இறந்ததா சொல்லப்பட்ட பார்வதியம்மா என் அம்மாவின் சினேகிதி. அவங்க அம்மாகிட்ட மனசு வருந்தி எல்லாத்தையும் சொல்லியிருக்காங்க."

"இவங்க அப்பா, இவங்க அம்மாவோட எங்கேயாவது எப்பவாவது நிகழ்ச்சிகள் எதுக்காகவாவது போயிருக்காங்களா?"

"எனக்குத் தெரிஞ்சு இல்லை சார்!"

"அம்மா அழுது பார்த்திருக்கீங்களா?"

"சின்ன வயசுல பார்த்திருக்கேன் சார்!" சுஜாதா பதிலளித்தாள்.

"அப்புறம் பார்க்கலை?"

"அதுக்குப் பிறகு அம்மா யாருகிட்டயும் பேசியே நான் பார்க்கலை. பெரும்பாலும் அமைதியா இருப்பாங்க."

"ஜயன் சொன்ன பிறகுதான் உங்களுக்கு உங்க அப்பா மேல வெறுப்பு ஏற்பட்டதா?"

"ஆமாம் சார்!"

"ஜயன் சொன்னதெல்லாம் உண்மைன்னு தோணுதா?"

" அப்படித்தான் தோணுது."

"ஏன் அப்படி?"

"அவர் சொன்ன பிறகு கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தப்போ எல்லாம் பொருந்தி வந்தது."

"இங்கே நாம இப்ப பேசிக்கிறதையெல்லாம் நீங்க யார்கிட்டயாவது சொல்வீங்களா?"

"யார் கிட்டயும் சொல்லமாட்டேன்."

"நம்பலாமா?"

"தாராளமா நம்பலாம் சார்."

பட்டாச்சார்யா நிறையக் காகிதங்களில் ஜயனைக் கையெழுத்து போடச் சொன்னார்

"ஒரு விஷயம் சொல்லிடுறேன். எந்த ஒரு காரணத்தாலும் நீங்க போலீஸ்ல மாட்டிக்கக் கூடாது. ஜாமீன் கிடைக்கிறது ரொம்பவும் கஷ்டமான சூழ்நிலை. இருக்கு கேஸ். மாட்டிக்கிட்டா உங்களுக்கு ரொம்பத் தொல்லை கொடுப்பாங்க. இவங்க உங்களுக்கு நிறைய விஷயங்கள்ல உதவலாம். எதிர் முகாம்ல நடக்கிற விஷயங்களை உடனுக்கு உடன் நமக்குத் தெரிவிக்கணும். ஆமா இப்போ இவங்க அப்பாகிட்ட சண்டைபோட்டுப் பேசாம இருக்காங்களா?"

"ஆமாம் சார்!"

"சண்டை கூடாது. அது சிக்கலை அதிகமாக்கிவிடும்!"

சரி சார்!"

"நீங்க வந்த வழியிலேயே திரும்பிப் போக வேண்டாம்." பட்டாச்சார்யா எச்சரிக்கை செய்தார்.

"நாங்க கிளம்பலாமா சார்?"

"உங்களை சரியானபடி வரவேற்க முடியாததுல வருத்தப் படாதீங்க. ஏன்னா சூழ்நிலை அப்படி. வேற யாரும் இங்கே இந்த சந்தர்ப்பத்துல வர்றது எனக்குப் பிடிக்கலை. அதுதான்."

"புரிஞ்சுக்கிட்டோம்."

இருவரும் அந்த அறையிலிருந்து வெளியேறினர். மணி ஐந்துக்குமேல் ஆகியிருந்தது.

"சின்னதா ஏதாவது சாப்பிட்டுக் கிளம்பலாமே!" ஜயன், சுஜாதாவிடம் கேட்டான்.

டைனிங் பிரிவில் நுழைந்தனர்.

சர்வர் வந்தார்.

"ரெண்டு கட்லட் ரெண்டு டீ!"

சர்வர் போனார்.

"நாம இங்கேருந்து ஆலப்புழை வழியா கோட்டயம் போகலாம். ஏற்கெனவே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நம்மளை கவனிச்சிருக்கார். ஒருவேளை அவர் கூட உங்க அப்பாவுக்குத் தகவல் சொல்லியிருக்கலாம். அப்படி ஏதாவது நடந்திருந்தா கூட இருக்கிறது நான்தான்னு சுலபமா புரிஞ்சுக்குவாங்க. போலீஸுக்கு அது போதாதா?"

"அப்படின்னா இந்த வழியில போலீஸ் இருக்காதா?" சுஜாதா கேட்டாள்.

"உண்மைதான். இருக்கலாம்... வேற என்ன பண்ணலாம்?"

ஆர்டர் செய்தவை வந்து சேர்ந்தன.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி அவர்களுக்கு அருகில் காலியாகக் கிடந்த நாற்காலியில் வந்து அமர்ந்தார்.

"மிஸ்டர் ஜயன்தானே?" வந்தவள் மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டாள்.

சட்டென்று எதிர்பாராமல் வந்து விழுந்த அந்தக் கேள்வியைக் கேட்டதும் ஜயன் சற்றே அதிர்ந்தான். விலை உயர்ந்த புடவை-ஜாக்கெட் அணிந்திருந்தாள். நகைகள் நிறைய அணிந்திருந்தாள். சிவப்புநிறம், சற்று பூசினாற் போன்ற உடம்பு.

ஜயன் பதிலளிக்கவில்லை. அதைக் காதில் வாங்காதாவனைப் போல் ஜயன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"நீங்க பயப்படவேண்டியதில்லை. உங்களைக் காட்டிக் குடுக்கறதுக்காக நான் வரலை. எனக்கு உங்களை நல்லா தெரியும்."

அந்த வார்த்தைகளைச் கேட்டதும் ஜயனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இருப்பினும் வாய் திறந்து எதையும் பேச வேண்டாம் என்பதால் மௌனமாக இருந்தான். அந்தப் பகுதியில் போலீஸ் வண்டிகள் சூழ்ந்துகொள்ள அதிக நேரம் வேண்டியது இல்லை. அதே நேரம் சொல்லாமலிருக்கவும் முடியாத சூழ்நிலை.

"உங்களுக்கு என்னை அடையாளம் தெரியலையா? என் பெயர் லிஸா. நீங்க அங்கே வந்ததாலதான் நான் தப்பிச்சேன். உண்மையைச் சொன்னா அப்பத்தான் நான் ஆபத்துல மாட்டிட்டிருக்கேன்னு புரிஞ்சது. நீங்க அங்கு பேசினதைக் கேட்ட பிறகுதான் எப்படியும் அங்கேயிருந்து தப்பிக்கணும்னு தோணுச்சு. அவங்க ஏராளமா குடிச்சு மயங்கினதும் நான் ஓடிவந்துட்டேன். அந்த ஃபைனான்ஸ் கம்பெனிக்காரர்தான் என்னைக் கூட்டிட்டு போனார். ஆனா, அந்தச் சூழ்நிலையில் அந்தக் கூட்டத்துல மாட்டிக்க நான் விரும்பலை. செய்யிற தொழில் தப்பா இருந்தாலும் எனக்கும் சில கொள்கைகள் இருக்கு. நான் உடன்படலேன்னா என்னைக் கொலைகூடச் செய்ய

தயங்கமாட்டாங்க. இங்கே வந்த நீங்க மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவோட ரூமுக்குள்ள நுழையிறதை பார்த்தேன். அதுக்கு ரெண்டு ரூம் தள்ளித்தான் என்னோட ரூம். நீங்க வெளியே வந்ததும் நான் உங்களைப் பின் தொடர்ந்தேன். நீங்க விரும்பினா, உங்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்ய நான் தயாரா இருக்கேன். நம்புங்க!"

ஜயன் யோசித்தான். இக்கட்டான ஒரு சமயத்தில் தனக்கு உதவ வந்திருக்கிறாள்.

"அப்படின்னா நீங்க ஒரு உதவி பண்ணணும். ஒரு டூரிஸ்ட் டாக்ஸி ஏற்பாடு பண்ணித் தாங்க. அப்படியே டிரைவர் யூனிஃபாரம் ஒண்ணு, முடிஞ்சா நீங்களும் எங்ககூட கோட்டயம் வரைக்கும் வரணும்!"

"அவ்வளவுதானே? இந்த ஓட்டல் மானேஜருக்கு ஆறு டூரிஸ்ட் டாக்ஸி இருக்கு. அதுல ஒண்ணு எனக்கு வேணும்னு கேட்டா கிடைக்கும். டாக்ஸி கிடைச்சுட்டா, டிரைவர்கிட்ட பேட்டா குடுத்தா யூனிஃபாரம் தந்துடுவாரு."

ஜயனுக்கு மகிழ்ச்சியளித்தன அந்த வார்த்தைகள்.

# 18

**லிஸா** அங்கிருந்து கிளம்பினாள். சரியாகப் பத்து நிமிடத்துக்குப் பிறகு அவள் திரும்பி வந்தாள். ஜயன் தனது பாக்கெட்டில் கிடந்த ரிவால்வரில் கை வைத்தபடி சுஜாதாவை முன்புறமாக விட்டுப் பின்தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான்.

"அதோ நிற்கிறது பாருங்கள்... அந்த டாக்ஸிதான் பின்னாடியே வாங்க" லிஸா நடந்தாள். இருவரும் தொடர்ந்தனர்.

டிரைவரின் யூனிஃபாரம் டாக்ஸிக்குள் கிடந்தது. ஜயன், தனது உடைக்கு மேல் அந்த யூனிஃபாரத்தை அணிந்து கொண்டான். தொப்பியைத் தலையில் பொருத்திக் கொண்டான்.

பெண்கள் இருவரும் காரின் பின்ஸீட்டில் அமர்ந்து கொண்டனர். அடுத்த நிமிடம் போலீஸ் வேன் ஒன்று ஓட்டலின் முன்பாக வந்து நின்றது.

அந்த வேனின் உட்புறத்தில் ரகசியப் புலனாய்வுத் துறையினர் இருந்தனர்.

ஏற்றுமானூர் தாண்டி பட்டித்தானம் சந்திப்பில் பாலகிருஷ்ண பிள்ளையின் மகள் காரில் செல்வதைப் பார்த்தவர்கள், அதை ஒரு சாதாரணச் செய்தியாகப் பிள்ளையிடம் தெரிவித்தனர்.

செய்தி வரும்போது மணி ஏழு. அப்போதுதான் இன்ஸ்பெக்டர் கோட்டயம் நகருக்கு வந்து சேர்ந்திருந்தார்.

செய்தியைக் கேட்டவுடன் தன் மகளுடன் பயணம் செய்பவன் தனது மிகப் பெரிய எதிரி என்பதை உணர்ந்து கொண்டார்.

மதியம் இரண்டு மணிவாக்கில் அவர்கள் ஏற்றுமானூரைக் கடந்து போனார்கள் என்பது தெரிந்தவுடன் பிள்ளை சோர்ந்து போனார்.

எனினும் மாதவக் குறுப்பு கொடுத்த யோசனையின் பேரில் எப்படியும் ஐயனைப் பிடித்துவிடலாம் என்று நினைத்தார்.

சுஜாதாவின் அறிமுகம் கிடைத்ததே ஐயனைப் பொறுத்த வரையில் மிகவும் பயனுள்ள ஒரு விஷயம்தான். தற்போதைய சூழ்நிலையில் தான் தனியாகப் பயணம் செய்வது மிகவும் ஆபத்தான விஷயம். குறிப்பாக பஸ்ஸ்டாண்டு, ரயில்வே ஸ்டேஷன் போன்ற இடங்களில் போலீஸ்காரர்கள் சாதாரண வேடத்தில் போட்டோவையும் வைத்துக் காத்திருப்பார்கள். சந்தேகத்துக்குரிய நபர்களை எக்ஸ்-ரே கண்களுடன் ஆராய்ந்து சோதிக்கவும் செய்தனர். எனவே முடிந்தவரை பஸ்-ரயில் பயணங்களைத் தவிர்ப்பது என்று ஐயன் தீர்மானித்திருந்தான்.

டாக்ஸிகளையும் அவ்வளவாக நம்பமுடியாது. தன்னைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் பத்தாயிரம் ரூபாய் தருவதாக

போலீஸார் அறிவித்திருந்தனர். இந்தத் தொகை எந்தவொரு சாதாரண மனிதனையும் கவரக்கூடியது என்பதில் சந்தேகமே இல்லை.

நல்லவேளையாக சுஜாதாவின் நட்பு கிடைத்ததால், தனக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வக்கீலைப் பார்ப்பதுடன், எல்லா விஷயங்களையும் கூறி மேற்கொண்டு என்ன செய்வது என்பதைக் குறித்தும் கலந்துரையாடலாம்.

செய்தி கிடைத்த மறுவிநாடியே பாலகிருஷ்ணபிள்ளை, முக்கியமான நகரங்களிலுள்ள எல்லா போலீஸ் நிலையங்களுடனும் தொடர்பு கொண்டு ஜயனைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தார். இருபது வயதான தன் மகளும், தனது கார் நம்பரும் ஜயனைக் காட்டிக்கொடுக்கப் போதுமானதென்று பிள்ளை நினைத்தார். இதன்மூலம் தலைமறைவாக இருக்கும் ஒரு தூக்குதண்டனைக் கைதியைப் பிடித்துக்கொடுத்தோம் என்பதுடன், தன் மகளின் வாழ்க்கையிலிருந்து அவனை விலக்குவதோடு, அவனால் அனுதினமும் பயந்து சாக வேண்டியதில்லை என்றும் பிள்ளை கணக்கிட்டார்.

பிள்ளையிடமிருந்து வந்த செய்தியைக் கேட்டதும் போலீஸ் டிபார்ட்மெண்ட் சுறுசுறுப்பு அடைந்தது. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலிருந்தும் அருகிலுள்ள ஓட்டல்களுக்கு போன் பறந்தது. காரின் நம்பரைக் குறிப்பிட்டு அந்த கார் பற்றிய தகவல்கள் தெரிந்தால் உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டார்கள். அப்படித்தான் ஓட்டல் லூசியாவுக்கு போலீஸ் வேன் வந்து சேர்ந்தது. நல்லவேளையாக அதற்குள் ஜயனது டாக்ஸி அந்த ஓட்டல் காம்பௌண்ட்டை விட்டு வெளியேறியது. ஓட்டல் முழுவதும் சல்லடை போட்டுச் சலித்தும் கார் தவிர காரிலிருந்தவர்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை.

"அவர்கள் எப்படியும் சிட்டியைவிட்டு வெளியேறியிருக்க வாய்ப்பு இல்லை. விடாமல் தேடத் துவங்குவோம்!" வேனுக்குள் இருந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

கார் அங்கேயே கிடந்ததால் அவர்கள் எப்படியும் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்தனர் போலீஸ்காரர்கள். எனவே இரண்டு போலீஸ்காரர்களை மஃப்டியில் நிறுத்திவிட்டு மற்றவர்கள் வேனில் புறப்பட்டனர்.

ஜயன் டாக்ஸியை ஃபோர்ட் கொச்சியை நோக்கிச் செலுத்தினான். அந்த வழியாக ஆலப்புழையை நகரை அடைந்து சங்கனாச்சேரி வழியாக கோட்டயம் வருவது ஜயனின் திட்டம். அரூர் நகரை அடைந்ததும் போலீஸ் ஜீப் ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

ஜயன் டாக்ஸியை நிறுத்தினான்.

டார்ச்லைட் மூலம் உட்புறம் பார்த்த இன்ஸ்பெக்டர், பின்ஸீட்டில் இரண்டு பெண்கள் மட்டும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதை கவனித்தார். டிரைவர் தேமே என்று உட்கார்ந்திருந்தான். இரண்டு பெண்களும் பெரிய இடத்துப் பெண்கள் போல் தெரிந்தனர். சுஜாதா முகத்தை முந்தானையால் மறைத்து உட்கார்ந்திருந்தாள். இருப்பினும் இன்ஸ்பெக்டரைப் பார்த்தவுடன் முக்காட்டை விலக்கி, "என்ன சார்?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லை, ஒரு சின்ன சந்தேகம். நீங்க போகலாம்" இன்ஸ்பெக்டர் விடை கொடுத்தார். ஓர் இளைஞனும் யுவதியும் தனியாக காரில் வந்தால் கவனித்து, விசாரிக்குமாறு அவர்களுக்குக் கட்டளை. எனவே அவர்களுக்கு இந்த காரில் எந்தவிதமான வேலையும் இல்லை.

டிரைவர் வேடத்தில் வண்டி ஓட்டிவந்தது தன்னுடைய நல்ல காலம்தான் என்று ஜயன் நினைத்தான்.

"லிஸா, உங்களை நான் மறக்கமுடியாது. உங்களோட உதவியில்லேன்னா நான் தப்பிச்சிருக்கமுடியாது!" ஜயன் வண்டி ஓட்டியபடியே சொன்னான்.

"உங்களுக்கு உதவி செய்ய முடிஞ்சதில் எனக்கும் சந்தோஷம்தான். நீங்க குற்றவாளி இல்லேன்னு அன்னிக்கே

தெரிஞ்சுக்கிட்டேன். நீங்க பேசப் பேச அவங்க எல்லோரும் பலிக்குஞ்சு மாதிரியில்லை நடுங்கினாங்க!" லிஸா சொன்னாள்.

கார் ஆலப்புழை நகரையடைந்தது. நடுவில் எங்கும் அவ்வளவு ஆபத்தான 'செக்கிங்' நடக்கவில்லை. அவர்கள் கோட்டயம் வந்து சேரும்போது மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

"சுஜாதா, எங்கே வீட்டுக்குத்தானே?"

"வேண்டாம்... ஹாஸ்டலுக்கு!"

"இப்ப வீட்டுக்குப் போறதுதான் நல்லதுன்னு தோணுது."

"ஏன்...?"

"மகளைக் காணோம்னு வருத்தத்தில் இருக்கிற உங்க அப்பா, போலீஸுக்கு போன் பண்ணி அப்பப்போ விசாரிச்சுட்டு இருப்பார். அப்படி நடக்கிற வரைக்கும் போலீஸ்காரங்க போறவர்ற வண்டிகளை செக் பண்ணிட்டே இருப்பாங்க."

"சரி, அப்படின்னா வீட்டுக்குப் பக்கத்திலேயே என்னை இறக்கிவிட்டுடுங்க."

பாலகிருஷ்ண பிள்ளையின் பங்களாவுக்கு அருகே சற்றுத் தள்ளி கார் நின்றது. சுஜாதா காரிலிருந்து இறங்கி நடந்தாள்.

"இனி எங்கே போகப் போறீங்க?" ஜயன், லிஸாவிடம் கேட்டான்.

"இந்த ஊருக்குள்ள நான் பயப்பட வேண்டியதில்லை" லிஸா கூறினாள்.

"என்கூட இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் நீங்க பயப்பட்டுத்தான் ஆகணும்."

"தேவையே இல்லை. நான் இப்படியெல்லாம் நடந்து பழக்கப்பட்டவ. எனக்குத் தெரிஞ்ச தயாரிப்பாளர் ஒருத்தரோட வீடு இங்கே இருக்குது. அவங்க சம்சாரம் பெரும்பாலும் அவங்க

அம்மா வீட்டுல இருப்பாங்க. சில சமயம் அவரோட வேற யாராவது நடிகைங்க இருக்கலாம். அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன். அந்தப் பக்கமா காரை விடுங்க!" சொன்னாள் லிஸா.

அரண்மனை போன்ற ஒரு பங்களாவின் முன்னால் கார் நின்றது.

"ஒரு தடவை ஹாரன் அடிங்க!"

ஜயன் ஹாரனை அழுத்தினான்.

வாட்ச்மேன் ஒருவர் வந்து கதவைத் திறந்தார். கேட்டைத் தாண்டி டாக்ஸி உள்ளே நுழைந்தது. லிஸா காரிலிருந்து இறங்கி வாசலிலிருந்த காலிங்பெல்லை அழுத்தினாள்.

தயாரிப்பாளர் கதவைத் திறந்தார்.

"என்ன திடீர்னு!" தயாரிப்பாளர் சிரித்தபடி கேட்டார்.

திருவனந்தபுரம் போயிட்டு வர்றேன். நேரம் பத்துகிட்ட ஆச்சு. அதுவும் இல்லாம தூக்கக்கலக்கமா வேற இருக்குது" லிஸா பதிலளித்தாள்.

"அதுக்கென்ன இங்கேயே தங்கிட்டுப் போகலாம். ஆமாம் டாக்ஸி இருக்குமா, போகுதா?"

"டாக்ஸி ஓட்டல் மானேஜருதுதான்."

"அப்படின்னா போர்டிகோவிலேயே நிற்கட்டும்."

ஜயனுக்கு உணவும், படுக்க இடமும் கிடைத்தது.

தனக்காக இவ்வளவு கஷ்டப்படும் லிஸாவை நினைத்த போது ஜயனின் நெஞ்சு நன்றியால் நெகிழ்ந்தது. நடனமாடும் ஒரு பெண் என்ற முறையில் மற்றவர்கள் அவளை எப்படியெல்லாம் பார்க்கிறார்கள்? ஒரு தடவை இவளைத் தன் முதலாளிக்காக அழைத்து வந்திருப்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. ம்... அதெல்லாம் அன்று ஒரு தேவையாக இருந்தது.

சுஜாதா வீட்டுக்குள் வந்ததும் பாலகிருஷ்ண பிள்ளை கோபப்படவில்லை. அவள் வெளியூர் போய்விட்டு வருவதைக் காட்டிக்கொள்ளாதவராகப் பேசினார்.

"கார் எங்கேம்மா?"

"வொர்க்ஷாப்பில் இருக்கு!"

"நீ சமீபமா ரொம்பவும் பொய் சொல்றே!"

"அப்படியா சொல்றீங்க?"

"நம்ம கார் எர்ணாகுளத்துல ஒரு பெரிய ஓட்டல் முன்னாடி நிக்குறதா தகவல் வந்ததே?"

"அது என்னமோ ஏதோ? யாருக்குத் தெரியும்!" அலட்சியமாகப் பதிலளித்துவிட்டுத் தனது அறையை நோக்கி நடந்தாள்.

"சுஜாதா, நில்லும்மா. உன்கிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு?"

"இதோ வந்திடுறேம்பா!" அவள் பாட்டுக்கு நடந்துகொண்டே பதிலளித்தாள்.

அவளின் நடவடிக்கைகள் பிள்ளைக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இருப்பினும் தற்போதைய சூழ்நிலையில் அவளுடன் சண்டை போடுவது நல்லதல்ல என்று நினைத்தார். இன்றுவரையிலான தனது 'பாவங்கள்' ஒன்றுசேர்ந்து அவளிடம் விரோதத்தை வளர்த்துவிட்டிருக்கின்றன. அதையெல்லாம் அவ்வளவு சுலபத்தில் அழிப்பதும் சாத்தியமில்லை. தான் ஒரு சரியான கிரிமினல் பேர்வழி என்பதை மறுக்கவும் முடியாது.

சுஜாதா நைட்டிக்கு மாறி திரும்பி வந்தாள்.

"நான் உன்னைக் கூப்பிட்டது உனக்கே தெரியாத சில உண்மைகளைச் சொல்றதுக்குதான்" பாலகிருஷ்ண பிள்ளை சிகரெட் ஒன்றை உதட்டில் பொருத்தி நிதானமாக சிகார் லைட்டில் பற்றவைத்தபடி பேசினார்.

"நீ சின்னக் குழந்தை. தவறு செய்யாதவனோ ஏமாற்றப்படாதவனோ எனக்குத் தெரிஞ்சு இந்த உலகத்துல யாருமே இல்லை. நேத்து சுவாரஸ்யமான சம்பவம் ஒண்ணு கேள்விப்பட்டேன். சாஸ்திரி ரோட்டில் நடந்த ஒரு ஆக்ஸிடெண்ட்ல ஒரு கை பாதிக்கப்பட்ட இளைஞனை நான் சந்திச்சேன். அவன் வேடிக்கையான கதை சொன்னான்."

அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் சட்டென்று அவள் மீது பாய்ந்து ஆக்கிரமிக்க முயன்ற இளைஞன் ஞாபகம் வந்தான்.

"அவனுக்கு மூணோ நாலோ ஃப்பிரண்டுங்க இருக்கிறாங்களாம். அவங்களோட வேலையே கூலிவாங்கிட்டு அடிவாங்குறதுதானாம்."

சமீபத்துல யாரோ ஒருத்தன் அவங்க கிட்டப் பணம் கொடுத்து உதையும் குடுத்து அனுப்பியிருக்கான். அதாவது அஞ்சு ரௌடிப்பசங்களை செட்டப் பண்ணி அனுப்பியிருக்கான். இதெல்லாம் தெரியாத அந்தப் பொண்ணு ரோட்டுல கார் ஓட்டி வந்திருக்கா, மிச்சமெல்லாம். அவன் திட்டப்படி நடந்திருக்கு. அந்தச் சம்பவம் ஒரு சினிமா காட்சி மாதிரி அவள் மனசில பதிஞ்சுபோச்சு. அவன் உடனே கதாநாயகனா மாறிட்டான். பத்து பைசாவுக்கு வழியில்லாத ஒருத்தன், அவன் போலீஸ் தேடுற கொலைகாரனும் கூட. ஒரு பணக்காரப் பெண் அகப்பட்டுக்கிட்டா சுகமா வாழலாம்னு நினைக்கிறான். இந்த மாதிரி எத்தனை பெண்களை அவன் சந்திச்சு மயக்கியிருக்கான் தெரியுமா!"

சுஜாதா மௌனமாக அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இந்தக் கதையோட பின்கதையை நான் உனக்கு விளக்கவேண்டியதில்லைனு நெனைக்கிறேன்!" பிள்ளை தன் பேச்சை முடித்துவிட்டு அவள் முகத்தைப் பார்த்தார்.

## 19

சுஜாதா அப்போதும் மௌனமாக இருந்தாள்.

பிள்ளை தொடர்ந்தார்: "பெண்களை மயக்குறதும். அவங்களை வெச்சு பிளாக்மெயில் பண்றதும்தான் அவன் வேலை. உனக்கு இதெல்லாம் புரியாது. அவன் பின்னால் இதுக்குன்னு ஒரு கூட்டமே இருக்கு. அதுல ஆண்களும் பெண்களும் இருக்கிறாங்க. மும்பை, கல்கத்தா மாதிரி நகரங்கள்ல இது ரொம்ப சாதாரணம். அந்த நாகரிகம் இப்ப நம்ம ஊருக்கும் பரவியிருக்கு."

பலகிருஷ்ண பிள்ளை தான் புகைத்துக்கொண்டிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் போட்டுத் தேய்த்தார்.

"ஒரு சின்னப் பொண்ணை ஏமாத்தி கற்பழிச்சுக் கொலை பண்ணின குற்றத்துக்காக அவனுக்கு தூக்குத்தண்டனை ண்டனையே கிடைச்சது. அவனுக்கு எதிரா வாதாடி தண்டனை வாங்கிக் கொடுத்ததுக்காக என் கையை வெட்டினான். நியாயமா பார்த்தா என் கடமையைச் செஞ்சிருக்கேன். இப்படியெல்லாம் தொடர்ந்தா இனிமேல் எந்த வக்கீல் குற்றவாளிங்களுக்கு எதிரா வாதாடுவாங்க? எல்லாத்துக்கும் மேலே நான் உன் அப்பா. நான் இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்டுச் சேத்துவைக்கிறதும், சம்பாதிக்கிறதும் யாருக்காக ஒரு நிமிஷம் யோசிச்சுப் பார். அப்படிப்பட்டவனோட உனக்கு சினேகிதம் தேவையா?"

அவர் வார்த்தைகளை வெறுமனே கேட்டுக் கொண்டிருந்தாள். பதில் சொல்லவேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை.

"இதுவரை நடந்ததெல்லாம் எப்படி வேணும்னாலும் இருந்துட்டுப் போகட்டும். இனிமேலாவது நீ எச்சரிக்கையா நடந்துக்கணும். குற்றவாளி ஒருபோதும் தப்பிக்கக்கூடாது!"

"இதையெல்லாம் எதுக்கு என்கிட்டச் சொல்றீங்க?"

"உன்கிட்டச் சொல்லாம இதையெல்லாம் வேற யார் கிட்டம்மா நான் சொல்றது? நீ நினைச்சா, இப்பக் கூட அவனைப் பிடிச்சுடலாம்."

"அது எப்படி?"

"அதுக்கெல்லாம் சுலபமான வழியிருக்கு."

"அப்படியா சொல்றீங்க?"

"நீயும் அவனும் எப்படி நெருக்கமா ஆனீங்கன்னு நான் சொல்லிட்டேன். இந்தச் சூழ்நிலையில நீ அவனைப் பிடிச்சுக் கொடுத்துட்டா உனக்குக் கிடைக்கிற மதிப்பு, மரியாதையை யோசிச்சுப் பார். போலீஸ் டிபார்ட்மெண்ட் பிடிக்கமுடியாத ஒருத்தனை நீ கெட்டிக்காரத்தனமா பிடிச்சுக் கொடுத்தா நானே பெருமிதப்பட முடியும்."

"எனக்குத் தூக்கம் வருதுப்பா!" அவள் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

"போய்ப் படுத்துக்க. அறைக் கதவை நல்லா மூடித் தாழ்ப்பாள் போட்டுக்க."

சுஜாதா அங்கிருந்து எழுந்து போனாள்.

பாலகிருஷ்ண பிள்ளையின் மனத்தில் நம்பிக்கை அரும்பத் தொடங்கியது. தான் கூறிய எதையும் அவள் மறுக்கவோ, விவாதிக்கவோ இல்லை. எனவே யோசிக்கத் தொடங்கியிருக்கிறாள் என்பது உண்மை.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால் பாலகிருஷ்ண பிள்ளை காரில் வெளியே கிளம்பினார். கை வெட்டுப்பட்ட பிறகு காருக்கு டிரைவர் ஒருவரை நியமித்திருந்தார்.

கார் இல்லாததால் சுஜாதா ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்தாள்.

திங்கட்கிழமை காலையில் சுமார் பத்துமணிக்கு தேவகியைத் தேடி போலீஸ்காரர் ஒருவர் நிர்மலாவின் வீட்டுக்கு வந்தார். குவார்ட்டர்ஸ் கிடைத்தாலும் அங்கு சில வேலைகள் இருந்ததால் தேவகி இன்னமும் அங்கு குடிபோகவில்லை.

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உங்களைக் கையோட கூட்டிட்டு வரச்சொன்னார்."

"என்ன விஷயம்?" தேவகி கேட்டாள்.

"தெரியலிங்களே!"

"கொஞ்சம் இருங்க... இதோ வந்துடுறேன்."

உடனே உடை மாற்றிக் கொண்டு போலீஸ் ஜீப்பில் ஏறிப் புறப்பட்டாள்.

"மிஸ் தேவகி உங்களை டிரெய்னிங் முடிஞ்ச பிறகு ஒரு நடவை பார்த்ததா ஞாபகம்." குறுப்பு பேச்சைத் தொடங்கினார்.

ஒரு மேலதிகாரி என்ற முறையில் வெகு களைத்தடனும் மரியாதையுடன் அவருக்கு வணக்கம் சொல்லிவிட்டு நின்றாள்.

"உட்காரும்மா!"

உட்கார்ந்தாள். அவரைப் பற்றி ஐயன் நிறையச் சொல்லியிருந்தாலும் எதையும் காட்டிக்கொள்ளாமல் இருந்தாள்.

"ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லத்தான் உங்களை வரவழைச்சேன்."

'அது என்னவாக இருக்கும்?' என்று யோசித்தவாறே குறுப்பைப் பார்த்தாள்.

"உங்களுக்கு இந்த ஊருக்கே டிரான்ஸ்ஃபர் போட்டிருக்கேன். உங்களோட சேவை இனிமேல் இந்த லிமிட்டில் தொடரட்டும். எங்களுக்கு அது ஒரு தேவையும் கூட."

தேவகி மரியாதை நிமித்தம் மௌனமாக இருந்தாள்.

"ஒரு கேஸ் விஷயமா உங்ககிட்டச் சொல்லத்தான் கூப்பிட்டேன்!"

"அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளையின் கையை வெட்டி ஒரு தூக்குத்தண்டனைக் கைதி தலைமறைவா இருக்குறது உங்களுக்குத் தெரியுமில்லையா?"

"பத்திரிகைகள்ல படிச்சிருக்கேன் சார்..."

"அவனைப் பிடிக்க நாங்க எல்லாவிதமான ஏற்பாடுகளும் செஞ்சிருக்கோம். அந்த வழக்கு இப்ப என் பிரஸ்டீஜ் விஷயமாகவும் மாறிடுச்சு. அதனால எப்படியும் அவனை பிடிச்சே ஆகணும்."

"அதுக்கு நான்..." வார்த்தையை முடிக்காமல் அவரைப் பார்த்தாள்.

"பெண் போலீஸ்ங்கிறதைவிட நீங்க ஒரு இளம்பெண் அப்பிடிங்கறதை ஞாபகத்துல வெச்சுக்கங்க. உங்களால என்னவெல்லாம் செய்யமுடியும்னு எனக்குத் தெரியும்."

குறாப்பு என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"என் யோசனைப்படி நீங்க செயல்பட்டா உங்களால அவனை சிறைப்படுத்த முடியும்!"

"புரியலை சார்?"

"சொல்றேன்" என்றவர் பேப்பர் ஒன்றில் பால்பாயிண்ட் பேனாவால் சில கோடுகளைப் போட்டு அதை தேவகியிடம் கொடுத்தார்.

"ஜயனோட வீட்டுக்கு நீங்க அடிக்கடி போகணும்."

தேவகி திடுக்கிட்டாள். 'நான் ஏற்கெனவே அங்கு சென்றுவந்ததைக் தெரிந்து கொண்டுதான் பேசுகிறாரோ?' என்று துணுக்குற்றாள்.

"ஒரு கான்ஸ்டபிளை உங்ககூட அனுப்பி வீட்டை உங்களுக்கு காமிக்கிறேன். நீங்க ஒரு போலீஸ்காரிங்கிறது அந்த வீட்டுல இருக்கிறவங்களுக்குத் தெரியவே கூடாது. ஏழைப் பெண்களுக்காக அரசாங்கம் சில சலுகைகளை அறிவிச்சிருக்காங்க. அந்த உதவிகளை அவங்களுக்குச் செஞ்சு குடுக்க விரும்பி வந்திருக்கிற சமூகசேவகியா உங்களைச் சொல்லிக்கங்க. நீங்க

அடிக்கடி அங்கே போனீங்கன்னா, ஜயன் உங்களோட தொடர்பு கொள்ள முற்படுவான் ஏன்னா ஜயனால இப்ப அவங்க வீட்டுக்குப் போக முடியாது. அதனால உங்களைத் தொடர்பு கொண்டு தன் வீட்டுச் செய்திகளைத் தெரிஞ்சுக்க முற்படுவான். அப்படி ஒரு பழக்கம் ஏற்பட்ட பிறகு நான் குறிப்பிடுற இடத்துக்கு அவனை வரச்சொல்லணும். மிச்சத்தை நாங்க பார்த்துக்குறோம். அவன் பிடிபட்டுட்டான்னா அதோட மொத்தப் பரிசும், புகழும் உங்களுக்கே கிடைக்கும்னு நான் உறுதியளிக்கிறேன். மேற்கொண்டு பதவி உயர்வு இதுக்கெல்லாம் நான் உங்களுக்கு உதவ முடியும். என்ன சொல்றிங்க?" குறூப்பு, தேவகியின் முகத்தை ஊன்றிப் பார்த்தபடி கேட்டார்.

என்ன பதில் சொல்வதென்று புரியாமல் அவள் தயங்கினாள். உயர் அதிகாரி ஒருவர் கட்டளையிடும்போது மறுக்கவும் முடியாதே!

ஜயனைப் பிடித்துக் கொடுப்பதாக வாக்குறுதி அளிப்பது முடியாத விஷயம். நடந்தது என்ன என்பது அவளுக்கே தெளிவாகத் தெரியும். ஜயனின் அம்மா தன் சொந்த மகளைப் போல் தன்னிடம் நடந்து கொண்டார். ஜயனும் தன்னை மனமார நேசிக்கிறார். குவார்ட்டர்ஸ் எடுத்ததேகூட அவரைக் காப்பாற்றத் தான்.

"தேவகி எதுக்கும் பயப்பட வேண்டாம். நீங்க போற ரூட்டில எல்லாம் மஃப்டியில நம்ம ஆளுங்க இருப்பாங்க. அதனால அவன் மேல உங்களுக்கு இரக்கம் இருக்கிறதா... ஏன் காதலிக்கிறதா நடிச்சாக்கூட அதில் தப்பே இல்லை. எச்சரிக்கையா நடந்துகிட்டாப் போதும்."

"சரி...சார்!" அவரிடமிருந்து எப்படியாவது தப்பித்தால் போதும் என்று சொல்லி வைத்தாள்.

"மதியத்துக்கு மேல் ஒரு போலீஸ்காரரை உங்கவீட்டுக்கு அனுப்பிவைக்கிறேன். அவர் உங்களுக்கு வீட்டைக் காமிச்சுக் கொடுத்த பிறகு ஏதாவது கடையில ஒதுங்கிக்குவார்."

அவள் ஒரு விதமாக அங்கிருந்து தப்பித்து வந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

நிர்மலாவின் வீட்டுக்கு வந்ததும் நடந்ததை அவளிடம் விவரித்தாள்.

"ஓகோ கதை அப்படி வருதா? நீ என்ன தீர்மானிச்சிருக்கிறே தேவகி?" நிர்மலா கேட்டாள்.

"ஒப்புக்காம இருக்க முடியாது. மேலதிகாரியோட உத்தரவு, சொன்னபடியெல்லாம் நான் நடக்கவும் செய்யணும். ஆனா ஏதாவது ஒரு கட்டத்துல இதையெல்லாம் தெரியாம ஐயன் என்னை அணுகுவார். போலீஸ்காரங்க சட்டுன்னு அவரைப் பிடிக்கவும் செய்வாங்க. அதையெல்லாம் என்னால தடுக்க முடியாதே!"

"தேவகி, நான் வெளிப்படையா ஒரு விஷயம் கேட்கட்டுமா?"

"கேள் நிர்மலா!"

"ஒரு போலீஸ்காரிங்கிற முறையில்அவரைப் பிடிச்சுக் குடுக்கிறது உனக்கு ஒரு கடமையாகவும் ஆகுது. பரிசு, பதவி உயர்வு இதையெல்லாம் எதுக்காக நீ தவிர்க்கணும்!"

"உண்மையைச் சொன்னா நான் அவரை விரும்புறேன்."

"என்ன தேவகி... பைத்தியகாரத்தனமா பேசுறே?"

"இதுல என்ன பைத்தியக்காரத்தனம்னு எனக்குப் புரியலை. குற்றவாளி இல்லேன்னு நிரூபிக்க இப்ப ஒரு வாய்ப்பும் கிடைச்சிருக்கு. நியாயம் என்னவோ, அது அப்ப வெளியில் வரும்."

மாலை நேரத்தில் போலீஸ்காரர் ஒருவர் தேவகியைத் தேடி மஃப்டியில் வந்தார்.

தேவகி விஷயத்தைப் புரிந்து கொண்டாள்.

ஆட்டோரிக்ஷாவை அமர்த்திக்கொண்டு இருவரும் ஐயனது வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

ஜயனது வீட்டை ஒட்டிய தெருவை அடைந்தபோது ஆட்டோ டிரைவர் முகத்தைத் திருப்பிக் கேட்டார்: "எங்க போறீங்க?"

தேவகி அந்த முகத்தை அந்தக் கணத்திலேயே அடையாளம் தெரிந்து கொண்டாள்.

# 20

அந்த டிரைவர் ஜயன்தான்.

தேவகியால் அதற்கு மேல் பேச முடியவில்லை. மூச்சு விடவே அவளுக்குத் திணறலாக இருந்தது. தனக்கு அருகில் போலீஸ்காரர் ஒருவர். முன்புறம் அவர்கள் வேட்டையாடும் ஜயன், மற்றொரு முறையில் அவளுக்கு அது வியப்பாகவும் இருந்தது.

ஜயனுடன் படித்த நண்பன் ஒருவனின் ஆட்டோ அது. அவனும் ஜயனும் கல்லூரித் தோழர்கள். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பாங்க் லோனில் வாங்கிய ஆட்டோ அது.

தற்சமயம் இந்த வேலை ஒன்று இரவைக் கழிக்க உதவுமென்று நண்பனிடம் கேட்டு ஆட்டோவை, யூனிஃபாரத்துடன் இரவலாக வாங்கியிருந்தபோது முதன் முதலாக வந்த பயணியே தேவகிதான்.

ஜயனிடம் பேசவேண்டுமென்று விரும்பினாலும் அருகில் இருப்பவரை நினைத்து தேவகி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அவனது தோற்றம் ஏகத்துக்கு மாறியிருந்தது. நிச்சயமாக யாராலும் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாதுதான். குரலும் நடவடிக்கைகளும் அறிமுகமாகியிருந்ததால் தேவகி சட்டென்று புரிந்து கொண்டாள்.

ஆட்டோ ஜயன் வீட்டைக் கடந்தது. போலீஸ்காரர் தேவகிக்கு வீட்டை அடையாளம் காட்டினார். பிறகு ஆட்டோ டிரைவரிடம் தெருமுனைவரை சென்று திரும்பச் சொன்னார்.

அதே போல் ஆட்டோ போய் வந்தது.

"ஏம்மா, நீங்க நிர்மலாம்மா வீட்டுக்குத்தானே போறீங்க? என் வீடு இங்கேதான் பக்கத்துல. நான் இறங்கிக்கிறேன். நீங்க தனியாப் போயிடுவீங்கள்ல?"

"போயிடுவேன்.... நீங்க இறங்கிக்குங்க!"

ஆட்டோ நம்பரையும், டிரைவரையும் ஒரு தடவை பார்த்துவிட்டு போலீஸ்காரர் இறங்கினார்.

ஆட்டோ டவுனை நோக்கி விரைந்தது.

"கூட வந்தவர் அப்பிராணி மாதிரி தெரியுது!"

"ஏன்?"

"இல்லை வயசுப் பொண்ணை ஆட்டோவுல தனியா விட்டுட்டு இறங்கிப் போறாரே?"

"உண்மைதான்! அடுத்த தடவை பார்த்தா உங்க பாராட்டை அவர்கிட்டச் சொல்றேன்."

"அது கிடக்கட்டும், எதுக்காக ரெண்டு போலீஸ்காரங்க வீடுவரைக்கும் வந்துட்டுப் போறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"ஜெயில்லேர்ந்து தப்பிச்ச ஒரு குற்றவாளியோட வீட்டை எனக்குக் காமிக்கிறதுக்காக வந்தார் இன்னொருத்தர்!"

"பார்த்துட்டீங்க இல்லையா?"

"வீட்டையும், நபரையும் பார்த்தாச்சு!"

தேவகி எல்லாவற்றையும் ஜயனிடம் தெரிவித்தாள்.

ஜயன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சில நேரம் மேலதிகாரிங்களோட வார்த்தையைத் தட்ட முடியாம நடந்துக்க வேண்டியிருக்கே!"

"எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழியைச் சீக்கிரமா கண்டுபிடிப்போம்!". கூறிய ஜயன், அவளை நிர்மலாவின் வீட்டு வாசலில் இறக்கிவிட்டுக் கிளம்பிப் போனான்.

வாசலிலேயே நின்றிருந்த நிர்மலா கேட்டாள்: "ஏன் இவ்வளவு லேட்?"

சிரித்தபடியே தேவகி நடந்ததை விவரித்தாள்-ஜயனைப் பார்த்தது உட்பட.

ஜயன் அங்கிருந்து மெயின் ரோட்டுக்கு வந்ததும் இரண்டு போலீஸ்காரர்கள் கைகாட்டி ஆட்டோவை நிறுத்தினர்.

ஜயன் 'என்ன வேண்டும்' என்பதுபோல் அவர்களைப் பார்த்தான்.

தங்கள் மாலை நேரத்தை உல்லாசமாக்க முயலும் அவர்களைச் சுமந்து கொண்டு ஆட்டோ அங்கிருந்து கிளம்பியது.

கோட்டயம் நகருக்குள் வந்தவர்கள் ஒரு ஓட்டலின் முன்னால் ஜயனது கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைத் திணித்துவிட்டு இறங்கிப் போனார்கள்.

அவர்கள் ஆட்டோவுக்குள் இருந்தவரையில் திக்திக்கென்று அடித்துக் கொண்டது ஜயனின் இதயம். இருப்பினும் சந்தேகம் ஏற்படாதபடி மிகவும் எச்சரிக்கையாக வண்டியை ஓட்டி வந்தான். அவர்கள் இறங்கிய பிறகுதான் ஜயன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ஆட்டோவைத் திருப்பி நண்பன் நிறுத்தும் ஸ்டாண்டிலேயே போய் நிறுத்தினான். பின்புறம் படுத்து உறங்கினான்.

மறுநாளும் மாதவ குறுப்பு தேவகியை வரச் சொன்னார்.

"போன விஷயம் என்ன ஆச்சு?"

"நீங்க சொன்ன மாதிரியே அவங்களை அறிமுகப் படுத்திக்கிட்டேன்."

"ரொம்ப நல்லது. இதுவரைக்கும் அந்தக் குடும்பத்துக்கு உதவினது அவனோட வருமானம் தான். இப்ப அதையெல்லாம் யார் கவனிக்குறாங்கன்னு மெதுவா தெரிஞ்சுக்கணும். அது

மட்டுமில்லாம நேரத்துக்கு ஏத்தமாதிரி சமயோசிதமா நடந்துக்கணும்! நம்ம லட்சியத்தை மறக்கக் கூடாது. எந்த நிலையிலும் அவனுக்குச் சந்தேகம் வந்துடாம பார்த்துக்கணும். சரி போயிட்டு வாங்க."

குறுப்பு விடை கொடுத்ததும் தேவகி அங்கிருந்து வெளியேறினாள்.

அன்று மாலையில் நீலகண்டன் நாயரின் வீட்டில் நான்கு நண்பர்களும் சந்தித்தனர்.

"இந்த நிமிஷம் வரைக்கும் அவனைப் பத்தி எந்தத் தகவலும் தெரியலை!" மாதவ குறுப்பு கூறினார்.

"இதெல்லாம் உங்க விசாரணை முறையில் இருக்கிற குறைபாடு. தூக்கு தண்டனை பெற்ற ஒரு குற்றவாளி ஜெயில்லேர்ந்து தப்பிக்கிறதும், அதுக்கு காரணமான போலீஸ்காரங்களை இன்னும் தண்டிக்காம இருக்கிறதும் முழுக்க முழுக்க உங்களோட தப்பு. அதே மாதிரி வெளியில வந்துட்ட அவனுக்கு யாரெல்லாம் உதவி செஞ்சுட்டு இருக்காங்கன்னும் உங்களால கண்டுபிடிக்க முடியலேன்னா, இதை என்னன்னு சொல்றது?" பாலகிருஷ்ணப் பிள்ளை தன் வெட்டுப்பட்ட கையை வருடியபடி சொன்னார்.

எதிர்பாராமல் ஒரு மாதம் ஆஸ்பத்திரி சிகிச்சைக்கு நடுவிலும் வாதாட வேண்டியிருந்த வழக்குகளை ஒருவிதமாகச் சமாளித்த பிள்ளை, நடமாட முடிந்ததும் டிரைவரிடம் வண்டியை எடுக்கச் சொல்லி, நாயரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரைப் பொறுத்தவரை உடனடியாகச் செய்ய வேண்டியது ஜயனைப் பிடித்துச் சிறையிடுவது அல்ல; அவனையே இல்லாமல் செய்வது தான்.

அவனது வழக்கு அப்பீலுக்கு வந்துவிட்டதால் அது தொடர்பாகப் பழைய விஷயங்களை யாரெல்லாமோ கிளற முற்படலாம். இந்த ஒன்றில்லாமல் வேறு எந்தெந்த பூதங்களோ அப்போது கிளம்பலாம். பத்திரிகைகாரர்கள் பரபரப்புக்காக

கிடைக்கிற செய்திகளை உடனுக்குடன் வெளியிடவும் செய்வார்கள். இதெல்லாம் ஆரோக்கியமான சூழ்நிலையாக அவருக்குத் தோன்றவில்லை.

ஒரு வாரத்துக்கு முன்னால் போத்தன் வர்கீஸும், நடனமணி இருவரும் கோட்டயம் நகரின் மத்தியில் காருக்குள் மயங்கிக் கிடந்ததை செய்தியாக வெளியிட்டவர்கள் தேவையில்லாமல் நீலகண்டன் நாயரின் கார் டிக்கியில் ஏற்கெனவே ஓர் இளம் பெண்ணின் பிணம் கிடந்ததும் குறிப்பிடத்தக்கது என்று எழுதியிருந்தனர்.

போதாக்குறைக்கு வாசகர் கடிதம் என்ற பெயரில் அவங்களுக்குத் தோன்றியதை எல்லாம் எழுதியும் வெளியிடுகின்றனர்.

கேஸ் ஹைகோர்ட்டுக்கு வந்துவிட்டதால் யாரெல்லாமோ இதைக் குத்திக் கிளறி குளிர்காய முற்படுவார்கள். கன்னாபின்னா வென்று கேள்விகள் கிளம்பலாம்.

"இப்போ என்ன செய்யலாம்னு சொல்றீங்க!" பிள்ளை அஷ்றாப்பின் முகத்தைப் பார்த்துக் கேட்டார்.

"முதல்ல அவனைப் பிடிக்கணும். பிடிச்சாலும் பிடிக்க முடியலேன்னாலும் அவனை உயிரோட விட்டு வைக்கக்கூடாது. மார்ணாகுளத்துக்கு அவன் போயிருந்தது, வக்கீல் பட்டாச்சார்யாவைச் சந்திக்கத்தான். அன்றைக்கு பட்டாச்சார்யா வந்திருந்தார்னு ஏர்போர்ட்ல தகவல் சொன்னாங்க. ஆனா, அவர் எந்த ஓட்டல்லையும் தங்கினார்னு தெரியலை."

"அப்படின்னா பட்டாச்சார்யாவும் பேரை மாத்திக் கொடுத்திருக்கணும்!"

"எதுக்காக அவர் அப்படிச் செய்யணும்?" போத்தன் வர்கீஸ் கேட்டார்.

"சொந்தப்பெயரில் தங்கியிருந்தா போலீஸ்காரங்க, தன்னைப் பார்க்க வர்ற ஜயனை எப்படியும் கைது பண்ணுவாங்கன்னு தெரியும்."

ஓட்டல் லூசியாவில் சுஜாதாவோட கார் இருந்ததா தகவல் வந்ததே. அதுக்காக ரெண்டு போலீஸ்காரர்களையும் காவல் போட்டாங்களே என்ன ஆச்சு?"

"உண்மைதான். அவன் சுஜாதாவையும் மயக்கித் திசை திருப்பிட்டான்."

"இந்தச் செய்தி நிஜமா!" நீலகண்டன் நாயர், பிள்ளையிடம் கேட்டார்.

"உண்மைதான். வக்கீல் பட்டாச்சார்யாவைப் பார்க்க என் மகளோட வண்டியை மகளோடவே கொண்டு போயிருக்கான்."

"இவன் எப்படி இந்த மாதிரி ஒவ்வொருத்தரையும் குறிவெச்சுப் பிடிக்கிறான்?" என்ற போத்தன் வர்கீஸ் விஸ்கி பாட்டிலின் கழுத்தைக் கோபத்துடன் திருகித் திறந்தார்.

"என் கையை அவன்தான் அநியாயமா வெட்டிட்டான்னு புரிய வெச்சதும் அவள் மனசு மாறிட்டான்னு தோணுது!" பிள்ளை சொன்னார்.

"உங்களோட கடந்த கால வரலாற்றை அவன் உங்க பொண்ணுக்குப் பாடம் நடந்தியிருப்பான்னு தோணுது!"

"எனக்கும் அப்படித்தான் தோணுது. இல்லேன்னா, முன்னப் பின்ன பழக்கமில்லாத அவன்கூட எப்பிடி இவள் புறப்பட்டுப் போவாள்? குறுப்பு சொன்ன மாதிரியே அவளைக் கூப்பிட்டு வெச்சுப் பேசினேன். நான் சொன்னதை அவள் நம்பிட்டாள்னு நினைக்கிறேன். இனி அவள் எப்படி நடந்துக்கிறாள்னு பாத்துடலாமே!"

"அவ்வளவு போலீஸ்காரங்களும் எச்சரிக்கையா ரோடு பிளாக் பண்ணியும் அவன் எப்பிடி எர்ணாகுளத்துலேர்ந்து திரும்பி வந்தான்னு தெரியலையே? அன்னிக்கு எந்த ஒரு கார்லயோ, டாக்ஸியிலயோ ரெண்டே ரெண்டுபேர் பயணம் செய்ததாகத் தெரியலை. நாலே நாலு வண்டிகள் மட்டும்தான் ஆணும் பெண்ணுமா பயணம் செஞ்சிருக்காங்க. அவங்க நாலு ஜோடியும்

ஐம்பது வயசுக்கு மேல ஆனவங்க! சுஜாதா எத்தனை மணிக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்? சொல்லுங்க பிள்ளை?" குறுப்பு கேட்டார்.

"சுமார் ஒன்பதரை இருக்கும்!"

"யோசிக்க வேண்டிய விஷயம்! அவங்க எந்த வழியில வந்திருப்பாங்க?" குறுப்பு யோசனையில் ஆழ்ந்தார்.

# 21

ஒருவேளை டாக்ஸியில வந்திருப்பாங்களோ?" நாயர் கேட்டார்.

"அப்பிடி இருந்தாலும் தெரிஞ்சிருக்குமே!"

"அவன் செய்யிறதெல்லாம் இப்படித்தான் ஒரே குழப்பமா இருக்கு!"

யாரோ கதவைத் தட்டுவது போல் கேட்கவே மாதவக்குறுப்பு கைத்துப்பாக்கியை நீட்டியவாறு கதவை நெருங்கினார். இந்தத் தடவையும் ரூம்பாய் ஆள் மாறி வந்துவிடுவானோ என்கிற பயத்தில்தான் அப்படிச் செய்தார்.

இப்போது அப்படி நடக்கவில்லை.

"யாராவது உன்னை வழிமறிக்கப் பார்த்தாங்களா?" நீலகண்டன் நாயர் கேட்டார்.

"அதுக்கு வழியில்லையே! இவன் என் கார்லதானே வந்தான்?" பாலகிருஷ்ணப் பிள்ளை ரோஸ்ட் செய்த கோழியின் துண்டைப் பார்த்தபடி கூறினார்.

இருப்பினும் குறுப்பு ஓட்டல் பாயின் முகத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார். அவன் முகத்தில் ஏதாவது மாற்றம் ஏற்படுகிறதா என்று கவனிப்பது அவர் நோக்கம்.

"உனக்கு ஏதாவது தோணுதா?" குறூப்பு அவனிடம் நேரிடையாகக் கேட்டார்.

"என்ன கேட்குறீங்க சார்?" ஓட்டல் பாய் ஒன்றும் புரியாதவனாகக் கேட்டான்.

"சரி போகலாம் நீ!"

அவன் வெளியேறிய உடனே குறூப்பு கதவை மூடி உட்புறமாகத் தாழிட்டார்.

"ஹைகோர்ட்டில் கேஸ் நடக்கும்போது எப்படியும் அவனைப் பிடித்துவிடலாம். அட்வகேட்டைச் சந்திக்காமல் இருக்கமுடியாது அவனால்!"

"போலீஸ் அதைப் பண்ணிட்டா நம்ம திட்டம் என்ன ஆகறது?"

"அதுக்கு ஒரு வேலை செஞ்சுட்டா போகுது!" குறூப்பு சொன்னார்.

"நடக்கக்கூடிய விஷயம்தானா?" நீலகண்டன் நாயர் கேட்டார்.

"நடக்காததையா நான் சொல்வேன்?"

"சொல்லுங்க பார்க்கலாம்."

"அவனை எதிர்த்துத் தட்டணும்னா கொலைகாரனையே அதுக்குப் பயன்படுத்தணும். பதினைஞ்சு வருஷ தண்டனை அனுபவிச்சுட்டு ஒருத்தன் ரிலீஸாகப் போறான். உங்களுக்கும் அவனைத் தெரியும். சைத்தான் மாதவன்கிறது பேர். கொலை பண்றது அவன் தொழில். அவன்கிட்ட சொல்லிட்டா வேலை சுலபமா முடிஞ்சுடும். இந்த கேஸுக்காக அவனை பிடிக்கவே மாட்டேன்னு உறுதி கொடுத்துட்டா போகுது. அதை நான் பார்த்துக்கிறேன்."

"இப்ப சொன்னீங்களே, இது உருப்படியான ஐடியா! இதுமாதிரி ஏதாவது சொன்னா முயற்சி பண்ணலாம்.

அதைவிட்டுட்டு பொண்ணுங்களை நம்பிட்டிருக்கிறது சரியாத் தோணலை எனக்கு!" போத்தன் வர்கீஸ் தனது கருத்தைத் தெரிவித்தார்.

அது வேற விஷயம். அவனைப் பிடிக்கணும்னா அதுக்கு பெண்கள்தான் வேணும். இப்போதைய சூழ்நிலையில் ஒண்ணு சுஜாதா, இல்லேன்னா தேவகி அதுக்கு அவசியம். இவங்க நெனைச்சா விஷயம் சுலபம். ஆனா இவங்களை எப்படி சந்திக்க வைக்கிறது!" குறுப்பு கேட்டார்.

மது பாட்டில்கள் இரண்டு காலியானபோது நான்கு பேரும் போதையில் மிதந்தனர்.

"போத்தன் வர்கீஸ்... இந்த நிலைமையில தனியா டிரைவ் பண்ணிட்டாப் போயிடுவீங்களா?" நீலகண்டன் நாயர் கேட்டார்.

"அதை பத்தி நீங்க கவலையே படவேண்டாம். நான் கார்ல உட்கார்ந்து ஸ்டீயரிங்கைப் பிடிச்சுட்டா மத்ததை நானே பார்த்துக்குவேன்."

"குறுப்பை, பிள்ளையே கொண்டுபோய் இறக்கிடுவீங்க, இல்லையா?"

"அது வழக்கம்தானே?"

மணி பன்னிரண்டு அடிக்கும் சத்தம் கேட்டதும் எல்லோரும் அவரவர் இருப்பிடத்திலிருந்து எழுந்தனர். எழும்போதே தடுமாறி விழப்போன போத்தன் வர்கீஸை, குரூப்பும் பிள்ளையும் சேர்ந்து தாங்கிப்பிடித்தனர். கார்வரை கொண்டுபோய் அவரை முன்புற ஸீட்டில் உட்காரவைத்தனர்.

"நீங்க யாராவது வர்றீங்களா?" போத்தனின் குரல் தெளிவற்று ஒலித்தது.

"யாரும் வரலை. நீங்க வீடு போய்ச் சேர்ந்ததும் ஒரு போன் பண்ணினாப் போதும்."

"ஏன் வீடுவரைக்கும் போயிடுவனா மாட்டேனாங்கிற சந்தேகமா?" போத்தன் கேலித் தொனியில் கேட்டார்.

"அப்படின்னா நீங்க இன்னும் நிதானமா இருக்குறீங்க இல்லையா?"

அதற்குப் பதிலளிக்கக் காத்திருக்காமல் போத்தன் காரை ஸ்டார்ட் செய்தார்.

"அவர் முழுசா ரெண்டு பாட்டில் சாப்பிட்டாலும் வீட்டுக்குப் போய் வட்டிக்கணக்கை சரிபார்த்துட்டுதான் படுப்பார். அந்த வட்டிதானே நம்மளையும் சந்தோஷப் படுத்திட்டிருக்குது!" நீலகண்டன் நாயர் சொன்னார்.

"டிரைவர்..." பாலகிருஷ்ண பிள்ளை அழைத்தான்.

உடனே டிரைவர் அவரது காரை ஸ்டார்ட் செய்தார்.

இருவரும் பின்ஸீட்டில் ஏறி உட்கார்ந்தனர்.

மறுநாள் காலை சென்ட்ரல் ஜங்க்ஷனில் ரோட்டின் நட்டநடுவே ஏற்றப்பட்ட கண்ணாடிக் கதவுகளுடன் ஒரு கார் நின்றுகொண்டிருப்பதை எட்டு மணியானபோது ஜனங்கள் கவனிக்கத் தொடங்கினர்.

தகவலறிந்து போலீஸ்காரர்கள் வந்து காரின் கதவுகளைத் தட்டினர். காரின் பின் ஸீட்டில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் குறுப்பும், அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளையும் சுயநினைவற்றுக் கிடந்தனர்.

"உள்ளே யாருங்க?"

"யா...ரு....யா...ரு?" தெளிவற்ற சத்தம் காருக்குள்ளிருந்து எழுந்தது.

காரைச் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்ப்பவர்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர்.

"ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளியோ என்னவோ? போன தடவை அவரும் ஒரு பொண்ணும் இப்பிடிப் படுத்திருந்தாங்க!" லாட்டரி டிக்கெட் விற்கும் இளைஞன் ஒருவன் சொன்னான்.

கார் ரோட்டை மறித்து நின்றுகொண்டிருப்பதை போலீஸ்காரர்கள் ஸ்டேஷனில் தெரிவித்தனர்.

"இது என்னய்யா தொல்லை?" சப்-இன்ஸ்பெக்டர் சலித்துக்கொண்டார்.

"என்ன பண்ணணும் சார்?" தகவல் சொன்ன போலீஸ்காரர் கேட்டார்.

"உள்ளே யார் இருக்குறாங்க?"

"கறுப்புக் கண்ணாடி போட்டிருக்கிறதால ஒண்ணும் தெரியலை சார்!"

"காரை திறந்து அங்கேயே நாலு போடு போட்டு இழுத்துட்டு வாங்க. மிச்சத்தை நான் பார்த்துக்கிறேன்."

உத்தரவு கிடைப்பதற்காகக் காத்திருந்ததுபோல் நான்கு போலீஸார் கிளம்பினர்.

போலீஸ் ஜீப், ஜங்க்ஷனின் குறுக்காக நின்றிருந்த காரை நெருங்கியது.

"திறடா ராஸ்கல்!" போலீஸ்காரர் இருவரும் இரண்டு பின்புறக் கதவுகளையும் லத்தியால் தட்டியபடி அலறினர்.

தொடர்ந்து காரின் கதவைத் தட்டவே உள்ளே படுத்திருந்த இருவரும் மெதுவாகக் கண்களைக் திறந்தனர்.

குறூப்பு கோபத்துடன் தன் பக்கமிருந்த கதவைத் திறந்தார்.

"இறங்குடா நா..." பேச ஆரம்பித்த வார்த்தையை முடிப்பதற்கு முன்பாகவே அந்த போலீஸ்காரின் கை உயர்ந்து சல்யூட் அடித்தது. உடனே மற்ற மூவரும் உஷாராகி அணிவகுத்து நின்றனர்.

சுற்றிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் விஷயம் புரியாமல் குரல் எழுப்பத் தொடங்கினர்.

போலீஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களை லத்தியைக் காட்டி விரட்டத் தொடங்கினர்.

"என்னங்க நியாயம் இது! ராத்திரி முழுசா, பகல் எட்டுமணி வரையில ஒரு கார் இப்பிடி ரோட்டை அடைச்சுட்டு நிக்குது. உள்ள இருக்குற ஆளைப் பார்த்து சல்யூட் அடிக்கிறீங்க. இதே அப்பாவி ஜனமா இருந்தா என்ன நடந்திருக்கும் இங்கே?" என்று கேட்ட ஓர் இளைஞன் வந்து காரின் கதவை விசையாகத் திறந்தான்.

காருக்குள் இருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ குறுப்பையும், அட்வகேட் பாலகிருஷ்ண பிள்ளையையும் சுற்றிலுமிருந்தவர்களுக்கு அடையாளம் தெரிந்தது.

நிலைமை சரியில்லை என்பதை உணர்ந்த போலீஸார் வி.ஐ.பி.க்கள் இருவரையும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து விரைவாக மறைந்தனர்.

சற்று நேரத்தில் வொர்க்ஷாப்பிலிருந்து வந்த மெக்கானிக் ஒருவர் காரை எடுத்துக்கொண்டு போனார்.

அன்று மாலை பத்திரிகைகளில் இந்தச் செய்தியை முக்கியத்துவம் கொடுக்காமல் பிரசுரம் செய்திருந்தனர்.

நிறைய விற்பனையாகும் மாலை நாளிதழ் இரண்டின் மொத்தப் பிரதிகளையும் விவரமறிந்ததும் பாலகிருஷ்ணப் பிள்ளை விலை கொடுத்து வாங்கிவரச் சொன்னார்.

இருப்பினும் அதற்குள் செய்தி பரவி விட்டிருந்தது.

அன்று இரவு நீலகண்டன் நாயரின் வீட்டில் நண்பர்கள் வழக்கம் போல் கூடினர்.

"என்னங்க நடந்தது?"- நாயர் குறுப்பிடம் கேட்டார்.

"என்ன நடந்ததுன்னு ஒண்ணும் தெரியலை. நேத்து இங்கேருந்து கார்ல ஏறிக் கிளம்பினோம்."

"டிரைவ் பண்ணினது யாரு?"

"என் டிரைவர்தான்!"

"அப்ப டிரைவர் எங்கே?"

"இதுவரைக்கும் அவனை நான் கண்ணால பார்க்கலை! வீட்டுக்கு ஆள் அனுப்பினபோது வீட்டுலயும் அவன் இல்லேன்னு தகவல் சொன்னாங்க."

"அப்படின்னா இதுலதான் ஏதோ சிக்கல்" நாயர் கூறினார்.

"எனக்கும் அப்படித்தான் தோணுது." மாதவக் குறுப்பு ஒப்புக் கொண்டவராகக் கூறினார்.

"வண்டியை ஓட்டிட்டு வந்தவன் உண்மையில் உங்க டிரைவராக இருந்தா வேணும்னே உங்களை அவமானப் படுத்தத் திட்டம் போட்டிருக்கணும். இல்லேன்னா, வேற யாரோ அவனை அடிச்சுப் போட்டு ஆள்மாறாட்டம் செஞ்சு இதை நடத்தியிருக்கணும்!"

"அன்னிக்கு ஒரு நாள் என்னை ஏமாத்த சப் இன்ஸ்பெக்டரா வேஷம் போட்டானே அவனாத்தான் இருக்கணும்."

"அப்படியும் இருக்கலாம். அப்படின்னா என் டிரைவரை அவன் காயப்படுத்திக் கட்டிப் போட்டிருப்பான்!"

"நிலைமை நாளுக்கு நாள் சிக்கலாகிட்டே வருது. இதனால் எனக்கு சஸ்பென்ஷன் கூட கிடைக்கலாம்னு நினைக்கிறேன்." மாதவக் குறுப்பு கூறினார்.

"அதுக்கெல்லாம் பயப்படாதீங்க அதையெல்லாம் ரொம்ப சுலபமா சமாளிச்சிடலாம்!" நீலகண்டன் நாயர் தைரியமளித்தார்.

"சரி பேசிக்கிட்டே இருந்தா நேரம் போறதுதான் மிச்சம். ஏதாவது இருந்தா முதல்ல கடைவிரியுங்க." போத்தன் பர்கீஸ் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தபடி குறுக்கிட்டார்.

பாட்டில், கிளாஸ், பொட்டலங்கள் மேஜைமீது வந்து சேர்ந்தன.

"இன்னிக்கு எல்லாமே ரொம்பவும் முன்னேற்பாடா செஞ்சு வெச்ச மாதிரி இருக்கே?"

"ஒரு பயலையும் நம்ப முடியாத நிலைமை ஆகியிருக்கே. அதனால நானே நேரா ஓட்டலுக்குப் போய் வாங்கீட்டு வந்தேன்."

"அப்படின்னா நம்மள நாற அடிக்கணும்னு செயல்பட்டவன் ஜயன்தான் இல்லையா?"

"வேற யாரு?"

அப்போது போன் மணியடித்தது. நீலகண்டன் நாயர் ரிசீவரை எடுத்தார்.

"உங்க பொண்ணுதான், இந்தாங்க!" நாயர், பிள்ளையிடம் கூறினார்.

பிள்ளை ரிசீவரைக் காதில் பொருத்தினார்.

"என்ன டிரைவர் வந்துட்டாரா? அப்படியா உடனே காரை எடுத்துட்டு நேரா இங்கே வரச் சொல்லு!" பிள்ளை உத்தரவிட்டு ரிசீவரை வைத்தார்.

"இந்த நேரத்திலயாவது அவன் கிடைச்சானே. என்ன நடந்துச்சுன்னாவது தெரிஞ்சுக்கலாம். வரட்டும் அதுதான் வரச் சொல்லியிருக்கேன்." பிள்ளை கூறினார்.

கிளாஸுகள் நிறைந்து காலியாகி, நிறைந்து காலியாகி மறுபடி நிறைந்து காலியாகிக் கொண்டிருந்தன. சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு வெளியே காரின் ஹாரன் சத்தம் கேட்டது.

"உங்க ஆள் வந்துட்டார் போலிருக்கு!" போத்தன் வர்கீஸ் சொன்னார்.

"நீங்க தனியா போகவேண்டாம். இருங்க நானும் வர்றேன்." நாயர் எழுந்தபோது, மாதவக் குறுப்பும் எழுந்தார்.

"எதுக்கும் எச்சரிக்கையா இருக்கிறது நல்லதுதான்." போத்தன் ஆமோதித்தார்.

நாயரும் குறுப்பும் படிக்கட்டுகளில் இறங்கிக் கீழ்த்தளத்துக்கு வந்தனர்.

"பிள்ளை, கார்தானே இது?" நாயர் கேட்டார்.

"ஆமாம் சார்!" டிரைவர் பதிலளித்தார்.

"உங்க பேரு என்ன?"

"மாத்துக்குட்டி!"

"வாங்க, மேல போகலாம்!" நீலகண்டன் நாயர் சொன்னார். கூடவே அவன் முகத்தில் டார்ச்லைட்டை அடித்துப் பார்த்தார்.

"ஏன் உங்க முகமெல்லாம் வெள்ளிறிப்போன மாதிரி இருக்கு?"

"அது ஒரு பெரிய கதை சார். விவரமா சொல்றேன் ."

"சரி சரி... உள்ளே வந்து சொல்லுங்க. பிள்ளை உங்களை எதிர்பார்த்துட்டிருக்கார்."

இருவரும் இருபுறமாக டிரைவரை மேல் அறைக்குள் கொண்டு வந்தனர்.

"ஆளைப் பார்த்தா பேய் அடிச்ச மாதிரி இருக்கிறாரே!" பிள்ளை கேட்டார்.

"உயிர் தப்பிச்சதே கடவுள் புண்ணியம் சார்!"

"அப்படியா... முதல்ல தெம்பு வரட்டும். இந்தாங்க மருந்தைக் குடிங்க!" போத்தன் வர்கீஸ் கொடுத்தார்.

டிரைவர் நிதானமாக ஒரு கிளாஸில் விஸ்கியை ஊற்றி, சோடா கலந்து ஒரே மடக்கில் விழுங்கினான்.

மிகவும் தயக்கத்துடன் அவர்கள் எல்லோரையும் பார்த்து விட்டு கோழிக்கறியில் ஒரு துண்டை எடுத்து மென்றான்.

"இனிமேல் என்ன நடந்ததுன்னு விளக்கமா சொல்லுங்க பார்ப்பி!" பிள்ளை சொன்னார்.

"சார், உங்களை இங்கே இறக்கி விட்டுட்டு சோடா குடிக்கலாமேன்னு அப்பிடியே வெளியே போனேன். அப்போ

ஒருத்தன் ஆட்டோவைக் கொண்டுவந்து என் பக்கத்துல நிறுத்தினான். நீங்கதானே கை வெட்டுப்பட்ட பாலகிருஷ்ண பிள்ளையோட டிரைவர்ன்னு கேட்டான்.'

"எந்த நாய் அப்படிக் கேட்டவன்?" பாலகிருஷ்ணப் பிள்ளை கோபத்துடன் கேட்டார்.

"சொல்றேன் சார். ஆமான்னு சொன்னேன். ஒரு முக்கியமான கேஸ் விஷயம்தான். சரி, சாருக்கு வருமானம் வர்ற விஷயமாச்சேன்னு நினைச்சேன்."

"நான்தான் சர்க்கார் வக்கீலாச்சே?"

"எனக்கு அதெல்லாம் ஞாபகம் வரலை சார்."

"சரி... அப்புறம்!"

"ஆட்டோ ரிக்ஷாவில என்னை ஏத்திட்டு போனான்."

"நேரா சாராயக் கடையா?"

"இல்லை சார் பிராண்டிக் கடை!"

"ம்... சரி, அப்புறம்?"

"மூணு பெக் சாப்பிட்டேன், அப்புறமா பேசிக்கிட்டே அவன் கூட நடந்து வந்தேன். அதுக்குப் பிறகு என்ன நடந்ததுன்னு ஞாபகமே வரலை. நான் விழிச்சுப் பார்த்தபோது ரிப்பேருக்காக ரோட்டு ஓரத்துல நிறுத்தி வச்சிருந்த பஸ்ஸுக்குள்ள கிடக்கிறது தெரிஞ்சது. அவன் கொடுத்த மயக்க மருந்தோட கிறக்கம் இன்னும் போகலை சார்."

"அவனை உன்னால அடையாளம் காட்டமுடியுமா மறுபடியும்?"

"தலையில் சுருட்டைமுடி. கனமான மீசை வெச்சிருந்தான்!"

"குறுப்பே அதுதான் ஜயன்!"

"ஆள் அவனேதான். ஆனா வேஷம் மாறியிருக்கான்னு தோணுது!"

அப்படியானால் தனது காரை ஓட்டிவந்தவன் ஐயன்தான் என்று அறிந்தபோது பிள்ளையின் உடம்பு ஒரு கணம் நடுங்கியது.

"சரி மாத்துக்குட்டி, வேணும்னா இன்னும்கூட ஒரு கிளாஸ் சாப்பிட்டுக் கீழ காத்திருங்க. எவன் வந்தாலும் ஜாக்கிரதையா நடந்துக்கங்க!"

"இனி கடவுளே வந்து கூப்பிட்டாக் கூட நான் போவேனா சார்? மாட்டேன்!"

மாத்துக்குட்டி மீண்டும் பழையபடி விஸ்கியை எடுத்துக் குடித்துவிட்டு புறப்பட்டான்.

"அவனோட அக்கிரமங்களுக்கு அளவே இல்லாமப் போகுதே!" நாயர் கூறினார்.

"விசாரணை மும்முரமா நடக்குது. மாதவன்கிட்ட இங்கே வரச்சொல்லியிருக்கேன். அவனைப் பார்த்தா என் திட்டம் எப்படின்னு உங்களுக்கு புரியும்!"

"எதுக்காக அவனையெல்லா இங்கே வரச்சொல்றீங்க?" நாயர் கேட்டார்.

"வேண்டாம்னா நம்ம திட்டத்தைக் கைவிட்டுடலாம்!"

"நான் அதுக்காகச் சொல்லலை. எக்குத்தப்பா நம்ம மேலேயே திரும்பிட்டான்னா... அந்த பயத்தாலதான்."

அப்போது நாயரின் வேலைக்காரன் அறைக்கதவைத் தட்டினான்.

"என்னடா?" நாயர் கேட்டார்.

"உங்களைப் பார்க்க மாதவன்னு ஒருத்தர் வந்திருக்கார்!"

"மாதவனா?"

"நான் சொன்ன பார்ட்டிதான், மாதவன்" குறுப்பு நினைவூட்டினார்.

"மேலே அனுப்பு!"

கீழே போன வேலைக்காரன் சற்று நேரத்தில் மற்றொரு மனிதனுடன் திரும்பி வந்தான்.

"சரியான பார்ட்டிதான்!" மாதவனை முதல் தடவை பார்த்தபோதே பாலகிருஷ்ண பிள்ளை ஒப்புக்கொண்டார்.

சரியான ஒரு கொலைகாரன் என்பதை அவன் முகமே எடுத்துக்காட்டியது. நரம்புகள் புடைத்து எழுந்திருந்த கன்னக் கதுப்புகள். முட்டைக்கண்கள். அடங்கமாட்டேன் என்று அடம் பிடித்து நிமிர்ந்து நிற்கும் முடிகள் திரண்ட, முரட்டுதனமான தோற்றம். பார்வையிலே பயத்தை ஏற்படுத்தினான் மாதவன். ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் அனுபவஸ்தன் என்பதைக் காட்டும் தழும்புகள் எங்கெங்கெல்லாமோ தட்டுப்பட்டது.

"சாப்பிடுறியா மாதவன்?" குறுப்பு கேட்டார்.

அந்தக் கேள்வியே அவன் கண்களில் ஒரு பளபளப்பை ஏற்படுத்தியது.

போத்தன் வர்கீஸ் ஒரு பாட்டிலையும் கிளாஸையும் அவனிடம் நீட்டினார்.

கிளாஸைப் பயன்படுத்தாமல் நேராக பாட்டிலைத் திறந்து அப்படியே வாயில் கவிழ்த்துக் கொண்டான் மாதவன். அப்போதும் அவன் முகத்தில் எந்தவிதமான உணர்வு மாற்றமும் தென்படவில்லை. தாகத்துடனிருப்பவன் தண்ணீரைக் குடிப்பது மாதிரி விஸ்கியை விழுங்கினான்.

"நீங்க குறிப்பட்ட ஆளை நான் எங்கேபோய் கண்டுபிடிக்கிறது?" - மாதவன் கேட்டான்.

"அப்படியெல்லாம் குறிப்பா ஒரு இடத்தைச் சொல்ல முடியாது. அவன் வீடு இருக்கிற இடத்தைச் சொல்றோம். அடையாளமும் காட்டுறோம். அவன் பேரு ஜயன். ராத்திரி நேரத்துல அவன் வீட்டுக்கு வர்றதுக்கு வாய்ப்பு இருக்கு. அதுக்குமேல உன் கெட்டிக்காரத்தனம்."

"இவ்வளவு தகவல் போதும். அவனை நான் இங்கேயே கொண்டுவந்து போடுறேன். ஆமா உயிரோட வேணுமா, பொணமா வேணுமா?"

"நல்ல கேள்வி! உயிரோட கொண்டுவந்து, இங்கே வந்த பிறகு பிணமாக்கினா போதும்" பாலகிருஷ்ண பிள்ளை கூறினார்.

மாதவன் அங்கிருந்து வெளியேறினான். வேலைக்காரன் அவனை 'கேட்' வரை சென்று வழியனுப்பி வைத்தான்.

சாலைக்கு வந்ததும் ஆட்டோ ஒன்று அவனருகே வந்து நின்றது.

"எங்கே போகணுமுங்க?"- ஆட்டோ டிரைவரின் கேள்விக்கு பதில் சொல்லாத மாதவன் பின்புறம் ஏறி உட்கார்ந்தான்.

ஆட்டோ முன்புறமாக நகரத் தொடங்கியது.

# 22

முதல் தடவையா இந்தப் பக்கம் வர்றீங்களா?" ஆட்டோ டிரைவர் மாதவனிடம் கேட்டார்.

"உனக்கேம்பா இதெல்லாம்?" மாதவன் ஸீட்டில் நன்றாகச் சாய்ந்துகொண்டு பக்கவாட்டுக் கம்பியைப் பிடித்துக்கொண்டான்.

ஆட்டோ எங்கும் நிக்காமல் சென்றுகொண்டே இருந்தது, இடமும் தெரியவில்லை.

"ஆட்டோ எங்கே போகுது?"

"நீங்க எந்த இடம்னுசொல்லலையே? நான் ஸ்டாண்டுக்குப் போறேன். நீங்க யாரைப் பார்க்கணும்னு சொன்னீங்கன்னா அவங்க வீட்டுக்கிட்ட நிறுத்துறேன்."

"இங்கே ஜயன்னு ஒரு பெரிய ரௌடி இருக்கானாமே... அவன் வீட்டுப் பக்கமா போ!"

"ஐயோ... அந்த ஆள் வீட்டுக்கா? அந்தப் பேரே எங்களை நடுங்க வெச்சுடும். இதுவரையில நாங்க யாரும் அந்த ஆளைப் பார்த்ததே கிடையாது."

"அவன் இதுவரைக்கும் சரியான ஒருத்தனை சந்திக்கலேன்னு தெரியுது."

"உங்களை எங்கேயே பார்த்த மாதிரி இருக்கு ஆனா... சட்டுன்னு ஞாபகம் வரலை."

"சைத்தான் மாதவன்னு கேட்டிருக்கியா? அது நான்தான்!"

"நீங்கதானா அது? நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். சரியா அடையாளம் தெரியலை."

"ஒப்புக்கிட்ட வேலையைக் கச்சிதமா முடிக்கிறதால வந்த பேரு. பதினோரு கொலை கேஸ்ல ரெண்டுல மட்டும்தான் எனக்கு எதிரா தீர்ப்பு வந்தது" மாதவன் தனது சட்டைப் பையிலிருந்து பீடி ஒன்றை உதட்டில் பொருத்திக்கொண்டு, பற்றவைப்பதற்காக தீக்குச்சியை உரசினான். காற்றின் விசையால் ஒவ்வொரு முறையும் தீக்குச்சி அணைந்து பற்றவைக்க முடியாமல் போனது.

"பத்தவைக்க முடியலிங்களா? வண்டியை ஓரமா கொஞ்ச நேரம் நிறுத்தட்டுமா?" டிரைவர் கேட்டார்.

"ம்... அப்பிடி நிறுத்து!"

ரோட்டின் ஓரமாக ஆட்டோ நின்றது. மாதவனின் கையிலிருந்த தீப்பெட்டியின் குச்சிகள் தீர்ந்து போனதால், டிரைவர் தன்னிடமிருந்த தீப்பெட்டியைக் கொடுத்து உதவினார்.

"சார் நீங்க இதுவரைக்கும் ஆளுங்களைத் தீர்த்துக்கட்டின போது ஒவ்வொருத்தரும் கொன்னுடுங்கன்னு நெஞ்சைக் காட்டிட்டு நின்னுட்டாங்களோ?"

"ஏம்பா நானும் பார்க்கிறேன்... ஆட்டோவுல ஏறினதிலேர்ந்து நீ ஒரு மாதிரிதான் பேசுறே!"

"ராத்திரி நேரங்கள்ல வண்டி ஓட்டும்போது கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணுங்களே? எல்லாரும் எங்க கிட்டத்தானே கேள்வி கேட்பாங்க!"

"நீ ஐயனோட ஆள் மாதிரி இருக்கே!"

"அப்பிடியே இருந்தாலும் அதுல என்ன தப்பு? உங்களுக்கு உயிர் மேல ஆசையிருந்தா அந்த அள் விஷயத்தை மறந்துடுங்க! நீங்க நல்லா தண்ணியடிச்சிருக்கீங்க. எனக்கென்னமோ இது அவ்வளவும் சொந்தப் பணத்துல குடிச்ச மாதிரியும் தெரியலை. யாரோ வேணும்னே உங்களை நல்லா ஏத்தி விட்டுருக்காங்க!"

"என்னடா வாய் ரொம்ப நீளுது! என்ன நினைச்சிருக்கிற?" என்றவாறு மாதவன் முன்புறமாகப் பாய்ந்தான்.

இதை எதிர்பார்த்த டிரைவர் மாதவனை லகுவாகப் பின்புறம் தள்ளிவிட்டான். தலை பின்புற ஸீட்டின் மேற்பகுதியில் மோதி விழுந்தான் அவன்.

ஆட்டோ நின்றது.

"நீ அந்த அளவுக்கு பெரியவனா?" மாதவன் எழுந்திருக்க முயன்றான்.

"இனி அசைஞ்சா அடிவாங்குவே!" டிரைவர் கூறினார்.

"என்னடா சொன்னே!" மாதவன் போட்டிருந்த மொத்த போதையும் சட்டென்று வடிந்துவிட்டதாகத் தோன்றியது. எவ்வளவு குடித்திருந்தாலும், யாருடனாவது மோத நேர்ந்தால் மொத்த போதையும் காணாமல் போவது மாதவனின் இயல்பு.

மீண்டும் டிரைவரைப் பிடிக்கப் பாய்ந்தான். மாறாக டிரைவரின் தாக்குதலுக்கு ஆளாகி ரோட்டில் விழுந்தான் மாதவன்.

கையில் கூரான கத்தி பளபளக்கச் சட்டென்று எழுந்தான் மாதவன். பிடியில்லாமல் கத்தியின் பளபளப்பான பகுதி மட்டுமே சுமார் ஓர் அடி இருந்தது. கத்தியுடன் முன்னேறினான். டிரைவர் சாதுரியமாகப் பக்கவாட்டில் ஒதுங்கவே கத்தி ஆட்டோவின்

கேன்வாஸ் பகுதியைக் கிழித்தது. அதே நேரம் மாதவனின் கழுத்தில் டிரைவரின் கை கத்தி மாதிரி இறங்கியது. அப்படியே குப்புற விழுந்தவனின் முதுகில் டிரைவர் காலால் ஓங்கி மிதிக்கவும் செய்தான்.

அதன்பிறகு சற்று நேரம் மாதவனின் உடம்பு அசைய வில்லை.

"எழுந்திருடா!" டிரைவரின் குரல் கட்டளை போல் ஒலித்தது.

அவன் எழுந்திருக்கும்போது மீண்டும் டிரைவரின் கால் விரைவாகச் சுழன்று பாய்ந்ததில் மாதவனிடமிருந்த கத்தி மேற்புறமாகப் பாய்ந்து போனது. அதைக் கீழே விழாமல் ஆட்டோ டிரைவர் பிடித்துக் கொண்டார்.

மாதவன் மிரட்சியுடன் டிரைவரைப் பார்த்தான்.

"நீ தேடி வந்த ஆள் நான்தான்! இப்பப் புரிஞ்சதா?"

"யாரு ஜயனா?"

"அவனேதான். ஆனா உன்னைக் கொல்ல மாட்டேன். பயப்படாத. நீ கூலிக்குக் கொலை பண்றவன். நான் அப்பிடி இல்லை. எனக்குத் தற்காப்பு மட்டும்தான்."

மாதவன், ஜயனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான். தெருவிளக்கின் வெளிச்சம் அவனுக்கு உதவியது.

"கத்தி இப்ப என் கையில. நீ செய்ய வந்த வேலையை ரொம்ப சுலபமா நானே பண்ணிடலாம். அதனால எனக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. ஒண்ணு செய். நீ ஆட்டோவில் ஏறு!"

மாதவன் தயங்கினான்.

"காது கேட்கலையா?" ஜயனின் குரல் கட்டளை போல் ஒலித்தது.

அதுவரை மற்றவர்களை மட்டுமே மிரட்டிப் பழக்கப்பட்ட மாதவன் இன்று முதல் தடவையாக மற்றொருவனின் மிரட்டலுக்கு ஆளாகியிருந்தான். உடனடியாகக் கீழ்ப்படியவில்லை என்றால் மேற்கொண்டு அவன் தன்னைக் தாக்கலாம். உயிர் பயம் இருந்ததால் ஐயன் சொன்னபடி செய்தான்.

ஆட்டோ நகரத் தொடங்கியது.

"ஒண்ணு சொல்லிடுறேன். உட்கார்ந்திருக்கிற இடத்துலேர்ந்து ஏதாவது சில்மிஷம் பண்ணினா மேற்கொண்டு நடக்கிறதுக்கு நான் பொறுப்பில்லை. ஞாபகம் வெச்சுக்க!" ஐயன் எச்சரிக்கத் தவறவில்லை.

பின்னிரவு தாண்டி விட்டிருந்தது. மாதவகுறுப்பின் வீட்டுக்கு முன்னால் வந்ததும் ஆட்டோவை நிறுத்தினான். மாதவன் தளர்ந்து போனவனாக பின்புற ஸீட்டில் படுத்திருந்தான். முன்புறப் பெட்டியிலிருந்த நைலான் கயிறை எடுத்து மாதவனின் கை, கால்களைக் கட்டி ஒரு மூட்டை மாதிரி ஆக்கினான். அவனைத் தூக்கிக் கொண்டு கேட்டை நெருங்கினான். உட்புறமாகப் பொத்தென்று போட்டுவிட்டு ஆட்டோவைக் கிளப்பிக் கொண்டு போனான்.

மாதவ குறுப்பு காலையில் கண் விழித்தவர் யதேச்சையாக ஜன்னல் பக்கம் பார்த்தார். யாரோ விழுந்து கிடப்பதைக் கவனித்ததும் வெளியே வந்து பார்த்தார். அருகில் வந்தபோது மாதவன் என்பது புரிந்தது. வெட்கமும், ஏமாற்றமும் கோபமும் ஒன்றாக அவரை உஷ்ணப்படுத்தியது. உடனடியாக அவனை நாலு மிதி மிதிக்க வேண்டும் என்று நினைத்தவர், ஏனோ அப்படிச் செய்யாமல் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டார்.

குறுப்பு அவனைத் தட்டியெழுப்பினார்.

"என்ன இப்படி சுருண்டுபோய் கிடக்குற!"

"முதல்ல கை கால் கட்டை அவுத்து விடுங்க... சொல்றேன்."

"ஓகோ அப்படியா சேதி? நான் கவனிக்கவே இல்லை. எவன் கட்டிப்போட்டான்?"

"சொன்னா வெட்கக்கேடுங்க!"

"அப்டீன்னா அவனை சந்திச்சியா?"

"அவன்தான் என்னைச் சந்திச்சான்னு சொல்லணும்!"

"அப்புறம்?"

"ஒரு ஆட்டோவுல என்னைக் கடத்திட்டு போனான். தண்ணி கொஞ்சம் அதிகமா இருந்ததால என்னால ஒண்ணும் பண்ண முடியலை. எதுவும் தெளிவா ஞாபகம் வரலை!"

"ஆட்டோரிக்ஷாவுல வந்தானா?"

"அவனேதான் ஓட்டிவந்தான்."

"டிரைவரா இருந்தானா?"

"அப்படித்தான் உலாத்துறான்னு தோணுது!"

"நல்ல தகவல்! அவனை நான் கவனிச்சுக்கிறேன்."

"நானே நாளைக்கு அவனைத் திரும்பவும் சந்திக்கணும்!"

"தற்காலத்துக்கு அதையெல்லாம் நிறுத்தி வை!"

"நான் கொஞ்சம் அதிகமா குடிச்சதால எதிர்பாராம நடந்த சம்பவம். சாதாரண நேரத்துல அவனை மாதிரி ஆறுபேர் வந்தாக் கூட சமாளிக்கிற வலு எனக்கு இருக்கு!"

"விஷயம் வெளியே தெரிஞ்சா எனக்குத்தான் அவமானம். வேற யாரையாவது ஏற்பாடு பண்ணட்டுமா?"

"அந்த அளவுக்கு என்னை மட்டமா நினைச்சிடாதீங்க. நான் எத்தனை பேரை பார்த்திருக்கேன்? ஒரு வாரம் டயம் குடுங்க! அப்புறம் பாருங்க."

"நாங்க கேட்டுக் கிட்டபடி நடந்தா எங்க எல்லாரோட பங்கும் உனக்கு உண்டு."

"எப்படியாவது நான் அவனைக் கொலை பண்ணிடுறேன்... என்னை நம்புங்க!"

அன்று காலையிலிருந்தே எல்லா ஆட்டோ ஸ்டாண்டுகளிலும் டிரைவர்கள் மற்றும் ஆட்டோக்கள் சோதனை செய்யப்பட்டனர். தவிர இரவு எட்டுமணிக்கு மேல் ரோட்டில் நடமாடுபவர்களில் சந்தேகத்துக்குரியவர்களை விசாரிக்கவும் செய்தனர். ஐயனைக் கைது செய்யும் நோக்கில் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

இரவு நேர டிரைவர்களும் அப்படியே சோதனை செய்யப் பட்டனர். ஆனால், ஐயனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தனக்கு எதிராகப் பலமான வலை வீசப்பட்டிருப் என்பதை ஐயன் உணர்ந்துகொண்டான். இப்போது வெகு எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியிருப்பதால் ஓர் இடம் அவசியம் என்று தோன்றியது. அதைப் பற்றி யோசித்தான்.

சுஜாதா எனக்கு ஏதாவது உதவலாம். ஆனால், அது அவ்வளவாக நம்ப முடியாதது. அவளை வைத்து, அல்லது அவள் மூலமாக, கைவெட்டுப்பட்ட பிள்ளை ஏதாவது முயற்சிகள் செய்யலாம். அவள் மனதை மாற்றுவது அப்பா என்கிற முறையில் அவருக்கு ஒரு பெரிய விஷயமே அல்ல! நிர்மலா உதவக் கூடியவள். ஆனால், கணவனுக்கும் அப்பாவுக்கும் பயந்துகொண்டு செயல்பட வேண்டும். அது மட்டுமின்றி எந்த நேரத்திலும் யாராவது மாறி மாறி வரலாம்.

ஒரேயொரு இடம் தேவகியின் குவார்ட்டர்ஸ்தான். அந்த ஒன்றுதான் எல்லாவகையிலும் மிகவும் பொருத்தமானதும், பாதுகாப்பானதுமான இடமாகத் தோன்றியது.

ஜெயிலிலிருந்து தப்பித்த ஒரு குற்றவாளி போலீஸ் குவார்ட்டர்ஸில் ஒளிந்திருப்பான் என்று யாருமே நினைக்க முடியாது.

ஐயன் போலீஸ்காரனாக வேஷம் மாறினான்.

இரவு மணி பத்து ஆகியிருந்தது. போலீஸ் குவார்ட்டர்ஸ் களின் முன்பாக மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

ஒவ்வொரு வீட்டிலும் அப்போதும் ரேடியோ செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு போலீஸ்காரர் குவார்ட்டர்ஸிலிருந்து சட்டென்று வெளியே வந்தார்.

"யாரது?" ஜயனைப் பார்த்துக் கேட்டார்.

"நான்தான்!"

"டூட்டி முடிஞ்சிடுச்சா?"

"இனிமே காலைலதான்."

பணிக்கர் போகிறாராக்கும் என்று நினைத்துக் கொண்டார் கேள்வி கேட்ட போலீஸ்காரர்.

ஜயன் நடந்து மறைந்தான்.

கேள்வி கேட்ட போலீஸ்காரர் அங்கேயே நின்று கொண்டிருந்தபோது உண்மையான பணிக்கர் டூட்டி டிரஸ்ஸில் வந்து கொண்டிருந்தார்.

# 23

"யாரது?" சந்தேகப்பட்ட போலீஸ்காரர் மீண்டும் கேட்டார்.

"பணிக்கர். இன்னிக்கு கொஞ்சம் லேட்டாயிடுச்சு!" கோபாலப் பணிக்கர் அவரை நெருங்கினார்.

"உங்களுக்கு ரெண்டு உருவம் இருக்கா என்ன?"

"என்னங்க.... என்னென்னமோ கேட்குறீங்க?"

"இல்லை... கொஞ்ச நேரத்துக்கு முன்னால நீங்க இந்தப் பக்கமா போகலையா?"

"கனா ஏதாவது கண்டிருப்பீங்க. மதியம் சாப்பிட்டுக் கிளம்பினவன் இப்பத்தான் ஆஞ்சு ஓஞ்சு போய் வர்றேன்."

"அப்படியா? எனக்கென்னமோ ஒரு சந்தேகம்!"

"ஒரு சந்தேகமும் வேண்டாம்... வந்து தூங்குங்க." - உள்ளிருந்து, கேள்விகேட்டவரின் மனைவியின் குரல் கட்டளையிட்டது.

"சரி சரி... கத்தாத இதோ வந்துடறேன்."

பணிக்கர் தனது வீட்டையடைந்ததும் பணிக்கரின் மனைவி கேட்டாள்: "கொஞ்ச நேரத்துக்கு முன்னால இந்தப் பக்கமா எங்கேயாவது போனீங்களா?"

"இல்லையே!" என்று பதிலளித்த பணிக்கரின் குழப்பம் அதிகரித்தது. சொல்லி வைத்த மாதிரி இருவரும் ஒரே கேள்வி கேட்கிறார்களே. இந்த குவார்ட்டர்ஸின் கடைசி வீடு தேவகியின் உடையது. அதற்கு முந்தையது தன்னுடையது. யார் வந்திருக்க முடியும்? அப்படி வந்தாலும் தன் பெயரை எதற்காக பயன்படுத்த வேண்டும்?' பணிக்கர் யோசனையில் ஆழ்ந்தார். 'ஒருவேளை தேவகியின் வீட்டுக்கு யாராவது வந்திருக்கிறார்களோ?'

கோபாலப் பணிக்கர், தேவகியின் குவார்ட்டர்ஸை நோக்கி நடந்தார்.

உள்ளே லைட் எரிந்து கொண்டிருந்தது. பணிக்கர் சற்றுத் தயங்கினார். தேவகி மட்டும்தான் அங்கு இருக்கிறாள். யாராவது தப்பாக எடுத்துக் கொள்வார்களோ என்று பயந்தார்.

இருப்பினும் வீட்டுக்கு முன்னால் நின்று பலமாக ஒரு தடவை இருமினார்.

"யாரது?" தேவகியின் குரல் உள்ளிருந்து கேட்டது.

"கோபால பணிக்கர்."

"வாங்க. வாங்க. என்ன ஏதாவது விசேஷமா?"

"ஒண்ணுமில்லை என் சம்சாரம்தான் ஒரு தடவை பார்த்துட்டு வரச் சொன்னாள்."

"அவங்களுக்கு உடம்பு ஏதாவது?"

"அதெல்லாம் கிடையாது. ஒரு சின்ன சந்தேகம்."

"சொல்லுங்க!"

"ஒண்ணுமில்லை. யாரோ ஒருத்தர் என்னை மாதிரி இந்தப் பக்கமா வந்ததா சொன்னாங்க. அதுதான் பார்த்துட்டுப் போகலாம்னு. திருடனுங்க இங்கேயும் வரத்தானே செய்வாங்க! ஏம்மா துணைக்கு யாராவது சொந்தக்காரங்களா கொண்டு வந்து வச்சுக்கிடலாமே!"

"எதுக்கு அதெல்லாம், நான் என்ன தனித்தீவிலயா இருக்கேன். சுத்தியும் சொந்தக்காரங்களா நீங்கள்லாம் இருக்கீங்களே."

"ஜாக்கிரதையம்மா!" எச்சரித்துவிட்டு நகர்ந்தார் பணிக்கர்.

அவர் போனதும் தேவகி கதவைத் தாழிட்டுவிட்டுத் திரும்பவும் சமையற் கட்டில் பாத்திரங்களைக் கழுவப் போனாள்.

எதிரே ஜயன்!

தேவகி ஒரு விநாடி அதிர்ந்தாள். பணிக்கர் கேட்டுவிட்டுப் போனது இந்த ஆவி உருவத்தைத்தானா என்று யோசித்தாள்.

"பயப்படாதே தேவகி!" ஜயன் வெகு சாதாரணமாக வீட்டுக்குள் நுழைந்தபடி கூறினான்.

"எனக்கு என்ன பயம்? நீங்க இந்த நேரத்துல... யாராவது கவனிச்சிருந்தா என்ன ஆகியிருக்கும். கவனிச்சுட்டா என்ன... கவனிச்சுட்டாங்க. சந்தேகப்பட்டுப் பிடிச்சிருந்தா நிலைமை என்ன ஆகியிருக்கும்!"

ஜயன், ஜன்னலின் மறைவான பகுதியில் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். "தாகமா இருக்கு, குடிக்க ஏதாவது கிடைக்குமா?"

தேவகி உள்ளே சென்று ஒரு எவர்சில்வர் சொம்பு நிறையத் தண்ணீர் எடுத்து வந்தாள்.

மொத்தத்தையும் ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்தான் ஜயன்.

"எப்படி இந்த நேரத்துல?"

"சொல்றேன். போலீஸ்காரங்க என்னைப் பிடிக்க எவ்வளவு கடுமையான நடவடிக்கைகள்ல ஈடுபட்டிருக்காங்கன்னு உனக்கே தெரியும். கடைசியா நம்ம திட்டப்படி ஒருவிதமா இந்த டிரஸ்ல இங்கே வந்து சேர்த்துட்டேன்."

"உங்க நிலைமை புரியுது. ரொம்பவும் ஜாக்கிரதையா நடந்துக்கணும். நான் இருக்கிற இடம் அப்படி. உங்களுக்கு உதவுறதுல எனக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. ஆனா, என் நிலைமையில நான் என்ன செய்ய முடியும்னு சொல்லுங்க. நீங்க குற்றவாளி இல்லேன்னு நிரூபணமாகற வரைக்கும் ரெண்டு பேரும் ஆபத்துல இருக்கிறோம். உங்களைவிட அதிகமான தண்டனை எனக்குதான். ஞாபகம் வெச்சுக்கங்க!"

"அதுக்குதான் முதல்லயே சொன்னேன், பயப்பட வேணாம்னு. என்னால நிரபராதின்னு நிரூபிக்க முடியலேன்னா அந்தக் கட்டத்துல நானே போலீஸ்ல சரண் அடைஞ்சிடுவேன். அதுக்கான இடைவெளியில் நான் உயிர் வாழறது அவசியம்கிறது தான் காரணம்

"அது சட்டப்படி சாத்தியம்னு தோணலை."

"அப்புறம்?"

"முதல்ல நீங்க குறிப்பிடுற நாலு பேரும் குற்றவாளிகள்தான்னு உலகத்துக்குத் தெரியும்படி செய்யணும். அவங்க செய்யிற அநீதி ஒவ்வொண்ணும் உடனுக்குடன் போலீஸுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தணும். ரகசியமாவே செஞ்சால்கூட போதும். தேவைப்பட்டா தனியார் துப்பறியும் நிறுவனங்களைக்கூட நாம பயன்படுத்திக்கலாம்."

"அப்படி யாரையாவது உனக்குத் தெரியுமா?"

"புஷ்பராஜுன்னு ஒருத்தர் இருக்கார்."

"நானும் கேள்விப்பட்டிருக்கேன்."

"ஒரு பக்கம் நீங்க நிரபராதின்னு நிரூபிக்க பட்டாச்சார்யா வாதாடட்டும், மறுபுறம் உண்மைக் குற்றவாளிகள் யாருன்னு புஷ்பராஜ் நிரூபிக்கட்டும்."

"நல்ல யோசனைதான்."

"இப்ப நீங்க வந்த வழியில் இனிமேல் வராதீங்க!" பக்கத்துவீட்டுப் பணிக்கர் இப்பத்தான் விசாரிச்சுட்டுப் போனார். பின்பக்க வழியா வாங்க. சாதாரணமா பின்பக்கத்துல ராத்திரி நேரத்துல யாரும் இருக்க மாட்டாங்க. ஏன்னா, நம்ம ரெண்டு பேருக்குமே அது ஆபத்தாயிடலாம்!"

"தப்புத்தான். இனிமே ரொம்பவும் எச்சரிக்கையா இருக்கிறேன்."

"இந்த இடத்துல உங்களைக் கைது செய்ய நேர்ந்தா, முதல்ல உயிரைவிடுறது நானாத்தான் இருப்பேன் - தற்கொலை மூலமா! அதனால ரொம்பவும் எச்சரிக்கையோட நடந்துக்கங்க! ஒரு இலை அசைஞ்சா கூட நீங்க கவனிக்கணும்."

ஐயனும் தேவகியும் பேசிக்கொண்டிருந்தபோது பணிக்கரின் வீட்டில் அவரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்தனர்.

"அந்த சின்னப் பொண்ணு தேவகி ஏன் இப்படி தனியா இருக்கணும்?"

"போலீஸ் வேலைக்கு வந்துட்டா இதையெல்லாம் பார்க்கமுடியுமா? அதுவுமில்லாம சுத்திலும் நாம இல்லையா? எப்படிப்பட்ட பிணமா இருந்தாலும் ராத்திரி பகல் வித்தியாசமில்லாம காவல்காக்குறதே இந்த வேலைதானே!"

"அது தெரியாதா எனக்கு. இருந்தாலும் சின்னப் பொண்ணாச்சே அது? தேவகி இன்னும் படுத்துத் தூங்கலேன்னு தோணுதே?" பணிக்கரின் மனைவி வெளியே பார்த்தபடி கூறினாள்.

"காலையில் அவசர அவசரமா சமையல்பண்ண வேண்டாம்னு எல்லாம் தயார்படுத்தறதா இருக்கும்."

"எனக்கென்னமோ அந்தப் பொண்ணுமேல சந்தேகமா இருக்கு! இன்னொரு போலீஸ்காரம்மா சரஸ்வதி இருக்காங்களே. அவங்ககூடவாவது தங்க வெச்சிருக்கலாம்."

"பைத்தியக்காரத்தனமா பேசாதே. அந்த பொண்ணுக்கு சொந்தக்காரங்க நிறைய இருக்காங்க. யாராவது வந்தா தங்குறதுக்கு இடவசதி வேணாமா? குவார்ட்டர்ஸ் ஒண்ணு காலியா இருந்தது. வேற ஆள் யாரும் கேட்கலை. அவங்க கேட்டாங்க. அலாட்மெண்ட் கிடைச்சது. இதைப் பத்தியெல்லாம் அதிகமா யோசிக்காதே."

"நான் சொல்றதைக் கேளுங்க. யாரோ ஒருத்தர் அந்தப் பக்கமா போறதை நான் பார்த்தேன். நீங்க ஒரு வேலை செய்யுங்க. அந்த குவார்ட்டஸுக்குப் பின்னால போய் நின்னு ஏதாவது பேச்சு சத்தம் கேட்குதான்னு பாருங்க."

அதைக் கேட்டதும் பணிக்கருக்கு சுவாரஸ்யம் ஏற்பட்டது. தன் மனைவி சொன்னபடி கொஞ்ச நேரம் நின்று பார்த்தால் என்ன என்று தோன்றியது. அப்படி ஏதாவது இருந்தால் தேவகிக்கு உதவியது மாதிரியும் இருக்குமே!

"சரி நீ சொன்னபடியே போய்ப் பார்த்துட்டு வர்றேன்."

"சாப்பிட்டு போனாப் போதும்."

பணிக்கர் இரவுச் சாப்பாட்டை முடித்பின் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டு நடந்தார். தேவகி வீட்டின் பின்புறமிருந்த வாழை மரங்களின் மறைவில் நின்று கவனித்தார். அவர் தலைக்கு மேல் ஏதேதோ வண்டுகள் பறந்தன. பணிக்கர் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் உள்ளிருந்து ஏதாவது சத்தம் வருகிறதா என்று கவனித்தார். இரண்டு குரல்கள் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்பது போல் தோன்றியது. வாழையிலை மற்றும் சருகுகள் காற்றில் ஆடி வேறு தொல்லை கொடுத்ததால் குரல் மற்றும் பேச்சைத் தெளிவாகக் கேட்க முடியவில்லை. ஆணின் குரல் ஒன்று கேட்பது

உறுதி. அதனால் யாரோ ஒருத்தன் வீட்டுக்குள் இருப்பது உண்மை. அப்படியானால் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டார்.

# 24

பணிக்கர், தேவகி வீட்டின் எதிர்ப்புறமாக நடந்தார்.

"என்ன உள்ள இருக்குற மனுஷனுக்குப் பயந்துட்டா போறீங்க?"- அவர் மனைவி கேட்டாள்.

"இல்ல... பக்கத்து வீட்டில இருக்கிறவரையும் துணைக்கு கூப்பிடலாம்னுதான்."

"அதுவும் நல்லதுதான்."

பணிக்கர் அவரையும் அழைத்துக்கொண்டு குவார்ட்டர்ஸின் பின்புறத்தை அடைந்தார்.

"வேண்டாம். நாம ஒரு காரியம் பண்ணலாம். நீங்க முன் வாசல் பக்கமா போய் தேவகியைக் கூப்பிடுங்க. இந்தப் பக்கமா யாராவது வந்தா நான் பார்த்துக்கிறேன்" பணிக்கர் சொன்னார்.

"கூப்பிட்டா அந்தப் பொண்ணு கதவைக் திறங்குமா?" நண்பர் சந்தேகம் எழுப்பினார்.

அவரது குவார்ட்டர்ஸின் முன்புறமாக ஜயன் நடந்து போன போதுதான் அவர் பேச்சுக் கொடுத்தார். தற்சமயம் தப்பிக்கலாம் என்று ஆமாம் என்று சொல்லி வைத்திருந்தான். ஆனால், நடந்து வந்த பிறகுதான் அப்படிச் சொன்னது தவறென்று ஜயனுக்கும் தோன்றியது. மேலும் நான்கு துப்படிகள் வந்தபோது பணிக்கரின் மனைவி நின்றுகொண்டிருந்தாள். மட்டுமின்றி அவனிடம் 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்கவும் செய்தாள்.

ஜயன் நல்லவேளையாக அதற்குப் பதில் சொல்லாமல் நடந்தான். அதுவே பணிக்கரின் மனைவியிடம் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இயல்பாகவே பணிக்கரை அவ்வளவாக

நம்பாதவள் அவர் மனைவி. பக்கத்தில் குடிவந்திருப்பது பெண் போலீஸ் வேறு. ஒருவேளை அங்கேதான் தன் கணவர் போகிறாரோ என்று யோசித்ததும் கணவர் பணிக்கர் மறு புறத்திலிருந்து வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் ஜயன் மிகவும் தர்மசங்கடமான நிலையை உணர்ந்தான். எனவே உடனடியாக தேவகியின் வீட்டுக் கதவைத் தட்டக்கூடாது என்று நினைத்தான். சந்தேகப்பட்டவர்கள் சட்டென்று வரலாம்.

எனவே ஜயன் சட்டென்று பக்கவாட்டில் வளர்ந்திருக்கும் வாழை மரங்களுக்கு இடையில் மறைந்து நின்றான். அதே போல் பணிக்கர் வந்து போன பிறகு ஜயன் தேவகியின் கதவைத் தட்டி உள்ளே நுழைந்தான். ஆனால், அதன் பிறகும் யாராவது வருவார்கள் என்று ஜயன் எதிர்பார்க்கவில்லை.

பணிக்கரின் நண்பர் ராமன் முன்புறத்தை அடைந்து "தேவகி" என்று குரல் கொடுத்தார்.

"திரும்பவும் யாரோ வந்துட்டதா தோணுது!" ஜயன் மெதுவான குரலில் கூறினான்.

"சமையல் கட்டுப் பக்கமா போய் இருங்க' என்ற தேவகி டேப்ரிக்கார்டரை ஆன் செய்தாள்.

நகைச்சுவை கதாபிரசங்கம் ஒன்று டேப்பிலிருந்து ஒலித்தது.

தேவகி கதவைத் திறந்தாள்.

"என்னங்க?" கேட்டாள்.

"உள்ளே யாராவது இருக்காங்களா?"

"ராஜப்பன் இருக்கார்?"

"வி.டி.ராஜப்பன் (கேரளாவில் புகழ்பெற்ற நகைச்சுவை கதாபிரசங்கம் செய்பவர்)! டேப்புக்குள்ள இருந்து கதை சொல்லிட்டிருக்கார்,"

"அப்படியா!"

"பொழுது விடியட்டும்... எங்க அப்பாவும் ஒரு போலீஸ்காரராத் தான் இருந்தார். இந்தத் தொல்லையை சர்க்கிள் சார் கிட்டச் சொல்லாம விடப் போறதில்லை."

"ஐயையோ... என்னம்மா நீ யாராவது திருட்டுப்பய வந்துட்டான்னா என்ன பண்றது? அதனாலதான் சந்தேக நிவர்த்திக்காகக் கேட்டேன்."

"சந்தேகத்துக்குக் காரணம்?"

"யாரோ இந்தப் பக்கமா வந்த மாதிரி இருந்தது."

"இப்படித்தான் சொல்லிவிட்டு ஒவ்வொருத்தரா வர்றாங்க. என் கிட்ட இந்த வேலையெல்லாம் வேண்டாம். பெண் போலீஸ்காரின்னா தனியா இருக்கக் கூடாதா? ஒவ்வொருத்தரா வந்து ஒவ்வொரு காரணம் சொல்லிக்கதவைத் தட்டிட்டு... பொழுது விடிஞ்சு இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்!"

"என்னம்மா நீ பெரிய பேச்செல்லாம் பேசுறே? இனிமே இங்கே கொலையே விழுந்தால்கூட நான் எட்டிப் பார்க்க மாட்டேன்." ராமன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

பணிக்கர், முன்புறப் பேச்சு முழுவதையும் காதில் வாங்கியபடி பின்னால் நின்று கொண்டிருந்தார். அவருக்கு சட்டென்று ஒரு யோசனை உதித்தது. ராமன் போன பிறகும் அவர் மட்டும் அசையாமல் அங்கேயே நின்றார்.

"வந்தவர் போயிட்டாரா?" ஐயன் கேட்டான் கதவைத் தாழிட்ட பிறகு.

"மிரண்டு போயிருக்கார்."

"திரும்பவும் வருவாங்களோ என்னமோ?"

"இனிமே வந்தா நல்லா கேட்பேன் அவங்களை!" தேவகி டேப்ரிக்கார்டரின் சத்தத்தைக் குறைத்தபடி பேசினாள்:" இப்படி எவ்வளவு நாள்தான் இருப்பீங்க?"

"அவனுங்க மாட்டுற வரைக்கும்!"

"அதுக்கு உங்க திட்டபடி நடக்கணுமே!"

"சீக்கிரமா வழி பிறக்கும்னு தோணுது.

"ஏதாவது தகவல் கிடைச்சிருக்கா?"

"ஆமாம்... நீலகண்டன் நாயர் ஒரு புது பிசினஸ் ஆரம்பிச்சிருக்கார். பெண்கள்தான் அதுல முக்கியமான பொருள். மும்பையில் இருக்குற கம்பெனிக்கு ஆள் தேவைன்னு பெண்களைத் திரட்டுறார். அங்கே போன பிறகு தேவைப்பட்டா அரபு நாடுகளுக்குப் போக வாய்ப்பு இருக்குன்னு சொல்றார். எனக்கென்னமோ அது விபசாரம் சம்பந்தப்பட்ட தொழிலா இருக்கும்னு தோணுது. அதை மட்டும் சரியா கண்டுபிடிக்க முடிஞ்சா அவர் மாட்டிக்குவார்."

"சாத்தியமா அது?"

"இந்தத் தகவலை எப்படியாவது போலீஸுக்கு தெரியப் படுத்தணும். பின்னணியில் நாயர் இருக்கிறதா சொல்லக்கூடாது. உடனே அவங்க அதுக்கு ஒரு டீம் போட்டு விசாரிப்பாங்க."

"அந்தப் பெண்களே அதுக்கு உடன்பட்டுப் போறவங்களா இருந்தால்..."

"அதெல்லாம் நியாயமாகாது. மும்பைக்கு போன பிறகு அவங்களுக்கு என்ன நேருதுன்னு விசாரிச்சாலே நாயர் மாட்டிக்க வேண்டியதுதான். பத்திரிகைகாரங்களுக்கு பரபரப்பான செய்தியாகவும் இருக்கணும்!"

சட்டென்று தேவகி ஜயனிடம் சைகை காட்டி உதட்டில் விரல் வைத்துக் காட்டினாள். நிழல் உருவம் ஒன்று ஜன்னல் பக்கமாகக் கடந்து போனதை அவள் பார்த்தாள். தெளிவற்ற மனித உருவம் ஒன்று. ஜயனும் உள்வாங்கியபடி அதை கவனிக்கவே செய்தான்.

உட்புறம் இருப்பதைப் பார்க்க முடியாத கண்ணாடியாக இருப்பதால் அந்த உருவம் தன்னைக் கவனித்திருக்க முடியாது

என்று ஐயனுக்குத் தோன்றியது. அப்போதும் டேப்பில் கதாபிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. ஐயன் மெதுவாக நடந்து சமையற்கட்டில் மறைந்தான். அங்கிருந்து பின்புறம் செல்ல வழியிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அந்த குவார்ட்டர்ஸூக்குள் இருப்பதே அபாயம் என்று முதன் முறையாக உணர்ந்தான். இந்த இடத்தைப் பற்றிய ஒரு சந்தேகம் அங்குள்ளவர்கள் மத்தியில் எழுந்திருப்பதால் அதை விலக்குவதும் அவசியம் என்று கருதினான்.

சத்தம் எழுப்பாமல் புழக்கடைக் கதவைத் திறந்தான். ஒரு தடவை இருட்டில் ஊன்றிப் பார்த்தான். எந்த மனிதனும் அந்தப் பக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே தற்சமயம் அங்கு ஒளிந்திருப்பதுதான் உசிதம் என்று நினைத்தான்.

சரியாக அதே சமயம் நாலைந்து போலீஸ்காரர்கள் தங்கள் மனைவியருடன் தேவகி வீட்டு வாசலின் முன் வந்து நின்றனர். பணிக்கர் உடனே பின்புறத்தில் பழைய இடத்தில் வந்து நின்று கொண்டார்.

ஐயன் அதை உணர்ந்து கொண்டதால் இருட்டில் முள்காட்டிலே நகர்ந்து புதர்ப்பகுதியை நெருங்கி மறைந்து நின்று கொண்டான்.

ராமன் மறுபடி கதவைத் தட்டினார்.

"என்னப்பா பெரிய தொல்லையாப் போச்சு!" என்றவாறு தேவகி கதவைத் திறந்தாள்.

"சும்மா பாத்துட்டுப் போகலாம்னு வந்தோம்!"

"வாங்க... வாங்க... ஏதாவது விசேஷமா? நான் எதாவது உதவணுமா?"

"நீங்க புதுசா வந்த பிறகு நாங்க யாரும் இதுவரைக்கும் உங்களை இங்கே வந்து சந்திக்கலை. எல்லோருக்கும் வெவ்வேறு நேரத்துல டூட்டி. அதுதான் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்." ராமன் குறிப்பிட்டார்.

நான்கு பெண்மணிகள் வீட்டுக்குள் நுழைந்ததும் ஹால், சமையலறை, புழக்கடை என்று வீட்டைக் கண்களாலேயே சலித்தனர்.

"நீங்க என்ன நினைச்சாலும் சரி. அப்படிப்பட்ட ஒரு பெண்ணில்லை நான். நீங்க எதுக்காக இங்க வந்திருக்கீங்கன்னு எனக்கு தெரியும். அப்படி ஏதாவது இருந்தால்நான் யாரு கிட்டயும் மறைச்சோ, ஒளிச்சோ, நடந்துக்க வேண்டிய அவசியம் இல்லை. பட்டப் பகல்லயே அவரோட கைகோத்து நடப்பேன். இங்கே யாரும் வரலை! சொன்னாக் கேளுங்க!"

அதற்குள் போலீஸ்காரர்கள் பின்புற லைட்டைப் போட்டு வாழை மரங்கள் இருந்த பகுதியையும் கண்களால் துழாவினர். அங்கிருந்து பல்பு அதையெல்லாம் தாண்டி புதர்க் காட்டின் பக்கமாக வெளிச்சம் வீசாததால் நல்லவேளை அவர்கள் ஜயனைப் பார்க்கவில்லை.

"தேவகி, தப்பா நினைக்காதீங்க. யாரோ இந்தப் பக்கமா வந்ததா தோணுச்சு. நீங்க தனியா வேற இருக்கீங்களா.... அதுதான்."

"அப்படியா... இருக்கட்டும். அதுக்காக இப்படியா! நீங்க உங்க வீட்டைப் பத்திரமா பார்த்துங்கங்க. இப்படி அத்து மீறி மத்தவங்களுக்குத் தொல்லை குடுக்காதீங்க." தேவகி கோபம் நிறைந்த குரலில் கூறினாள்.

"இன்னும் எதுக்கு நிக்குறீங்க?"- பெண்களில் ஒருவர் குரல் கொடுத்தபடி முதலில் அங்கிருந்து வெளியேறினர். வேலைக்குப் போகும் தேவகியை அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று தோன்றியது.

எல்லோரும் அங்கிருந்து வெளியேறினர்.

"ஒருவேளை நமக்கு அப்படித் தோணியிருக்கலாம்!" என்றபடி பணிக்கர் கடைசியாக நடந்தார்.

தேவகி கதவை மூடித் தாழிட்டாள்.

"இனிமேல் அவங்க வரமாட்டாங்கன்னுதான் நினைக்கிறேன்" தேவகி கூறினாள்.

அன்றிரவை ஐயன் அங்கேயே கழித்தான்.

மறுநாள் தேவகி பகல் நேரத்தில் டூட்டிக்குப் போன பிறகும் ஐயன் அங்கேயே எச்சரிக்கையுடன் இருந்தான்.

மதிய நேரத்தில் அவள் திரும்பி வந்தாள். அவள் கையில் இரண்டு பேப்பர்கள் இருந்தன. அதை ஐயனிடம் கொடுத்தாள்.

'காலமானார்' என்ற பகுதியில்நிர்மலாவின் கணவரான இன்ஜினீயர், அணைக்கட்டின் மேற்புறத்திலிருந்து தவறி விழுந்த செய்தி அதில் வெளியாகியிருந்தது.

"அந்தக் குடும்பத்திலேயே ரொம்பவும் நல்ல பொண்ணு நிர்மலா பாவம்!" ஐயன் கூறினான்.

"நல்லவங்களுக்குத்தானே இப்படிப்பட்ட சோதனைகள் வரும்!" தேவகி சமையல்கட்டை நோக்கி நடக்கும்போது சொன்னாள்.

"அப்பா செஞ்ச தப்பெல்லாம் சேர்ந்து மகளைப் பழி வாங்கிடுச்சு!"

"அதுக்கு அவள் என்ன பண்ணுவா?"

"விதி எப்பவும் கொடூரமானதுதான்."

"வரும்போது நிர்மலாவைப் பார்த்துட்டு வந்தேன். ரொம்பவும் இடிஞ்சு போயிருக்கா."

"எனக்கும் அவங்க ரொம்ப உதவி செஞ்சிருக்காங்க! வருத்தமா இருக்கு!" ஐயன் கூறினான்.

கணவரின் மரணத்துக்குப் பிறகும் நிர்மலா அந்த வீட்டிலேயே தங்குவதென்று தீர்மானித்தாள். நீலகண்டன் நாயரும் மகளைத் தன்னுடன் வந்துவிடுமாறு வற்புறுத்தவில்லை. அவரது அன்றாட அந்தரங்க சந்தோஷங்கள் பாதிக்கப்படலாம் என்று அவர் பயந்தார்.

வேலைக்காரியின் துணையுடன் நிர்மலா கணவனின் வீட்டில் வசிக்கத் தொடங்கினாள்.

இரவு மணி பன்னிரண்டு கடந்தது.

நிர்மலா தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் மூலையை மடக்கி மேஜை மீது போட்டுவிட்டு லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தாள்.

சுவர்க்கடிகாரத்தின் டிக்டிக் சத்தம் மட்டும் இரவின் அமைதியை ஊடுருவிக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

ஒருவேளை அப்பாவாக இருப்பார் என்று நினைத்தாள் நிர்மலா.

சற்று நேரத்தில் காலிங்பெல் ஒலித்தது.

கதவுக்கு அருகே வந்து நின்ற நிர்மலா, "யாரது?" என்று கேட்டாள்

"நான்தான். அவசரமா உங்க அப்பா ஒரு தகவல் சொல்லி அனுப்பியிருக்கார்."

"யாரு போத்தன் சாரா?" என்று கேட்டபடி அவள் கதவைத் திறந்தாள்.

அவர் உள்ளே வந்தார்.

மதுவின் கடுமையான நெடி அறைக்குள் பரவியது.

"அப்பா என்னங்க சொல்லியனுப்பினார்? டெலிபோன் பண்ணிக்கூட அவர் சொல்லியிருக்கலாமே!"

"அதெல்லாம் இருக்கட்டும். இப்ப தனியா இருக்குறியே விசாரிச்சுட்டுப் போகலாம்னு வந்தேன்."

"நல்ல நோக்கம்தான்! உங்க நோக்கம் புரியுது. என்கிட்டயே நீங்க இப்படி நடந்துக்கலாமா?" நிர்மலா கேட்டாள்.

"உன்புருஷன் இறந்து போன வருத்தத்தை என்னால தாங்க முடியலை."

"இருக்கட்டும். அதையெல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம். போயிட்டு அப்புறமா வாங்க!"

"ரொம்பவும் விரட்டாதே. உன் புருஷன் தற்கொலை பண்ணிக்கிட்டான்னு எனக்குத் தெரியாதா என்ன?"

"வீணாப் பேசாதீங்க. பெரியவர்னு நான் குடுக்குற மரியாதையை பாழாக்காதீங்க!"

"நீ அந்த பழைய டிரைவரோட ரொம்பவும் நெருக்கமா இருந்தேங்கிறது உன் வீட்டுக்காரருக்குத் தெரியாதுன்னா நினைச்சே?"

"டிரைவரா... எந்த டிரைவர்?"

"ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்தானே அந்தக் கொலைகார நாய்தான்!"

"யார் உண்மையா கொலை பண்ணினவங்கன்னு எனக்கும் ஓரளவு தெரியும். அதிகமாப் பேசாம வெளியேறினா நல்லது!"

"பார்... இந்த மாதிரி நேரத்துல எதுக்கு வீணா கண்டதையும் பேசிக்கிட்டு?" போத்தன் வர்கீஸ் எழுந்து சட்டென்று நிர்மலாவைப் பிடிக்க முயன்றார்.

அவள் அங்கிருந்த டெலிபோனை நெருங்கினாள்.

இவ்வளவுவெல்லாம் நடந்தும் சமையலறைக்குள் படுத்துக் கொண்டிருந்த வேலைக்காரி எழுந்ததாகத் தெரியவில்லை.

நிர்மலா ரிசீவரை எடுப்பதற்குள் போத்தன் வர்கீஸ் அவளைப் பிடித்து விட்டார்.

ஏற்கெனவே போதையில் மூழ்கியிருந்த போத்தன் வர்கீஸ் மற்றொரு போதைக்கும் ஆட்பட்டு அவளது இரவு உடையைப்

பிடித்து இழுத்துக் கிழித்தார். அவள், அவரை அடிக்க முயன்றாள். ஆனால், போத்தனின் கைகள் அதற்குள் அவளை வளைத்துப் பிடித்துக் கட்டிலின் பக்கமாக இழுத்து வந்தன.

அவள் மீது போத்தன் சரியப் போன நேரம் அவர் தலை மீது மேஜை விரிப்பு ஒன்று வந்து மூடியது. கூடவே வலுவான தாக்குதல்.

'ஜயன்!' என்று நிர்மலா கூற முற்படுவதற்குள் 'வேண்டாம்!' என்று சைகை காட்டினான்.

ஒரு கையால் தலையில் விழுந்த துணியால் அவரின் கழுத்துப் பகுதியை மூடி இறுக்கிக் கொண்ட ஜயன் கையாலும் காலாலும் அவரைக் கண்டபடி தாக்கத் தொடங்கினான்.

வந்ததும் தாக்கியதும் யார் என்று தெரியாமல் இருப்பதற்காகத்தான் ஜயன் இப்படியெல்லாம் செய்தான்.

ஏற்கெனவே போதையிலிருந்த வர்கீஸை, தாக்குதலால் நினைவிழக்கச் செய்த ஜயன், அவரை அப்படியே குண்டுக்கட்டாகத் தூக்கி காருக்கு போட்டுக் கொண்டு காரைக் கிளப்பினான்.

டவுனுக்குள் வந்த ஜயன், அங்கிருந்த ரவுண்டானாவின் அருகே காரை நிறுத்திவிட்டு அங்கிருந்து வடக்குத் திசையில் நடந்து மறைந்தான்.

விடியற்காலையில்-பொழுது விடிவதற்கு முன் ஜயன், மறுபடி நிர்மலாவின் வீட்டுக்கு வந்தான்.

காலிங்பெல் சத்தம் கேட்டவுடன் நிர்மலா கையில் தேங்காய் வெட்டும் அரிவாளை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

வெளியே ஜயன் நின்றுகொண்டு இருந்தான்.

# 25

"யாரு நீங்கதானா?" என்றபடி நிர்மலா அரிவாளைக் கீழ்ப்புறமாக இறக்கினாள்.

"நானேதான். உள்ளே வரலாமா?" என்று கேட்டவன், உட்புறம் வந்ததும் கதவைத் தாழிட்டா.: "தயவு செஞ்சு தப்பா நினைக்காதீங்க. தற்சமயம் எனக்கு வேற எந்த வழியும் இல்லாததால இங்கே வந்திருக்கேன்."

"நீங்க இங்க வர்றதுல எனக்கு எப்பவுமே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது" என்றவள் ஜயனை விருந்தினருக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். நீலகண்டன் நாயர் அடிக்கடி வந்துபோவதால் டெலிபோனை அந்த அறைக்குள் வைத்திருந்தனர். அதற்குள்தான் போத்தன் வர்கீஸ் நிர்மலாவை பலாத்காரம் செய்ய முயன்றதும், ஜயனால் தாக்கப்பட்டதும்.

"எப்படி சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தீங்க?"

"எதிர்பாராம இங்க வந்தேன். தேவகி தங்கியிருக்கிற குவார்ட்டர்ஸிலதான் தங்கியிருக்கேன். ஆனா, பக்கத்து வீடுகள்ல இருக்கிறவங்களுக்கு ஏதோ சந்தேகம் வந்துருச்சு. எல்லோரும் மொத்தமா வீட்டுக்குள்ள நுழைஞ்சு சோதனை போட்டாங்க. ஒரு வகையா தப்பிச்சேன். அதனால அவங்க மறுபடியும் சந்தேகப்படாம இருக்கணும்னா ஒரு நாளோ ரெண்டு நாளோ இடம் மாறுறதுதான் நல்லதுன்னு நினைச்சேன். அதுக்கு ராத்திரிதான் தோதான சமயம்னு கிளம்பி இங்கே வந்தேன்."

"எப்படி உள்ளே வந்தீங்க?"

"வெளியில் போத்தன் வர்கீஸோட கார் இருந்தது. முதல்ல உங்க அப்பாதான் வந்திருக்காரோன்னு நினைச்சேன். ஆனால், உங்கள் குரல் கேட்ட பிறகுதான் உள்ள நுழைஞ்சேன். இருந்தாலும்

அந்த ஆள் இவ்வளவு சீக்கிரம் இப்படி நடந்துப்பாருன்னு நான் நினைக்கலை."

"நீங்க முன்னாடி சொன்னதெல்லாம் உண்மைன்னு இப்பப் புரியுது!"

"சாட்சி கிடைச்சதுனாலயா?"

"ஆமாம்... எங்க அப்பா உட்பட இந்த நண்பர்கூட்டமே நல்லவங்க இல்லைங்கிறது உறுதியாயிடுச்சு!"

"நிர்மலா எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும். இந்த நிலைமையில நான் இந்த வீட்டுல இருக்குறதும் நல்லதா தோணலை. உங்களுக்கும் கெட்ட பேர். அதனால எனக்கு ஏற்ற மாதிரி ஒரு மறைவிடம் ஏற்பாடு செய்யுங்களேன்!"

"அந்த மாதிரி செய்யுறது இதைவிட மோசமான விளைவுகளை உண்டாக்கும். எப்ப வேணுமானாலும் நீங்க இங்கே வரலாம். வந்து தங்கலாம். அதுல எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது."

"உங்க வீட்டுக்காரர் இறந்து போனதுக்கு வேற யாராவது காரணமா இருக்கலாம்னு உங்களுக்குத் தோணுதா?"

"இப்ப எதையும் யோசிக்க முடியலை. நான் அதைப் பத்தி நிறைய பேச வேண்டியிருக்கு. படுத்துத் தூங்குங்க."

"சரி குடிக்கக் கொஞ்சம் தண்ணி!"

"இருங்க டீ போட்டு வர்றேன்."

ஜயன், நீலகண்டன் நாயர் ஓய்வெடுக்கும் அறையிலுள்ள கட்டிலில் அமர்ந்தான்.

நிர்மலா ரொட்டி மற்றும் டீயுடன் அங்கு வந்து சேர்ந்தாள். ஜயன் சாப்பிடும் வேகத்தைப் பார்த்து இந்த ரொட்டி போதாதே என்று நினைத்தவள் கரைத்து வைத்த மாவை எடுத்து இரண்டு தட்டில் இட்லி வார்த்து எடுத்து வந்தாள்.

ஐயன் ஒரே மூச்சில் அத்தனை இட்லிகளையும் சாப்பிட்டான்.

"பசி ஒரு பொருட்டில்லை. கிடைக்கும்போது கிடைக்கிறதைச் சாப்பிட வேண்டியதுதான். எந்த நேரம், யாரால, என்ன ஆபத்து வருமோன்னு பயந்துட்டிருக்கிறதால எந்த ஆகாரத்தையும் ருசியோட ரசிச்சு திருப்தியா உட்கார்ந்து சாப்பிடவா முடியும்? எனக்கு மட்டுமில்லாம எனக்கு உதவுறவங்களுக்கும் இதேதான் நிலைமை."

"நீங்க முதல் தடவையா மனசைத் திறந்து உண்மையைச் சொன்னபோது நான் ரொம்பவும் மனசு வேதனைப்பட்டேன். உங்கமேல விழுந்துட்ட அனாவசியமான பழி என்னை உலுக்கிடுச்சு. ஆனா, என் நிலைமையில நான் எதுவும் செய்ய முடியாத ஒருத்தியா இருக்கேன். இருந்தாலும் சுயநலத்தோட ஒரே ஒரு வேண்டுகோள். எங்க அப்பாவை நீங்களா தண்டிக்கக் கூடாது!"

"உண்மை என்னன்னா இந்தச் சிக்கலுக்கெல்லாம் முக்கியக் காரணமே உங்க அப்பாதான் நான் அவரை ஒண்ணும் செய்யமாட்டேன். ஆனா, சட்டம் தண்டிக்காதுன்னு நான் உறுதி சொல்லமுடியாது!"

"எங்க அப்பாவோட பாவமெல்லாம் என் தலையில் விடிஞ்சிடுச்சு. முதல் அடையாளம் வீட்டுக்காரர் இறந்தது!"

"ஒருவகையில் அது அவருக்கும் தண்டனைதான். வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவர்கூட ஆணும் பெண்ணுமா மூணு நாலு பேர் இருப்பாங்க. வர்றவங்க புருஷன் - பொண்டாட்டின்னு என் வீட்டுக்காரர் சொன்னாலும் நான் நம்பினதில்லை. அவர் இன்ஜினீயரிங் வேலையில் எவ்வளவு கெட்டிக்காரரா இருந்தாலும் சொந்த வாழ்க்கையிலும் அப்படித்தான்னு சொல்லமுடியாது. அசிங்கம்னு நினைச்சு வெளியில சொல்லாம இருந்தேன். நான் பொறுமை இழந்து ரெண்டு மூணுதடவை கேக்கவும் செஞ்சேன். தினமும் குடி வேற உண்மையைச் சொன்னா அதனால

தான் அவர்கூட தங்கியிருக்க நான் விரும்பல. தாலிகட்டிக் கிட்டவளாச்சேன்னு பொறுமையா இருந்தேன். ம்... எல்லாம் தலைவிதி!"

அப்போது தொலைபேசி மணியடித்தது.

நிர்மலா ரிசீவரை எடுத்தாள்.

"நான்தாம்பா."

"........."

"வேலைக்காரி தூங்கிட்டு இருக்கிறாங்க. நான் புஸ்தகம் படிச்சிட்டுருக்கேன் வர்றீங்களா. வாங்களேன்!" நிர்மலாவின் முகத்தில் ஏதோ நிழல் விழுந்தது போலிருந்தது. ரிசிவரை வைத்துவிட்டு ஜயனிடம் சொன்னாள்: "அப்பா வர்றாராம். நான் என்ன செய்யிறது?"

"ஐயையோ அப்படியெல்லாம் சொல்லிட்டா அவருக்கு வீணான சந்தேகம் வரும். நான் வெளியில் கிளம்பட்டுமா?"

"எங்கே போறீங்க?"

"அதெல்லாம் பார்த்துக்க வேண்டியதுதான். உங்க அப்பா வரும்போது என்ன செய்யுறது?"

"வேணும்னா ஒண்ணு செய்யுங்க. அப்பா வரும்போது என்னோட அறைக்குள்ள போய் இருந்துடுங்க. சாதாரணமா அவர் அங்கே வர்றதில்லை. மத்த எந்த அறைக்குள்ளயும் நுழைஞ்சிடுவாரு."

ஜயன் எழுந்து நிர்மலாவின் அறையை நோக்கி நடந்தான்.

அந்த அறைக்குள் ஒரு 'டபிள்காட்' கிடந்தது. தேவகியும் நிர்மலாவும் படுத்திருந்த கட்டில்.

நிர்மலா லைட்டை அணைத்துவிட்டு வெளியேறினாள்.

அந்த அறையிலிருந்து வரவேற்பு அறையும் அதையொட்டி நீலகண்டன் நாயர் படுத்துக் கொள்ளும் டெலிபோன் இருந்த அறையும் தெளிவாகத் தெரிந்தன.

சற்று நேரத்தில் வெளியே நீலகண்டன் நாயரின் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. அவரே காரை ஓட்டி வந்தார்.

நிர்மலா கதவைத் திறந்தாள்.

"என்னப்பா திடும்னு இந்த நேரத்துல?"

"ஒரு முக்கியமான விஷயமா நாளைக்கு நான் திருவனந்தபுரம் போறேன். மாப்பிள்ளை இறந்துட்டதால, உனக்கு அந்த டிபார்ட்மெண்ட்ல ஒரு வேலை கிடைக்கும். உனக்குச் சம்மதமான்னு சொல்லு. வேண்டிய ஏற்பாடு செய்யறேன்."

"நான் வேலைக்கு போகணுமா வேண்டாமான்னு நீங்களே தீர்மானியுங்க!"

"அப்புறம் இந்தச் சின்ன வயசுல நீ இப்படி தனியா இருக்கிறது நல்லதா தோணலை. என் வாழ்க்கையில நான், இறந்துபோன மாப்பிள்ளையை உனக்கு கல்யாணம் பண்ணி வச்சது முதல் தப்பு. போகட்டும் உனக்கு ஒரு வேலை. மறுகல்யாணம். இந்த ரெண்டையும் நீ மறுக்கக் கூடாது!"

"இருந்தாலும் ரெண்டாவதா சொன்னதுக்கு அவசரமில்லை. புருஷன் இறந்தவுடனேயே மறுகல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு பேசிக்குவாங்க."

"சரி நீ போய்ப் படுத்துக்கம்மா! நான் கொஞ்சம் போன் பண்ண வேண்டியிருக்கு."

"நீங்க எங்கப்பா படுக்குறீங்க? இங்கேயே தானே?"

"எங்கேயாவது படுத்துக்கிறேன் இப்ப அது ஒரு விஷயமா?"

தேவகி தனது அறையை நோக்கி வந்தாள்.

நீலகண்டன் நாயர் தனது ஹேண்ட் பேகிலிருந்த, ரிவால்வரை எடுத்து டெலிபோன் அருகே வைத்துக் கொண்டு டயல் செய்யத் தொடங்கினார்.

நிர்மலா தனது அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்டாள்.

# 26

அவள் எந்தவிதமான தயக்கமுமின்றி கட்டிலில் படுத்திருக்கும் ஜயனைப் பார்த்தாள்.

அவன் கால் மேல் கால் போட்டு ஹாயாகப் படுத்திருந்தான். அந்த அறைக்குள் அவனுடன் இருக்க வேண்டிய சூழ்நிலையை நினைத்தபோது மனத்துக்கு கஷ்டமாக இருந்தது.

அப்பா, கதவையும் மூடச் சொல்லியிருக்கிறார்.

தான் தயங்கினாலோ, திகைப்பு அடைந்தாலோ கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அப்பா அறைக்குள் வந்து விடுவார். அப்படி ஏதாவது நிகழ்ந்து விட்டால் மேற்கொண்டு நடப்பதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

ஜயன் வாசலின் மேற்புறத்தைச் சுட்டிக்காட்டினான்.

அவன் சுட்டிக்காட்டிய திசையில் கதவின் மேற்புறத் தாழ்ப்பாள் இருந்தது.

அந்தத் தாழ்ப்பாளையும் போட்டாள்.

ஜயன் கட்டிலிலிருந்து எழுந்தான். அங்கிருந்த டேபிளை நெருங்கினான். அதன் மீது டேப்ரிக்கார்டர் இருந்தது. பக்கத்திலிருந்த காஸெட் ஒன்றை எடுத்து டேப்ரிக்கார்டரில் போட்டு ஆன் செய்தான்.

புதிதாக ரிலீஸ் ஆகியிருந்த ஒரு சினிமா படத்தின் பாட்டு அது.

"உங்களுக்கு தைரியம் அதிகம்தான்." - நிர்மலா சொன்னாள்.

"அதிலென்ன சந்தேகம்?" - ஜயன் மறுபடியும் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டான்.

"அப்பா திடீர்னு அறைக்குள்ள வந்துட்டா உங்க நிலைமை என்ன ஆகுறது?"

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது."

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?"

"அப்படியே ஏதாவது நடந்தாலும் உங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் வராம பார்த்துக்குவேன்."

"நிஜமாவா?"

"எதுக்கு இந்த நேரத்துல தேவையில்லாம கேள்விகள்? தூக்கம் வந்தா நீங்க படுத்துக்கங்க."

"இங்கேயா படுத்துக்க?"

"உங்க இஷ்டம்."

நிர்மலா கட்டிலிலிருந்து பெட்ஷீட் ஒன்றையும் தலையணையையும் எடுத்துத் தரையில் போட்டாள்.

ஓரமாக விரித்துப் படுத்தாள்.

"நல்ல தைரியசாலிதான்!" நிர்மலாவைக் கோபப் படுத்துவதற்காகச் சொன்னான்.

"இதுக்குப் பேரு தைரியமில்லேங்கிறது இல்லை... உங்க மேல இருக்கிற நம்பிக்கைதான் காரணம்!"

"நினைச்சேன்!"

"நீங்க தூங்குறதுக்கு முன்னால டேப்பை ஆஃப் பண்ணிடுங்க." என்ற நிர்மலா இடதுபுறமாகச் சரிந்து படுத்துக் கொண்டாள்.

ஜயன் அந்த நிலையிலேயே படுத்திருந்தான்.

'எவ்வளவு தைரியமான பெண் இவள்! அவள் அப்பா-தன் ஜன்மப் பகைவன் பக்கத்து அறையில் படுத்திருக்கிறார். எந்த நேரத்திலும் தான் அவருக்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடியவன் என்ற பயம் உண்டு. அவர் உயிரே இப்போது தன் கையில்!'

இருந்தும் அவள் அதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் நிம்மதியாகப் படுத்திருக்கிறாள்.

போலீஸ் தேடும் குற்றவாளியை மறைத்து வைப்பது மட்டுமல்லாமல் அவன் இருக்கும் அறையிலேயே படுத்திருக்கிறாள்.

நிர்மலா தூங்கி விட்டாள் என்று தெரிந்தவுடன் கதவை நெருங்கினான். தாழை மெதுவாகத் திறந்தான்.

நீலகண்டன் நாயர் படுத்திருக்கும் அறைக் கதவுக்கு உள்பூட்டு இருப்பது ஜயனுக்குத் தெரியும். நிர்மலாவின் கணவர் அலுவலக அறையாக அதைப் பயன்படுத்தி வந்தார். ஜயன் அந்த அறையை நெருங்கினான்.

சாவித்துவாரம் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான் துவாரத்தில் எதையோ போட்டு அடைத்திருப்பதாகத் தோன்றியது. ஒருவேளை சாவியாக இருக்கும் என்று நினைத்தான்.

ஜயன் அதிகமாக யோசிக்கவில்லை.

டீப்பாயின் மேலிருந்து இரண்டு பேப்பரை எடுத்து வந்தான். கதவின் கீழ்புற இடைவெளி வழியாக அதை உட்புறம் தள்ளினான்.

பிறகு பாக்கெட்டிலிருந்து மெலிதான ஒரு கம்பியை எடுத்து சாவித்துவாரத்தில் போட்டுக் சுழற்றினான்.

'கிளிங்' என்ற சத்தத்துடன் சாவி பேப்பரின் மீது விழுந்தது.

ஜயன் பேப்பரை மெதுவாக இழுத்தான்.

சாவி வெளியே வந்தது.

அதையெடுத்து அறைக் கதவை வெளியிலிருந்து பூட்டினான். பிறகு நீண்ட பெருமூச்சு விட்டான்.

நீலகண்டன் நாயர் சாதாரணமாக ஆறுமணிக்கு எழுந்திருப்பது வழக்கம். அதே பழக்கத்தில் அன்றும் எழுந்தார். கதவை நெருங்கி தாழ்ப்பாளை விலக்கித் திறக்க முயன்றார்.

ஆனால், கதவு திறக்கவில்லை.

'ஏன் இப்படி?' என்று முணுமுணுத்தபடி யோசித்தார்.

கதவை உள்ளிருந்தே தட்டத் தொடங்கினார்

வேலைக்காரி ஓடி வந்தாள்.

அவளும் கதவைத் திறக்க முயன்றாள்.

கதவு திறக்கவில்லை.

நிர்மலா படுத்திருக்கும் அறையின் கதவை நெருங்கி பலமாகத் தட்டினாள்.

நிர்மலா எழுந்தாள்.

அவள் தலையில் என்னமோ பாரமாக இருப்பதுபோல் தோன்றியது. நூல் கயிற்றில் கட்டப்பட்டு அவள் தலையில் போடப்பட்டிருந்தது சாவி.

'இந்த நூல் எப்படி வந்தது?' என்று யோசித்தவாறே நூலிலிருந்த சாவியைக் கையில் எடுத்தாள். இது அப்பா படுத்திருக்கும் அறையின் சாவியாயிற்றே!' என்று நினைத்தவள் கட்டிலின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

ஜயன் விழித்தபடி படுத்திருந்தான்.

"இது உங்க வேலையா?" நிர்மலா கேட்டாள்.

"எல்லாத்தையும் விவரமா சொல்றேன். முதல்ல நீங்க போய் கதவைத் திறந்துவிடுங்க. இல்லேன்னா உங்க அப்பா கதவை உடைச்சு நொறுக்கிடுவார் போல இருக்கு."

"அவர் கேட்டா நான் என்ன காரணம் சொல்றது?"

"பெண்களாச்சே! அதுக்கான அறிவை கடவுள் உங்களுக்குத் தராமலா இருப்பார்?" ஜயன் சிரித்தபடி கூறினான்.

நிர்மலா தவிப்பிடன் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினாள்.

ஐயன் எந்தவிதமுமான பயமும் இல்லாமல் அப்படியே கட்டிலில் படுத்திருந்தான்.

நிர்மலா, அப்பா படுத்திருந்த அறையின் பூட்டைத் திறந்துவிட்டாள்.

"ஐயோ... நீங்க இந்த அறைக்குள்ள இருக்கிறதையே மறந்துட்டேன்!" நிர்மலா ஆச்சரியத்தைக் குரலில் காட்டியபடி பேசினாள்.

"நான் வேற எங்கே இருக்கிறேன்னு நினைச்ச?"

"உண்மையைச் சொன்னா இந்த விஷயத்தையே மறந்துட்டேன் அப்பா!"

"வர வர உனக்கு ஞாபகமறதி அதிகமா ஆகுது!"

"உட்காருங்கப்பா நான் டீ எடுத்துட்டு வர்றேன்."

"சீக்கிரமா கொண்டு வாம்மா."

"நான் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறேன்னு உங்களுக்குத் தெரியுமில்லையாப்பா?"

"நடந்ததுதெல்லாம் போகட்டும்மா. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் குடுக்கத்தான் ஏற்பாடு செய்யுறேன்."

"இன்னொரு கல்யாணமா? இன்னொரு மனுஷனுக்கு முன்னால நான் மறுபடி கழுத்தை நீட்ட முடியாது."

"நீ சின்னப் பொண்ணில்லையா?"

"எல்லாம் சரிதாம்பா. கொஞ்சநாள் நான் தனியா நிம்மதியா இருக்கிறேன். அதெல்லாம் கிடக்கட்டும்... இருங்க டீ எடுத்துட்டு வர்றேன்."

நிர்மலாவும் நீலகண்டன் நாயரும் பேசிக்கொள்வதை சாத்தியிருந்த கதவின் மறுபுறத்திலிருந்து ஐயனும் கேட்கவே செய்தான்.

நிர்மலா டீ எடுத்துவரப் போனதும் நீலகண்டன் நாயர் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்தார்.

அவர் இரண்டு மூன்று முறை புகை விட்ட பிறகு ஜயன் சிகரெட் ஒன்றை எடுத்து பற்றவைத்தான். நீலகண்டன் நாயர் அந்த வீட்டுக்குள் நுழைந்த நிமிடத்திலிருந்து அவன் சிகரெட் புகைக்காமல் இருந்தான். காரணம் நீலகண்டன் நாயர் சிகரெட் புகையின் மணத்தை சுலபமாகத் தெரிந்துகொண்டால் அது ஏதாவது பிரச்சினையைக் கிளப்பலாம் என்று நினைத்தான்.

சுருட்டுப் புகையின் மணத்துடன் சிகரெட் புகை மணமும் கலந்துவிடும் என்பதால்தான் இப்போது பற்ற வைத்தான்.

நீலகண்டன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

நிர்மலாவும், அவளுடன் ஒரு வேலைக்காரியும் மட்டுமே அங்கு தங்கியிருக்கின்றனர். விசாலமான ஒரு பெரிய வீடு இது. வீட்டின் ஒரு பகுதியை ஒதுக்கி ஏதாவது டாக்டருக்கு வாடகைக் விட்டால் குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் வாடகை கிடைக்கும். நிர்மலாவுக்கு அது ஒரு வருமானமாகவும் இருக்கும்.

வேண்டுமானால் நிர்மலா தன்னுடன் வந்து தங்கிக் கொள்ளவும் செய்யலாம். அவள் விரும்பினால் உடனே வேலைக்கும் ஏற்பாடு செய்யலாம்.

காலைச் சிற்றுண்டியை முடித்த பிறகு நீலகண்டன் நாயர் தன் கருத்தை அவளிடம் தெரிவித்தார்.

"அப்பா இது எனக்காக நீங்க தந்த வீடு. தனியா இருக்கணும்கிறதுதான் என்னோட ஆசை. எனக்கு ஒரு வேலையும் கிடைச்சிட்டா நான் வேற யாரோட தயவையும் எதிர்பார்க்க வேண்டியிருக்காது!"

"அப்படின்னா நீ தனியா இருக்கப்போறதா முடிவு பண்ணிட்டியா?"

"நான் இங்கேருந்து எங்கேயும் போகமாட்டேன்."

"நான் ஞாபகப்படுத்துறேன். அவன் பயங்கரமான ஆளு."

"யாரைச் சொல்றீங்க அப்பா?"

"வேற யாரை கொலைகாரப்பாவி ஜயனைத்தான்!"

"அதுக்கு நாம ஏம்பா பயப்படணும்? அவர் கொலை செஞ்சிருந்தா அதுக்கான தண்டனையை அனுபவிச்சுட்டுப் போறார்."

"அவன்தான் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வெளியில திரியிறானே! உன்மேலகூட அவனுக்கு ஏதாவது கோபம் இருக்கலாம் என் பொண்ணுங்கிறதால!"

"என்மேல் எதுக்குக் கோபம் வரப்போகுது?"

"என் மகளானதால!"

"நீங்க எதுக்காக ஜயனுக்கு பயப்படுறீங்கன்னு எனக்குத் தெரியலை."

"என்ன இப்படிப் பேசுற நிர்மலா?"

"நீங்களும் அந்த வக்கீல் அங்கிளும் ஏன் ஜயனுக்காகப் பயப்படுறீங்களோ?"

"அவனை கோர்ட்டுக்குக் கொண்டு போய், தண்டனை வாங்கிக் கொடுத்ததே நான்தான்னு நினைக்கிறான்மா."

"அது சரிதானேப்பா?"

நிர்மலா இந்த அளவுக்கு இந்த விஷயத்தில் விடாப்பிடியாகப் பேசுவது நீலகண்டன் நாயருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"நிர்மலா, ஒரு உண்மையைத் தெரிஞ்சுக்கம்மா! அவன் உயிரோட வெளியில் உலாவிக்கிட்டிருக்கிற வரையில எங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்போ, உத்திரவாதமோ கிடையாது. அவனை போலீஸ்காரங்க கண்டுபிடிச்சு கைது பண்ணினாத்தான் நாங்க நிம்மதியா மூச்சு விட முடியும். அவனை எங்கேயாவது சந்திக்க நேர்ந்தா சுட்டுக்கொல்லாம விடமாட்டேன்!"

"என்னப்பா இந்த மாதிரி வைத்தியக்காரத்தனமா பேசுறீங்க? அந்தக் குற்றத்துக்காக நீங்க ஜெயிலுக்குப்போக வேண்டி வந்தா, என் நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க."

ஜயனுக்கு அங்கு நடந்த உரையாடல்கள் எல்லாம் தெளிவாகக் கேட்கவே செய்தது. தன்னைத் தீர்த்துக் கட்ட எதிராளிகள் முடிவு செய்திருக்கிறார்கள் என்பது ஜயனுக்கு விளங்கியது.

"அப்பா உங்க ஐடியாதான் என்ன?" நிர்மலா கேட்டாள்.

"என்ன ஐடியா? ரெண்டு மூணுநாள் இங்கேயே தங்கலாம்னு பார்க்கிறேன். உனக்கும் ஒரு பாதுகாப்பா இருக்குமே!"

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் நிர்மலா, ஜயன் இருந்த அறையைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

# 27

நிர்மலா குழப்பத்தில் தத்தளித்தாள். அப்பா இங்கேயே தங்கிவிட்டால், ஜயன் இங்கு தலைமறைவாக இருக்க முடியாது. எனவே அப்பாவை இங்கு தங்க வைக்காமல் இருப்பதுதான் நல்லதென்று நினைத்தாள்.

"அப்பா நீங்க இங்கேயே இருக்கிறதும் நல்லதுக்குத்தான். நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்துடுறேன்." நிர்மலா கூறினாள்.

"என்னம்மா திடீர்னு?"

"திடீர் பயணமெல்லாம் கிடையாது. துபாயிலேர்ந்து என் சினேகிதி ஒருத்தி வந்திருக்கிறா. இன்னிக்கு அவளைப் பார்க்க வர்றதாச் சொல்லியிருக்கேன்."

"ஆமா நீயே காரை ஓட்டுவியா?"

"பக்கத்திலேயே தெரிஞ்ச ஒரு டாக்ஸி டிரைவர் இருக்கார். நம்ம கல்யாணியோட உறவுக்காரர்தான்."

"சரி போயிட்டுவாம்மா. இந்தா என் காரையே எடுத்துப்போ. நான் இங்கேதானே இருக்கேன்,"

சாவி கிடைத்து விட்டது. ஆனால், தனது அறையிலிருந்து ஐயனை எப்படி வெளியேற்றுவது என்று அவளுக்குப் புரியவில்லை.

அதே சமயம் சமையல் கட்டிலிருந்து "ஐயோ" என்று ஓர் அலறல் கேட்டது.

நீலகண்டன் நாயரும் நிர்மலாவும் சமையற்கட்டை நோக்கி ஓடினார்கள்

கல்யாணி தளர்ந்து போய் தரையில் விழுந்திருந்தாள்.

"என்ன... என்ன கல்யாணி?" நிர்மலா, கல்யாணியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்துக் கேட்டாள்.

"ஈரக்கையால சுவிட்சைத் தொட்டேன் தூக்கி போட்டுடுச்சும்மா?"

"இப்படியாம்மா பயப்படுத்துவ?" நீலகண்டன் நாயர் ஆத்திரத்துடன் கேட்டார் "கரண்ட் கிட்டயெல்லாம் ஜாக்கிரதையா நடந்துக்க வேண்டாமா?" என்று சொன்ன நீலகண்டன் பழையபடி தனது இருப்பிடத்துக்குத் திரும்பினார்.

அவர் போனதைப் பார்த்த பிறகு கல்யாணி சொன்னாள்: "ஐயன் தம்பியை வெளியே அனுப்புறதுக்குத்தாம்மா இப்படி ஒரு குரல் குடுத்தேன். நான் சுவிட்சைத் தொடவே இல்லை!"

நிர்மலா அவளை நன்றி நிறைந்த விழிகளுடன் பார்த்தாள்.

அதற்குள் வெளியே கார் ஸ்டார்ட் ஆன சத்தம் கேட்டது. நிர்மலா அவசர அவசரமாக வாசல் பக்கம் விரைந்தாள்.

நிர்மலா காரில் ஏறி அமர்ந்ததும் "எங்கபோகணும்?" ஐயன் கேட்டான்.

"நானும் அதைப் பத்தித்தான் யோசிக்கிறேன்!" நிர்மலா எந்த முடிவுக்கும் வராதவளாகப் பேசினாள்.

"என்னவா இருந்தாலும் கார் ரோட்டில போயிட்டே இருக்கட்டும். உங்க அப்பாவோட கார்னு போலீஸ்காரங்களுக்கும் தெரியும் என் வேஷமும் மாறியிருக்கு உங்களையும் போலீஸ்காரங்களுக்குத் தெரியும்."

கார் டவுன் பகுதிக்கு வந்தது.

"அப்பாவை அங்கேருந்து கிளப்புறதுக்கு என்ன வழி? உங்களுக்கு ஏதாவது யோசனை தோணுதா?" நிர்மலா கேட்டாள்.

"உங்க அப்பா வீட்டுல இப்ப ஒரு வேலைக்காரன் மட்டும்தான் இருக்கார். அவரை ஒரு மிரட்டு மிரட்டினா போதும். மீதியை அவரே பார்த்துப்பார்."

"என்ன பண்ணப் போறீங்க?"

" இருங்க... பப்ளிக் பூத்திலேருந்து ஒரேயொரு போன்தான்."

"யாரும் சந்தேகப்படாம ஜாக்கிரதையா!"

போஸ்ட் ஆபீஸுக்கு அருகில் காரை நிறுத்திய ஜயன் பப்ளிக் பூத்துக்குள் நுழைந்தான். நம்பரைச் சுழற்றினான்.

எதிர் முனையில் வேலைக்காரன் ரிசீவரை எடுப்பது கேட்டது.

"மிஸ்டர் நாயர் இருக்காரா?" ஜயன் கேட்டான்.

"இல்லையே!"

"இல்லையா? அதுவும் நல்லதுதான் ராத்திரி எப்பிடியும் வீட்டுக்கு வருவார் இல்லையா? அப்ப பார்த்துக்கிறேன்."

"ஹலோ நீங்க யாரு!"

"நேர்ல வரும்போது புரியும் பார்த்துக்க!"

ஜயன் ரிசீவரை கிராடிலில் பொருத்தினான்.

திரும்ப காருக்கு வந்தவன் ஸ்டார்ட் செய்து சாஸ்திரி ரோட்டை நோக்கிச் செலுத்தினான்.

"எங்கே போறீங்க?" நிர்மலா கேட்டாள்.

"இன்னும் ஒரு மணிநேரம் கழிச்சு நாம உங்க வீட்டுக்குப் போனால் போதும்."

"ஏன்?"

"வீட்டுக்குப் போன பிறகு சொல்றேனே!"

"சரி ஒரு மணி நேரத்தை எப்படி தள்ளுறது?"

"ரொம்பவும் சுலபம். நீங்களும் கார் ஓட்ட கத்துக்கிடலாம். நேரத்துக்கு நேரமும் போயிடும். உருப்படியா ஒரு விஷயத்தையும் கத்துக்கிட்டதா ஆகிடும்."

"நல்ல யோசனைதான்!"

கார் அருகிலிருந்த மைதானத்தின் பக்கமாகத் திரும்பி நின்றது.

போலீஸ் ஜீப் ஒன்று வேகமாக வந்து காரை கடந்து போனது. ஜீப்பிலிருந்த இன்ஸ்பெக்டர் காரின் நம்பரைக் கவனிப்பது ஐயனுக்கும் தெரிந்தது.

சரியாக ஒரு மணி நேரத்துக்குப் பிறகு கார் அங்கிருந்து கிளம்பி நிர்மலாவின் வீட்டின் முன்னால் நின்றது.

நீலகண்டன் நாயர் அங்கு இல்லை.

"உங்க அப்பா ஒரு டாக்ஸியை வரவழைச்சு அதில ஏறிப் போயிட்டார்." கல்யாணி கதவைத் திறந்தபடி கூறினாள்.

"ஏதாவது சொல்லிட்டுப் போனாரா?"

"நான் உடனே கிளம்புறேன். நிர்மலா வந்தா காரை உடனே என்வீட்டுக்கு அனுப்பச் சொல்லுன்னாரும்மா."

"ஐயோ... அது எப்படி சாத்தியம்?"

"பயப்படாதீங்க... நானே காரை அவர் வீட்டுல பத்திரமா விட்டுர்றேன்."

"வேண்டாம்.... உங்களை அப்பா அடையாளம் தெரிஞ்சுக்கலாம்."

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீங்க கவலையே படவேணாம்."

அதே நேரம் வீட்டுக்குள் போன் மணியடித்தது.

"கல்யாணி, நிர்மலாவோட அப்பா பேசினாருன்னா, சின்னம்மா இன்னும் வந்து சேரலைன்னு சொல்லுங்க!" ஜயன் கூறினான்.

"சரிங்க!"

கல்யாணி ரிசீவரை எடுத்து, "ஹலோ!" என்றாள்.

நீலகண்டன் நாயர் பேசினார்.

சொல்லிக் கொடுத்தது போலவே பேசினாள். ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பிப் போனாள்.

மதிய நேரத்தில் மீண்டும் போன் மணியடித்தது.

"நிர்மலா இப்ப நீங்களே பேசுங்க. நீங்க ராத்திரி அங்கே வர்றதா சொல்லுங்க. வேண்டாம்னு அவர் தடுத்தா காரை டிரைவர்கிட்டக் கொடுத்து அனுப்புறதா சொல்லுங்க" ஜயன் சொல்லிக் கொடுத்தான்.

நிர்மலா அப்படியே பேசினாள்.

அதன் பிறகு நாயர் டெலிபோன் செய்யவில்லை.

இரவு பத்து மணியானதும் ஜயன் காரை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

# 28

அன்று இரவு ஜயன் அங்கே வருவான் என்று தெரிந்ததால் நீலகண்டன் நாயர் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குத் தகவல் தெரிவித்ததால் நான்கு போலீஸ்காரர்களை துப்பாக்கியுடன் அனுப்பி வைத்திருந்தார். ஆவனை பார்த்தால் தயங்காமல் சுடச் சொல்லி உத்தரவும் கொடுத்திருந்தார்.

போலீஸ்காரர்கள் வந்து சேர்ந்ததும் நீலகண்டன் நாயர் அவர்களைத் தக்கபடி உபசரித்தார்.

"எப்படியிருந்தாலும் ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலதான் அவன் வருவான். எதுக்கும் ஜாக்கிரதையாக இருங்க!" நீலகண்டன் நாயர் எச்சரிக்கத் தவறவில்லை.

"சார் நீங்க பயப்படவேணாம். இன்னியோட அவன் குடுக்கிற தொல்லை ஒழிஞ்சு போயிடும். இந்தப் பகுதியில் அவன் கால் வச்சாலே தொலைஞ்சான்னு நினைச்சுக்கங்க!" - கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கியைத் துடைத்தபடி கூறினார்.

"இன்னொரு விஷயம்... அவன் கேட்வழியா வருவான்னு எதிர்பார்க்காதீங்க. எந்தப் பக்கத்துலேர்ந்தும் வரலாம். பின்பக்கத்துல ஒரு எலெக்ட்ரிக் போஸ்ட் இருக்கு. அதுல ஏறிக்கூட உள்ளே குதிக்கலாம். பார்த்துக்கங்க!" நீலகண்டன் நாயர் கூறினார்.

"அப்படின்னா எங்கள்ல ஒருத்தரை அங்கே நிக்க வெச்சுடலாம்" - மற்றொரு போலீஸ்காரர் கூறினார்.

"நானே அங்கே போய் நிக்குறேன். மதிலைத் தாண்டினான்னா குருவியைச் சுடுற மாதிரி சுட்டுர்றேன்" அந்தத் திசையில் நடந்தபடி வேறொரு போலீஸ்காரர் கூறினார்.

"சொன்னா மட்டும் போதாது. ரொம்ப ஜாக்கிரதையா இருங்க!" நாயர் எச்சரித்தார்.

"கவலையே படாதீங்க. நாங்க பார்த்துக்கிறோம்!"

"உண்மையைச் சொன்னா நான் நிம்மதியாத் தூங்கி மூணுநாலு நாளாச்சு. இன்னிக்கு எப்படியோ? ஏதாவது சத்தம்

கேட்டா நான் சட்டுன்னு விழிச்சுடுவேன்" சொல்லிவிட்டு நாயர் தனது படுக்கையறையை நோக்கி நடந்தார்.

அதே நேரம் கேட்டருகே ஜீப்பின் ஹெட்லைட் வெளிச்சம் தட்டுப்பட்டது. வாட்ச்மேன் கதவைத் திறந்தார். அது போலீஸ் ஜீப் என்பது தெரிந்தது.

ஜீப் உள்ளே நுழைந்து போர்ட்டிகோவில் நின்றது.

அதிலிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இறங்கினார்.

"வாங்க உள்ள போகலாம்!" என்றவாறு சர்க்கிள் வாசலுக்குள் நுழைய, அவரையே பார்த்துக் கொண்டிருந்த நாயரும் அவரைப் பின் தொடர்ந்தார்.

"மேற்கொண்டு ஏதாவது தகவல் வந்ததா?" சர்க்கிள் படியேறும்போது கேட்டார்.

"இல்லையே!"

"இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு பார்த்துடணும்னுதான் நானே வந்திருக்கேன். இந்தத் தடவையும் அவன் தப்பிச்சுட்டா, நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரா இருக்குறதுல அர்த்தமே இல்லை."

"உண்மைதான். நான்கூட துணைக்கு உங்களைக் கூப்பிடலாம்னு நெனைச்சேன். என் மனசைத் தெரிஞ்சு நீங்களே நேரா வந்துட்டீங்க."

"ஒரு அவசரமான வேலை இருந்ததால், நம்ம ஆள் ஒருத்தர்கிட்ட அதை ஒப்படைச்சுட்டு வந்திருக்கேன்."

இருவரும் நாயரின் தனியறைக்கு வந்தனர். இருக்கைகளில் அமர்ந்தனர்.

சட்டென்று துள்ளியெழுந்த நீலகண்டன் துப்பாக்கி வைத்திருந்த இடத்தைப் பார்த்தார்.

"அசையாம உட்காரணும்." - சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் வேஷத்திலிருந்த ஜயன் கட்டளையிடும் குரலில் பேசினான்.

நீலகண்டன் நாயரின் உடல் குப்பென்று வியர்த்தது.

தனக்கு உதவி செய்வதற்காக யார் வந்து சேர்ந்திருப்பதாக நினைத்திருந்தாரோ அவருக்கு பதில் யாரைக் கண்டு தான் பயப்படுகிறோமோ, யாரைப் பிடிப்பதற்காக நான்கு போலீஸ்காரர்கள் கீழ்ப்பகுதியில் காத்திருக்கிறார்களோ அதே மனிதன் தன் எதிரில் நிற்கிறான். சட்டென்று செயல்பட முடியாத ஒரு சூழ்நிலையில்.... அதுவும் மிக அருகில்... கடவுளே!

ஜயன் சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் உடையில் இருந்ததால் யாருக்குமே சந்தேகம் ஏற்படவில்லை

"வேஷம் நல்லா இருக்குங்களா?" ஜயன் சிரித்தவாறு கேட்டான்.

"ராஸ்கல்... நீ யார்கிட்ட விளையாடுற தெரியுமா? இந்த நிமிஷமே நான் நினைச்சா, போலீஸ்காரங்க உன் உடம்பைத் துப்பாக்கி குண்டுகளால் துளைச்சிடுவாங்க." நாயர் மீண்டும் துள்ளியெழ முயன்றார்.

"உட்காருங்க... மிஸ்டர் நாயர் பதற்றம் கூடாது. இப்போ போலீஸ் ஸ்டேஷன்ல சர்க்கிள் இல்லை. வர்ற வழியில அவரைப் பார்த்தேன். அவரோட வண்டியிலதான் நான் இங்க வந்திருக்கேன்."

நாயருக்கு ஒன்றும் புரியவில்லை.

"புரியலிங்களா? விவரமா சொல்றேன். சர்க்கிள் இந்தப் பக்கமாகத்தான் வந்துட்டிருந்தார். நான் ஒரு வழியில எதிர்பாராம அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்தான் தன்னோட டிரஸ், ஜீப் எல்லாத்தையும் என்கிட்டக் குடுத்தார். வீணா இப்ப அவரை எதிர்பார்க்காதீங்க!" ஜயன் நடந்த சம்பவத்தை வெகு சாதாரணமாக விளக்கினான்.

அப்படியானால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ குறுப்பை இவன் காயப்படுத்தி எங்காவது கட்டிப் போட்டிருப்பானோ? நிலைமை மிகவும் சிக்கலாக உள்ளது. இந்தச் சமயத்தில்

எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாவிட்டால் நிலைமை மேலும் விபரீதமாகிவிடும் என்று நாயருக்குப் புரிந்தது.

"நீங்க நிர்மலா வீட்டுக்குப் போறதை நான் கவனிச்சேன்." ஜயன் பேசத் தொடங்கினான்: "நீங்க என்னிக்காவது உங்க மகள் வீட்டில இருக்கும்போதுதான் உங்களை ஒரு வழி பண்ணுவேன். நான் என்ன பண்றேன்ங்கிறது உங்க பொண்ணுக்கும் தெரியணும். அது மட்டுமில்லை. நடந்த உண்மை எல்லாத்தையும் அவங்ககிட்ட வெளிப்படையாச் சொல்லுவேன்."

நீலகண்டன் நாயர் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அப்புறம் நான் இங்கே எதுக்காக வந்திருக்கிறேன்னு நீங்க கேட்கவே இல்லையே? முக்கியமா ரெண்டு விஷயம். முதலாவது சொன்ன சொல்லைக் காப்பாத்த. ரெண்டாவது எனக்கு வேண்டிய பணத்தை வாங்கிட்டுப் போக..."

"பணமா...!"

"ஏன் ஆச்சரியப்படுறீங்க? நீங்க செஞ்சிருக்கிறது சாதாரணமான விஷயமா? நியாயமா பார்த்தா நீங்க நாலு பேரும் போய் உட்கார்ந்திருக்க வேண்டிய இடத்துக்கு என்னை அனுப்பி வெச்சிருக்கீங்க. கணக்குப்படி நாலு பேர் தூக்கு மரத்துக்குப் போயிருக்கணும். அதனால் நாலு உயிர்களுக்கு கொஞ்சம் அதிகமாத்தானே விலை குடுக்கணும்... ம்... சீக்கிரமா எடுங்க. எனக்கு நேரமில்லை."

அவன் கேட்டபடி பணம் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. பணம் கொடுக்கலாம் என்று நினைத்தபோது சட்டென்று அவர் மூளையில் மற்றொரு யோசனையும் தோன்றியது.

பணம் வைத்திருக்கும் பீரோவுக்குள் கைத்துப்பாக்கி இருக்கிறது. முடிந்தால் இந்தச் சந்தர்ப்பத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

"இந்தத் தடவை மட்டும் தர்றேன். மேற்கொண்டு என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது!" என்றபடி நாயர் தனது இருக்கையிலிருந்து எழுந்து, மேஜையைக் திறந்து பீரோ சாவியைக் கையில் எடுத்தார்.

"மிஸ்டர் நாயர் அந்தச் சாவியை இப்பிடிக் குடுங்க. நானே பீரோவைத் திறக்கிறேன். இல்லேன்னா நீங்க ஏதாவது முட்டாள்தனம் பண்ணிடுவீங்க" ஐயன் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தான்.

நாயர் சாவியை அவனிடம் கொடுத்தார்.

ஐயன் சாவியை வாங்கிக்கொண்டு பீரோவை நெருங்கினான். அது இரண்டு கைகளையும் பயன்படுத்தித் திறக்க வேண்டிய பீரோ, ஒரு விநாடி தயங்கிய ஐயன் சுவரில் சாய்த்து வைக்கப் பட்டிருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியை நெருங்கி அதிலிருந்து ரவையை வெளியே எடுத்துவிட்டு துப்பாக்கியை பழையபடி அங்கேயே வைத்தான்.

"என்னடா இது... நாம எதிர்பார்க்காததெல்லாம் நடக்குதேன்னு விழிக்கிறீங்களா? எல்லாம் அனுபவம் கத்துக் கொடுத்த பாடங்கள்தானே?" ஐயன் பீரோவைத் திறந்தபடி பேசினான்.

பீரோவுக்குள்ளிருந்து நூறு ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றை எடுத்த ஐயன் நாயரின் பக்கம் திரும்பினான்.

"நல்லா பார்த்துக்கங்க. நான் சொன்னபடியே ஒரே ஒரு கட்டுதான் எடுத்திருக்கேன். அதிகப்படியா இதை மட்டும் எடுத்துக்கிறேன்!" என்ற ஐயன் பீரோவிலிருந்த கைத்துப்பாக்கியையும் எடுத்து பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"இவ்வளவு தூரம் உதவினதுக்கு ரொம்ப நன்றி. மேற்கொண்டும் ஒரு சின்ன உபகாரம் செய்யணும். என் கூட ஜீப் வரைக்கும் வர்றீங்களா? இல்லேன்னா போலீஸ்காரங்களோட வீணா சண்டை போட வேண்டியிருக்கும். நீங்க ஒண்ணும் பண்ணாம எனக்கு முன்னாடி நடந்தா போதும்."

நாயர் அனுசரித்தார்.

இருவரும் ஜீப்பை நெருங்கியதும் போலீஸார் மூன்று பேர் பத்தடி தொலைவுக்கு முன்னால் நின்றபடி ஐயனை நோக்கி சல்யூட் அடித்தார்கள். பதிலுக்கு சல்யூட் அடித்த ஐயன், "நீங்கள்லாம் பின்பக்கம் போகலாமே. அங்கேதான் பாதுகாப்பு வேணும். இங்கே நான் இருக்கிறேனே!" என்றான்.

உடனே மூவரும் பங்களாவின் பின் பக்கத்தை நோக்கி விரைந்தனர்.

"பார்த்தீங்களா இந்த டிரஸ்ஸுக்கு அவங்க குடுக்கிற மதிப்பை! சரி நான் வரட்டா" என்ற ஐயன் விரைவாக ஜீப்பை ஸ்டார்ட் செய்து கேட்டைக் கடந்தான்.

"ஓடி வாங்க... ஓடி வாங்க..." நாயர் உரத்த குரலில் அலறினார்.

"என்னங்க என்னங்க ஆச்சு?" என்றபடி மூவரும் அவரை நெருங்கினர்.

"ஜீப்பில் வந்தது உங்க சர்க்கிள் இல்லை. அந்தக் கொலைகாரன்தான்!"

"என்னங்க.... நாங்க யூனிஃபாரத்துல பார்த்தோமே!"

"யூனிஃபாரம் மட்டும்தான் அவரோடது."

"அப்படின்னா சார் என்னவானார்?"

அதே நேரம் கேட்டருகில் மறுபடி இரண்டு ஹெட்லைட்டுகள் பளிச்சிட்டன.

"அதே ஜீப் திரும்பி வருது. அவனேதான் வர்றான். தவறவிடாதீங்க. முதல்ல டயர்ல சுடுங்க. அதுக்குமேல அவன் நகர முடியாதபடி துப்பாக்கியை காட்டி நிறுத்துங்க."

ஜீப் கேட்டைத் தாண்டி உள்ளே வந்தது.

போலீஸ்காரர்கள் முன்புற டயரை நோக்கிச் சுட்டனர்.

இரண்டு முன்புற டயர்களும் வெடித்து வண்டி தாறுமாறாக நகரத் தொடங்கியதும் ஜீப்பைநிறுத்திவிட்டு குறுப்பு ரிவால்வருடன் வெளியே குதித்தார். "என்ன வேலை செய்யுறீங்க?" என்று கர்ஜித்தபடி முன்னோக்கி நடந்தார்.

போலீஸார் நடுங்கத் தொடங்கினர்.

"யார்... குறுப்புதானா? என்ன இப்படி?" நாயர் கேட்டார்.

"ஏன் இப்படி பைத்தியக்காரத்தனமா நடந்துக்கறீங்க?"

"மன்னிக்கணும்... நான்தான் இதுக்கெல்லாம் காரணம். கொஞ்ச நேரத்துக்கு முன்னால இதே டிரஸ்ல இங்கே ஜயன் வந்துட்டுப்போனான். அவன்தான் திரும்பவும் வந்துட்டான்னு நான்தான் சுடச்சொன்னேன்."

"இவங்க இவ்வளவு எச்சரிக்கையோட இருந்துமா வந்துட்டுப் போனான்?"

"உங்களை நடுவழியில சந்திச்சதாவும் உங்ககிட்டேயிருந்து டிரஸ், ஜீப் எல்லாத்தையும் வாங்கிட்டு வந்ததா சொல்லி என்கிட்டேயிருந்து பத்தாயிரம் ரூபாயையும் கடத்திட்டுப் போயிட்டான்."

"என்ன முட்டாள்தனமான பேச்சு இது. சுட்டுக் கொன்னிருக்கக் கூடாதா அவனை?"

"நீங்கன்னு நினைச்சதால்தான் சுடாம இருந்துட்டோம்."

"சரி.. சரி... அவனுக்கு நான் வேற, ஒரு வழி பண்றேன்!" குறுப்பு கறுவினார்.

# 29

"நாம நினைக்கிற மாதிரியில்லை. அவன் ரொம்பவும் பயங்கரமானவன்" நீலகண்டன் நாயர் கேட்டை பார்த்தபடி கூறினார்.

"இருக்கட்டும். ஆனா அந்த நாய் எதுக்காக ஜெயில்லேர்ந்து தப்பிச்சு இப்போ தலைமறைவா வந்துதுன்னு தெரியலையே?" சி.ஐ. சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துவிட்டு உதாசீனமாகப் பேசினார்.

"என்ன காரணமா இருக்கும்?"

"வேறென்ன... நம்ம கண்ணில பட்டா பிறகும் அவனை உயிரோட போகவிடமாட்டோமே. அதனாலதான். அவனைப் பார்த்த உடனேயே நாம சுட்டுத்தள்ளிடுவோம்கிற பயமிருந்தா இப்படியெல்லாம் விளையாட்டுக் காட்டுவானா?" மாதவ குறுப்பு தனது பெல்ட்டிலிருந்த ரிவால்வரைத் தடவியபடி கூறினார்.

"சரி, வாங்க நாம உள்ளே போய் உட்கார்ந்து பேசலாம்" நீலகண்டன் நாயர் அழைத்தார்.

மேல்மாடிக்கு வந்து சேர்ந்தனர்.

"பாலகிருஷ்ண பிள்ளை உடனடியா வந்து சேர்ந்துடுவார். நான் தகவல் சொல்லிட்டு வந்திருக்கிறேன்" குறுப்பு படியேறும் போது சொன்னார்.

"என்ன இருந்தாலும் இவ்வளவு பாதுகாப்புக்கு நடுவிலயும் அவனுக்கு இங்கே வர்றதுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?" நீலகண்டன் நாயர் பீரோவைப் பார்த்தபடி கூறினார்.

"அதில என்ன ஆச்சரியம் இருக்கு? அவன் இங்கே வேலை செஞ்சிட்டிருந்தவன்தானே? இந்த வீட்டைப் பத்தின விஷயம் முழுசா அவனுக்குத் தெரியுமே."

"உண்மைதான். அந்த அளவுக்கு நாம அவனுக்குச் சுதந்திரம் கொடுத்துட்டோம்" - என்ற நாயர் மற்றொரு பீரோவிலிருந்த ஷிவாஸ் ரீகல் பாட்டிலை எடுத்துத் திறந்தார்.

"இந்தாங்க இதை நீங்களே ஊத்துங்க. நான் மூட் அவுட்டா, டென்ஷனா இருக்கிறேன்" நாயர் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தார்.

மாதவ குறூப்பு விஸ்கியை கிளாஸ்களில் ஊற்றினார்.

"என்ன இன்னும் பிள்ளையைக் காணோமே" நாயர் கேட்டின் பக்கமாகப் பார்வையைச் செலுத்திக் கொண்டு கேட்டார்.

"கண்டிப்பா வந்துடுவார். வராம இருக்கமாட்டார்!" குறூப்பு கிளாஸைக் கையில் எடுத்துக்கொண்டு வீடியோவின் ஸ்விட்சை ஆன் செய்தார்.

"இது என்ன புதுசா இருக்கே. ஆமாம் இது எப்போ கிடைச்சது?" ஸ்கிரீனில் தென்பட்ட புளூஃபிலிமைப் பார்த்தபடி கேட்டார் நாயர்.

"நேத்து கிடைச்சது. ஒரு ரெய்டுக்குப் போயிருந்தோம். நாலு காஸெட் கிடைச்சது. நான் எடுத்துட்டு வந்துட்டேன். அட இதுல என்னதான் இருக்குன்னு பார்த்திடலாமே. இதுக்கு மார்க்கெட் ரொம்ப நல்லா இருக்கு. நாமளும் இதை ஆரம்பிச்சா என்னன்னு தோணுது!"

"அதுக்கென்ன கஷ்டமா? ஒரு நல்ல வீடியோகிராபர் நம்ம கஸ்டடியில வேணும். அப்புறம் புதுப்படத்துல நடிக்க நடிகர் நடிகையர் தேவைன்னு விளம்பரம் செஞ்சுட்டா வந்து குவிஞ்சிடுவாங்க. இந்த மாதிரி விளம்பரங்களை ரொம்ப சாதாரணமா பேப்பர்கள்ள போடுறாங்களே, விசாரிச்சுப் பார்த்தா உண்மையில அதெல்லாம் சினிமா கம்பெனிகளா இருக்காது. சின்னப் பொண்ணுங்களைத் தேடிப் பிடிச்சு லவட்டிட்டுப் போறதுதான் நோக்கம்."

"நீங்க சொல்றதும் உண்மைதான். ஆனா, நாம வேற வழியில முயற்சி பண்ணலாம்."

"என்ன வழி?"

அதே நேரம் வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"ஒரு விஷயம்... வந்திருக்கிறது பிள்ளைதானான்னு பார்த்துட்டு அப்புறம் வீட்டுக்குள்ள கூட்டிட்டு வரலாம். சில

நேரம் அந்த நாய்கூட நம்மளை ஏமாத்துறதுக்கு எதையாவது செஞ்சுட்டு வந்து நிற்கும்" குறுப்பு கூறினார்.

"அதுவும் நல்ல யோசனைதான். நானே கீழே போய் பார்த்துட்டு வர்றேன்" நீலகண்டன் நாயர் படிகளில் இறங்கினார்.

மாதவ குறுப்பு வீடியோ ஸ்க்ரீனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்துக்குள் பிள்ளையும் நாயரும் அறைக்குள் நுழைந்தனர்.

"போத்தன் வர்கீஸ் ஊரில் இல்லேன்னு தோணுது!" பிள்ளை தகவல் தெவித்தார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலகூட என்கிட்டப் பேசினாரே!" குறுப்பு சொன்னார்.

"அப்படீன்னா திரும்பவும் கூப்பிட்டுப் பார்க்கலாம். அவரும் வந்து சேர்ந்துட்டா நம்ம எண்ணிக்கை சரியாப்போயிடும்" நாயர் ரிசீவரை எடுத்து நம்பரை டயல் செய்தார்.

எதிர்முனையில் தொலைபேசி மணியடிப்பது தெளிவாகக் கேட்டது! ஆனால், யாரும் எடுப்பதாகத் தெரியவில்லை.

சற்று நேரத்துக்குப் பிறகு ரிசீவரை எடுத்தவுடன் நாயர் கேட்டார்.

"மிஸ்டர் போத்தன்தானே?"

"நாங்கதான். இங்கே நண்பர்களின் எண்ணிக்கை குறைவா இருக்கு. உடனே வந்தா நல்லது. மும்பையிலேருந்து புது செட் வந்துருக்குது. யாரோல்லாம் வர்றீங்களோ வரலாம். அப்புறமா மிஸ்பண்ணிட்டமேன்னு வருத்தப்படுவீங்க!" தகவலைத் தெரிவித்ததும் நாயர் ரிசீவரை கிராடிலில் வைத்தார்.

"யாரது?" பிள்ளை கேட்டார்.

"மும்பையிலிருந்து யாரோ ஒருத்தர் வந்திருக்கிறாராம். எவனாவது கள்ளக்கடத்தல்காரனா இருப்பான். வேற யாரா இருக்கும்?" நீலகண்டன் நாயர் கூறினார்.

சரியாகப் பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு கீழே ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

வழக்கம்போல் நீலகண்டன் நாயர் இறங்கிச் சென்றார்.

போத்தன் சொன்னது சரிதான் அவருடன் மற்றொருவரும் இருந்தார்.

"இவர்தான் நீங்க சொன்ன நபரா? எங்களை முறைப்படி அறிமுகப்படுத்தி வையுங்க" நாயர் கேட்டுக் கொண்டார்.

"இவர் மிஸ்டர் சேதுவர்மா. மும்பையில் சொந்தமா பாங்க் நடத்தறார். வர்மா எண்டர்பிரைசஸ் ரொம்பவும் ஃபேமஸான பாங்க்" போத்தன் வர்கீஸ் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சேதுவர்மா தனது காஸ்ட்லியான விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினார்.

ஒவ்வொருவரும் தங்கள் கைக்குக் கிடைத்த கார்டை ஊன்றிப் பார்த்தனர்.

"வர்கீஸ் போன்ல சொல்லும்போதே நாங்க உங்களைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டோம். போத்தன் சார் சாதாரணமானவங்களோட தொடர்பு வெச்சுக்கமாட்டார்" குறுப்பு சொன்னார்.

"சாப்பிடுவீங்க இல்லையா?" நாயர் பாட்டிலைக் காட்டிக் கேட்டார்.

"சாப்பிடாம... குறிப்பா சொன்னா இது என்னோட பிராண்டும்கூட" சேதுவர்மா பாட்டிலைப் பார்த்தபடி சொன்னார்.

ஒரு ரவுண்டு முடித்து விட்டு இரண்டாவது ரவுண்டுக்குப் போனார்கள்.

"உங்க வருகையோட நோக்கம்?" நாயர் நேரடியாகக் கேட்டார்.

"சொல்றேன். ஏற்கெனவே நான் எல்லாத்தையும் போத்தன் சார்கிட்டச் சொல்லியிருக்கேன்."

"அப்படின்னா போத்தன் சாரே விளக்கட்டும். அது தான் நல்லது!" பிள்ளை கூறினார்.

"பெரிய பெரிய பிஸினஸ்களுக்குப் பணத்தைக் கடன் கொடுக்கறது மிஸ்டர் சேதுவர்மாவோட தொழில்" போத்தன் விவரிக்கத் தொடங்கினார்.

"அப்படீன்னா?"

"சினிமா தயாரிப்பு மாதிரி பெரிய பட்ஜெட்டுகளுக்கு?"

"ஏன் அப்படி ஒரு கொள்கை?" மாதவ குறுப்பு கேட்டார்.

"சினிமா மட்டுமில்லாம அதோட சேர்ந்த பி.எஃப். எடுக்கிறது சேதுவோட தொழில் ரகசியம்."

"ஓகோ ஒரு கல்லில ரெண்டு மாங்கா!"

மூவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"புரிஞ்சதா? உங்களுக்குச் சம்மதமா?"

"உண்மையைச் சொன்னா ஒரு அரைமணி நேரத்துக்கு முன்னாலதான் இதைப் பத்தி டிஸ்கஸ் பண்ணினோம்" பிள்ளை கூறினார்.

"அப்படீன்னா உங்களுக்கு அதிகமா விளக்க வேண்டியதில்லை" சேதுவர்மா சிகரெட் ஒன்றுக்கு நெருப்பைத் தொடர்பு படுத்திக் கொண்டு கேட்டார்.

"அப்படின்னா இன்னிக்கு நம்ம விவாதம் அதுவாவே இருந்துட்டுப் போகட்டும்!" வர்கீஸ் தனது கருத்தைத் தெரிவித்தார்.

"முதல்ல நாம ஒரு படம் தயாரிக்கப் போறதா விளம்பரம் செய்யணும்" பிள்ளை பேச்சைத் தொடங்கினார்.

"அது ரொம்ப சுலபம். ஏதாவது ஒரு கம்பெனி பேரைப் போட்டு ரொம்பவும் பரபரப்பா பேசப்பட்ட ஒரு நாள் இல்லேன்னா தொடர்கதையோட பேரை படத்துக்குத் தலைப்பா குடுத்துடலாம்."

"தலைப்பை இப்படிப் பயன்படுத்தினா தப்பு இல்லையா?"

"கதை அவங்களுதுன்னு நாம பேர் போடப் போறதில்லையே. மிஞ்சி ஏதாவது தகராறு செஞ்சா, சில்லறையைக் குடுத்து வாயை அடைச்சுடலாமே."

"சரி விளம்பரத்துக்கு எவ்வளவு செலவாகும்?"

"ஒரு ஐம்பது ரூபா வரைக்கும் ஆகலாம்!"

"எல்லாமே புதுமுகங்கள்தான் - டெக்னீஷியனுங்க உட்பட."

"நல்ல ஐடியா. கூடவே படத்தில் நடிக்க ஆர்வமுள்ள இளைஞர் இளைஞிகள் தேவைன்னு ஒரு விளம்பரம் யாருக்கும் சந்தேகம் ஏற்படாம எடுக்க பூஜையோடவே ஒரு பாட்டையும் ரிக்கார்டு பண்ணிடணும்" வர்மா ஆலோசனை கூறினார்.

"சுத்தம்... ரொம்பவும் நல்ல ஐடியா."

மற்ற நால்வரும் திட்டத்தை ஏகமனதாக ஆமோதித்தனர்.

"அப்படின்னா நாளைக்கே அதுக்கான வேலைகளை ஆரம்பிக்க வேண்டியதுதான்" வர்மா ஒரு முடிவுக்கு வந்தவராகப் பேசினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு சில பத்திரிகைகளில் சினிமா தயாரிப்பு பற்றிய விளம்பரங்கள் வெளிவந்தன. அத்துடன் கதாநாயகியாக நடிக்க நடிகையர் தேவை என்கிற விளம்பரமும் இணைக்கப்பட்டிருந்தது.

ஓட்டல் 'திரிசந்த்யா'வில் ரூம் போட்டு படத்தயாரிப்பு அலுவலகமும் தொடங்கப்பட்டது.

அதே பத்திரிகையின் மற்றொரு பகுதியில் 'பிரபல கள்ளக்கடத்தல் புள்ளி கேரளா'டுக்கு வந்திருக்கிறார்?' என்கிற தலைப்பில் கேள்விக்குறியோடு செய்தி வெளியாகியிருந்தது. கடத்தல்காரரின் வயது, தோற்றம், நடவடிக்கைகள் போன்றவை குறித்தும் பத்திரிகைகளில் ஓரளவுக்கு அடையாளம் கொடுத்திருந்தனர்.

அன்று மாலை நேரத்தில் ஐந்து பேரும் நீலகண்டன் நாயரின் வீட்டில், வழக்கமான பகுதியில் ஒன்று கூடினர்.

"பத்திரிகையைப் பார்த்திருப்பீங்க. ஆனா... இந்தச் செய்தியைக் கவனிச்சீங்களான்னு தெரியாது. எதுக்கும் பாருங்க!" நான்கு பத்திரிகைகளில் வெளிவந்த கடத்தல்காரரைப் பற்றிய வட்டமிடப்பட்ட பகுதிகளை அவர்களிடம் காட்டினார் நாயர்.

"இந்த நபர் யாரா இருக்கும்னு நெனைக்கிறீங்க"- குறுப்பு கேட்டார்.

"இது ஒரு பொதுஅடையாளம்தான். புத்திசாலித்தனமா போட்டோ போடலை பாருங்க. இருந்தாலும் எனக்குத் தெரிஞ்சு அவரோட பெயர் ராஜன்னு நினைக்கிறேன். இங்கே வரப்போறதா என்கிட்ட கோடி காட்டியிருந்தார்" வர்மா கூறினார்.

"ஆள் எப்படி?" குறுப்பு கேட்டார்.

"நம்பலாம். பண விஷயத்துல பயப்படவே வேணாம். மும்பையில் ரெண்டு டிஸ்டிலரி சொந்தமா வெச்சிருக்கார்."

"அப்படின்னா நாம தொடர்புகொள்ள முடியுமா?" நாயர் கேட்டார்.

"அதுக்கென்ன... தாராளமா ஏற்பாடு பண்ணலாம்" வர்மா சம்மதித்தார்.

அன்று மாலை நேரத்தில் சேதுவர்மா திரிசந்தியா ஓட்டலில் தனது அறையிலிருந்தார்.

ஊன்றிக் கவனித்தால் சேதுவர்மா நாற்பதைத் தாண்டாதவர் என்பது புரியும். சந்தேகத்துடன் நுட்பமாகப் பார்த்தால் அந்தத் தலைமுடி விக் என்பது சுலபமாகத் தெரியும். கட்டளையிடும் கண்கள்.

அவர் யாரையோ எதிர்பார்ப்பது போல் தோன்றியது.

மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

# 30

வர்மா கதவைத் திறந்தார்.

ஓட்டல் பாய் நின்று கொண்டிருந்தான்.

"நான் கூப்பிடலையேப்பா?" வர்மா அவனைப் பார்த்துக் கேட்டார்.

"உங்களைத் தேடி ஒரு பொண்ணு வந்திருக்காங்க!"

"பொண்ணா, என்ன வயசு இருக்கும்?"

"இருபதிலேர்ந்து இருபத்திரண்டு!"

"வரச் சொல்!" என்றவர் ரூம்பாய் அகன்றவுடன் தலையிலிருக்கும் விக்கை சரி செய்துகொண்டார்.

வந்தவள் எந்தவிதமான தயக்கமும் இன்றி அறைக்குள் நுழைந்து கதவை மூடிவிட்டுத் தாழிட்டாள்.

கண்ணாடி வழியே அவளைப் பார்த்துக் கொண்டிருந்த வர்மா அவள் தைரியத்தைக்கண்டு தனக்குள் புன்னகைத்துக் கொண்டார். அவரைப் பொறுத்தவரை இதெல்லாம் ஒரு குழந்தை விளையாட்டு என்பது போல் நடந்து கொண்டார்.

பெரிய இரும்பு உலைக்குள் வந்து அகப்பட்ட ஒரு சிறிய குருவியாகத்தான் அவர் அவளை நினைத்தார். தான் யார் என்பது உண்மையில் அவளுக்குத் தெரியவில்லை. மும்பையின் கள்ளக்கடத்தல் சக்ரவர்த்திகளே கூட தன் சரியான பெயரைக் கேட்டால் பயந்து நடுங்குவார்கள்!

தான் அணிந்திருக்கும் பட்டன்கள் ஒவ்வொன்றும் கிரேனேடு என்பதைத் தெரிந்து கொண்டால் அவள் எப்படி நடந்து கொள்வாள்? சுருக்கமாகச் சொன்னால் தான் ஒரு ஆயுத சாலையல்லவா ?

இவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள் என்பது எவ்வளவு யோசித்தும் வர்மாவின் சிந்தனைக்குத் தட்டுப்படவில்லை. என்ன இருந்தாலும் அவளை அவள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பதுதான் நல்லது என்று நினைத்தார்.

"மிஸ்டர் சேதுவர்மா!" அவள் சோபாவில் அமர்வதற்கு முன்பாகப் பொறுமையற்றவளாக அழைத்தாள்.

வர்மா வியப்புடன் திரும்பினார்.

"நான்தான் சார் சலோமி வந்திருக்கேன்." அவள் மிகவும் தாழ்ந்த குரலில் பதிலளித்தாள்.

ஆனால், அந்தப் பெயரைக் கேள்விப்பட்டதும் வர்மாவின் உடம்பு ஒரு முறை நடுங்கியது. எனினும் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்ட விரும்பாதவராக முகத்தில் பொருத்தியிருந்த கண்ணாடியின் இரண்டு ஃபிரேம்களையும் அழுத்தும் சாக்கில் மறைத்துக் கொண்டார்.

"இந்த நேரத்துல எப்பிடி இங்கே?" அவளுக்கு எதிர்ப்புறமிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி கேட்டார் வர்மா.

"இவ்வளவு தூரம் வந்திருக்கிறவ அதையெல்லாம் சொல்லாமல் போயிடுவேனா?" என்றவள் தனது ஹாண்ட் பேகிலிருந்த சாக்லேட் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு அதன் உறையை ஞாபகமாக பேகிற்குள் போட்டுக் கொண்டாள்.

"நான் இங்கே இருக்கிறது எப்படி உனக்குத் தெரியும்?"

"நீங்க கொச்சியில ஃபிளைட்டிலிருந்து இறங்கும் போது நான் ஏர்போர்ட்லதான் இருந்தேன்."

"நான் கேரளாவுக்கு வரப் போறது உனக்குத் தெரியுமா?"

"தெரியும்!"

"எப்படி?"

"மத்திய புலனாய்வு அதிகாரி சாட்டர்ஜி சொன்னார்."

"ஓகோ... சாட்டர்ஜியோட உனக்குத் தொடர்பு இருக்கிறதை நான் மறந்தே போயிட்டேன். உண்மையில அவரை மாதிரி நபர்கள் அரசாங்கத்துல இல்லேன்னா, இந்த நாட்டில மத்தவங்க எல்லாம் எப்படிப் பிழைக்கிறது?" வர்மா சுருட்டை இழுத்து உறிஞ்சிப் புகை விட்டபடி சொன்னார்.

"ஆனா ஒரு விஷயம், சாட்டர்ஜி சொல்ற எல்லா விஷயங்களையும் நான் வெளியில் சொல்றதில்லை."-வர்மாவுக்கு கோபம் வரவழைப்பதற்காக அந்தப் பெண்மணி பேசினாள்.

"அப்படி நடந்துக்கிறதா யார் சொன்னது? அப்படியானால் நாங்க சொல்ற விஷயங்களை நீ சாட்டர்ஜி கிட்டச் சொல்றதுண்டா?"

"அப்படியெல்லாம் சொல்றதா இருந்தா, பட்டேல் கொலைக்குற்றத்துக்காக நீங்க எப்பவோ ஜெயிலுக்குப் போயிருக்கணுமே. உங்களுக்குப் பதிலா அப்பாவியான சக்ரவர்த்தி ஜெயில் தண்டனை அனுபவிக்கிறார். அநேகமா தூக்குத் தண்டனை கிடைக்கும்னு தோணுது!"

ஏராளமான ரகசியங்களின் சுரங்கம் மாதிரி அவள் தென்பட்டாள்.

எந்தவிதமான தயக்கமுமின்றி மிகவும் சாதாரணமாகப் பேசும் சலோமியை வர்மாவால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிந்தது.

"ஒரு விஷயத்துல நீ கெட்டிக்காரிதான்." வர்மா சொன்னார்.

"எதை வெச்சு சொல்றீங்க?"

"ஆள் மாறாட்டம் பண்றதுல. உன்னைப் பார்த்ததும் எனக்கே சட்டுன்னு அடையாளம் தெரியலை. உன் கண் எப்படி பூனைக் கண் மாதிரி மாறியிருக்கு! தலைமுடியும் செம்பட்டையா இருக்கு!"

"அதெல்லாம் இந்தக் காலத்துல ரொம்பவும் சுலபம்." என்றவாறு விக் மற்றும் காண்டாக்ட் லென்ஸை வெளியே எடுத்தாள்.

"உண்மையில இப்பத்தான் நீ சலோமியா தென்படுற!"

"நல்லவேளை இப்பவாவது நம்புனீங்களே!"

"என்னை நல்லாத் தெரிஞ்ச யாராவதுதான் இங்கே வருவாங்கன்னு நெனைச்சேன்."

"நான் எதுக்காக வந்திருக்கேன்னு நீங்க கேட்கலையே!"- என்றவள் நிதானமாக எழுந்து அலமாரியைத் திறந்து விஸ்கி பாட்டிலை சுவாதீனமாகக் கையில் எடுத்தாள்.

"மூடு கிடைக்கணும்கிறதுக்காக அப்பப்போ கொஞ்சமா குடிக்கிறேன்." லார்ஜ் விஸ்கியை உள்ளுக்குள் இறக்கிய பின் பேசினாள்.

"எல்லோருமே அப்படித்தான். சரி நீ வந்த விஷயத்தைச் சொல்லு!"

"சொல்றேன்..."- என்றவள் விக் மற்றும் காண்டாக்ட் லென்ஸை அருகிலிருந்த டேபிளின் மீது வைத்துவிட்டு வந்து அமர்ந்தாள்.

வர்மா அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை அறியும் ஆவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீங்க இங்கே வந்திருக்கிறது ஒரு பெரிய லாப நோக்கத்தோடன்னு எனக்குத் தெரியும். கையிலிருக்கிற பணத்தை எப்படிச் செலவழிக்கிறதுன்னு தெரியாத சிலர் இந்த ஊர்ல இருக்கிறாங்க. அப்படிப்பட்டவங்க, உங்ககிட்டச் சிக்கியிருக்காங்க. இதில் ஒருத்தரான போத்தன் வர்கீஸ்கிட்ட ஏராளமான தங்கக் கட்டிங்க இருக்கு. ஆனா, இந்த நாலு பேருக்கும் பொதுவான பயங்கரமான வில்லன் ஒருத்தன் இருக்கிறான்..."

"வில்லனா?" வர்மா சட்டென்று கேட்டார்.

"ஆமாம். ஜயன்னு பேர்!"

"ஜயனா? அப்படியொரு பேரை அவங்க யாருமே என்கிட்டச் சொல்லலையே!"

"அதை அவங்க சொல்லணும்கிற அவசியமில்லையே.. இப்ப நீங்க அவங்களோட சேர்ந்திருக்கிறதால, உங்களுக்கும் அவன் எதிரிதான். அதனால நீங்க அவனைப் பத்தித் தெரிஞ்சு வெச்சுக்கிறணும்."

"அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? போகட்டும் சலோமி, நான் ஒண்ணு கேட்கிறேன். இந்த சேதுவர்மா கூடவா அவனைப் பார்த்துப் பயப்படணும்னு நெனைக்கிறே?" வர்மா தனது கோட் பட்டன்களை வருடியபடி கேட்டார்.

"நீங்க வருடிக்கிட்டிருக்கிறதெல்லாம் வெடிகுண்டுன்னு எனக்குத் தெரியும். ஆனா, அதை அவனும் தெரிஞ்சிருப்பான்னு சொல்ல முடியாதே."

"நீ சொல்றபடி அதைப் புரிஞ்சுக்கிட்டா அப்புறம் அவனுக்கு என்கிட்ட என்ன வேலை?"

"மிஸ்டர் வர்மா நீங்க சொல்றதெல்லாம் ரொம்ப நெருங்கிப் பழகும்போதுதானே? இந்த ஜயன் வேற யாருமில்லை. உங்க புது நண்பர்கள் நாலு பேரும் சேர்ந்து செஞ்ச கொலையில அப்பாவியா சம்பந்தமில்லாம மாட்டிக்கிட்ட ஒருத்தன். தூக்குத் தண்டனைகூட வழங்கியாச்சு. ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்த ஜயன் முதல்ல செஞ்ச வேலை, அவனுக்கு எதிரா வாதாடின வக்கீலோட கையை வெட்டினதுதான்."

"அப்புறம்?" வர்மா அடக்கமாட்டாத ஆவலுடன் கேட்டார்.

"அதுக்குப் பிறகும் அவங்களைப் பயப்படுத்தீட்டு இந்தப் பகுதியிலேயே சுத்தித் திரியறான்."

"அதுல என்ன பிரயோஜனம்? என்னிக்காவது போலீஸ் அவனைப் பிடிச்சுடும்."

"இருக்கலாம்... ஆனா, அதுவரைக்கும் இந்த நாலுபேரும் நிம்மதியாத் தூங்கமுடியாது. ஒவ்வொருத்தரும் தன் உடம்பிலிருந்து எந்த நேரம் என்ன உறுப்பு காணாமப் போகுமோன்னு பதறவேண்டியதுதான்."

"இந்தச் சின்னப் பிள்ளை விளையாட்டெல்லாம் என்கிட்டச் செல்லுபடியாகாது. அப்படி ஏதாவது செஞ்சா அதுக்குப் பிறகு அவன் உயிரோட உலாவமுடியாது" சேதுவர்மா உணர்ச்சி வசப் பட்டுப் பேசினார்.

"அதை அவ்வளவு உறுதியாச் சொல்ல முடியாது."

"அப்படியா சொல்ற?"

"ஆமாம்!"

"அப்போ அவனை என் கூட்டாளியா மாத்திக்க வேண்டியதுதான். என் தொழிலுக்கு எனக்கு ஒரு துணையாவும் இருக்கும்."

"இது நல்ல யோசனையா தோணுது. அவன் உங்களுக்கு உதவப் பொருத்தமானவன். ஆனா, அவன் நோக்கம் உங்க நண்பர்களைப் பழிவாங்குறதாச்சே."

"இருக்கட்டும்... அப்படி ஒரு சூழ்நிலை வரும்போது நான் அதிலேர்ந்து கழண்டுக்க வேண்டியதுதான். ரெண்டாவதா அவன் உயிருக்கு நான் பாதுகாப்பு கொடுத்தா போதாதா?"

"ஆனா இதுக்கெல்லாம் அவன் உடன்படுவானான்னு தெரியலை" சலோமி தனது கருத்தைத் தெரிவித்தாள்.

"அப்படிக்கூடவா ஒரு மனுஷன் இருப்பான்? உயிரோட இருக்கணும்னு யார்தான் விரும்பாதவன்?"

"உண்மைதான்."

"எனக்கு ஒரு உதவி செய்யணும். நான் அவனை சந்திக்க உன்னால ஏற்பாடு செய்ய முடியுமா?"

"பணமா, இப்போதைய சூழ்நிலையில் இதுக்காக எவ்வளவு செலவு பண்ணவும் அவங்க தயாரா இருக்காங்க."

"அவங்க தயாரா இருக்கிறது அவனைப் பிடிச்சுக் குடுக்கிறதுக்கு. ஒருவேளை அது முடியாமல் போயிட்டா?"

"அவனைப் பிடிச்சுக் குடுக்கறது நம்ம நோக்கமில்லேன்னாலும் அப்படிச் சொன்னாத்தான் புது கூட்டாளிங்க கிட்டேருந்து எதையாவது கறக்க முடியும்."

"சரி அப்படின்னா ஒரு கண்டிஷன். ஜயனை நீங்க அவங்ககிட்ட ஒப்படைக்கிறது நடக்கும்னு தோணலை. ஆனா அந்தப் பேரைச் சொல்லி அவனை நம்ம வேலைகளுக்குப் பயன்படுத்திக்கலாம்" சலோமி சொன்னாள்.

வர்மா அதற்கு ஒப்புக்கொண்டார்.

ஜயன் மாதிரி தைரியசாலி ஒருத்தன் கிடைத்தால் தன்னால் எவ்வளவோ வேலைகளைச் செய்ய முடியுமே என்பது வர்மாவின் திட்டம்.

அப்போது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

"யாரது? கதவைத் திறக்கலாமா?" சலோமி கேட்டாள்.

"தாராளமா... நான் இந்த அறைக்குள்தானே இருக்கிறேன்.." சேதுவர்மா அனுமதி அளித்தார்.

சலோமி எழுந்து கதவைத் திறந்தாள்.

ஜயன் சட்டென்று அறைக்குள் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து மேலும் இரண்டு பேர் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

ஜயனைத் தொடர்ந்து வந்தவர்கள் ஜயனைத் தாக்குவதில் குறியாக இருந்தனர்.

ஜயன் ஒரு விநாடி வர்மாவையும் சலோமியையும் மாறி மாறிப் பார்த்தான்.

"மன்னிக்கணும்... முதல்ல நான் இவங்களை உபசரிச்சுட்டு உங்களை அறிமுகப்படுத்திக்கிறேன். கொஞ்சம் ஒதுங்கி இருந்தீங்கன்னா நல்லது!" ஜயன் விண்ணப்பிக்கும் குரலில் பேசினான்.

வர்மாவும் சலோமியும் பார்வையாளர்களைப் போல் ஒதுங்கி நின்றுகொண்டனர்.

ஜயன் வந்தவர்களை நோக்கித் திரும்பினான்.

வந்த இருவரின் கைகளில் கத்திகள் இருந்தன.

"வீணா சாகசம் காட்ட நினைக்காதே. அடங்கிப் போறது தான் சமயோசிதம்!" எச்சரித்தவாறே அவர்கள் இருவரும் ஏககாலத்தில் கத்தியை அவனை நோக்கி ஓங்கினர்.

ஆனால், இரண்டடு எட்டு பின்னுக்கு நகர்ந்த ஜயன் சட்டென்று இடுப்பிலிருந்த பெல்ட்டைக் கழற்றினான். கண்மூடித் திறப்பதற்குள் பெல்ட் உயர்ந்து சுழன்றது. அவர்களின் கைகளிலிருந்த கத்திகள் இரண்டும் அறையின் ஒரு மூலையில் போய் விழுந்தன.

நடக்கும் போராட்டத்தை மற்ற இருவராலுமே நம்ப முடியவில்லை. தன்னைத் தொடர்ந்து வந்த இரண்டு மனிதர்களையும் மாறி மாறித் தாக்கிக் களைப்பு அடைந்து விழச் செய்து கடைசியில் அவர்களைத் தன் இரண்டு தோளிலும் போட்டுக் கொண்டான்.

"ரொம்ப நன்றி! இவ்வளவு நேரமும் எனக்காக உங்க நேரத்தையும் தனிமையையும் கெடுத்துட்டேன். இந்த ரெண்டு பேரையும் தொலைச்சுட்டு வந்து உங்ககிட்டப பேசுறேன்" ஜயன் கூறினான்.

"இவங்களை எவ்வளவு தூரத்துக்குக் கொண்டு போகப் போறீங்க?" வர்மா கேட்டார்.

"முடியுற தூரம் வரைக்கும்!"

"அப்படின்னா ஒரு சின்ன உதவி. தயவு செஞ்சு மறுக்காதீங்க. இந்தாங்க கார் சாவி. கீழே என்னோட பென்ஸ் கார் நிக்குது?" வர்மா எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் சாவியை நீட்டினார்.

ஜயன் அதைக் கையில் வாங்கிக் கொண்டான்.

# 31

சாவியைக் கையில் வாங்கிய ஜயன் ஒரு விநாடி தயங்கினான்.

"சந்தேகமே வேண்டாம். நீங்க என்னோட காரை எடுத்துட்டப் போகலாம்."

"நீங்களும் என்கூட வந்தா ரொம்பவும் நல்லது. இல்லேன்னா நான் இவங்களை பக்கத்துல எங்கேயாவது போட வேண்டியிருக்கும்." ஜயன் கூறினான்.

"உங்களுக்கு உதவலாம்னு பார்த்தா என்னையும் கூப்பிடுறீங்களே?"

"நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. உங்களோட காரை நான் பயன்படுத்தும்போது பக்கத்துல நீங்களும் இருந்தா நல்லதுன்னு நெனைச்சேன். மத்தபடி உங்களுக்குத் தொல்லை கொடுக்கணும்கிறது என் நோக்கமில்லை."

"நான் உங்களுக்குத் தொல்லை கொடுப்பேன்னு நெனைக்கிறீங்களா?"

"இது வளர்ந்துட்டே போகும். புறப்படுங்க போகலாம்."

"சரி வர்றேன்."

ஜயன் தன் தோளிலிருந்த ஒருவனைத் தரையில் விட்டுவிட்டு இன்னொருவனைக் கீழே கொண்டு போய் காருக்குள்

போட்டுவிட்டு மறுபடியும் வந்து இரண்டாவது நபரை எடுக்கவரும் போது சொன்னான்.

"ஒரு யோசனை. நாம ரெண்டுபேரும் போயிட்டா. இவங்க மட்டும் இங்கே தனியா இருக்கணும். உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா அவங்களும் நம்மகூட கார்ல வரட்டுமே!"

சலோமி ஒரு கணம் திடுக்கிட்டாள்.

"எதுக்காகப் பயப்படுறீங்க? மிஸ்டர் சேதுவர்மா உங்ககூட இருக்கும்போது எதுக்கு பயம்?" ஐயன் சாதாரணமாகச் சொன்னான்.

"என்னை உங்களுக்குத் தெரியுமா!" சேதுவர்மா கேட்டார்.

"எல்லாத்தையும் விவரமா சொல்றேன். உங்களுக்கு என் உதவி தேவைப்படும். மிச்ச விஷயங்களை நாம கார்ல உட்கார்ந்து பேசலாமே!" ஐயன் காரின் சாவியை விரலில்போட்டுச் சுழற்றியபடி சொன்னான்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"உடனே விளக்கணுமா!"

"தேவையில்லை!"

"அப்ப கார்ல ஏறின பிறகு பேசலாம். நான் கார்ல கொண்டு போய்ப் போட்டிருக்கிறவங்க ஒருவேளை பிணமாயிருக்கலாம்னு தோணுது."

"அப்படின்னா சிக்கல்தான்!"

"அதனாலதான் உங்களையும் கூட வரச் சொல்றேன்."

ஐயன் சொன்னதைக் கேட்பதைத் தவிர சேதுவர்மாவுக்கு வேறு வழியேதும் புலப்படவில்லை. இருவரும் ஐயனைப் பின் தொடர்ந்து நடக்கத் தொடங்கினர்.

ஐயனுக்கும் சேதுவர்மாவுக்கும் இடையே முன்புற ஸீட்டில் அமர்ந்தாள் சலோமி.

கார், கேட்டைக் கடந்து சாலைக்கு வந்தது.

"பின்னால இருக்கிறவங்க யாருன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" ஜயன் கேட்டான்.

"தெரியாது!" சேதுவர்மா பதிலளித்தார்.

"எனக்கு அவங்களைத் தெரியும்!"

"யார் அவங்க?"

"உங்க புது கூட்டாளிங்க அனுப்பி வச்சிருக்கிற விருந்தாளிங்க! அவங்கதான் உங்களையும் இங்கே வரவழைச்சவங்க?"

"யார், என்னையா?"

"ஆமாம் மிஸ்டர் சேதுவர்மா. நீங்க ஒரு இன்டர்நேஷனல் கடத்தல்காரர்ங்கிறது எல்லோருக்குமே தெரியும். சுமார் அஞ்சு வருஷத்துக்கு முன்னால மும்பைல நான் உங்களுக்காக ஒரு வேலை செஞ்சிருக்கேன். அதாவது தார் பீப்பாய்க்குள்ள தங்கம் கடத்துற வேலையை உங்களுக்காக நான் செஞ்சேன்."

"அவர் பேரு ஜகத்சிங். நீங்களா இருக்க முடியாது!" வர்மா கூறினார்.

"இந்த ஜயனோட பழைய பெயர் அதுதான். நான் வாழ்க்கையில் தைரியம் பெற்றதே அந்த காலகட்டத்துலதான்."

"நீங்கதான் அந்தக் கொலைக்குக் காரணம்?"

"நீங்க சொல்றது உண்மையா இருந்தா எனக்கு ஏன் இந்த நாலு பேர் மேல மட்டும் கோபம் வரப் போகுது? உண்மையில்லையே நான் குற்றவாளியா இருந்தா தப்பிச்ச உடனேயே வேற எங்கேயாவது போயிருக்கமாட்டேனா? அதுதான் எனக்கும் நல்லது. எதுக்காக ஒரு பக்கம் போலீஸ், இன்னொரு பக்கம் வாடகை குண்டர்களோட நான் மல்லாடணும்?"

"அப்ப அந்தக் கொலையை யார்தான் செஞ்சாங்க?"

"உங்க கூட்டாளிங்க நாலு பேரும் சேர்ந்து மாத்தி மாத்தி அந்தப் பொண்ணைக் கற்பழிச்சதில மூச்சுத் திணறி அவள் இறந்து போயிருக்கணும். கடைசியில் தப்பிக்க முடியலேன்னதும் பழியை என் தலை மேல போட்டுட்டாங்க!"

கார் நீலகண்டன் நாயரின் பங்களாவின் முன்னால் வந்து நின்றது.

"நான் இங்கே இறங்கிக்கிறேன். உங்க விருப்பம் எப்படியோ அப்படி நடந்துக்கலாம். கார்ல பின்னால இருக்கிற ரெண்டு பேரும் உங்க நண்பர் கூட்டத்தைச் சேர்ந்தவங்க." காரின் சுவிட்ச்சைக் கையில் எடுத்துக் கொண்டு ஜயன் அங்கிருந்து மறைந்தான்.

வாட்ச்மேன் கேட்டின் மறுபுறம் வந்து நின்றான். "யாரது?"- என்று குரல் கொடுத்தான்.

"சேது வர்மா வந்திருக்கிறதா நாயர்கிட்டச் சொல்லுங்க!"

வாட்ச்மேன் உட்புறமாக நடந்து வீட்டுக்குள் மறைந்தான்.

சற்று நேரத்துக்குப் பிறகு திரும்பி வந்தவன் கேட்டைத் திறந்தபடி, "காரை உள்ளே கொண்டு வாங்க சார்!" என்றான்.

"கார் சாவி என்கிட்ட இல்லையே?"

"அப்புறம் எப்படி சார் இவ்வளவு தூரம் கார் வந்திருக்கு?"

"அதையெல்லாம் நான் மிஸ்டர் நாயர் கிட்டப் பேசிக்கிறேன்."

வாட்ச்மேன் திரும்பவும் வீட்டுக்குள் போனான். நாயருடன் திரும்பி வந்தான் இம்முறை.

"என்னங்க.... என்ன ஆச்சு?" நாயர் கேட்டார்.

நடந்ததை சேதுவர்மா விவரித்தார்.

"உங்களைக் கூட அந்த நாய் ஏமாத்திட்டானா?" நாயர் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

"நான் எதிர்பார்த்த மாதிரியான மனுஷன் இல்லை அவன். பயங்கரமான பேர்வழிதான். நான் யார்ங்கிறது கூட அவனுக்குத் தெரிஞ்சிருக்கு!

"ஒரு காலத்துல எனக்காகவும் வேலை செஞ்சிருக்கிறானாம்."

"அப்படியா! காரை இங்கேயே போட்டிருந்தா எப்படி?"

"உள்ளே கொண்டு வரணும். எங்களைத் தவிர காருக்குள்ள இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க."

"யாரவங்க?"

"எல்லாம் நீங்க சொல்லியனுப்பின ஆளுங்கதான்."

"அவங்களையும் அவன் ஒருவழி பண்ணிட்டானா?"

"அவ்வளவும் எங்க கண் முன்னாடிதான் நடந்தது. அவங்களுக்கு உயிர் இருக்கா இல்லையான்னுகூட சந்தேகமா இருக்கு!"

"நிஜமாவா?" நாயர், காரின் பின்பக்கம் வந்தார். சேதுவர்மாவும் உடன் வந்தார்.

"பரவாயில்லை உயிர் இருக்கு!" அவர்களைப் பரிசோதித்த சேதுவர்மா கூறினார்.

"உங்ககிட்டயும் தன் வித்தையைக் காமிச்சிட்டானா?" என்ற நாயர் திரும்பி, "ஏம்பா அப்பு.." என்று குரல் கொடுத்தார்.

"காரை த்ரூ கனக்ஷன் கொடுத்து உள்ளே கொண்டு வந்து போடு. அதுக்குப் பிறகு இந்தத் தடியன்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்" என்றவர் வர்மாவையும், சலோமியையும் பார்த்து, "வாங்க உள்ளே போகலாம்" என்றார்.

"இப்படியே போனா இவனை என்ன பண்றதுன்னே விளங்கலை" நாயர் முணுமுணுத்தார்.

"வருத்தப்படாதீங்க. அதை நான் பார்த்துக்கிறேன். நீங்க இனிமேல் அவனுக்கு எந்தவிதமான தொல்லையும் குடுக்காதீங்க.

நாம கொஞ்சம் தந்திரமா நடந்து முயற்சி செய்யலாம்" சலோமி வாக்குறுதி அளித்தாள்.

"நீங்க யாரும்மா?" நாயர் கேட்டார்.

"நான் ஒரு காபரே டான்ஸர். போதை மருந்து கடத்தற வேலையை பார்ட்டையமா பண்றேன். அவனைப் பிடிச்சுதர்ற பொறுப்பை நான் ஏத்துக்கிறேன்." சலோமி உறுதியான குரலில் பேசினாள்.

"நிஜமா உன்னால அது முடியுமா?" நாயர் சந்தேகம் கலந்த குரலில் கேட்டார்.

"நிறைவேத்துன பிறகு நீங்க நம்பினா போதும்."

சேதுவர்மாவும் நாயரும் சலோமியின் கருத்தை ஒப்புக் கொண்டனர்.

"அவனை மட்டும் பிடிச்சுக் கொடுத்தீங்கன்னா என் பங்கா நான் ஒரு லட்சம் ரூபா தர்றேன்." நீலகண்டன் நாயர் கூறினார்.

"அதை நானே வாங்கிக்குவேன். அதுக்கு முன்னால ஒரு சின்ன உதவி. உங்களுக்கு நெருக்கமான சொந்தக்காரங்க வீடுகளை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கணும்" சலோமி கேட்டுக் கொண்டாள்.

"தாராளமா செஞ்சுடலாம்!" நாயர் அதற்கும் ஒப்புக் கொண்டார்.

ஆண்கள் தோல்வியடையும் சில முயற்சிகளில் பெண்களால் வெற்றி பெற முடியும் என்பதை நாயர் உணர்ந்திருந்தார். எனவே, சலோமியை அவர் நம்பினார்.

ஜயனைக் கண்டுபிடிப்பதற்காக இதுவரை செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. மட்டுமின்றி அவமானம் ஏற்படும்படியாக வேறு நடந்து கொண்டிருக்கிறான். வெகு காலத்துக்கு அவன் பொருட்டு நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்வதும் சாத்தியமில்லை. இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார் நாயர்.

மறுநாள் இரவு எட்டுமணி ஆகியிருக்கும். நிர்மலா வீட்டுக்குள் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். கேட்டுக்கு வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தத்தைக் கவனித்தாள். தலையைத் திருப்பி ஜன்னல் பக்கமாகப் பார்த்தாள்.

அதற்குள் கேட்டைத் தாண்டி வீட்டின் முற்றப் பகுதியில் வந்து நின்றது கார்.

சாதாரணமாக இரவு என்பது மற்றவர்களைப் போல் நிர்மலாவைப் பயப்படுத்தும் ஒன்றாக இருக்கவில்லை. பிறர் பயப்படும் ஜயன், நிர்மலாவின் ஆதரவில் மறைந்திருந்ததும் மற்றொரு காரணம்.

எனவே, நிர்மலா உட்கார்ந்த இடத்திலிருந்து அசையவில்லை.

காலிங்பெல் ஒலித்தபோது எழுந்து கதவைத் திறந்தாள்.

முன்பின் அறிமுகமில்லாத பெண்மணி ஒருத்தி வெளியே நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு பிரீஃப் கேஸ் இருந்தது.

"நீங்க யார்? எங்கேருந்து வர்றீங்க?" நிர்மலா கேட்டாள்.

"நான் இடுக்கியிலேருந்து வர்றேன். உங்க வீட்டுக்காரரோட ஆபீஸில வேலை செஞ்சிருக்கேன்." வந்தவள் பதிலளித்தாள்.

"அப்படியா... உள்ளே வந்து உட்காருங்க!" நிர்மலா ஒதுங்கி நின்று வரவேற்றாள்.

வரவேற்பு ஹாலுக்குள் நுழைந்தவள் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்.

வெகுதூரம் பயணம் செய்து வந்தது போல் அவள் தலைமுடி முகத்துக்கு கலைந்து கிடந்தது.

"ரொம்பக் களைப்பா இருக்கு, குளிச்சா தேவலாம்னு தோணுது!" தலைமுடியை கையால் ஒதுக்கியபடி கூறினாள் வந்தவள்.

"தாராளமா குளிங்க. அதோ இருக்கிறதுதான் பாத்ரூம். உள்ளேயே எல்லாம் இருக்கு. இதோ மாற்றுப் புடவை கொண்டு வர்றேன்." நிர்மலா புடவையை எடுக்கப் பக்கத்திலிருந்த அறைக்குள் நுழைந்தாள்.

சலோமி, உட்கார்ந்த இடத்திலிருந்தே அந்த வீட்டை ஆராய்வது போல் பார்த்தாள்.

# 32

குளித்துவிட்டு வந்த சலோமி, நீலகண்டன் நாயர் வந்தால் தங்கும் அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அந்த அறையில் எல்லாவித வசதியும் இருந்தன. டெலிபோனும் இருந்தது.

நிர்மலா புடவையுடன் அந்த அறைக்கு வந்தாள். "இந்தாங்க கட்டிக்கங்க. டீ, காபி ஏதாவது சாப்பிடுறீங்களா?"

"இப்ப எதுவும் வேண்டாம். உட்காருங்க, என்னைப் பத்திக் கேட்டீங்க இல்லையா, விவரமா சொல்றேன்." சலோமி கூறினாள்.

"அதையெல்லாம் நிதானமா பேசிக்கலாம். என் வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சவங்கதானே? முதல்ல பயணக் களைப்பைப் போக்கிக்கங்க!"

சலோமி திடுமென்று வந்து நின்றதில் நிர்மலாவுக்கு எந்தவிதமான திகைப்போ, பரபரப்போ ஏற்படவில்லை. அதைக் கவனித்த சலோமி ஒருகணம் ஆச்சரியமடைந்தாள்.

முன்பின் தெரியாத தன்னைப் பார்த்து யார், என்ன என்று எந்த விவரத்தையும் இவள் கேட்கவில்லை. தான் வரப் போவது அவளுக்கு எப்படியும் தெரிந்திருக்க வழியில்லை. இதற்கெல்லாம் காரணம் என்னவாக இருக்கும் என்று சலோமி யோசிக்கத் தொடங்கினாள்.

"அப்படின்னா சூடா ஒரு கப் காபி மட்டும் குடுங்க!" சலோமி கூறினாள்.

"இதோ கொண்டு வர்றேன்!" என்ற நிர்மலா புடவை ஜாக்கெட்டை கட்டிலின் மீது வைத்துவிட்டு அங்கிருந்து அகன்றாள். பிறகு என்ன நினைத்தாளோ உடனே திரும்பி வந்தாள்: "நான் ஒரு விஷயத்தை உங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன். அப்பா வந்தார்னா பயன்படுத்துறது இந்த அறை, அதை அடுத்தவங்க பயன்படுத்துறது அவருக்குப் பிடிக்காது. நீங்க வேணும்னா அந்த அறையில தங்கிக்கலாம்!" என்று வேறொரு அறையைச் சுட்டிக் காட்டினாள்.

அங்கிருந்து எழுந்த சலோமி, நிர்மலா காட்டிய அறைக்குப் பக்கத்திலிருந்த அறையில் நுழைந்தாள். நிர்மலா தடுப்பதற்குள் சலோமி உள்ளே நுழைந்து விட்டாள்.

புடவை மாற்றும் நோக்கத்துடன் தலையை உயர்த்தியவள் அங்கிருந்த கொடியில் பனியன் ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். பனியனை ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளினாள்.

இருந்தாலும் சலோமியின் கண்களிலிருந்த சந்தேகம் அகலவில்லை.

நிர்மலா தனியாக வசிப்பது சலோமிக்குத் தெரியும். 'கணவர் இறந்து சில நாட்கள்தான் ஆகிறது. அப்படியே இந்த அறை அவள் கணவனின் அறையாக இருந்தால் அவர் வேறொரு தனியறையைப் பயன்படுத்த மாட்டார். எனவே, வேறு யாருடைய பனியனாகவோதான் இது இருக்கும்!'

நிர்மலா காபியுடன் வந்தாள். டம்ளரை மேஜை மீது வைத்தாள். அப்போதுதான் மேஜை மீது ஆஷ்ட்ரே ஒன்று இருப்பதைக் கவனித்தாள். அதில் சிகரெட் துண்டுகள் நிறைந்திருந்தன.

பனியன், சிகரெட் துண்டுகள் இரண்டும் சேர்ந்தபோது சலோமியின் சந்தேகத்துக்கு ஒரு வடிவம் கிடைத்தது.

"இப்போ உங்களைப் பத்திச் சொல்லுங்களேன்." நிர்மலா கேட்டாள்.

"என் பேர் சலோமி. இப்ப வேலை தேடித்தான் இங்கே வந்திருக்கேன். கேடரிங் பாஸ் பண்ணியிருக்கேன். தற்சமயம் இங்கே இருக்கிற ஒரு பெரிய ஓட்டல்ல ரிசப்ஷனிஸ்டா வேலையும் கிடைச்சிருச்சு."

"ஓட்டல் எதுன்னு எனக்குத் தெரிஞ்சிடுச்சு!"

"உங்க அப்பாவோட ஓட்டல்தான்!"

"வேலையில் சேர்ந்துட்டீங்களா?"

"இல்லை..."

"அப்பாதான் உங்களை இங்கே சொல்லியனுப்பினாரா?"

"ஆமாம்."

"நான் தனியா இருக்கிறதுல எனக்கு எந்தவிதமான கஷ்டமும் கிடையாது." நிர்மலா கூறினாள்.

அதைக் கேட்டதும் சலோமியின் கண்கள் மீண்டும் பனியன் இருந்த பக்கமாகத் திரும்பியது.

"அப்புறம் இன்னொரு வேடிக்கையும் இருக்கு!"

"அது என்னங்க?" சலோமி கேட்டாள்.

"ஜெயில்லேர்ந்து தப்பிச்ச ஒருத்தர் இங்கே வரலாம்னு அப்பா பயப்படுறார். அதனால ராத்திரி பகல்னு எந்த நேரமும் இந்தப் பக்கம் போலீஸ்காரங்க சுத்திக்கிட்டே இருக்காங்க."

"நீங்க சொல்றவர் தூக்குதண்டனை பெற்ற ஜெயில்கைதி-கொலைகாரர் இல்லையா? உங்க அப்பாவின் பழைய டிரைவரும் கூட!"

"ஆமாம்... பேரு ஜயன்! சரி, இதையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?"

"உங்க அப்பாதான். பேச்சோட பேச்சா இதையெல்லாம் சொன்னார். எல்லாம் உண்மைதானே?"

".அவர் சொன்னதெல்லாம் சரிதான். அவரை வேலைக்குச் சேர்க்கும்போதே நான் வேண்டாம்னு தடுத்தேன். ஆனா, அப்பாவுக்கும் அவரோட நண்பர்களுக்கும் இப்படிப்பட்ட ஆள்தான் தேவைன்னு நினைச்சாங்க. அந்த டிரைவர் ரொம்பவும் மோசமான மனுஷன்தான்."

"நிஜமாவா?"

"ஆமாம்!"

"அவர்தான் கொலை பண்ணியிருப்பாருன்னு நினைக்கிறீங்களா நிர்மலா?"

"அதையும் செய்வார், அதுக்கு மேலயும் செய்யக் கூடியவர் தான். ஒரு பொண்ணைக் கொலை செஞ்சு எங்க கார் டிக்கியில் மறைச்சு வெச்சுட்டார். கடைசியில் போலீஸ்காரங்க கையும்களவுமா பிடிச்சுட்டாங்க! நல்லவேளை... இல்லேன்னா வீணா எங்க அப்பா அந்த வழக்குல சிக்கியிருப்பார்!"

நிர்மலாவின் வார்த்தைகளைக் கேட்ட சலோமி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

அவளைப் பொறுத்தவரை, வேண்டுமென்றே ஒரு நோக்கத்துடன் நிர்மலா இப்படி பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

நிர்மலா வேண்டுமென்றே சொல்வதைப் பார்த்தால், பனியனும் இங்கு கிடக்கும் சிகரெட் துண்டுகளும் நிச்சயம் ஜயனுடையதாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்தாள் சலோமி. "அப்படின்னா ஜயன்தான் உண்மையில குற்றவாளின்னு சொல்றீங்க?" சலோமி கேட்டாள்.

"ஆமாம். அதில என்ன சந்தேகம்?"

பேச்சு இப்படியே போய்க் கொண்டிருப்பதால் மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாமல் சலோமி ஒரு கணம் தடுமாறினாள்.

"சரி, நான் சாப்பிட ஏதாவது தயார் பண்றேன். அதுவரைக்கும் நீங்க ரெஸ்ட் எடுங்க!" என்ற நிர்மலா சமையல்கட்டை நோக்கி நடந்தாள். பிறகு ஏதோ ஞாபகம் வந்தவளாகத் திரும்பி நின்று கேட்டாள்: "உங்க சொந்த ஊர் எதுன்னு சொல்லலையே?"

"கோழிக்கோடு!"

நிர்மலா அங்கிருந்து போனதும் சலோமி அந்த அறையைச் சோதனை போடுவதென்று தீர்மானித்தாள். ஜயன் இல்லாவிட்டால் வேறு ஏதோ ஆடவன் ஒருவன் அங்கு தங்கியிருக்கிறான் என்பது அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது.

பனியனை நெருங்கியபோது பவுடர் கலந்த வியர்வை மணம் அவள் மூக்கைத் தாக்கியது. எனவே, இந்த பனியன் சமீபத்தில்தான் அங்கே போடப்பட்டிருக்கிறது என்பது புரிந்தது. நிர்மலாவின் பேச்சை ஊன்றிக் கவனித்தால் அவள் எதையோ மறைக்க முற்படுவதாகத் தோன்றியது.

அந்த அறைக்குள் ஒரேயொரு கட்டில்தான் இருக்கிறது. ஜன்னலை ஒட்டி ஒரு டிரஸ்ஸிங் டேபிள். பெண்களுக்குத் தேவையான அழகு சாதனங்களுடன் வட்டமான சீப்பு ஒன்றும் தென்பட்டது.

வட்டச் சீப்பை அவள் கையில் எடுத்துப் பார்த்தாள். அதில் முடிகள் சில சிக்கியிருந்தன. எல்லாம் நீளம் குறைந்த ஆணின் தலைமுடி. பிரஷ்ஷின் மீது பதித்து வைத்திருந்த சீப்பிலும் அதே போன்ற முடிகள் இருந்தன.

நிர்மலாவும் வேலைக்காரியும் சமையலறையில் இருந்தனர்.

சலோமியைப் பார்த்த விநாடியிலேயே நிர்மலாவுக்கு அவள் மீது ஏதோ ஒரு சந்தேகம் தோன்றியது. அது என்ன காரணத்தினால்

என்று அவளுக்கே தெரியவில்லை. சலோமியின் பேச்சு ஜயனைப் பற்றித் திரும்பியதும் நிர்மலாவின் சந்தேகம் உறுதியானது. எனவே, வேண்டுமென்றே எதிர்மாறாகப் பேசினாள் நிர்மலா.

வேலைக்காரி, சலோமியைப் பற்றிக் கேட்டபோதுகூட நிர்மலா எதுவும் பதில் சொல்லவில்லை. 'அன்றைக்கு ஜயன் வரக் கூடாதே!' என்று மட்டும் மனதால் பிரார்த்தித்தாள்.

மாலை நேரமானபோது ஆட்டோ ரிக்ஷா ஒன்று வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்த தேவகி இறங்கினாள். கேட்டைத்தாண்டி வந்தவள் காலிங் பெல்லை அழுத்தினாள்.

நிர்மலா கதவைத் திறந்தாள்.

"என்ன பயந்துட்டியா நிர்மலா?" தேவகி கேட்டாள்.

"இல்லையே?"

"அப்புறம் ஏன் என்னமோ மாதிரி இருக்கிற?"

"ஒரு புது விருந்தாளி வந்திருக்காங்க!"

"யாரது?"

"எனக்கே இப்போதான் அறிமுகம் ஆனாங்க!"

"ஆணா, பெண்ணா?"

"பொண்ணுதான்!"

"வேற யாராவது இருக்கும்னு நெனைச்சேன்."

"ஜயன் அங்க இருக்காரா?"

"நான் ஆளைப் பார்த்தே நாளாச்சு !"

"விருந்தாளியை அறிமுகப்படுத்திக்க வேண்டாமா?"

"கண்டிப்பா..."

"அப்படின்னா வா!"

இருவரும் ஹாலில் வந்து அமர்ந்தனர்.

"இரு... சலோமியைக் கூட்டீட்டு வர்றேன்." என்ற நிர்மலா, அவள் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

சலோமியுடன் நிர்மலா வெளியே வந்தாள்.

சலோமியைப் பார்த்த தேவகியின் கண்கள் வியப்பால் விரிந்தன.

# 33

"யாரு... தேவகியா?" சலோமி வியப்பு அடைந்தவளாகக் கேட்டாள்.

"ஆமாம்.. நானேதான்! டாக்டர் மோகினி எங்கே இப்படி?"- தேவகி, சலோமியை இப்படித்தான் அழைத்தாள்.

"அப்படிக் கூப்பிடாதீங்க.. இங்கே என் பெயர் சலோமி." மோகினி சொன்னாள்.

"இப்ப எங்கே இருக்கீங்க?"

"நான் திருவனந்தபுரத்துல பிராக்டீஸ் பண்ணிட்டிருக்கேன்."

தேவகியும் மோகினியும் ஏற்கெனவே பழகிய நண்பர்கள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானதே போலீஸ் டிரெய்னிங் கேம்ப்பில்தான். அங்கு மோகினி அடிக்கடி வருவதுண்டு. மோகினி மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டலில் டாக்டராக இருப்பவள்.

பெண் போலீஸ் கேம்ப்பில் மெடிக்கல் டூட்டி மோகினியின் உடையது. அப்படித்தான் அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

"என்ன டாக்டர் இப்படியொரு வேஷமும்... நடவடிக்கையும்..." தேவகி கேட்டாள்.

"காரணம் இருக்கு. நிர்மலா இதையெல்லாம் தெரிஞ்சுக்க வேண்டாம். நான் ஒரு வேலைக்காக இங்கே வந்திருக்கிறதா அவங்ககிட்ட சொல்லியிருக்கேன்."

"என்ன... ஏதாவது விசாரணையா?"

"ஆமாம்.. ரொம்ப பரபரப்பா பேசப்பட்ட ஒரு வழக்கு!"

"அதுக்கு நீங்க எப்படி?"

"அதையெல்லாம் அப்புறம் விவரமா சொல்றேன். அதோ நிர்மலா வர்றாங்க!"

"அதுக்குள்ள ஒருத்தருக்கு ஒருத்தர் அறிமுகமாயாச்சா?" நிர்மலா கேட்டாள்.

"ஆமாம்!" தேவகி சொன்னாள்.

"சலோமிக்கு தங்கறதுக்கு ஒரு இடம் வேணும்னு சொல்றாங்க!" நிர்மலா விஷயத்துக்கு வந்தாள்.

"அதுக்கென்ன இப்போ இந்த வீட்டுல நிர்மலா மட்டும்தானே தனியா இருக்கீங்க? உங்ககூட இன்னொரு பொண்ணு இருந்தா உங்களுக்கும் நல்லதுதானே?" சலோமி தான் இப்படிக் கேட்டாள்.

தேவகியும் நிர்மலாவும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

"தேவகி, ஒரு நிமிஷம் உள்ளே வா!" நிர்மலா, தேவகியை வீட்டுக்குள் அழைத்தாள்.

தேவகி ஒரு தடவை சலோமியைப் பார்த்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். தனது கோரிக்கைக்கு நிர்மலாவை இணங்க வையுங்கள் என்று சலோமி குறிப்பால் உணர்த்தினாள்.

"இந்த நிலையில் நான் எப்படி இவங்களை இங்கே தங்க வெக்கிறது." நிர்மலா கேட்டாள்.

"நீ சொல்றதும் உண்மைதான்... ஆனா?" தேவகி வார்த்தையை முடிக்காமல் விட்டாள்.

"நான் சொல்றதோட அர்த்தம் உனக்குப் புரியுதில்லையா?

"எல்லாம் சரிதான். ஆனா, நான் ஒரு விஷயம் சொல்றேன். நிர்மலா இப்படித் தனியா இருக்கிறதும் நல்லதில்லை. நீ சொல்ல வர்ற விஷயத்துக்கு நாம ஒரு பரிகாரம் செய்யலாம்."

"எப்படிப்பட்ட பரிகாரம்?"

"ஜயன் யாருன்னு சலோமிக்குத் தெரியாது. அப்படியே தப்பித்தவறி எப்பவாவது வந்துட்டா சமாளிச்சுடலாம்!'

"எப்படின்னு கேட்குறேன்."

"ஜயன், உங்க கணவரின் தம்பின்னு சொன்னாப் போதும். ஜயன் எப்பவும் மாறுவேஷத்துல அலையுறதால யாரும் சட்டுன்னு தெரிஞ்சுக்கவும் போறதில்லை."

நிர்மலா யோசித்துப் பார்த்தாள். நல்ல யோசனைதான் என்று தோன்றியது.

"சலோமி துருவித்துருவி எதையாவது கேட்டால் என்ன பதில் சொல்றது?" நிர்மலா, சந்தேக நிவர்த்திக்காகக் கேட்டாள்.

"முதல்ல சொல்ற விஷயத்தை ஒட்டியே கெட்டிக்காரத்தனமா சமாளிக்க வேண்டியதுதான்." தேவகி தைரியம் அளித்தாள்.

"நான் என்ன நினைக்கிறேன்னா, எதுக்காக இப்படியொரு தொல்லையைத் தலையில இழுத்துப் போட்டுக்கணும்னுதான். முதல் விஷயம் இந்தப் பொண்ணு யாரு, என்ன விஷயம், எப்படிப்பட்டவள்னு எனக்குத் தெரியாது. முன்னபின்னத் தெரியாத ஒருத்தியை எதுக்காக நான்கூட வெச்சுக்கணும்?"

"இதனால எந்தவிதமான சிக்கலும் வராது. அதே நேரம் யாராவது உன்னைப் பத்தி தப்பா நெனைச்சாக்கூட இதுல மாறிப் போயிடும்." தேவகி உறுதியளித்தாள்.

"சரி, நீ சொன்னபடியே செய்றேன்."

இருவரும் வெளியே வந்தார்கள்.

"சரிங்க சலோமி... நீங்க இங்கேயே தங்கிக்கலாம்."- நிர்மலா கூறினாள்.

'ரொம்ப நன்றி!"

மறுநாள் சலோமி ஒரு பெரிய பெட்டியையும் படுக்கையையும் எடுத்து வந்தாள்.

"எதுக்குங்க இதெல்லாம்?" நிர்மலா கேட்டாள்.

"இங்கேயே இதெல்லாம் இருக்கிறதும் எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் விலை குடுத்து வாங்கினதை விட்டுட்டு வர மனசு வரலை." சலோமி சிரித்தபடி கூறினாள்.

"அப்படின்னா இதையெல்லாம் அந்த அறைக்குள்ள போட்டுக்கங்க. ஏற்கெனவே அதுக்குள்ள கட்டிலும் மெத்தையும் கிடக்குது."

நிர்மலா காட்டிய இடத்தில் மேற்புற சிமெண்ட் ஸ்லாப்பில் சலோமி அவற்றை எடுத்து வைத்தாள்.

இரவு உணவை முடித்துக் கொண்டு நிர்மலாவும் சலோமியும் போர்ட்டிகோவில் வந்து அமர்ந்தனர்.

நிர்மலா அங்கு வந்து அமர்ந்ததிலும் ஒரு நோக்கமிருந்தது. எந்தவித முன்னறிவிப்புமின்றி ஐயன் எப்போதும் அங்கு வரலாம். கேட்டின் அருகே யாராவது வந்தால் போர்ட்டிகோவில் இருப்பவர்களைப் பார்க்க முடியும். ஒருவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் ஐயன் வந்தால் எச்சரிக்கை அடையட்டும் என்பது அவள் எண்ணம்.

"நீங்களும் ஒரு வேலைக்காரியும் மட்டும் எதுக்காக இங்கே தனியா இருக்குறீங்க?" சலோமி கேட்டாள்.

"அதுக்கு குறிப்பா எந்தக் காரணமும் இல்லை. இது எனக்குன்னே கொடுத்த வீடு. இந்தக் காலத்துல வீட்டை வாடகைக்கு விட்டா பிரச்சினைங்க ஜாஸ்தி. அதனால் நானே தங்கியிருக்கேன்."

"உங்க அப்பா சமீபகாலத்துல ரொம்பவும் பரபரப்பா பேசப்பட்டார் இல்லையா?"

"உண்மையைச் சொன்னா அதுக்குப் பிறகுதான் அப்பா வெளியுலகத்துக்கு அதிகமாத் தெரிஞ்சார். ரொம்பவும் மோசமான கேஸ் அது!"

"அந்த வழக்குலதான் குற்றவாளியைப் பிடிச்சுத் தண்டிச்சுட்டாங்களே!"

"அதிலேருந்துதான் பிரச்சினையே ஆரம்பம்!"

"புரியலைங்களே!"

"தீர்ப்பு வெளியான அன்னிக்கே, குற்றம் சாட்டப்பட்டவர் ஜெயில்லேர்ந்து தப்பிச்சுட்டார்."

"அதனால உங்க அப்பாவுக்கு என்ன பிரச்சினை?"

"அதில ஏராளமான பிரச்சனைகள் இருக்கு!"

"நிஜமாவா?"

"குற்றம் சாட்டப்பட்டவர் எங்ககிட்ட கார் டிரைவரா இருந்தவர்!"

"நானும் கேள்விப்பட்டேன்.

"பத்திரிகைகள்ல படிச்சிருப்பீங்க."

"பரபரப்பான கேஸா இருந்ததே. அதைப்பத்திப் படிச்ச போது ரொம்பவும் சுவாரசியமா இருந்தது. பிராசிக்யூஷன் தரப்பில விசாரிக்கப்பட்டவங்க மூணு பேரும் வித்தியாசமான ஆளுங்க. ஒருத்தர் அரசியல்வாதியும் சமூகசேவகருமான உங்க அப்பா, இன்னொருத்தர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், வெறொருத்தர் ஃபைனான்ஸ் கம்பெனிக்காரர். இவங்கள்லாம் சாட்சிகளா வந்ததே ஆச்சரியகரமான விஷயம்தான். அதிலேருந்து ஒரு விஷயம் தெளிவாத் தெரியுது. அந்தப் பொண்ணோட கொலை வழக்குல பிராசிக்யூட்டர் உட்பட அந்த நாலு பேருக்கும் ஏதோ ஒரு வகையில் பங்கு இருக்குன்னு தோணுது!"

அந்த வார்த்தைகளைக் கேட்ட நிர்மலா ஒருகணம் அதிர்ந்தாள். சலோமி ஏன் இப்படிப் பேசுகிறாள் என்பது அவளுக்குப் புரியவில்லை.

"உங்க டிரைவர் குற்றவாளிதான்னு நீங்க நினைக்கிறீங்களா நிர்மலா?" சலோமி கேட்டாள்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ஒரு கணம் தயங்கினாள் நிர்மலா. அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்று அந்த வீட்டின் கேட்டருகே வந்து நின்றது.

அதிலிருந்து கீழிறங்கிய ஒருவர், கேட்டின் தாழ்ப்பாளை விலக்கித் திறந்துகொண்டு உள்ளே வந்த பிறகு மீண்டும் கதவை மூடினார். மோட்டார் பைக் நேராக அவர்கள் இருந்த இடத்தை அடைந்தது.

நிர்மலா என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறினாள்.

வந்தவன் ஜயன்தான். அவன் கையில் ஒரு பிரீஃப்கேஸ் இருந்தது. வண்டியை நிறுத்திவிட்டு அங்கிருந்த பெண்களை நோக்கி நடந்து வந்தான்.

"இன்னிக்கு காலையிலேருந்து ஒரே அலைச்சல்தான். நிறைய ஆர்டர்ஸ் கிடைச்சது!" ஜயன், சலோமியைப் பார்த்தபடி பேசினான்.

"இவர் யாருன்னு சொல்லலையே?"

"என் பேர் சதீஷ் இவங்க என்னோட அண்ணி. நான் ஸ்போர்ட்ஸ் கம்பெனி ஒண்ணுல வேலை செய்யுறேன். அதாவது ரெப்ரசென்டேட்டிவ்.

ஜயனாகவே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதில் நிர்மலா ஓரளவு அமைதியடைந்தாள்.

"வாங்க சாப்பாடு போடுறேன்" நிர்மலா, ஜயனை அழைத்தாள்.

"உண்மையிலேயே நான் இப்ப ரொம்பப் பசியோட இருக்கேன். மத்தியானம் கூட சாப்பிடலை" ஜயன் பிரீஃப்கேஸுடன் வீட்டுக்குள் நுழைந்தான்.

"இதோ உடனே வந்துடுறேன்!" சலோமியிடம் சொல்லிவிட்டு நிர்மலாவும் ஜயனைப் பின்தொடர்ந்தாள்.

"யார் அவங்க?" சாப்பிடத் தொடங்கும்போது ஜயன் கேட்டான்.

"இங்கே குடியிருக்க வந்திருக்காங்க."

"பெண் போலீஸ் யாராவதா இருக்கப் போறாங்க!"

"விசாரிச்சேன்... அதெல்லாம் கிடையாது."

"இந்தச் சூழ்நிலையில் ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும்."

"உங்களோட சமயோசிதமான பேச்சும் நடிப்பும் பொருத்தமா இருந்தது! அப்புறம் ஏதாவது செய்திகள் இருக்கா?"

"அப்பீல் கொடுத்தாச்சு. கவலைப்பட வேண்டாம்னு வக்கீல் சொல்றார். இருந்தாலும் நிரூபிக்க முடியலேன்னா தப்பிக்கிறது ரொம்பக் கஷ்டம்கிறார்."

"ஹைகோர்ட்லயும் கேஸை திசைதிருப்பப் பார்ப்பாங்க. எதிராளிங்க குற்றத்தை ஒப்புத்துக்கிட்டு அடங்கியிருப்பாங்கன்னு எதிர்பார்க்க முடியாது. அதனால அதுக்கு முன்னால அந்த நாலு பேரையும் குற்றவாளிகளா நிரூபிக்கிற வழியைப் பார்க்கணும்."

"அதுதான் எப்படின்னு யோசிக்கிறேன்."

சாப்பாட்டை முடித்துக்கொண்ட பிறகு இருவரும் போர்ட்டிக்கோவை அடைந்தனர்.

"தனியா இருக்குற நிர்மலாவுக்கு உங்களை மாதிரி ஒரு பொண்ணு துணையா இருக்கிறதும் ரொம்ப நல்லதாப் போச்சு!" ஜயன், சலோமியிடம் சொன்னான்.

"அதையெல்லாம் தெரிஞ்சுட்டுதானே நான் வந்தேன்."

சலோமியின் பேச்சு ஜயனுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

"நான் அடிக்கடி இங்கே வருவேன்!" ஜயன் கூறினான்.

"அதுவும் எனக்குத் தெரியும்!" சலோமி பட்டென்று பதிலளித்தாள்.

இந்த பதில் ஜயனை நடுங்க வைத்தது.

# 34

"உண்மையாவா? என்னை உங்களுக்குத் தெரியுமா?" ஜயன் கேட்டான்.

"உங்களை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன்!"

"அப்படியா?" என்று சாதாரணமாகக் கேட்டவள் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான். சலோமியின் எதிர்ப்புறம் உட்கார்ந்தான்.

"எத்தனையோ தடவை... எந்தெந்த இடங்கள்ல எல்லாமோ சந்திச்சிருக்கேன்."

"புரியலையே!"

"புரியலேன்னா பரவாயில்லை. எப்படி இருந்தாலும் எனக்கு அறிமுகமான ஒருத்தரை இந்த இடத்துல சந்திக்க நேர்ந்ததுல ரொம்ப சந்தோஷம்."

"உண்மையில் நீங்க யாருன்னு எனக்குத் தெரியலை!"

"அது அவ்வளவு முக்கியமான விஷயம் கிடையாது. இதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்தபோது உங்கதலைமுடி இப்படி சுருட்டையா இல்லை. ஆனா, இப்பத்தான் அழகா இருக்கீங்க!"

இந்த 'அளவுக்கு விவரமாக' பேசிய சலோமியை ஜயன் சந்தேகம் நிரம்பிய கண்களுடன் பார்த்தான்.

இந்தப் பெண்ணுக்குத் தன்னைப் பற்றி நிறையத் தெரிந்திருக்கிறது. 'ஒருவேளை சி.ஐ.டி.யாக இருப்பாளோ? அப்படி இருந்தால் சுலபத்தில் தான் போலீஸில் அகப்பட்டுக்கொள்ள நேருமே!' என்றெல்லாம் ஜயன் யோசித்தான்.

"நான் ஒரு விஷயம் சொல்றேன். நீங்க என்னைப் பார்த்துப் பயப்படவேண்டிய அவசியமில்லை. என்னால உங்களுக்கு எந்தவிதமான தொல்லையோ, ஆபத்தோ வராது. தைரியமா இருங்க!"

இந்த வார்த்தைகள் அவன் சந்தேகத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதை உறுதிப்படுத்தின.

நிர்மலாவும், சலோமியின் பேச்சைக் கேட்டு ஒருகணம் திடுக்கிடவே செய்தாள்.

மேற்கொண்டு எப்படி நடந்துகொள்வது என்பது புரியாமல் ஜயன் ஒருவிதக் குழப்பத்தில் இருந்தான்.

தான் ஒரு பெண்புலியிடம் வசமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது அவனுக்கு விளங்கவே செய்தது.

ஜயன், நிர்மலாவை பார்த்தான்.

அவளும் அவனைப் போலவே என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள்.

"மிஸ்டர் ஜயன், இன்னும் கொஞ்ச நாளைக்கு நீங்க இப்பிடியே நடந்துக்கங்க. உண்மை, ஒரு நாளும் செத்துப்போகாது. ஒருநாள் வெளிப்பட்டே தீரும்!" சலோமி உறுதியான குரலில் பேசினாள்.

இந்த வார்த்தைகள் ஜயனுக்கு மட்டுமில்லாமல் நிர்மலாவுக்கும் ஆறுதலை அளிக்கவே செய்தது.

"உண்மையில் நீங்க யாரு?" நிர்மலா சலோமியைப் பார்த்துக் கேட்டாள்.

"என் அண்ணன் சி.பி.ஐ.யில் ஒரு ஆபீஸர், இதை மட்டும் நீங்க தெரிஞ்சுக்கிட்டாப் போதும்!" சலோமி பதிலளித்தாள்.

அன்று இரவு ஜயன் அங்கு தங்காமல் வெளியேறினான். அந்த வீட்டில் தங்க அவன் மனம் சம்மதிக்கவில்லை. சி.ஐ.டி.க்கள் மற்றும் போலீஸார் ரொம்பவும் சாதுர்யமாகப் பேசி விஷயத்தைச்

சாதிக்கக்கூடியவர்கள். அதெல்லாம் அவர்களின் தொழில் தந்திரமும் கூட.

பொழுது விடிந்த பிறகுதான் ஜயன் அங்கில்லாததை மற்ற இருவரும் உணர்ந்தனர்.

"என்னைப் பார்த்துப் பயந்துதான் அவர் வெளியேறி இருக்கணும்" சலோமி சொன்னாள்.

"நீங்க அப்படிப் பேசினது கூட ஒரு விதத்துல நல்லதுதான்"- நிர்மலா கூறினாள்.

"நிர்மலா உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் ஜயனைக் காட்டிக்கொடுக்கவோ, பிடிச்சுக் குடுக்கவோ வரலை. ஜயன் வேறொரு கேஸில் முதல் சாட்சியா இருக்கார்."

"அது எந்த கேஸ்?"

"அம்மிணி கொலை கேஸில ஜயன் அகப்படுறதுக்கு முன்னால வேறொரு கேஸில முதல் சாட்சியா வந்து சாட்சி சொல்லியிருக்கணும். ஆனால், அதுக்கு முன்னாலேயே அவர் குற்றவாளியாக்கப்பட்டார்." சலோமி கூறினாள்.

நிர்மலாவைப் பொறுத்தவரை அது ஒரு புதிய செய்தியும் கூட. இப்படியொரு செய்தியை அவள் கேள்விப்பட்டதுகூட இல்லை.

"அது என்ன வழக்கு?" நிர்மலா ஆவலுடன் கேட்டாள்.

"அம்மிணி இறந்து போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னால சினிமாவில நடிக்க சான்ஸ் தர்றதாச் சொல்லி ஒரு பொண்ணை உங்க அப்பா வீட்டுக்குக் கொண்டு வந்திருக்காங்க. அதுக்குப் பிறகு அந்தப் பொண்ணை வெளி உலகத்துல யாருமே பார்க்கலை!"

"அவங்களுக்கு என்ன ஆச்சு? நிஜமா எங்க வீட்டுக்கா கொண்டு வந்தாங்க?"

"ஆமாம்... அதில எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அதுக்கு முன்னாடி அந்தப் பொண்ணு ரெண்டு படத்துல சின்னச் சின்ன வேஷத்துல தலைகாட்டியிருக்கா. அதனால எதிராளிங்களால இந்த வழக்கிலேருந்து சுலபமா தப்பிக்கவும் முடியாது!"

"அப்புறம் என்ன ஆச்சு?"

"இந்தச் சம்பவம் வெளியே தெரியுறதுக்கு முன்னாலேயே அம்மணி விஷயம் பெரிசா கிளம்பிடுச்சு."

நம்பவே முடியாத ஒரு கதையை நிர்மலா கேட்டுக் கொண்டிருந்தாள். அதன் தொடர்ச்சியையும் கேட்க அவள் ஆர்வத்துடன் காத்திருந்தாள்.

"அந்தப் பெண் பலாத்காரமான நடவடிக்கையாலோ, தாக்குதலுக்கு ஆளாகியோ இறந்து போயிருக்கணும். அவளோட பிணம் எங்கேயாவது மறைச்சு வைக்கப்பட்டிருக்கணும். இல்லேன்னா புதைக்கப்பட்டிருக்கணும். இது ஐயனுக்கு நல்லாவே தெரியும். முழுசா தகவல் தெரிஞ்ச ஒரே மனுஷன் ஐயன் மட்டும்தான். அதை மறைக்கச் செய்யப்பட்ட இரண்டாவது கொலைதான் அம்மணியோடது. அதுல ஐயனை சிக்க வெச்சு தண்டனையும் வாங்கிக் கொடுத்துட்டாங்க. ஒரே கல்லில் எதிராளிங்க மூணு மாங்கா வீழ்த்திட்டாங்க."

நிர்மலா மூச்சுவிடக் கூட முடியாமல் சலோமியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நிரபராதியான ஒரு மனுஷனை அநியாயமா பழி வாங்கிட்டாங்க. சூழ்நிலைகள் ஐயனுக்கு எதிரா ஜோடிக்கப் பட்டதால வழக்கு ரொம்ப சுலபமா முடிஞ்சுடுச்சு."

"இது சிக்கலான சூழ்நிலையாச்சே"

"சிக்கல்தான். ஆனா ஐயன் மனசு வைச்சா, சினிமா நடிகையான அந்தப் பொண்ணு என்ன ஆனாள்ங்கிறது வெளி உலகத்துக்குத் தெரியும். அதுக்காக ஐயன் போலீஸுக்கு உதவ வேண்டியிருக்கும்."

"கண்டிப்பா நான் இதை ஐயன்கிட்டச் சொல்றேன்."

"ஏன் இந்த விஷயத்துல இவ்வளவு ஆர்வமா இருக்கிறீங்க?"

"அவர் நிரபராதிங்கிறது என் மனசுக்குத் தெரியும். அவர் தப்பிக்கணும்கிறது என் ஆசையும் கூட!"

"காபி தயாராயிடுச்சு. கொண்டு வரட்டும்மா?" வேலைக்காரி வாசல் புறத்திலிருந்து குரல் கொடுத்தாள்.

"வேண்டாம். நாங்களே வர்றோம்." என்ற நிர்மலா, சலோமியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

"சின்னம்மா எனக்கு வயிறு என்னமோ மாதிரி இருக்கு. நான் டாக்டர் கிட்டப் போயிட்டு உடனே வந்துடுறேன்." வேலைக்காரி, நிர்மலாவிடம் அனுமதி கோரினாள்.

"சீக்கிரம் வந்துடு. இரு... பணம் தர்றேன்."

வேலைக்காரி அங்கு அதுவரை நடந்த பேச்சு முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த வேலைக்காரியை ஏற்பாடு செய்து கொடுத்ததே நிர்மலாவின் அப்பா நீலகண்டன் நாயர்தான். எனவே, அந்த நன்றிக்கடனுக்காக அவள் நீலகண்டன் நாயரிடம் விசுவாசமாக இருந்தாள். ஐயன் அங்கு அடிக்கடி வருவதும் போவதும் நாயருக்குத் தெரிந்த பிறகும்கூட அவனை அந்த வீட்டில் போலீஸார் பிடித்தால் தன் மகளின் பெயர் வீணாகக் கெட்டுப்போகும் என்று பயந்து வீட்டுக்கு வெளியே அவனைப் பிடிப்பதற்கு நாயர் சில மாற்று ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால், எதுவும் பலிக்காமல் போனது.

ஐயன் என்னதான் மாறுவேடம் போட்டு வந்தாலும் வேலைக்காரி அதை சுலபத்தில் தெரிந்துகொள்ள ஒட்டுக் கேட்கும் பழக்கம் உதவியது.

வீட்டிலிருந்து புறப்பட்ட வேலைக்காரி நேராக நீலகண்டன் நாயரின் ஆபீஸை நோக்கி விரைந்தாள்.

"என்ன... ஏதாவது புது தகவலா?" நீலகண்டன் நாயர் அவளைப் பார்த்ததும் கேட்டார்.

"புதிய தகவல் இல்லாமல் நான் இங்கே வருவேனா?" என்றவள் நாயரின் தனியறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

"அவரது தனியறையில் உல்லாசமாக இருப்பதற்கான அனைத்து வசதிகளும் இருந்தன.

"ம்... விஷயத்தை ஆரம்பி..." என்ற நாயர் ஒரு கிளாஸில் கொஞ்சம் விஸ்கியை ஊற்றி அவளிடம் நீட்டினார்.

அதை வாங்கி ஒரே மூச்சில் தொண்டைக்குள் ஊற்றிக் கொண்டாள்.

நாயர் வீடியோவின் சுவிட்சை ஆன் செய்தார். படுக்கையறைக் காட்சிகள் கொண்ட படம் ஒன்று விறுவிறுப்பான காட்சிகளுடன் ஓடத்தொடங்கியது.

அவள், தான் கேள்விப்பட்ட விவரங்களைச் சொல்லத் தொடங்கினாள். நாயரின் கைகள் அவள் உடலிலிருந்த உடைகளை களையத்தொடங்கியது.

சினிமா நடிகையின் பேச்சை எடுத்ததும் நாயர் ஒருகணம் விதிர்விதிர்த்துப் போனார். சட்டென்று கையை நீட்டி விஸ்கி பாட்டிலை எடுத்து அப்படியே வாயில் கவிழ்த்து இரண்டு மிடறு விழுங்கினார்.

இரண்டு பேரின் வேலையும் முடிந்தவுடன் இருவரும் தங்களது பாதையில் பிரிந்தனர்.

அன்று இரவு நண்பர்கள் நால்வரும் வழக்கம்போல் ஒன்றுகூடினர்.

"நம்ம திட்டப்படி ஜயனை போலீஸ் பிடிச்சுட்டா நமக்கு வேறொரு அபாயம் இருக்கு. அதனால அவனை நாமளே தீர்த்துட்டா பிரச்சினைங்க சுலபமா முடிஞ்சிடும்" நாயர் நடந்தவற்றை விவரித்தார்.

"அப்படின்னா ஜயனை மட்டும் கொன்னால் போதாது. அந்தப் பொண்ணையும் கொல்லணும்!" குறூப்பு கூறினார்.

"ஆமாம்! அதுதான் நமக்குப் பாதுகாப்பு!" நாயர் ஆவேசத்துடன் கூறினார்.

# 35

"ஆமாம், இந்த சலோமிங்கிறவ உண்மையில யாரு?" போத்தன் வர்கீஸ் கேட்டார்.

"சந்தேகமே வேண்டாம். இண்டலிஜன்ஸ் டிபார்ட் மெண்ட்டைச் சேர்ந்தவளா இருக்கணும்!"-மாதவக் குறுப்பு கூறினார்.

"நீங்க சொல்றது உண்மையா இருந்தா அவளுக்கும் சேதுவர்மாவுக்கும் எந்த வகையில தொடர்பு இருக்கும்?" பாலகிருஷ்ண பிள்ளை கேட்டார்.

"ஒருவேளை சேதுவர்மாவைப் பின்தொடர்ந்து வந்திருக்கலாம்."

"இருக்கட்டும்... இவங்கள்லாம் எதுக்காக நாயரோட வீட்டைத் தாராளமா பயன்படுத்தறாங்க?"

"எனக்கும் அதுதான் புரியலை!" நாயர் பேந்தப் பேந்த விழித்தார்.

"எனக்குத் தெரிந்து ஒரே வழிதான் இருக்கிறது. வீட்டைச் சுற்றி நமது ஆட்கள் வட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். இரவு பகல் வித்தியாசமில்லாமல் கண்காணிக்க வேண்டும். அதே சமயம் அவனைப் பிடிக்கக் கூடாது. பார்த்தவுடன் சுட்டுத்தள்ள வேண்டும்!"

"நல்ல யோசனைதான். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்." மாதவக் குறுப்பு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

"அப்படியானால் சலோமியை நான் கவனித்துக் கொள்கிறேன்." போத்தன் வர்கீஸ் கூறினார்.

"நிர்மலா வீட்டிலதானே அவள் தங்கியிருக்கிறாள். உங்களால் எப்படி அவளைக் கவனித்துக் கொள்ள முடியும்?"

"அதை நான் பார்த்துக்கிறேன். அவளை வெளியில கொண்டுவர எவ்வளவு வழியிருக்கு?"

"முடியுமா உங்களால?"

"இன்னிக்கு ராத்திரியே பாருங்க. உங்க மகள் வீட்டு வேலைக்காரி மட்டும் ஒத்துழைச்சா விஷயம் ரொம்ப சுலபம்!"

"நான் உங்களைப் பத்தியெல்லாம் நிறையச் சொல்லி வெச்சிருக்கேன். என் பேரைச் சொன்னாலே உங்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்வாள்!"

நீலகண்டன் நாயரின் முந்தைய கால வாழ்க்கையைப் பற்றி சலோமி கூறியது நிர்மலாவின் மனத்தை வெகுவாக இளக்கிவிட்டிருந்தது. சலோமியின் மீது நிர்மலாவுக்கு ஒரு வித மரியாதையும் ஏற்பட்டது.

"வாங்க நாம சீக்கிரமா சாப்பாட்டை முடிச்சுட்டுப் படுத்துக்கலாம்!" நிர்மலா, தனக்கு அருகில் உட்கார்ந்திருந்த சலோமியை அழைத்தாள்.

சலோமி எழுந்தாள்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வீட்டுக்கு வெளியே ஏதோ ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நிர்மலாவின் முகத்தில் சந்தேகச் சாயல் படர்ந்தது.

"யாராக இருக்கும்!" என்று கேட்டவாறே உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து எழுந்தாள்.

அதே சமயம் காலிங்பெல் தொடர்ந்து அடிக்கும் சத்தமும் கேட்டது.

"சலோமி நீங்க சாப்பிடுங்க.. நான் போய் பார்த்துட்டு வர்றேன்," என்ற நிர்மலா நேராகத் தனது படுக்கையறைக்கு வந்து கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வாசலை

அடைந்தாள். முதலில் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். வெளியே போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. மாதவக் குறுப்புடன் மூன்று போலீஸ்காரர்களும் அருகில் நின்று கொண்டிருந்தனர்.

சலோமி சொன்ன விஷயங்கள் எல்லாம் நிர்மலாவின் மனத்துள் ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்து வந்தன. கூடவே அம்மிணியின் மரணத்தைப் பற்றி ஐயன் சொன்ன விஷயங்களும் நினைவில் எழுந்தன.

மாதவக் குறுப்பு நேர்மையான ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் அல்ல என்று அவளுக்குத் தெரியும். டிபார்ட்மெண்டில் வேலை செய்து கொண்டே அதற்கு எதிரான காரியங்களில் அவர் தொடர்ந்து ஈடுபடுவதைப் பற்றி எத்தனையோ பேர் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் காவல்துறைக்கே அவர் ஒரு களங்கம்.

'இந்த நேரத்தில் இவர் எதற்காக இங்கு வந்திருக்கிறார்?' நிர்மலா எவ்வளவு யோசித்தும் பதில் கிடைக்கவில்லை.

"கதவைத் திறம்மா!" குறுப்பு வாசலுக்கு முன்னால் வந்து நின்று குரல் கொடுத்தார்.

"என்னங்க விஷயம்?" நிர்மலா கதவைத் திறக்காமலே கேட்டாள்.

"உள்ளே ஒரு குற்றவாளி ஒளிஞ்சிருக்காள்!" - குறுப்பு பதிலளித்தார்.

"இங்கே அப்படி யாரும் கிடையாது. மொத்தமே மூணு பெண்கள்தான் இருக்கிறோம்!"

"அந்த மூணு பேர்ல ஒருத்தியைத்தான் அரஸ்ட் பண்ண வந்திருக்கேன்!"

"யாருன்னு சொல்லுங்க!"

"நீ முதல்ல கதவைத் திறம்மா!"

"ஒரு விஷயம். வாரண்ட் வச்சிருக்கீங்களா?" நிர்மலா கேட்டாள்.

"அதெல்லாம் தேவையே இல்லை."

"அது தேவை. உங்ககிட்ட வாரண்ட் இல்லேன்னா நான் கதவைத் திறக்கமாட்டேன்." நிர்மலா தைரியத்துடன் பேசினாள்.

"எங்கிட்ட ரொம்பவும் விளையாடக் கூடாது. என் குணம் மாறிடும்!"

"அந்த மிரட்டலெல்லாம் என்கிட்ட வேண்டாம். உங்களையும் உங்ககூட வந்திருக்கிறவங்களையும் கைது பண்ற அளவுக்கு என்னால முடியும்!"

மாதவக் குறூப்பு தன் ஆட்களில் ஒருவரிடம் கண்ணைக் காட்டியதும் அவர் உடனே தொலைபேசி இணைப்பைத் துண்டித்தார்.

"ம்... கதவை உடையுங்கள்!" மாதவக் குறூப்பு கட்டளையிட்டார்.

போலீஸார் கதவை நோக்கி ஓடிவந்தனர்.

அதே நேரம் கேட்டைத் தாண்டிச் சீறி வந்த மோட்டார்பைக் ஒன்று, நின்று கொண்டிருந்த குறூப்பின் மீது மோதி அவரைக் கீழே தள்ளியது.

நிர்மலா பைக்கில் வந்தவனை அடையாளம் தெரிந்து கொண்டாள்.

கீழே விழுந்த குறூப்பு உடனே சுதாரித்து எழுந்தார்.

"உனக்காகத்தாண்டா இவ்வளவு நாளும் காத்திருந்தேன். இவனைப் பிடிங்கடா முதல்ல!" குறூப்பு கர்ஜித்தார்.

"முடிஞ்சா செய்யலாம்!" தன்னை நெருங்கிய போலீஸ்காரர் ஒருவரை அலாக்காகத் தூக்கி வீசியெறிந்தபடி பேசினான் ஜயன்.

"இப்ப நீ கைதாகியிருக்கிறே!" மாதவக் குறூப்பு வன்மத்துடன் பேசினார்.

"அது உங்களால முடியாது. ஏன்னா நீங்க இப்ப என்னை மாதிரி ஒரு சாதாரண மனுஷன்!"

"என்னடா உளர்றே?"

"உளறல, உண்மையைச் சொல்றேன். உங்களை சஸ்பெண்ட் செஞ்சிருக்காங்க!"

"அப்படின்னு எவன் சொன்னான்?"

"அப்ப உண்மையை ஒப்புக்கலை நீங்க?"

"ச்சீ.... அநாவசியமா பேசாதடா நாய்!"

"நீங்க என்ன சொன்னாலும் நான் சொன்னது எல்லாம் வடிகட்டின உண்மை. வர்கீஸோட பாங்க்கை ரெய்டு பண்ணினபோது உங்க பேர்ல இருந்த பத்துலட்ச ரூபாய் பணத்தையும் கண்டுபிடிச்சுட்டாங்க. அதுமட்டுமில்லாம வர்கீஸ் பாங்க்ல கள்ள நோட்டும் இருந்திருக்கு!"

"என்கிட்டயே விளையாடுறியா?"

"நான் உங்ககிட்ட விளையாடலை. நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு உங்களுக்கே நல்லாத் தெரியும். அப்புறம் எதுக்காக ஜீப்பில் போலீஸ்னு எழுதி வெச்சிருக்கீங்க? ஊரை ஏமாத்தவா?"

குறூப்பின் உடன் வந்தவர்கள் கதவை விட்டு விட்டு ஜயனைச் சூழ்ந்து கொண்டனர்.

"உங்களுக்கு அனாவசியமான தண்டனை வேணாம்னா, ஒழுங்கா இங்கேருந்து கிளம்புறது நல்லது!"

பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட போலீஸார், மெதுவாகப் பின்வாங்கி கேட்டை நோக்கி நடந்து மறைந்தனர்.

"மிஸ்டர் குறூப்பு நீங்க என் மேல் போட்டது பொய் [illegible]ன்னு நிரூபணமாகப் போகுது. நீங்க உயிரோட இருக்கணும்னு விரும்பினா உடனடியா இங்கேருந்து கிளம்பலாம். அதுக்கு மேல உங்க விருப்பம்!" ஜயன் பதற்றமில்லாத குரலில் சொன்னான்.

மாதவக் குறூப்பு ஜீப்புக்குள் நுழைந்தார்.

"நான் நினைச்சா இங்கேயே உங்களுக்கு ஒரு நல்ல பாடம் கத்துக் குடுப்பேன். ஆனால், நான் அதை விரும்பலை. காரணம் நான் இங்க வந்தது எதுக்காகன்னு கேட்டால் என்னால பதில் சொல்ல முடியாதுங்கிறதால இப்ப உங்களை விட்டுடறேன்."

ஜீப் புறப்பட்டது.

மறுநாள் போத்தன் வர்கீஸின் ஃபைனான்ஸ் நிறுவனம் ரெய்டு செய்ததைப் பற்றிப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியையும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவக்குறுப்பை சஸ்பெண்ட் செய்ததைப் பற்றியும் பரபரப்பாகப் பேசிக் கொண்டனர்.

நண்பர்கள் நான்கு பேரும் எதிர்பார்க்காத நடவடிக்கைகளாக இருந்தன அவை. தனக்குத் தெரியாமல் எப்படியோ கள்ள நோட்டுகள் தனது பாங்குக்குள் வந்து விட்டது என்று வக்கீல் மூலமா வாதாடி அன்று மாலை நேரத்திலேயே விடுதலையாகி வெளியே வந்தார் போத்தன் வர்கீஸ்.

அன்றிரவும் நண்பர்கள் நால்வரும் வழக்கம்போல் ஒன்றுகூடினர் சேதுவர்மாவின் அறையில்.

குறுப்பு அன்று தான் சந்தித்த தோல்வியைத் தன் நண்பர்களிடம் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

"இப்படியே போனால் சரிப்படாது. அவனை எப்படியாவது தொலைத்துக்கட்ட வேண்டியதுதான். இல்லேன்னா நாம நாலு பேரும் ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும்!" நீலகண்டன் நாயர் அபிப்பிராயப்பட்டார்.

"அதுக்கு அந்த நாய் நம்ம கையில சிக்கினால்தானே?"-குறுப்பு பற்களை நறநறவெனக் கடித்தார்.

"நேத்துகூட உங்ககிட்ட வசமா மாட்டிக்கிட்டானே?"

"ஆனா அங்க நாங்க அவனை எதிர்பார்க்காததால கையில துப்பாக்கி எதையும் எடுத்துட்டுப் போகலை!"

"சரி, சேதுவர்மா நீங்க என்ன சொல்றீங்க?" பாலகிருஷ்ண பிள்ளை கேட்டார்.

"நான் ஒரு யோசனை சொல்றேன். இதுல அவன் கண்டிப்பா மாட்டிப்பான்!"

"சொல்லுங்க!"

"அவன் நிர்மலா வீட்டுக்கு வர்றது உறுதியாத் தெரியுது. அதனால அங்கே அவனைத் தீர்த்துக்கட்டுறதுதான் நல்லது!"

"அந்த முயற்சிதான் நேத்தே தவறிப்போச்சே! திரும்பவுமா?"

"அதுக்கு ஒரு வழி பண்ணலாம். நான் எப்படியாவது அந்த வீட்டுல தங்கணும். அதுக்கு நீங்க ஏதாவது ஒருவழி சொல்லுங்களேன்" சேதுவர்மா, நீலகண்டன் நாயரைப் பார்த்தார்.

"அதுக்கென்ன? நாளைக்கு நான் அங்கே போறேன். நீங்களும் என்கூட வந்துடுங்க. ஒண்ணாவே தங்கிக்கலாம்."

"நல்ல யோசனைதான். அப்படிச் செஞ்சா, நிர்மலாவால நம்மளத் தடுக்கவும் முடியாது! ஆனா ஒரு விஷயம்.."

"என்ன?"

"நாம அங்கே போன பிறகு அங்கேருந்து யாரும் வெளியே போகக்கூடாது."

"தேவையான முன்னெச்சரிக்கைதான்."

சேதுவர்மாவின் யோசனையை எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

மறு நாள் இரவு ஒன்பது மணியானபோது சேதுவர்மாவும் நீலகண்டன் நாயரும் நிர்மலாவின் வீட்டை அடைந்தனர்.

வழக்கத்துக்கு மாறாக அப்பா வேறொரு மனிதனுடன் அங்கு வந்ததைப் பார்த்ததும் நிர்மலாவுக்குச் சந்தேகம் தோன்றியது.

"என்னப்பா விஷயம்?"

"ஒண்ணுமில்லை. சும்மாதான் வந்திருக்கேன். இவர் பேர் சேதுவர்மா என் நண்பர்" நீலகண்டன் நாயர் சாதாரணமாகப் பதிலளித்தார்.

நிர்மலாவுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால், இவர்களின் வருகைக்கு ஏதோ உள்நோக்கம் இருக்கும் என்று மட்டும் தெரிந்தது இருப்பினும் அவள் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சேதுவர்மாவும் நீலகண்டன் நாயரும் வெளிப்புற போர்ட்டிகோவில் உட்கார்ந்து காற்று வாங்கியபடி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது கேட்டில் ஆட்டோ ரிக்ஷா ஒன்று வந்துநின்றது. அதிலிருந்து இறங்கிய சலோமி, கேட்டைத் திறந்துகொண்டு வந்தாள். போர்ட்டிகோவில் அமர்ந்திருந்த இருவரையும் ஒரு தடவை பார்த்துவிட்டு அவள் பாட்டுக்கு வீட்டுக்குள் நுழைந்தாள்.

"இந்தப் பெண்?" நாயர், வர்மாவைப் பார்த்தார்.

"நான் எங்கேயோ பார்த்திருக்கேன். பார்த்தா ஆபத்தானவள் மாதிரி தெரியுது!"

"ஒருவேளை இவளைத்தான் குறூப்பு பார்த்திருப்பாரோ?"

"அப்படித்தான் இருக்கணும்!"

"அப்படியானால் ஜயன் இங்கே இன்னிக்கு நிச்சயமா வருவான்."

"நாம ஒரு காரியம் பண்ணலாமா?" வர்மா கேட்டார்.

"உருப்படியான யோசனையா இருந்தா, கண்டிப்பா செய்யலாம்!"

"ஜயன் ஒருவேளை வந்துட்டா கொஞ்சம்கூடத் தயங்கவேண்டாம். இந்த சைலன்ஸர் துப்பாக்கியால சுட்டு அவனை இந்த காம்பௌண்ட்லயே புதைச்சுட வேண்டியதுதான். எல்லாப் பிரச்சினையும் அதோட முடிஞ்சு போயிடும்."

அதே நேரம் தெருவில் மோட்டார் பைக் சத்தம் கேட்டது. அந்தச் சத்தமும் அந்த வீட்டின் கேட்டுக்கு முன்னால் வந்து நின்றது.

"அவனேதான்!" என்ற வர்மா துப்பாக்கியைக் கையில் பிடித்தபடி வாசலின் மறைவில் நின்றுகொண்டார்.

மோட்டார் பைக்கில் வந்த மனிதன் கேட்டைத் தாண்டி உள்ளே வந்த அதே விநாடி துப்பாக்கியிலிருந்து குண்டு சீறிப் புறப்பட்டது.

துப்பாக்கி குண்டு பாய்ந்து கீழே விழுந்தவன் ஜயன் அல்ல. சப்-இன்ஸ்பெக்டர் சுதீர்தான். இன்ஸ்பெக்டர் சுதீரின் தோளில் குண்டு பாய்ந்ததும் அவர் தரையில் விழுந்து துடிக்கத் தொடங்கினார். ஜயன் அதன் பிறகு கேட்டின் மறைவிலிருந்து வெளிப்பட்டான்.

வர்மா, ஜயனுக்கு நேராகத் துப்பாக்கியைக் குறிபார்த்தார். சுடாமல் ஜயனை பயமுறுத்த விரும்பினார். சற்றும் எதிர்பாராத ஒருகணத்தில் ஜயன், வர்மாவின் கையிலிருந்த துப்பாக்கியைக் காலை உயர்த்தி எட்டி உதைத்தான். துப்பாக்கி பறந்துபோய் விழுந்தது. கண்ணிமைப்பதற்குள் கிளம்பிய இரண்டாவது உதையில் வர்மா அடிவயிற்றைப் பிடித்தபடி அப்படியே தரையில் உட்கார்ந்தார்.

சரியாக அதே நேரம் ஜீப் ஒன்று கேட்டுக்கு வெளியே வந்து நின்றது.

ஜீப்புக்குள்ளிருந்து மாதவ குறுப்பு, போத்தன் வர்கீஸ் மற்றும் நான்கு பேர் இறங்கி வந்தனர்,

"இவனை விடாதீங்க. துண்டு துண்டா வெட்டி ஏரியில மிதக்க விடுங்க" குரூப்பு உத்தரவிட்டார்.

உடன்வந்த நால்வரும் ஆயுதங்களுடன் ஜயனை நேரிட்டனர். சட்டென்று சுவர்ப்பக்கமாக ஒண்டிய ஜயன் வலது கால் பகுதியில் பெல்ட் போட்டு இறுக்கி வைத்திருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்தான்.

முதலில் பாய்ந்த குண்டு மாதவக் குறுப்பின் முழங்கால் சில்லைப் பெயர்த்தது. அவர் அலறியபடியே தரையில் சரிந்தார்.

மீண்டும் துப்பாக்கி வெடித்தது.

இம்முறை போத்தன் வர்கீஸ் அலறினார். நிற்க முடியாமல் தடுமாறி விழுந்தார்.

"நீங்கள்லாம் கூலிக்கு வந்தவங்க. உயிர் வேணும்னா திரும்பிப் போகலாம்" ஜயன் உரத்த குரலில் கூறினான்.

அப்போது வர்மாவும், நீலகண்டன் நாயரும் உட்கார்ந்த இடத்திலிருந்து மெதுவாக எழுந்தனர். தங்களைப் பார்த்ததும் ஜயன் பயந்து ஓடுவான் என்று இருவரும் நினைத்தனர்.

ஆனால், அவனுக்குப் பின்னால் தரையில் விழுந்து துடித்துக் கொண்டிருந்த இருவரைப் பார்த்ததும் மாற்றப் இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர் அவசர அவசரமாக.

வாசலில் சலோமி துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தாள்.

யாராலும் தப்பிக்க முடியவில்லை.

அதே சமயம் சொல்லி வைத்தமாதிரி ஒரு வேன் நிறைய போலீஸார் அங்கு வந்து சேர்ந்தனர்.


வந்தவர்கள் சலோமியைப் பார்த்து மரியாதை நிமித்தமாக சல்யூட் அடித்துவிட்டு, அடுத்து என்ன என்பது போல் சலோமியைப் பார்த்தனர்.

நான்கு பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர். பிள்ளையைத் தேடியும் மற்றொரு ஜீப் புறப்பட்டிருந்தது.

எல்லோருக்கும் கைவிலங்கு போடப்பட்டது.

அதுவரை நடந்த மொத்த கயவாளித்தனங்களுக்கும் காரணமான நால்வரைப் பற்றியும் மக்கள் வியப்புடன் பேசிக்கொண்டனர்.

வழக்குகள் மறுபடி உயிர் பெற்றன.



**கோட்டயம் புஷ்பநாத் :** இவர் தன்னுடைய 12வது வயதிலேயே முதல் சிறுகதையை எழுதினார். தனது 19வது வயதில் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். 1991 முதல் முழு நேர எழுத்தாளராக மாறினார். கதை எழுதுவதைத் தவிர விவசாயம் செய்வதும் இவருக்கு பிடித்த பொழுதுபோக்கு. இவர் பள்ளி மாணவராக இருந்த போது இவருடைய ஆசிரியர் கோவூர் என்பவர், விறுவிறுப்பான துப்பறியும் கதைகளை மாணவர்களுக்குச் சொல்வாராம். இந்தத் தாக்கம்தான் பின்னாளில் இவரை எழுத வைத்தது. இவர் தனது 26வது வயதில் முதல் நாவலான 'சிகப்பு மனிதன்' என்னும் தொடரை 'மனோ ராஜ்யம்' என்ற பத்திரிகையில் எழுத ஆரம்பித்து பெரும் வெற்றி கண்டார். இவர் துப்பறியும் கதைகள், மாந்த்ரீக நாவல்கள் என 350க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் பல தமிழ், குஜராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவரது இரண்டு நாவல்கள் திரைப்படமாகவும் வெளி வந்துள்ளன. புகழ்பெற்ற மலையாளப் பத்திரிகைகளிலும் இவரது கதைகள் வெளிவந்து, தற்போது லட்சக் கணக்கான வாசகர் உள்ளங்களில் கோவில் கொண்டிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத். (முகவரி : கோட்டயம் – 686 041, கேரளா (தொலைபேசி : 0481-567899, 561999).

**சிவன் :** P.B. சிவசுப்ரமண்யம் என்ற சிவன் 22-6-55ல் பிறந்தார். இவர் மதுரை, செங்கை, சென்னை ஆகிய இடங்களில் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தவர். 1980-ஆம் ஆண்டு 'பேசும் படம்' பத்திரிகையில் தன்னுடைய வாழ்க்கையைத் துவக்கி, பிறகு ஜெமினி சினிமா, தினசரி, வெற்றி மாலை எனப் பல பத்திரிகைகளில் பணி புரிந்து, தற்போது பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூல நூல்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளை தமிழில் மொழி பெயர்த்து, 70 நூல்கள் வரை வெளி வந்துள்ளன.

